https://telegram.me/aedahamlibrary

சாகித்ய அகாதெமி விருது பெற்ற

# கல்மரம்

## திலகவதி



https://telegram.me/aedahamlibrary

# Contents

1

2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# 1

“காசு வச்சிங்கிறயாம்மா?” என்று தூக்கம் கலையாத குரலில் கேட்டபடியே பாயில் புரண்டு படுத்தான் காசி. சுள்ளென்று அடித்த வெயில் அவன் முகத்தில் உறைத்தது.

சற்று முன் வீடு வந்து சேர்ந்த ஆதிலட்சுமி, அவள் வேலை செய்கிற வீட்டில் இருந்து எடுத்துக் கொண்டு வந்திருந்த பழைய சோறு குழம்பு, காய் கறிகளையெல்லாம் வீட்டுப் பாத்திரங்களுக்கு மாற்றிக்கொண்டிருந்தாள்.

“யமோவ்” என்று குரல் கொடுத்தபடி வீட்டுக்குள் வந்தாள் காவேரி. சிறிய எவர்சில்வர் தூக்கில் இருந்த டீயைக் கிளாசில் ஊற்றிக்கொண்டிருந்த ஆதிலட்சுமி, மகளின் குரல் கேட்டு குடிசைக்குள் எட்டிப் பார்த்தாள்.

“ஒம் மவனுக்கு காசு வேணுமாம். சம்பாரிச்சுக் கொண்டாந்து கொட்டி வச்சிங்கறாரே அந்த மூலயிலே, அதிலேர்ந்து ஒரு படி அள்ளிக் குடு”

காலி டம்ளரையும், டீத்தூக்கையும் எடுத்துக் கொண்டு குனிந்து வீட்டுக்குள் வந்தாள் ஆதிலட்சுமி. படுத்திருந்த மகன் அருகே உட்கார்ந்தாள்.

“எந்திரிடா. டீ ஆறிப்போவுது குடிச்சிக்க” மகனின் தலையை ஆதரவாகக் கோதி விட்டாள்.

“வெடியறதுக்கு முன்னாலே எழுந்திரிச்சு நான் இங்க எலும்ப முறிச்சுகறேன். எனக்கு ஒரு வாய் டீத் தண்ணி இந்தான்னு தருவியா நீ? ராவெல்லாம் ஊரச் சுத்திப்புட்டு வந்து ஒம்பது மணி வரக்கும் கொறட்டை வுட்டு தூங்கிங்கறாரு கெவுர்னரு. அவருக்கு உளுந்து உளுந்து ஒபசாரம் பண்றே”

அடுப்படியில் இருந்த மண்ணெண்ணெயை எடுத்துக் கால் விரல் இடுக்கில் இருந்த சேற்றுப்புண் மீது தடவிய காவேரி, பாவாடையிலும் தாவணியிலும் எண்ணெய்க்கறை பட்டுவிடாத படி ஆடைகளை முழங்காலுக்கு மேலே நகர்த்தி விட்டுக் கொண்டாள்.

“யாருடி ஒன்னை டீத்தண்ணி குடிக்க வாணான்னு சொன்னது? ஒனுக்கும் சேர்த்து மூணு டீயா சொம்ப எடுத்து

https://telegram.me/aedahamlibrary

போயி நீயே வாங்கியாரதுதான. என்னாத்துக்கு இத்தினியூண்டு தூக்கில ரெண்டே சிங்கிலு வாங்கியாந்தே" என்று சொல்லி நொடித்துக் கொண்டாள் ஆதிலெட்சுமி.

"ரொம்பத் தாராளம் தண்ணிப் பந்தலுதான். அங்க பாரு" காவேரி, குடிசைக்குள் தொங்கிய ஒயரின் நுனியில் பல்ப் இல்லாமல் இருந்த லைட்பாயிண்டைக் காட்டினாள். பதினைஞ்சு ரூபா ஜாஸ்தியாக் கேக்கறாங்கன்னு பல்பை கழட்டி வச்சிங்கறே. அத்தினி வசதி. ரொம்ப தாராளமா இருந்தா மொதல்லே அத்தப் போடு. இந்த முட்ட வெளக்க வச்சிகினு நேத்தெல்லாம் தடுமாறிட்டேன்."

"தடுமாறுவே தடுமாறுவே. கல்யாணம் கட்டிக்கினு போறவரைக்கும் ஒங்கக்கா இதே முட்ட வெளக்கு வெளிச்சத்துலே தான் ஆக்கிப் போட்டுக்கினு இருந்தா. ஒரு பேச்சு சொல்லியிருப்பாளா? ஒனுக்கு திமிறு ஜாஸ்தி." ஆதிலட்சுமி தலைமுடியை அவிழ்த்துக் கையால் தட்டி இறுக முடிந்துகொண்டாள்.

"அக்கா அப்பிடி ஊமயா இருக்கறதத் தொட்டுதான் அவ புருஷனும் மாமியாக்காரியும் அவள் அந்த கெதியிலே வச்சிங்கிறாங்க. எதுக்கோசரம் நானும் அவள மாதிரியே இருக்கணும்?" முழங்கையால் பாவாடையை இறுக்கிப் பிடித்தபடி எழுந்தாள் காவேரி.

போன தையில் திருமணம் முடித்து வாழப்போன தன் மூத்த மகள் கன்னியம்மாளை நினைத்துக் கொண்டாள் ஆதிலட்சுமி. மகளின் நினைவிலோ, மகளின் திருமணத்துக்காகப் பட்டிருந்த கடனின் நினைவிலோ அவள் கண்கள் கலங்கின.

"எந்திரிப்பா. இன்னிக்கு அப்பிடியே ஒரு எட்டு போய் அந்தக் கன்னீமா பொண்ணப் பார்த்துட்டு வா. வாயும் வயிறுமாக்கிறா மவ. நெனச்சாப்பல நாம்ப போறதுக்கு உண்டா? வரதுக்கு உண்டா? வர சொல்ல எல்லாம் வண்டி நெறய சீர் கொண்டாரணும்பா சம்பந்தியம்மா. நீன்னா இப்பிடியே எதோ வேலயா வந்தேன்னு ஒரே வார்த்தயிலே முடிச்சுக்கலாம்."

"ஆமா! இவரு அப்படியே பக்கம் பக்கமா வேல பார்த்துக்கினே இருக்கிறாரு பாரு. அத்தொட்டு அவங்க

https://telegram.me/aedahamlibrary

இவரு சொன்னதும் சடக்குன்னு நம்பிக்குவாங்க. போவியா?"

விருட்டென்று எழுந்து பாயில் உட்கார்ந்த காசி, "அடி செருப்பாலே" என்று காவேரியை அடிப்பது போலக் கையை ஓங்கினான். அவள் சிரித்துக் கொண்டே, அவன் கைக்கு அகப்படாதவாறு சுவர் ஓரமாக நகர்ந்துகொண்டாள்.

"அதானே? என்னத்துக்குடி அவன எளக்காரம் பண்றே? அவன் வேல பாக்காமத்தான் நாம்ப ஆளாயிட்டமா? ஒனுக்கு என்னா தெரியும்? ஜல்லி போடறேன்னு சாரத்து மேல ஏறி மூணாவது மாடியிலேருந்து ஒங்கப்பன் கீழே வுளுந்து உசுர விட்டுச்சே அப்போ ஒனுக்கு நாலு வயசு. பேச்சுக்குப் பேச்சு எம்மவன நல்லாப் படிக்க வச்சி டாக்டரு வேலக்கு அனுப்பப் போறம் பாருன்னு சொல்லும். கடசியிலே அந்த மவன் பத்து வயசுலருந்து ஒழக்க வேண்டியதா பூட்ச்சி." ஆதிலட்சுமி குடிசையின் கிழக்குப் பார்த்த சுவரில் வட்டமாய்ப் பூசியிருந்த மஞ்சளையும் அதன் நடுவே மூன்று பட்டைகளாக ஓடிய குங்குமக் கீற்றினையும் பார்த்தாள். அதிலிருந்து ஒரு முழ நீளத்துக்குக் கீழே தரையில் சுவரில் சார்த்தினாற்போல வைக்கப்பட்டிருந்த படங்களையும் பார்த்ததுமே அவனுக்கு கண்கள் கலங்கின.

"டீய ஊத்துட்டுமாப்பா?"

"வாயக் கொப்பளிச்சுனு வந்துடறேன்" என்று சொல்லிவிட்டு விட்டத்தைப் பார்த்துக்கொண்டு சற்று நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான் காசி. அப்படியே வளைந்து வலது கையை நீட்டி, தரையில் வைக்கப்பட்டிருந்த சாமி படங்களை அடுத்து வைக்கப்பட்டிருந்த டிரான்சிஸ்டரை எடுத்தான் மேலே இருந்த விசையைத் திருகி, அதை மடியில் கிடத்தி இப்படியும் அப்படியுமாகத் தட்டினான். மேலிருந்து கீழாக சுற்றிக் கட்டியிருந்த நூல் கட்டை இறுக்கினான். விசித்திரமான சத்தங்கள் வந்தன.

"இன்னிக்காவது எதுனா வேலை கெடைக்குமா ஒனுக்கு?" ஆதிலெட்சுமியின் குரலில் கவலை தெரிந்தது. காசி மீண்டும் விட்டத்தைப் பார்த்தான்

https://telegram.me/aedahamlibrary

“நா என்ன கவர்மெண்ட் வேலயிலியா இருக்கறன். இல்லே நாலு எழுத்து எழுதப் படிக்கத்தான் தெரியுமா? நான் படிச்ச நாலாங்கிளாஸ் படிப்புக்கு என்னா வேல கெடக்கும்? என்னமாதிரி ஆளுங்களுக்கு, டக்குன்னு கெடக்கற வேல கொல்லு வேலதான். நீ என்னடான்னா அந்த வேலக்கு போகவே கூடாதுங்கற. கையடிச்சு சத்தியம் வாங்காத கொறயா மனுசனப் போட்டு நெருக்கற” என்று சலித்துக் கொண்டவனாக மடிமீது இருந்த ரேடியோவை எடுத்து தரையில் வைத்துவிட்டு வெளியே வந்து நின்று நெட்டி முறித்துக் கொண்டான். இரண்டு பக்கத் திண்ணைகளை சாணியால் மெழுகிக் காவேரி போட்டிருந்த சங்குக் கோலத்தையும் வாசலில் நிறுத்தியிருந்த தேர்க் கோலத்தையும் பார்த்தான். ‘சின்னக் கழுதக்கி வாய் நீளம்னாலும் கை ரொம்பச் சுத்தம்' மனசுக்குள் பெருமைப் பட்டுக் கொண்டான். ஓலைத்தடுப்புக்குள் இருந்த தகர அண்டாத் தண்ணீரை டப்பாவால் மொண்டு வாயைக் கொப்பளித்தான். மீண்டும் குடிசை வாசலில் வந்து திண்ணையில் உட்கார்ந்தான். உள்ளே காவேரியும் ஆதிலட்சுமியும் பேசிக்கொள்வது கேட்டது.

“ஏம்மா! எத்தினியோ பேரு கட்டட வேலக்கு போறாங்க. எல்லாருக்குமோ அப்பாவுக்கு ஆனது மாதிரி ஆயிடும்? ரோட்டிலே நடந்து போய்க்கிட்டிருக்கறவங்க மேல கூடத்தான் சமயத்துலே வண்டி ஏறிடுது. அதுக்காவ யாருமே ரோட்டிலே நடந்து போகாமலேயேவா இருக்கிறாங்க?”

“சரிசரி போதும். ரொம்ப வெவரமானவளாட்டம் பேசி கிட்டிருக்காம போய் வேலயப் பாரு. கட்டட வேலயாம் கட்டிட வேல. ஒனுக்கு ரொம்பத் தெரியுமா? கையில நகம் மொளைச்ச நாளயிலேருந்து அதுல இருக்கற நல்லது கெட்டத பார்த்தவ நானு. கெங்காதரன் மேஸ்திரின்னு அம்பது ஆள வச்சி காண்டிராக்ட்ட எடுத்து தொழில் நடத்தனவரு எங்க அப்பாரு. அங்க வேலக்கு வந்து கல் தச்சரா இருந்தவரு தான் ஒங்கப்பா. அப்பறம் என்னென்னமோ ஆச்சு. நானு வூட்டப் பகச்சிக்கினு ஒங்கப்பனக் கட்டிக்கினேன். நானும் அது கூடவே சித்தாள் வேலக்கும் போனன். போனதனாலதான் அந்தக்

https://telegram.me/aedahamlibrary

கண்றாவியைக் கண்ணாலயும் பார்த்தன். அதுக்கு அப்புறம் கட்டடவேல நடக்கற எடத்தப் பார்த்தாக்கூட அடி வவுறு கலங்குது" ஆதிலட்சுமியின் குரல் தழுதழுத்தது.

"அதுக்கில்லம்மா. ஒங்கப்பாவ நீயி கெங்காதர மேஸ்திரின்னு எத்தினி பெருமயா சொல்லிக்கறே அது மாதிரி அண்ணனயும் காசி மேஸ்திரின்னு நாலு பேரு சொன்னா எத்தினி கௌரதயா இருக்கும்?"

"இருக்கும், இருக்கும். அது சரி நாலு நாளக்கு வேலக்குப் போனா போன சுருக்குல மேஸ்திரிப்படம் வந்துடும்னா நெனச்சிக்கினே? வருஷக்கணக்கா எல்ப்பரா இருந்து, பெரியாளாயி, கொத்தனாரு கையிலே தாஜா பண்ணி, அவர் அப்பான்னு, அண்ணான்னு கெஞ்சி கைக்காச போட்டு அவருக்கு காப்பின்னும், பீடின்னும், நாஷ்டான்னும் வாங்கிக் குடுத்து, அவங்க பீடி புடிச்சுக்குன்னு நிக்க சொல்ல கொல்லுருவ எடுத்து கொஞ்சம் கொஞ்சமா வேல பழகி அரக் கொத்தனாராயி முழுக்கொத்தனாராயி அப்பாலே தான மேஸ்திரியாவணும்? கொல்லு வேல இல்லேன்னா என்ன இப்ப? அவன் வூட்லயா மொடங்கினுக்கிறான். லாரியிலே போனான். ஸ்பிரே பண்ணேன்னு போன மாசம் ரேஷன் வாங்க துட்டு கொடுத்தான். அப்பாலே பப்பிங் கோ என்னமோ பண்ணேன்னு துட்டு கொண்டாந்தான் அவனும் நாலா வேல செஞ்சுக்கினு தானேக்கீறான்?"

"ஆமா புது சினிமா வந்தா பிளாக்குல டிக்கட்டு கூடத்தான் விக்கிது. இதெல்லாமா ஒரு தொழிலு? மவனுக்குக் கல்யாணம் பண்ணணும் பண்ணனும்ங்கிறியே பொண்ணு கேக்கிற எடத்துலே சொல்லுவியா எம்மவனுக்கு பெர்மணட்டா ஒரு தொளிலும் இல்லே. நாலாதினுசு வேலயும் செய்வான்னு"

"அடடா! ரேடியோவப் போட்டா பாட்டா கேக்குது. ஒங்க ரெண்ட பேர் எழவும் தான் பெரிசாக்கிது" காசி மூலையில் இருந்து பெட்டிக்குள் இருந்த சட்டையை உதறிப் போட்டுக் கொண்டு கிளம்பினான். ஆதிலட்சுமியின் டீயைப் பதமாக ஆற்றி அவனிடம் நீட்டினாள்.

"ம். காசு எதனாக்கீதாம்மா?" ஆதிலட்சுமியிடம் கேட்டான்.

"இப்ப ஒனக்கு காசு எதுக்கு?" அதட்டாத குறையாகக்

https://telegram.me/aedahamlibrary

கேட்டாள் காவேரி.

“ம்...போற வழியிலே புதுசா பக்ங்ளா கட்டிப் போட்டுங்கறாங்க அத வாங்கறதுக்கு”

ஆதிலட்சுமி இடுப்பில் செருகியிருந்த சேலையில் இருந்து முடிச்சை அவிழ்த்து அவன் கையில் சில்லறையை வைத்தாள்.

“அய்யோ! மூணு ரூவா! அப்படின்னா பன்னண்டு இட்லி! எம்மாடி!” காவேரி விளையாட்டாய்க் கூவினாள். “எங்களுக்கெல்லாம் பழயது. இவருக்கு மட்டும் சுடச்சுட இட்லி” செல்லமாய்ச் சிணுங்கினாள்.

“சீ களுத! வாய மூடு.” என்று மகளை அதட்டியவள் “நீ புறப்படு. வவுறு ரொம்பத் தின்னுட்டுப் போ. வடகறி இருந்தா வாங்கிக்க. துட்டு பத்தலேன்னா இட்லிக்கார சின்னத்தாயக்காள கணக்கு வச்சுக்கச் சொல்லு. அப்பிடியே சாயங்காலமா கொஞ்சூண்டு பூவும், மிச்சரும் வாங்கினு போய் குடுத்துட்டு அந்தக் கன்னீம்மா பொண்ண பார்த்துட்டு வா” என்றாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் சற்றே தயங்கிய காசி, எதையோ சொல்ல நினைத்தவன் சொல்லாமல் வீட்டை விட்டுக் கிளம்பினான்.

# 2

நடந்து போகிற மகனை பூரிப்போடு பார்த்துக் கொண்டே நின்றாள் ஆதிலட்சுமி. 'அப்படியெ அவங்க அப்பன உரிச்சுக்கினு வந்தாப்பல, அதே கறுப்பு, அதே உசரம், அதே மாதிரி சிலுத்துக்கிட்டு நிக்கற கோர முடி. அப்பப்ப மோட்டுவளயப் பார்த்துக்கினே உட்கார்ந்துக்கறான். என்னா கவலயோ என்னமோ? என்னதான் பெத்த தாய் ஆசயா பாசமா இருந்தாலும், அத்து வயசுக்கு ஆறுதலா பக்கத்தொணயா இருக்க முடியுமா? இந்நேரம் அவங்க அப்பன் உசுரோட இருந்தா இவனுக்கும் ஒரு கண்ணாலத்தப் பண்ணி இருக்காதா?' ஆதிலட்சுமியின் மனம் எதையெதையோ எண்ணிக் குழம்பியது.

https://telegram.me/aedahamlibrary

ஆதிலட்சுமி திண்ணையில் வந்து உட்கார்ந்தாள். காவேரி அடுப்புக்கு எதிரே இருந்த செட்டியார் அம்மா வீட்டுப் பாத்திரங்களைக் கழுவ வெளியே எடுத்து வந்தாள். ஆதிலட்சுமியின் மனம் மகனின் கல்யாணப் பிரச்னையில் மூழ்கிப்போய் இருந்தது. காசியின் வயதுக்குப் பொருத்தமாக இருந்த தன் நாத்தனார் மகளை நினைத்துக் கொண்டாள். அந்த நாத்தனாரையும் அவளுக்குப் பின்னால் வரிசையாகப் பிறந்திருந்த மற்ற மூன்று பெண்களையும் கரையேற்றுவதற்கு தன் கணவன் பட்ட கஷ்டங்களை நினைத்துப் பார்த்தாள். இப்போது எல்லோரும் இவர்களை விட வசதியாகவே இருக்கிறார்கள். அதனால்தானோ என்னவோ அண்ணன் போனதையே ஒரு சாக்காக வைத்துக் கொண்டு இந்தக் குடும்பத்தோடான எல்லா உறவுகளையுமே கத்தரித்துக்கொண்டு விட்டார்கள். சாதாரணமாகக் கல்யாணம் துக்கம் என்று எங்காவது பார்த்துக்கொண்டால்தான் உண்டு. எட்டு பத்து வருஷங்களாகவே அப்படித்தான். அதனால்தான் அவர்கள் முறைப்பையனான காசியை லட்சியம் செய்யாமல் வெளியே சம்பந்தம் செய்து கொண்டது. ஆதிலட்சுமிக்கோ காசிக்கோ பெரிய விஷயமாகப் படவில்லை. ம் ஆதிலட்சுமிக்குத் தன் அண்ணன் மகளைத் தன் வீட்டுக்கு மருமகளாகக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று ஆசை. காசிக்கும் அந்த ஆசை இருந்தது. வெளிப்படையாகச் சொல்லவில்லையே தவிர அந்தப் பெண் கோவிந்துவுக்கும் கரூர் ரெஸ்டாரண்ட் வாசலில் பெட்டிக்கடை வைத்திருந்தவனுக்கும் கல்யாணம் நடந்ததிலிருந்து காசி சோர்ந்து போய்விட்டான். ஆதிலட்சுமி தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டாள். 'ஹ... இவ என்னா இவ பெரிய ரம்ப. இவளை எல்லாம் தூக்கி முழுங்கறாப்பல ஒரு பொண்ணாப் பார்த்து ஒனக்கு இந்த வருசத்துக்குள்ளாரவெ கண்ணாலம் பண்ணி வக்கறன்பாரு.'

ஆதிலட்சுமி இத்தகைய பேச்சுக்களைத் தொடங்கினாலே காசி உடனே வெளியே கிளம்பிப் போய்விடுவான். அவன் மனதில் என்ன நினைப்போ? ஒரு வேளை காவேரிக்கு முதலில் கல்யாணத்தைப் பண்ணிவிடவேண்டும் என்று நினைக்கிறானோ? அதுவும் சரிதான், ஆனால் அவள் இவனை விடவும் ரொம்பச் சின்னவள்தானே. முதலில்

https://telegram.me/aedahamlibrary

காசிக்குத்தான் பண்ண வேண்டும். இது ஆதிலட்சுமியின் கட்சி.

“என்னாம்மா சும்மா உக்கார்ந்துக்கினே. இன்னிக்கு நமக்கு ரேசன் போடற நாள் இல்ல.” காவேரியின் குரலைக் கேட்டதும் ஆதிலட்சுமியின் மனம் அடுத்த கவலைக்குத் தயாரானது. போன மாதம் இவர்கள் முறைவந்த போது போய் வாங்க சௌகரியப் படாமல் போய் விட்டது. அன்று சாயங்காலம் வீடு வந்து ஓட்டம் ஓட்டமாக ரேசன் கடைக்கு போயும் உபயோகப்படவில்லை. அதற்குள் கடையை அடைத்து விட்டுப் போய் விட்டிருந்தார்கள். ரேஷன் கடையில் வாங்குகிற பன்னிரெண்டு கிலோ அரிசியே மாதம் முழுவதற்கும் வருவதில்லை. மண்எண்ணெயும் அப்படித்தான். பற்றாக்குறையை இட்டுக் கட்டுவதற்கு வெளி மார்க்கெட்டில் வாங்குவதே பெருஞ்செல்வமாக இருந்தது. இத்தனைக்கும் மண்எண்ணெய் ஸ்டாக் இல்லை என்று கடையில் அறிவுப்புப் பலகை எதுவும் இருக்காது. சில கடைகளில் தகரம் மின்னுகிற பழைய கரும்கலகையில் ஈரசாக்பீசால் எழுதப்பட்ட விலைப்பட்டியல் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் நாலரை ரூபாய் என்று அறிவிக்கும். ஆனால் கடைமுதலாளி ஒன்பது ரூபாய்க்கான சில்லறையைக் காட்டினால்தான் ஒரு லிட்டர் மண்ணெண்ணெயைக் கண்ணில் காட்டுவான். இந்த நிலைமையில் ரேஷனை விட்டுவிடவும் முடியாது. கைவசம் இருந்த பணத்தை காசி வாங்கிக்கொண்டு போயிருந்தான். இல்லாவிட்டாலும் அதில் பத்துலிட்டர் மண்ணெண்ணெணை வாங்கி விட முடியாது.

குத்துக்காலிட்டு அமர்ந்தபடி பாவாடையை முழங்கால்களுக்கு இடையே செருகிய நிலையில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த காவேரியின் கால்கொலுசு ஈரம்பட்டு பளபளத்தது. வீட்டில் இருந்த மற்ற நகைகளைப் போல, அதுவும் எப்போதோ அடகுக்குப் போயிருக்க வேண்டிய பொருள்தான். ஆனால், காவேரி தானாகவே சிறுகச் சிறுகச் சம்பாதித்து சேர்த்து வைத்திருந்த காசில் ஆசையாக வாங்கியது என்பதால் அதைக் கேட்க ஆதிலட்சுமிக்கு மனசு வருவதில்லை. ஆனால் இன்றைக்கு?

https://telegram.me/aedahamlibrary

“காவேரி! நவுறு. நான் வெளக்கறேன்”

“இல்ல, ஒங்கண்ணன் சுடச்சுட இட்லி சாப்பிடப்போறான்னு சொல்லி நீயும் ஆசப்பட்டுக்கினியே. நீயும் போய் இட்லிக்காரம்மா கையிலே வாங்கியாந்து துண்ணேன். சோத்திலே தண்ணி ஊத்தி வச்சி மத்தியானம் வெயில் வேளக்கு துண்ணலாம்.”

“என்னடா இது? முந்தானயிலே முடிஞ்சுவச்சிருந்த காச அண்ணனுக்குக் கொடுத்ததுமே முந்தானயை அவுத்து ஒதறிப் புட்டே. அண்ணனயே கையிலக்கற காசு பத்தலேன்னா கடையில் கடன் சொல்லிப்புடுன்னே. இப்ப என்ன வேற போய் கடன் சொல்லி வாங்கித் துண்ணச் சொல்றியா.” காவேரி ஈரக்கைகளைப் பாவாடையில் துடைத்துக்கொண்டாள். பாவாடையின் கீழ் விளிம்பு நைந்து நாராகப்போயிருந்தது. அதிலிருந்து தொங்கித் தரையைத் தொட்டுக் கொண்டிருந்த நூல் கொத்தை உருவி எறிந்துவிட்டுத் தலை நிமிர்ந்தாள்.

ஆதிலட்சுமியின் பார்வை தன் கால் கொலுசுகளில் படிந்து நிற்பதைக் கவனித்தாள் காவேரி. தண்ணீரில் வெளுத்த பாதங்களின் மேல் அவளுடைய நிறத்துக்கு அந்த வெள்ளிக் கொலுசு எவ்வளவு பாந்தமாக இருக்கிறது என்று எண்ணியது ஆதிலட்சுமியின் மனம்.

“காவேரி! வர்ர வாரம் முழுசுக்கும் ஒங்கண்ணனை எதோ கம்பெனியிலே ஸ்பிரே வேலக்கு வரச் சொல்லி இருக்கறாங்களாம். அப்ப எப்படியும் கைக்கு காசு வரும். கட்டாயமா மீட்டுடலாம். நீ போய் பாப்பாக்கடயிலே கொலுச வச்சி நூத்தியம்பது ரூபா வாங்கிக்கினு வா. நூத்தியெழுவத்தஞ்ச் ரூபா கேளு. அப்பத்தான் நூத்தியம்பது ரூபா நிக்கும். காவேரி மறுத்துப் பேசிவிடப் போகிறாள் என்று அஞ்சியவள் போல ஆதிலட்சுமி தொடர்ந்தாள். “வர்ரப்ப அப்படியே ஒன் கால் புண்ணுக்கு மருந்து வாங்கியாந்துடு.”

காவேரி கால்களைத் தரையில் உதைத்தக்கொண்டாள். “போம்மா! நான் என் கொலுசத் தர மாட்டேன். நீ இப்பிடித்தான் காசு வரு வருமுன்னு சொல்லி எல்லாத்தயும் அடவுக் கடயிலே கொண்டு போய்

https://telegram.me/aedahamlibrary

வச்சிடுவே. ம்க்கும்.”

“இல்லடி! இந்த வாட்டி நிச்சயமாக வர்ர வாரத்துலே என் தலய அடமானம் போட்டாவது வாங்கி தந்துர்ரேன். என்னான்னு கேளு, நாள மறுநாளு ஒங்கண்ணனுக்குக் கண்ணாலம் பேச - சிந்தாதிரிப்பேட்டயிலேருந்து ஆள இட்டாரேன்னு இட்லிக்கார சின்னத்தாயக்கா சொல்லிங்குது. அவங்க வர சொல்ல சர்க்கர், கிருஷ்ணாயில்னு நாலும் நெறக்க இருந்தாத்தான் சட்னு ஒண்ணு செய்யலாம். சொம்புல சாக்ரின் டீய வாங்கியாந்து தந்தா நல்லாவா இருக்கும்? பொண்ணப் பெத்த ஆளுவேற எங்கியோ இங்கிலீஷ்காரன் கம்பெனியிலே நாப்பது வருமா வேல பாக்குதாம். அந்தப் பொண்ணு கூட எட்டாங்கிளாசோ, பத்தாங்கிளாசோ படிச்சிங்குதாம், அதுக்குத் தக்கனயா நாம்ப நடந்துக்குனா தானே மருவாதி?” மகளைக் கெஞ்சினாள் ஆதிலட்சுமி.

“அப்ப, நீ ஒன் முக்குத்திய கொண்டும் போய் வையி.” மகள் சொல்வதைக் கேட்ட பிறகுதான் தான் போட்டுக்கொண்டிருந்த மூக்குத்தியும் தங்கம்தான் என்கிற பிரக்ஞை வரப் பெற்றவளாக ஆதிலட்சுமி அதைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள், யாரும் தங்கமாக இருக்கும் என்று யூகித்துவிட முடியாத அளவில் எண்ணெய் இறங்கி, அது அழுக்கு மூடி, கறுப்பேறிப்போய் இருந்தது. “சொன்னாக் கேளு புள்ள இத வித்தாக்கூட நூறு ரூபா தேறாது”

“எல்லாம் தேறும், நீ கழட்டிக் குடு. நான் போய் வாங்கி யாறேன்.”

“யாருடி இத்தனூண்டுப் பொட்டுக்கு நூத்தம்பது தருவான்.”

“எல்லாம் தருவான். நான் போய் டீ வாங்கியார்ரனே அந்தக் கடயிலே புரோட்டா போடுறானே ஒரு ஆளு, அந்த ஆளு என் கிட்டே நெறய தடவ சொல்லியிருக்கு. 'காவேரி ஒனுக்கு என்னா கஸ்டம்னாலும் என்கிட்ட வா. நானு ஒனுக்கு என்னா வேணுண்ணாலம் தர்ரேன். ஒனுக்காக என்னா வேணுண்ணாலும் செய்யறேன்னு.” காவேரி, கொலுசுத் திருகாணியைச் சரி பார்த்துக் கொண்டாள்.

“ம். தருவான். தருவான். தொடப்பக் கட்டய எடுத்துக்கினேன்னா தெரியும். இன்னா வோணும்னாலும்

https://telegram.me/aedahamlibrary

தருவாராமா? இவுரு பெரிய மைசூரு மகாராஜா. இந்தா, நீ ஒண்ணும் ஒங்கொலுசத் தர வேணா. நீயே போட்டுக்க. ஒண்ணு சொல்லிப்புடறேன் கேட்டுக்க. இன்னமே நீ அந்தக் கடப்பக்கமே போவக்கூடாது. போனாலும் அந்த புரோட்டாக்கார ராசுகோலு கையிலே பேசக்கூடாது ஒங்கண்ணன் காதுல இந்தப் பேச்சு வுளுந்தா கொலயேவுழும். ஆமா" பாத்திரங்களை எடுத்துக் கொண்டு குடிசைக்குள் நடந்தாள் ஆதிலட்சுமி.

“அய்யே! இப்ப என்னாம்மா சொல்லிட்டேன் கொல கிலன்றே” வாசற்காலின் மேல் சாய்ந்தபடி கேட்டாள் காவேரி.

“அதுக்கில்லடி, டீ வாங்க வயசுப் பொண்ண கடைக்கு அனுப்பிச்சா, போனமா வந்தமான்னு இருக்கணும். அத்த விட்டுட்டு அவங்கயிலே ஒனுக்கு என்னா பேச்சு? அவன் யாரு? நாம்ப யாரு? இவன் என்னா ஒனுக்கு இன்னா வோணுமின்னாலும் பண்றது? அப்ப நாங்கள்ளாம் என்னாத்துக்கு இருக்கறோம்? இப்பிடி, ஒம் பொண்ணு அவங்கயிலே பேசிக்கினு நின்னா, இவங்கயில பேசிக்குனு நின்னான்னு ஒரு சொல்லு வந்துடக் கூடாதுன்னுதான, கடன ஒடன வாங்கி ஒங்கக்கான அத்தினி சுருக்கா கட்டிக் குடுத்தது.” ஆதிலட்சுமி மீண்டும் திண்ணையில் வந்த உட்கார்ந்தாள்.

“அப்பிடி நல்லது கெட்டத வெசாரிக்காம, அவசரடியா வந்த எடத்துல தள்ளி வுட்டதனாலதான் அக்கா வர்ரப்பவெல்லாம் கண்ணக் கசக்கிக்கினு நிக்குது.” சீப்பை எடுத்து தன் அம்மாவின் கையில் கொடுத்து விட்டு சடையைப் பிரித்துக் கொண்டு அவள் எதிரே உட்கார்ந்தாள் காவேரி.

“என்னாத்த வெசாரிக்கல? நாம்பளும்தான் நாலு தடவ அங்க போயி வந்தோம், அவங்களும்தான் நாலுதடவ இங்க வந்து போனாங்க. வாய் வழப்பழம் கையி கருணக் கிழங்குன்னு இனிக்க இனிக்கப் போனாங்க. என்னவோ அவ தலயெழுத்து அப்படி ஆச்சு. நான் ஒரு வெவெரமில்லாதவ. கையில கால் காசில்லாம வெறுங்கயா வெளியே போற பையனப் போயி, 'எதுனா வாங்கி போய் கன்னீம்மாளைப் பாத்துட்டு வான்னு சொல்லிபுட்டேன்’ பையன் தவிச்சுக்கினுருப்பான். பண்டம்

https://telegram.me/aedahamlibrary

பாடி விக்கறதுக்கு கூறு கட்டி வச்சாப்பல மார்க்கட்டுல நிக்கற கூட்டத்துலே போயி அவனும் நின்னு, அவனுக்கேத்தாப்பல வேல வந்து, கூலி படிஞ்சு, அப்பாலே அவன் போய் அத்த செஞ்ச, முடிச்சு, காசு வாங்கி... நானு காத்தாலயே போயி துட்டு வாங்கியாந்துட்டிருந்தா அவனுக்கும் நாலு காசு குடுத்து வுட்ருக்கலாம். எதுனா நெறக்க வாங்கிப்போனா அங்க மதிப்பா இருந்திருக்கும்." பேசிக்கொண்டே காவேரியின் தலையில் இருந்து பேன்களைக் குத்தினாள் ஆதிலட்சுமி.

“ஆமா. பொழுது வெடியங்காட்டியும் கடங்குடுன்னு போய் நிப்பியாங்காட்டியும் அப்பாலே செட்டியாரு வூட்டுக்கு போவத்தாவலயாங்காட்டியும். கெடக்குது வுடும்மா. இதான் சரியான நேரம். போய் வாங்கியாந்துடு. நானு கிருஷ்ணாயில் டப்பாவ சுத்தம் பண்ணி வைக்கறேன். சீக்கிரமா வந்துடு. அங்கியே அப்பிடியே குந்திக்னு கத பேசிக்கினு இருந்துடாத" ஆதிலட்சுமியின் பிடியில் இருந்து தலையை உருவிக் கொண்டு எழுந்தாள் காவேரி.

“என்னாத்தக்கீது அங்க கத பேசிக்கினுக்கிறதுக்கு? நான் பொறந்த கதயும் வளர்ந்த கதயுமே பெரிய கதயாக்கீது. என்னா, அந்த சிந்தாதிரிப்பேட்ட பொண்ணைப் பத்தியும் அவங்க மக்க மனுசாளயும் பத்தி அந்தண்ணி எதுனா சொல்லும். அதக் கேட்டுக்குனு வந்துகினேருக்க வேண்டியதுதான்."

ஆதிலட்சுமி மாடத்தின் மேல் மாட்டியிருந்த கையகலக் கண்ணாடியைப் பார்த்து கலைந்து கிடைந்த தலையை அமுக்கி விட்டுக்கொண்டாள். சுவரின் மீது இருந்த சிறிய டப்பாவுக்குள் ஆட்காட்டி விரைலைத் தோய்த்து இட்டுக் கொண்டாள்.

“சொன்னாப்பல. இந்த மூக்குத்தி எதுனா அவசரத்துக்கு ஆத்திரத்துக்கு ஒதவும் போலத் தான்கீது" என்று முணுமுணுத்துக் கொண்டாள். “சரி! அப்ப நான் இட்லிக்கட வரக்கும் ஒரு எட்டுபோயி வந்துர்றேன்" என்று கிளம்பினாள்.

“யம்மா. ஒரு வா சாப்பிட்டுட்டுப் பூடு"

காவேரி, எதிர் எதிராக இரண்டு தட்டுகளை வைத்துத்

https://telegram.me/aedahamlibrary

தனக்கும் தன் அம்மாவுக்குமாக போட்டாள். குனிந்து குழம்பைப் போட்டுப் பிசைந்து கொண்டிருக்கும்போது ஒருக்களித்துக் கிடந்த கதவைத் திறந்து கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள் கன்னியம்மாள். பொசுக்கும் வெயிலில் திடீரென்று வந்திருக்கும் கர்ப்பஸ்திரீயான மகளைப் பார்த்துப் பொறிகலங்கிப் போனாள் ஆதிலட்சுமி,

கையில் இருந்த சோற்றைத் தட்டில் போட்டு விட்டுக் கன்னியம்மாளின் அருகே உட்கார்ந்தாள் ஆதிலட்சுமி. உட்காருவதற்குக் கூடத் தெம்பு இல்லாதவளாக உட்கார்ந்த நிலையிலேயே “ஒரே மயக்கமாக்கீது” என்று தரையில் சரிந்தாள் கன்னியம்மாள்.

சொர சொரத்துக் கருத்துப்போன தன் இடது கை விரல்களால் தரையில் கிடந்த மகளின் மெலிந்த உடலையும், நெற்றியையும் ஆதரவாகத் தடவிக் கொடுத்தாள் ஆதிலட்சுமி. முகமும், கழுத்தும், கையும், காலும் ஈரம் கசிய ஜில்லிட்டுப் போயிருந்ததை அப்போதுதான் அறிந்தாள்.

“என்னா கன்னி ஒனுக்கு இப்பிடி வேர்த்து வுட்டுங்குது? புள்ளத்தாச்சிப் பொண்ணு. ம்” இடது கையாலேயே இடுப்பில் செருகியிருந்த முந்தானையை இழுத்து ஆதிலட்சுமி, கன்னியம்மாளின் கழுத்திலும் நெற்றியிலும் இருந்த வியர்வையை ஒற்றி எடுத்தாள்.

“நீ ஒண்ணும்மா. வந்ததும் நடந்து வந்த களை தீரட்டுமின்னு அக்கா கை, காலு, மூஞ்சியெல்லாம் கழுவிட்டு வந்திருக்குது,” என்று தன் அம்மாவை சமாதானப்படுத்தினாள் காவேரி. கண்களை மூடித் தரையில் படுத்திருக்கும் கன்னியம்மாளின் தலைமாட்டில் உட்கார்ந்தாள்.

“எக்கா. இந்தா கண்ண முளி. தலயத் தூக்கு, ஒரு வா தண்ணி குடி. குடிக்கா . சரியாப்பூடும்.”

மூடிய கண்களைத் திறக்காமலே வேண்டாமென்று தலையை அசைத்தாள் கன்னியம்மாள்.

'வாந்தி வந்துரும்'

ஒரு வாய்த் தண்ணீர் உள்ளே இறங்கினாலும் உடனே

https://telegram.me/aedahamlibrary

வாந்தி வந்து விடக்கூடும் என்று அவள் பயந்தது தெரிந்தது.

“காவேரி போயி ஒரு சின்ன வெங்காயத்த எடுத்தா வெறுந் தண்ணி வாணா. நீத்தண்ணியிலே ஒறக்கிறாப்பல உப்புப் போட்டுக் கொண்டா”

காவேரி கொடுத்த வெங்காயத்தை உரித்துக் கிள்ளித் தரைமீது வைத்து, மூடிய கையினால் ஒரு நசுக்கு நசுக்கி சுருண்டு படுத்திருந்த மகளின் மூக்குக்கு அருகே வைத்தாள் ஆதிலட்சுமி. சற்று நேரத்தில் சீராக மூச்சுவிட ஆரம்பித்தாள் கன்னியம்மாள்.

“இத ஒரு வா குடிக்கா. தெம்பா இருக்கும்” கன்னியம்மா தலையைத் தன் தோள் மேல் சரித்துச் சாய்த்துக் கொண்டு நீராகாரத்தைக் குடிக்க வைத்தாள் காவேரி. குடித்து முடிந்ததும் மீண்டும் படுக்க முயன்ற கன்னியம்மாளைத் தடுத்து நிறுத்தினாள் ஆதிலட்சுமி.

“வவுத்துக்கு எதுனா தின்னுட்டு ஒடனே தரையிலே சாயக் கூடாது. சித்த நேரம் சமாளிச்சுக்கின்னு ஒக்காரு. சரியாப்பூடும்.”

“போம்மா. காவேரி நீயும் போ. ரெண்டு பேரும் சாப்பிடுங்க. சோத்தில எதுனா உளுந்திடப் போவுது”

காவேரி எழுந்து போய் இரண்டு சாப்பாட்டுத் தட்டுக்களை எடுத்துக் கொண்டு வந்து வைத்தாள். கன்னியம்மாளின் மேல் வைத்த பார்வையை மாற்றாமலே தட்டிலிருந்த உணவை உருட்டிச் சுவை தெரியாமலே விழுங்கினாள் ஆதிலட்சுமி.

“ஒனுக்கும் ஒரு தட்டு போடட்டுமாக்கா? ஒரு வா, துண்ணேன். கொளம்பு ஜோராக்கீது” சப்புக்கொட்டினாள் காவேரி.

“இப்ப வாணாண்டி. வரசொல்லவே கொட்டிக்கினு தான் வந்தேன். சின்னக் கொழுந்தன் இளுத்தாத்து வச்சிங்கறானே அந்த மூலவீட்டு கடக்காரன் மவள, அது சுத்த வெவரமில்லாதது. தானே ஓடியாந்துடிச்சு. கேட்பாருமில்ல மேய்ப்பாருமில்ல. எங்க மாமியாக்காரி அது போட்டுக்குனு வந்த நகய ஒவ்வொண்ணா எடுத்து ஏப்பம் விட்டுங்கறா. நேத்துதான் அந்தப்புள்ள செயின் எடுத்தும் போயி வச்சாங்க.

https://telegram.me/aedahamlibrary

உடன, கையில காசு தாராளமாயிடிச்சா, காத்தாலங்காட்டியும் நண்டு வறுத்து, பூரி, கிழங்கு பண்ணி, ஒரு புடி புடிச்சிச்சிங்க. நானும் ரெண்டு பூரி திண்டுட்டுத்தான் வந்தேன்" ஒரு நிதானத்துக்கு வந்திருந்த கன்னியம்மாள் தெளிவாகப் பேசினாள்.

"அந்தப் பொண்ண வெவரம் இல்லாதவங்கறியே. ஈயத்தப் பாத்து இளிச்சிச்சாம் பித்தளன்னாப்பல. நீ இன்னாவோ ரொம்ப சுதாரிப்பா இருக்கறவளாட்டம். அந்த வூட்டுக்கு வாழப்போன மக்கா மாசமே ஜிமிக்கியும், மோதிரத்தயும் பறிகொடுத்தவ இல்லியா நீ?" ஆதிலட்சுமி அங்கலாய்த்தாள்.

கீழே கிடந்த வெங்காயத்தை எடுத்து முகர்ந்து பார்த்துக் கொண்டாள் கன்னியம்மாள். "என் ஜிமிக்கியயும், மோதிரத்தயும் எங்க மாமியாளா எடுத்துகிச்ச? இல்லியே. என்னமோ மேல விஷயத்துக்கு செலவுக்கீதுன்னு இதுதான் எடுத்துக்கிச்சி" என்று தன் புருசனைக் குறைசொன்னாள் கன்னியம்மாள்.

"சரி! அப்புறம் என்னாச்சி. வேல வெஷயமா எதுனா உருப்படியா நடந்துச்சா? மாமா, நகய மூட்டு உங்கயிலே கொண்டாந்து குடுத்துடிச்சா" வெடுக்கென்று கேட்டாள் காவேரி.

"என்னாத்த வச்சி நகய மூட்டுக் கொடுக்கறது? இது சோறு துண்ண வூட்டுக்கு வர்ரநேரம் போவ மிச்ச நேரமெல்லாம் கட்டுக்கு வெட்டுக்கு சிக்காம சிநேகிதக்காரனுங்களோட செட்டு சேர்த்துக்குனு திரியுது. கேட்டா மட்டும் கோவம் பொத்துக்குனு வந்துடுது, இல்லாட்டி நமக்கு புரியாதமாதிரி எதுனா சொல்லி வாய அடச்சுப்புடுது."

"அதெப்படி அடச்சுப்புடுவான். கேக்கற வெதத்துல கேட்கணும்." ஆதிலட்சுமி சாப்பிடுவதை நிறுத்தி விட்டு கன்னியம்மாளைப் பார்த்தாள்.

"சரி, நீங்கள்ளாம் ரொம்ப சாமர்த்தியக்காரங்க. சலிச்சுப் போய் வூட்டுக்கு வந்தவள வந்ததும் வராதுமா கொக்கிபோட்டு மடக்கி மடக்கி கேள்விக் கேக்கறீங்க. கட்டிக் குடுக்கறதுக்கு மின்னாடி மாப்பிள்ள எப்பிடி, மாமியா எப்பிடி மக்க மனுசா எப்பிடின்னு நாலயும் வெசாரிச்சிங்க

https://telegram.me/aedahamlibrary

வேண்டியதுதான. எனுக்குக் கண்ணாலம் கட்டி வைங்கன்னு நானா வந்து உங்ககிட்டே கேட்டேன்? ஊர்லே தெருவுலே இருக்கறவங்க கேக்கற வெறுங் கேள்விக்கு பயந்துக்குனு என்னப் பாழுங்கெணத்துல தள்ளிப்புட்டீங்க?" கன்னியம்மாளின் கண்கள் நிறைந்தன.

“என்னா புள்ள பேசறே? நீயும் தான இந்தப் படலாண்ட குந்திக்கினு. கேட்டுனுருந்தே. 'எதோ எலெக்டிரிகலுவேல செய்யறான் எம்மவன். மாசம் ஆயிரம் ரூவாய்க்கி மேல சம்பாரிக்கிறான். வூட்டு செலவுக்கு ஐநூறு ரூபாய் தருவான். மிச்சத்த தன் செலவு போவ அப்பிடியே பேங்கில போட்டுவப்பான்'னு சொல்லலயா உங்க மாமியாக்காரி.” ஆதிலட்சுமி மூக்கை உறிஞ்சிக் கொண்டாள்.

கன்னியம்மாள், கண்களைத் துடைத்துக்கொண்டாள். தாழ்ந்த குரலில் “பின்ன என்ன எம்மவன் தீவட்டித் தடியனாட்டம் ஊரச் சுத்திக்கினு வூட்டுக்கு அடங்காமத் திரியறான். அவனுக்கு கண்ணாலம் கட்டனாலாவது ஒரு பொறுப்பு வருமான்னு தான் உங்க வூட்ல பொண்ணு கேக்க வந்துங்கறோம்னா சொல்லுவாங்க.”

சைக்கிளைத் தள்ளிக்கொண்டு மீன் விற்றுக் கொண்டுபோன முருகன், வீட்டு வாசலில் இருந்து “எம்மா, மீனு வாங்கலியா” என்று குரல் கொடுத்தான். காவேரி, ஆதிலட்சுமியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

“சுதும்பு, வவ்வால், பாற எல்லாம் கீது. ஃப்ரஷ்ஷாக் கீதும்மா.”

“எல்லாம் ஞாயித்துக் கெளம பார்த்துக்கலாம். போயிட்டு வாப்பா” என்று அவனுக்குப் பதில் சொல்லிய ஆதிலட்சுமி, மீண்டும் சோற்றைப் பிசைந்தாள்.

“வெசாரிச்சா மட்டும் இன்னா தெரிஞ்சுடப் போவுது? நல்ல பையன்ம்மா. ஒரு சிகரெட்டு, பீடி வெத்தல பாக்கு பழக்கம் கெடயாதுன்னு சர்டிபிகேட்டு கொடுத்தவளுங்க இன்னிக்குப் போய்க் கேட்டா பையன் பளக்க வளக்கந்தான் கண்லப்படும். அத்த சொன்னோம். அவன் வேல வெட்டி இல்லாம சுத்திக்கினுக்கறான்னு நாங்க என்னத்தக் கண்டோம்னு சொல்றாளுங்க. ஏதோ நல்ல காரியத்துக்கு நல்ல வார்த்த சொன்னோங்கறாளுங்க. உள்ளத உள்ளபடி சொல்லட்டா

https://telegram.me/aedahamlibrary

அந்த பஜாரி எங்களச் சொம்மாவுட்ரு வாளாங்கறாங்க. நம்ப தல எயித்து. எங்க போய் முட்டிக்கிறது.”

“நீ என்னம்மா எதுக்கெடுத்தாலும் தல எயித்து தல எயித்துன்னுக்கினு' காவேரி தட்டை எடுத்துக்கொண்டு எழுந்தாள். “ஊரான் வூட்டுப்பொண்ணக் கட்டிக்கினு போனியே. ஒழுங்கா குடித்தனம் பண்ணறதுக்கு என்னான்னு ரெண்டு நெருக்கு நெருக்கனா வழிக்கு வர்றாங்க. அத்தவுட்டுட்டு” வாசல் அருகே நின்றவள் கன்னியம்மாளின் பக்கம் திரும்பி, “எங்கக்கா மாமா? வருமா? வந்தா. நேருக்கு நேரா வச்சி நானே நறுக்குன்னு நாலு கேள்வி கேக்கறேன்.”

“அது வராது. அது தான் இந்த வாசப்படியே மெறிக்க மாட்டேன்ன சபதம் கூறிக்கின்னு திரியுதே.”

“ஏனாம்?”

“அதான், அன்னிக்கு நம்ப மாமா வூட்ல எங்க ரெண்டு பேரயும் விருந்துக்கு வர சொல்லியிருந்தாங்களே அன்னிக்கு இது எங்கயிலே சொல்லிவுட்டுச்சி நீ போய் ஒங்கம்மா வூட்ல இரு. பன்னண்டு மணி வாக்கும் பாரு. நான் அங்க வராட்டி நேரா ஒங்க மாமன் வூட்டுக்குப் போயிருன்னு நானு நேரா அங்க வந்துடறேன்னிச்சு. பன்னண்டு பன்னண்டே காலு வரக்கும் பாத்தேன். அதுக்குள்ளே அம்மா, 'அய்யோ விருந்து சோறு ஆக்கி வச்சிட்டு வருவாங்களோ மாட்டோங்களோன்னு எந்தம்பி பொண்டாட்டி வழிய வழிய பார்த்துக்கினு இருகப்பாளேனு நச்சுப் புடுங்கலா ஆரம்பிச்சிடுச்சே. சரி, வா போலாமுன்னு கெளம்பனேன். இது வரவே இல்லியே. கடசில சொல்லுது அவங்க வர சொல்ற நேரத்துக்கு டக்குன்னு நாம் போவக் கூடாதாம். அப்பிடிப்போனா நாம் சோத்துக்கு செத்தவங்கன்னு அவங்க நெனச்சிக்குவாங்களாம். அப்படிப் பண்ணா விருந்து செஞ்சு வச்சது என்னா ஆவறதுன்னு கேட்டேன். என்னடி பெரிய விருந்து. கண்ணாமூச்சியா காட்டறே? விருந்துங்கறது சாப்பாடுதானே? நாம்ப போகாட்டி வூட்டு மனுசா தின்னு தீக்கப் போறாங்க. அவ்வளவுதானேன்னுது. அன்னியிலேருந்து கோபம். ஒங்க மாமன் வூட்டுலே உன்னயும் என்னயும் விருந்துக்கு அழைச்சாங்களா? உங்கம்மாளயும் ஒன்னயும்

https://telegram.me/aedahamlibrary

அழச்சாங்களா அது இதுன்னு புடிச்சிக்கிச்சி” நீண்ட நேரம் பேசி விட்ட களைப்பில் கன்னியம்மாள் ஓய்ந்தாள்.

பெரு மூச்சு விட்டாள் ஆதிலட்சுமி “நானுன்னு எதப் பண்ணாலும் தப்பாதான் முடியுது. எல்லாம் எந்தல எயித்து. போகட்டும். இத்தினி காத்தால இப்படி வெடுக்குன்னு வந்த நிக்கறியே சொல்லிக்கினு வந்தியா? இல்லே எதுனா கோவிச்சிக்குனு வந்துட்டியா?” தயங்கித் தயங்கி வந்தது ஆதிலட்சுமியின் குரல்.

“இந்த மனுசன் வூட்டுப்பக்கம் வந்து ரண்டு நாளாச்சி. அந்த வூட்லக்கற மனுசாளாட நானு வாய்ப் பேச்சி பேசி மூணு நாளாச்சி. யாருக்கிட்டே சொல்லிக்கினு வர்றது” சலிப்பை வெளிப்படுத்தியது கன்னியம்மாவின் குரல்.

“அடக்க கஸ்மாலமே. என்ன நடந்துச்சி? எதுக்கு இப்படி சொல்லாமக் கொள்ளாம வந்து நிக்கறே” ஆதிலட்சுமியின் கவலை பட்டாள்.

“இந்த மனசனுக்கும் எனக்கும் வேற ஒரு விஷயத்துல தகராறு. அதப்பத்தி நான் அப்புறம் சொல்றேன். அத்தோட, இன்னா செய்யறே, இன்னாத்துக்கு இப்படி ராவாபவலா சுத்தறேன்னு ஒரு வார்த்த அந்த ஆள நான் கேக்கக் கூடாதாம். மாமியாக்காரி சொல்றா. ஒரு ஆம்பிள வூட்டுக்கு வந்ததும் இப்படி மொச்சு மொச்சுன்னு கேள்வி கேட்டா அவனுக்கு எண்டா வூட்டுக்கு வர்றோமுன்னு பூடாதான்னுது. அப்பாலே 'எங்க வூட்டுக்காரரு வூட்லே இல்லாத நேரத்துல நீதான் அவன வழிக்கக் கொண்டாரனும்னுது' சொல்லிக் கொண்டிருக்கும் போதே அழத் தொடங்கினாள் கன்னியம்மாள்.

“புள்ளத்தாய்ச்சி நாத்தனா வூட்டுக்கு வந்துட்டா. ரெண்டு பேரும் தலச்சன் புள்ளக்காரிங்க. ஒருத்தரு மூஞ்சியில ஒருத்தரு முளிக்கக் கூடாதாம். அதுக்குன்னு என்னப் பின்னான்ட உக்கார சொல்லி நாள் பூரா வெளியே வரக்கூடாதுன்னு ஓலப்படல வச்சி மூடிட்டாங்க. சோறு திங்காம இருக்கலாம். தண்ணி குடிக்காம இருக்கலாம்; கக்கூசுக்குப் போவாம எப்படி இருக்கறது? இது கையிலேயும் சொன்னேன். அதுக்கு ஒரே ரகள. பேசாம பொறப்பட்டு வந்துட்டேன்.” கன்னியம்மாள் கன்னங்களில்

https://telegram.me/aedahamlibrary

வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டாள்.

ஆதிலட்சுமிக்கு தட்டில் இருந்த சாப்பாடு இறங்கவில்லை. மகளின் கஷ்டம் நெஞ்சைப் பிழிந்தது. பக்கத்தில் இருந்த செம்பை எடுத்துக் கை கழுவினாள். கன்னியம்மாளை ஆதரவாகத் தன் மேல் சாய்த்துக் கொண்டாள். அதற்காகவே காத்திருந்தவள் மாதிரி கன்னியம்மாள் பெரிதாகத் தேம்பித் தேம்பி அழுதாள்.

உள்ளே நுழைந்த காவேரி இடுப்பில் இரண்டு கைகளையும் ஊன்றிக் கொண்டு ஆதிலட்சுமியையும் கன்னியம்மாளையும் உறுத்துப் பார்த்தாள்.

“நீ அதுக்குள்ள கை கழுவிட்டியா? நல்லாக்கீது, இப்ப என்னத்துக்கு ரெண்டு பேரும் கட்டிக்கினு அளுவறீங்க? ஏம்மா அண்ணன் கல்யாண வெஷயமா இட்லிக்காரத்தகிட்டே நீ போவத்தாவலயா?” குனிந்து தட்டை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள். 'ஏ வெள்ளயா தோ தோ தோத்தோ' என்று நாக்கினால் ஒலி எழுப்பி நாயை அழைத்தாள். அது வருவதாகத் தெரியவில்லை. அவள் கையில் இருந்த தட்டைப் பார்த்து விட்டு முருங்கை மரத்துக் காகம்தான் உற்சாகக்குரல் எழுப்பியது 'எங்கே போய் தொலஞ்சிடுச்சி இந்த வெள்ளையன் கழுத' என்று நாயைத் திட்டிக் கொண்டே தட்டில் இருந்த சோற்றைத் தரையில் கொட்டினாள்.

தெரு முனையிலிருந்து ஓடி வந்தது நாய். காவேரியைச் சுற்றிச்சுற்றி வந்தது. வேகவேகமாக வாலை அசைத்தது. பின்னங்கால்களை நிலத்தில் ஊன்றி அமர்ந்து அவளைப் பார்த்து செல்லமாகக் குரைத்தது. அவள் கையில் வைத்திருந்த தட்டை நோக்கித் தாவியது. அவள் விளையாட்டாகக் கைமாற்றிக் கைமாற்றித் தூக்க வெள்ளையனும் அதே திசையில் துள்ளியது.

“அட! அறிவு கெட்ட கழுத! சோத்தப் போட்டு வச்சினுக்கறேன். அந்தப் போய் திங்கறதுக்கில்லாம அய்யா வெள்ளாடறாரு” என்று நாயை செல்லமாகத் திட்டினாள்.

https://telegram.me/aedahamlibrary

அம்மாவை நினைத்துக் கொண்டே இட்லிக் கடையை நோக்கி நடந்தான் காசி. கையிலே காசில்லாத நிலைமையிலும் சின்னத்தாயி அத்தையிடம் கடன் சொல்லியாவது தனக்குப் பிடித்தமான வடகறியை வாங்கிச் சாப்பிட சொல்லி அனுப்புகிற அவளுடைய பாசத்தை நினைத்தான். அவன் மீது மட்டும் தான் என்றல்ல. மூன்று பிள்ளைகளின் மேலும் தான். அவன் ஆண் பிள்ளை என்பதால் கொஞ்சம் கூடுதல் சலுகை.

தெருவோரத்தில் குழாயை அடுத்திருந்த சிமெண்ட் பரப்பிலேயே வாளிகளை வைத்துக் கொண்டு பெண்கள் துணி துவைப்பதினால் வெளியேறும் தண்ணீர் தேங்கி தரை சகதியாக இருந்தது. காசி, லுங்கியைக் கட்டியிருந்த நிலையிலேயே முழங்கால் அருகே உயர்த்திச் சேர்த்து முடிபோடுபவன் மாதிரி செருகிக் கொண்டு மேலே நடந்தான்.

குழாய் அருகே பல நிறங்களில் குடங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. கமலாவும் பாப்பாத்தியும் சண்டை போட்டுக்கொண்டிருந்தனர். ஒரே வீட்டு மருமகள்கள். சமீப காலம்வரை ஒரே வீட்டில் வாழ்ந்தவர்கள். சில மாதங்களுக்கு முன்னால்தான் மனஸ்தாபம் ஏற்பட்டு வீட்டின் நடுவே குறுக்குச் சுவர் உயர்ந்தது.

காது கொடுத்துக் கேட்க முடியாத அளவுக்கு மோசமான வார்த்தைகளால் அவர்கள் ஒருவரையொருவர் பேசிக் கொள்வதையும், தங்களுக்குள் சண்டை போட்டபடி இருந்தாலும் தங்கள் இருவரையும் புறந்தள்ளிவிட்டு மற்றவர்கள் குழாயடியில் குடத்தை வைத்து விடாமல் அனிச்சையையாகத் தடுத்துக் கொண்டும் இருந்தார்கள்.

அங்கே, இந்தக் குழாய் நீர் தவிர குடி தண்ணீருக்கு வேறு வசதி இல்லை. இது இரண்டு பேருக்குமே தெரிந்ததுதான். அப்படியொன்றும் வருகிற எல்லாத் தண்ணீரையும் பிடித்துக் கொண்டுபோய் அவர்களில் யாரும் தங்கள் வீட்டில் மட்டும் நிறைத்துக்கொண்டுவிடவும் முடியாது. அதற்கேற்றாற் போல பாத்திரங்களோ தொட்டியோ, வேறு இடவசதியோ ஏன் தேவையோகூட எவருக்கும் இல்லை. இத்தனைக்கும் இவர்களுக்குள் என்னதான் தகராறு என்றாலும் அவள் குழந்தைகள் இவள் வீட்டிலும் இவள்

https://telegram.me/aedahamlibrary

பிள்ளைகள் அவள் வீட்டிலும் விளையாடக் கூடியவைதான்.

காசிக்குப் பசித்தது. தொடர்ந்து நடந்தான். குழாயடியில் சண்டை என்று வந்துவிட்டால் அம்மாவும் ஜல்லிக்கட்டுக் காளை மாதிரி தான். கடந்த சில மாதங்களில்தான் அவள் உடல் மிகத் தளர்ந்து விட்டிருந்தது. வயிற்று வலியால் சாப்பிடவே பயந்தாள். அரை வயிற்று ஆகாரத்தை சாப்பிட்டு அதனாலேயே மேலும் பலவீனமாகிக் கொண்டிருந்தாள். அவ்வப்போது கை வைத்தியமாக எதையோ செய்து கொண்டிருந்தாள். எதாவது வேலை கிடைத்துக் கையில் காசு வந்தால் அவளை டாக்டரிடம் அழைத்துக்கொண்டு போய் வைத்தியம் செய்யலாம். கையில் காசும் பையில் பொருளுமாக கன்னியம்மாளைக் கட்டிக்கொடுத்த வீட்டுக்கு நாலில் எட்டில் போய்த் தலையைக் காட்டிக் கொண்டிருந்தால், அவளை அவள் புருஷனோ மாமியாரோ நடத்துகிற விதமே வேறாக இருக்காதா?

முழங்காலின் மேல் நின்ற லுங்கி முடிச்சுத் தளர்ந்து இறங்கியது தெருவோரத்தில் இருந்த மூச்சிரைக்க ஓடி வந்த காவேரியின் செல்ல நாய் வெள்ளையன் அவனை நெருங்கிக் குழைந்தது. 'போடா' என்று அவன் அதன் விறைத்த காதுகளின் மத்தியில் தடவிக் கொடுத்தான். காவேரிதான் அதனோடு சலிக்காமல் விளையாடுவாள். 'குடிசைக்குள் இருந்தாலும் ராஜகுமாரி மாதிரிதான். அதும் பேச்சும், வாட்ட சாட்டமும் நெஞ்சுக்குள்ள வக்கற, நெனப்பும்'... அதிலும் நாலாவது குடிசையின் வாசலில் 'முன்னேற்றப் படிப்பகம்' என்று போர்டு எழுதித் தொங்க விட்டிருக்கிற புதிதாய்க் குடிவந்த சுசீலாவோடு பழக ஆரம்பித்த பிறகு அவள் வெகுவாக மாறிவிட்டாள். லேசாகப் படிக்கவும் கற்றுக்கொண்டுவிட்டாள்.

'எது எப்படியோ, குடும்ப மானம் கெடாம இருந்தா சரிதான்' என்று எண்ணமிட்டபடி தொடர்ந்து நடந்தான். சீக்கிரத்தில் அவளுக்கும் ஒரு கல்யாணத்தை பண்ணிட்டா! அதுக்காக அவசரப் பட்டுப் பெரியவளை ஒரு சோம்பேறிப்பயலுக்குக் கொடுத்தது போல இவளையும் கொடுத்துவிடக்கூடாது. நிதானமாகப் பார்த்து ஒரு தடவைக்கு நாலுதடவை

https://telegram.me/aedahamlibrary

விசாரித்துத்தான் செய்ய வேண்டும் என்று யோசித்தவாறே காசி சின்னத்தாயியின் கடையை நெருங்கினான்.

இன்றைக்காவது ஏதாவது வேலை கிடைக்குமா என்ற கேள்வியில் சோர்ந்த அவன் நெஞ்சம் தெருவோரமாக நிறுத்தப் பட்டிருந்த மாரிமுத்துவின் சைக்கிளைப் பார்த்ததும் தெம்பு பெற்றது. சொந்தமாக ஆட்டோ வைத்திருப்பவன் மாரிமுத்து. மெயின் ரோட்டில் எலெக்டிரிகல் பொருட்கள் விற்கும் சிறிய கடையும் வைத்திருந்தான் அவன். சப் - காண்டிராக்டர்களுக்கும் பல விதமான வேலைகளுக்கும் ஆட்களைத் திரட்டித் தருபவனும் அவன் தான். அவனைத் தானாகத் தேடிக்கொண்டு போய்ப் பார்க்க இருந்த வேளையில் அவனே இட்லிக்கடையில் எதிர்ப்பட்டது காசிக்கு நல்லதாகப்பட்டது.

தேரடியை ஒட்டியிருந்த சின்னத்தாயின் குடிசைக்கு வெளியே மூன்று புறமும் வளைத்துக் கட்டப்பட்ட தென்னை ஓலைத் தடுப்பை நெருங்கியதும்தான் திக்கென்றது காசிக்கு. தூரத்துப் பார்வைக்கு மாரிமுத்துவின் சைக்கிள் மாதிரி தெரிந்தது பக்கத்தில் நெருங்கியதும் அது அவனுடையதுதானா என்று அவனுக்கு சந்தேகம் வந்தது.

“வாடா மருமவனே வா. என்னாத்தப் பாத்து மலச்சுப் போயி நின்னுக்கினே” வாசலைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த சின்னத் தாயியின் குரல் அவனை வரவேற்றது.

காசி, சற்றே குனிந்து உள்ளே நுழைந்தான். எரிந்து கொண்டிருந்த அடுப்பைச் சுற்றி ஐந்தாறு பேர் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். மூலையில் இருந்த வாய் உடைந்த பானைத் தண்ணீரை பிளாஸ்டிக் டம்ளரில் கொஞ்சம் எடுத்துக் கையை நனைத்துக்கொண்டான்.

“அட! இன்னா துண்றே சொல்லு. கம்னு குந்திக்னா. சுறாப் புட்டு கீது, மீன் கொளம்புக்கீது, சட்னி, சாம்பார்கீது.”

சின்ன வாழை இலை, நான்கு இட்லிகளையும் கனத்த கல்தோசையையும் வைத்து விட்டு அவன் முகத்தைப் பார்த்தாள் சின்னத்தாயி.

“வட கறி இல்லியாத்தே”

https://telegram.me/aedahamlibrary

“அடடா! தீந்து போச்சே கண்ணு. இப்பத்தான் சட்டிய வளிச்சு மாரிமுத்துக்குப் போட்டேன். செத்த மின்னாடி வந்துங்க வேண்டியதுதான? சரி, மீனு கொளம்பு ஊத்துட்டுமா?”

கிட்டதத்தட்ட இட்லி அளவான மீன் தலையைக் கரண்டியால் எடுத்து அவன் இலையில் வைத்தாள் சின்னத்தாயி . எதிரில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் காரசாரமாக அரசியல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“சும்மா பவுல்கனா காணாத நைனா. இன்னமே உங்க தலவரு வெளிய தல காட்ட முடியாது தெரிஞ்சுக்க. நேத்து ராத்திரி நீ வந்த பாத்திருக்கணும். எங்க தலவரு அப்படியே சல்னு வந்து எறங்கி கூட்டத்தப் பார்த்து கைய ஆட்டி டாட்டா காட்னாரு பாரு. எத்னி மாலங்க. எத்னி சனம். அப்பிடியே கூட்டம் சொக்கிடிச்சி. கழுத்துல வுளுந்த மாலய கூட்டத்துக்குள்ள வீசனாருபாரு. அவுரு தொட்ட மாலயாச்சா, அப்பிடியே மொச்சுக்கினாங்க சனங்க. என்னுமோ ஒங்கதலவரு அத்த சொன்னாரு இத்தசொன்னாருன்னியே. எங்க தலவரு ஒண்ணுமே சொல்லவணா, சொம்மா வந்து அப்படி ஒரு பார்வ பாத்தா போதும். அவரு பர்சனாலிட்டி அப்டி. வள்ளலுய்யா அவரு. நம்ப பேட்டயிலேக்கற அத்தினி வூட்டுக்கும் எலவசமா ஒவ்வொரு கொடம் தர்ரதா சொல்லிங்கறாரு. அதுவும் சொந்தக் காசிலே. ஒங்க தலவரு பண்ணிப்புடுவாரா? ஆளு பார்த்து, கட்சி பார்த்து நாலு தந்து பத்த சுருட்டுவாரு”

இந்த வாதங்களுக்குச் சற்றும் சளைக்காத எதிர் வாதங்களை அடுத்தவன் அடுக்கிக் கொண்டிருந்தான். அவர்கள் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகுதான் சாம குப்பம் என்றிருந்த பெயர் தமிழ்க் குப்பம் என்று ஆகியதாம்.

“இன்னா இது பேரு. நல்லாவாக்கீது? நேத்து எங்க தலவரு மீட்டிங்கிலேயே சொல்ட்டாரு. இனிமே இந்த பேட்டைக்கு முத்தமிழ் நகர்ன்னு பேர் வைக்கிறேன்னு. இன்னேரத்துக்குள்ள சிமிட்டி சிலாப் தூக்கி பளீர்னு பெயிண்ட்கூட அடிச்சுருப்பாங்க. இப்ப நேரமில்லன்னா ராத்திரி வந்து பாரு. லைட்டு கிய்ட்டு எல்லாம் போட்டு ஜோராயிருக்கும்.” வளர்ந்து கொண்டே போன அவர்களின் பேச்சை நிறுத்த விரும்பியது மாதிரி கத்தினாள் சின்னத்தாயி.

https://telegram.me/aedahamlibrary

“அடச்சீ! எளுந்து போயி கையக் கழுவுங்கடா பேமானிப் பசங்களா! குழாயிங்கீழே முழங்காலு வரிக்கும் தண்ணி நிக்குது. அதுக்கு மேலே செங்கல்லு அடுக்கி கொடத்த வக்கறோம். அங்க போடுங்களேன் சிமிட்டிய, ரோட்டிடுல வெளக்கு கீதா? ஒரே வாரத்தில பூடுது, அங்க போடுங்களேண்டா லைட்ட பேசறானுங்க பேச்சு.” சின்னத்தாயின் சத்தத்தால் அடங்கியது பேச்சு. மேலும் இரண்டு தோசையையும், சுறாப்புட்டையும் வாங்கிச் சாப்பிட்டு விட்டு வெளியேறினார்கள்.

“ஆச்சு. கடயகட்டிட்டு ஒங்கல்யாண விஷயமா சிந்தாதிரிப் பேட்ட போவப்போறேன். ஒனக்கு இன்னா மாதிரி பொண்ணு வேணுமுன்னு, நீ மின்னாடியே சொல்லிப்புடு. அய்யே. இன்னா அப்பிடிப் பாக்கறே. பாரேன். பொம்பளப் புள்ளியாட்டம் மூஞ்சக் கவுத்துக்கறத. நல்லாக்கீது போ. இந்தக் காலத்துலே அதுங்க தான் தகிரியமா தலய நிமித்திகினு தனுக்கு இன்னா மாதிரி மாப்பிள வோணும்னு சொல்லுதுங்களே. ஒனுக்க இன்னா கூச்சம்? சொம்மா சொல்லு. அட! இன்னான்னு சொல்றதுன்னு ஓசனயா. சொம்மா சொல்லேன். ராஜகுமாரி மாதிரி இருக்கணும். இல்லேன்னா பத்மினி மாதிரி, இல்லேன்னா சாவித்திரி மாதிரின்னு.”

மாரிமுத்து சாப்பிட்டு விட்டு பக்கத்துக் கடையில போய் பீடி குடித்து விட்டு வந்திருந்தான். சின்னத்தாயின் எதிரில் பீடி குடிக்கிற தைரியம் எவனுக்கும் இல்லை .

“என்ன ஆயா நீ போய் அவங்கிட்ட பழய ஆளுங்க பேரா சொல்லிகினு. புச்சா எத்தினி வந்துங்குது. அதுங்களச் சொன்னா அவனுக்கு தடால்னு புரியும். என்னா பிரதர் நான் சொல்றது?” என்ற மாரிமுத்து, காசியின் தொடைகளில் தட்டினான். அவன் கையை விலக்கி விட்டான் காசி.

“அண்ணே! இன்னிக்காச்சும் எதுனா வேல கெடைக்குமா?” ஒரு நிமிஷத்துக்கு முன்பு வரை மகா ராஜாவாக இருந்தவன் இப்போது சட்டென்று மாரிமுத்துவின் முன் கையேந்தி பிச்சைக்காரனைப் போல நிற்பதாகப்பட்டது. அதுகூடப் பரவாயில்லை. வெறுங்கையாகத் திரும்பும்படி நேர்ந்துவிடக்கூடாது.

https://telegram.me/aedahamlibrary

“வேல கெடக்குது வேல. நீ ஆயா கேட்டதுக்கு பதில் சொல்லு” கண்களைக் குறும்பாக சிமிட்டிச் சிரித்தான் மாரிமுத்து.

“தெரு வாசல்ல உன் சைக்கிளப் பார்த்ததும் நல்ல காலம்னு ஒரு மினிட் நெனச்சேன். அப்பாலே கிட்ட வந்து பார்த்ததும் கபால்னுச்சி, இன்னாடா இதுன்னு பேஜாராயிட்டேன்”

மாரி முத்து உரக்கச் சிரித்தான் “இன்னாடா இது அண்ணாத்த சைக்கிள்லே வெள்ளைக்கொடிக் கட்டிங்கிதேன்னு நெனச்சுக்கினியாங்காட்டியும். கடைக்கு வந்து பாரு. சீரியல் செட்டு போட்டு புச்சா தலைவரு படம் மாட்டிங்கறேன். என்னா நீ அப்பிடி முளிக்கிறே? இன்னாடா மாரிமுத்து கச்சி மாறிட்டானேன்னு பாக்கறியா? கச்சி இன்னாப்பா கச்சி? கச்சியா நம்பளுக்கு சோறு போடப் போவுது? நம்ப கச்சியெல்லாம் வவுத்துக் கச்சிதான். நமக்கு மட்டும் என்ன எல்லாத்துக்குமே அப்படிதான். பெர்ரீய தலவருங்களே ஒரு கச்சிலேருந்து மாறி வேற கச்சியிலே சேர்ராங்க. அப்பறம் காணாமலேயே கூட பூடாறங்க. நீ இன்னாவோ இதுக்குப்போய் இப்பிடி அசந்துட்டியே. பச்சப்புள்ளயாக்கீறியேப்பா” என்றவன் சின்னத் தாயியைப் பார்த்து, “ஆயா! அவன் என்னா சொல்றது? நான் சொல்றேன். நடிகை நவஸ்ரீ மாதிரி லெச்சணமான பொண்ணாப் பார்த்து இவனுக்கு கட்டி வையி” என்று சொல்லிவிட்டு சிரித்தான்.

காசியினால் சிரிக்க முடியவில்லை. ‘என்ன இந்த மாரிமுத்து, நாபாட்டுக்கு இன்னிக்காவது வேல கெடைக்குமா கெடைக்குமான்னு வாய் ஓயாம கேட்டுக்கினேக்கிறேன். உண்டு இல்லன்னு ஒரு வார்த்தகூட சொல்லாம அவம்பாட்டுக்கு எதயோ பேசறதும் சிரிக்கறதுமாவே இருக்கறானே. இதுக்கு என்னா அர்த்தம்! நமக்குப் படிமானமா வேல எதுவும் இல்லேன்னுதான அர்த்தம் அப்போ என்னா பண்றது? ம்.. என்னாத்தப் பண்றது? இவனாட்டம் இருக்கற வேற நாலுபேர பார்த்துக் கேக்க வேண்டியதுதான். அதுக்குன்னு வூட்டுக்குப் போயி குந்திக்கவா முடியும்?' காசிக்கு இடையில் இருந்த குழம்பின்ருசிகூட உறைக்கவில்ல. சின்னத்தாயி அவனுடைய கல்யாணத்தைப்பற்றிக் கேலியாகவும்

https://telegram.me/aedahamlibrary

கிண்டலாகவும் சொன்ன வார்த்தைகளும் அவன் கவலையில் கரைந்தன.

யார் யாரிடமோ கேட்டும் காசிக்கு அன்றைய தினம் வேலை எதுவும் கிடைப்பதாக இல்லை. 'உன்கிட்டே சைக்கிள் இருந்தாலாவது பரவாயில்ல, கட கடயா சரக்காவது போட்டுட்டு வரச் சொல்லாம்' என்று காதில் விழுந்த வார்த்தைகளை அசை போட்ட படி டீக்கடை பெஞ்சில் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தான். பஜாரில் கொல்லு வேலைக் கருவிகளோடு வந்த நின்றிருந்தவர்களில் சிலரும் வேலை கிடைக்காததில் மனம் சலித்தவர்களாக வீட்டுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

“இன்னா காசி வேல கீலக்கு போவலியா?” பீடியைக் குடித்தபடி அடுத்த தெரு பக்கிரி கேட்டான்.

“ஆமா. என்ன வேலக்கு வா வான்னு பத்துப்பன்னண்டு கம்பெனியிலே இருந்து கூப்டாங்க. வாணாண்ணுட்டு நானு ரெஷ்ட் எடுத்துக்கனேன். போவியா சொம்மா. வவுத்தெரிச்சல கௌர்ரியே” காசி சலித்துக்கொண்டான்.

“இல்லியா பின்னே? நீதான் கொல்லு வேலக்கிப் போவ மாட்டேன். சாரம் ஏறமாட்டேன். பாண்டு தூக்க மாட்டேன்னு ஆயிரம் கண்டீசன் போடறியே” பக்கிரி, பீடியைக் கீழே போட்டு மிதித்தான்.

காசி பதில் சொல்லாமல் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டான். பக்கிரி சொல்வது சரிதான். ஆனால், அப்படியெல்லாம் அவனாகவா சொல்கிறான்? ஆதிலட்சுமியின் கவலையை அதிகரிக்கக்கூடாதே என்பதற்காக, அவள் சொல்லைப் புறக்கணிக்க வேண்டாம் என்பதற்காக அவன் கட்டிட வேலைக்குப் போகாமல் இருக்கிறான். இதைப் பக்கிரியிடம் சொல்ல முடியுமா? சொன்னால் சிரிப்பான். வீட்டுக்குப் போய்விட்டால் தேவலை என்ற அவனுக்குத் தோன்றியது.

அம்மாவிடம் சொல்லி, எங்காவது கடன் பட்டாவது ஒரு பழைய சைக்கிளை வாங்கித் தரும்படிச் சொல்லவேண்டும். ஒரு சைக்கிள் மட்டும் இருந்திருந்தால் இன்றைக்கு வெறுங்கையாக வீட்டுக்குத் திரும்பியிருந்திருக்க வேண்டியதில்லை. “என்னடா இன்னிக்கும் வேலை

https://telegram.me/aedahamlibrary
கிடைக்கலியா” என்று அம்மா கேக்குமோ? நினைக்கவோ கஷ்டமாகியது அவனுக்கு. அம்மா கேட்காது. ஆனால், காவேரி கேட்பாள். வாயாடி. ‘போயி சின்னத்தாயி கடயிலே கடன் சொல்லி துண்ணுட்டு போன வேகத்திலேயே வந்துட்டயாங்காட்டியும்' என்று கூடச் சொல்லுவாள் சொல்லட்டும். இன்னிக்கு அம்மாகிட்டே, எனக்கு ஒரு சைக்கிள் வாங்கித் தர்ரியா இல்லே நான் கொல்லு வேலக்கிப் போவட்டுமான்னு ரெண்டிலே ஒண்ணு கேட்டுடறது” தலையைக் குனிந்தபடி நடந்து சின்னத்தாயியின் கடையை விட்டுக் காசி வீடு போய்ச் சேர்ந்தான்.

# 4

“என்னடி காவேரி மேலாக்கு நவுந்ததுகூடத் தெரியாம தெரு வாசப்படியிலே நின்னு குதியாட்டம் போட்டுக்னுக்கறே. இன்னமும் சின்னக் குழந்தன்னு நெனப்பா?” என்று அதட்டலாகக் குரல் கொடுத்துக் கொண்டு தெருவின் குறுக்கே கன்னங் கரேலென்று ஓடிய சாக்கடையைத் தாண்டியபடி வீட்டு வாசலுக்கு வந்து நின்றாள் இட்லிக்கார சின்னத்தாயி. இடுப்பில் செருகியிருந்த சுருக்குப்பையில் இருந்த காய்ந்த வெற்றிலையும், சுண்ணாம்பையும், பாக்கையும் எடுத்து வாய்க்குள் போட்டாள். “போடா. வெள்ளயா. போ. சின்னத்தாயி அத்த திட்டுது பாரு. ஓடு” என்றாள் காவேரி.

சின்னத்தாயி, “என்னடி சொன்னே? வெள்ளைனா, சொட்டுக்கூட வெள்ள நெறமே சேராத கரேல்னுங்கற நாய்க்குப் போய் வெள்ளயன்னு பேரு வச்சிங்கிறியே” என்று சொல்லி சிரித்தாள்.

“எதுக்கு அத்த அப்படி சிரிக்கறே? மனுசருங்க மட்டும் பொருத்தமாவா பேருங்கள வச்சிங்கிறாங்க? அவங்களயெல்லாம் நீ இப்படிக் கேட்டுடுவியா? இல்ல, அவங்க பேருங்கள கேட்டதுந்தான் கேட்டு இப்படிச் சிரிச்சிடுவியா?”

“சரிடி. சிரிக்கல. சரி அது கெடக்கட்டும். ஒங்க அம்மா இருக்குதா? ஒங்கக்கா வேற எதோ கோட்டயப் பிடிக்க

https://telegram.me/aedahamlibrary

போறவ மாதிரி விர்ருன்னு வந்தாளே. என்னாவாம்? தேரடியிலே நான் உட்கார்ந்து வியாபாரம் செஞ்சினுக்றதகூட திரும்பி பார்க்காம வேகமா வந்தாளே... என்னாவாம் விசியம்?" சின்னத்தாயின் குரல் கேட்டு வாசலுக்கு வந்தாள் ஆதிலட்சுமி.

"நீயாண்ணி? வா. நம்ப கன்னீம்மா புள்ளத்தாய்சியா இருக்குதில்லே. டாக்டர் கிட்டே காமிச்சுப் போலாம்னு வந்துச்சாம். அப்படியே நம்பள எல்லாம் பார்த்துட்டுப் போலாமுன்னு வந்துங்குது."

"பார்த்தியா, பார்த்தியா. அந்தப் புள்ள பாவாடக் கட்டத் தெரியாத காலத்துலே இருந்து என் மடியிலே கெடந்து, வளர்ந்திச்சு. என் கிட்டயே நீ அத்தப் பத்திப் பொய் சொல்றே. அது மூஞ்சியும் தலயும் இருக்கற இருப்பும். அது சும்மா விடுவிடுன்னு நடந்து வந்த சுருக்கும்... நான் கேக்கலடி ஆத்தா. ஒங்க வூட்டு நாயம் எனக்கொன்னாத்துக்கு" என்று சொல்லி சின்னத்தாயி மோவாயில் விரல்களை வைத்தாள்.

"சரி அத்த நீ கோவிச்சுக்காதே. வா. நான் உள்ளது உள்ளபடி சொல்றேன்." சின்னத்தாயின் கையைப் பிடித்து குடிசைக்குள் இழுத்தாள் காவேரி.

"வேணாண்டி. எனக்கு என்னாத்துக்கு ஒங்க வீட்டு நியாயம்? ஒங்கண்ணன் கல்யாண வேலய இழுத்து எந்தலயிலே போட்டுக் கினம்பாரு அத்த முடிச்சுக்கினு நாம்பாட்டுக்குப் போறேன். பொண்ணு வூட்டாரு கிட்ட சொன்ன பேச்சுப் பிரகாரம் இன்னிக்கு சிந்தாதிரிப்பட்டே போய் பொண்ண எட்டி நின்னு பார்த்துட்டா அவங்களுக்கு ஒரு முடிவு சொல்லிடலாம். சரி காசி எங்கே" என்றபடி காவேரியின் கையை ஒதுக்கி விட்டு, வெளித்திண்ணையில் உட்கார்ந்தாள் சின்னத்தாயி.

ஆதிலட்சுமி சின்னத்தாயின் சின்னக் கோபத்தை சமாதானப் படுத்தினாள். அதுவரை தன் அக்கா அவளுடைய மாமியார் வீட்டில் அனுபவித்த சங்கடங்களையும் கொடுமைகளையும் விவரமாக சின்னத்தாயிடம் சொல்ல ஆரம்பித்தாள் காவேரி.

"அடக்கடவுளே! என்னாடி இது கூத்து? முன்னே பின்னே எங்கயும் கண்டதும் இல்ல. கேட்டதும் இல்ல. நாத்தனாரும்

https://telegram.me/aedahamlibrary

நீயும் தலைப்புள்ளக்காரியா இருந்தா என்ன? கட்டிக் குடுத்தவள் எதுக்கு நாலாம்மாசத்திலேருந்து வீட்டோட சேர்த்தி வச்சிங்கறாங்க? ஒருத்தரயொருத்தர் பார்த்துக்கக் கூடாதுன்னு சொல்லி ஊரிலே ஒலகத்துலே இல்லாத வழக்கமா மருமவளப் போட்டு ஒண்ணுக்கு வெளிக்கு போவ வுடாமே ரூமுக்குள்ளவா போட்டு அடச்சு வப்பாங்க? ஏதோ ஒரு தண்ணிக்குடத்த எடுத்துக்குனு அவமவள வரச்சொல்லிட்டு அதே மாதிரி ஒரு குடம் நிறயத் தண்ணிய எடுத்துக்னு போய் நம்பபுள்ள அவள எதுரு கொண்டா போதுமே. அப்பிடித்தான் வழக்கமா செய்யறது. இது என்னமோ அதிசியமா இருக்குதே. சரி. அவங்கதான் அப்படிப் பூட்டி வச்சாங்க இல்ல. இவ என்ன பண்ணியிருக்கணும்? அதே ரூம்ல ஒரு மூலயவே கக்கூசாக்கிட்டுங்கணும். தானா வழிக்கு வந்திருப்பாளுங்க. அத வுட்டுட்டு அழுதுக்குனு வந்து நின்னா என்னா லாபம்" சின்னத்தாயி சோர்ந்து போயிருந்த கன்னியம்மாளின் கன்னங்களை ஆசையுடன் தொட்டு வழித்தாள்.

காவேரி, டீக்கிளாசை எடுத்து சின்னத்தாயின் முன் வைத்தாள். "வேணா காவேரி, வெத்தல பாக்கு போட்டுகிட்டேனே. அவ்வளவு தான்." தயங்கினாற் போல அமர்ந்திருந்த ஆதிலட்சுமியைக் கிளப்பினாள் காவேரி, சின்னத்தாயியைப் பார்த்து "என்ன அத்த அண்ணனுக்குப் பொண்ணு பார்க்கப் போறீங்களா? ஜாலிதான். புறப்படுங்க சீக்கிரம். பொண்ணு அலங்காரமெல்லாம் பண்ணிக்கிட்டு காத்துட்டிருக்குமில்லே." என்றாள்.

சின்னத்தாயி இன்னொரு வெற்றிலையை எடுத்து வாய்க்குள் திணித்துக் கொண்டாள். "கேட்டுக்கோ. ஓயாம சினிமாவும், டி.வியும் பார்த்து புத்தி போற போக்க, 'பொண்ணை சிங்காரிச்சு அனுப்பு. நாங்க பாக்கறோமு'ன்னு நம்மளவங்கிட்டே வாயத் தொறந்து கேட்டுட முடியுமா? ஏன் உங்கக்கா கல்யாணம் எப்படி நடந்துச்சி? அத எப்படிப் பொண்ணு பார்த்தாங்க? அது தண்ணி புடிக்க தெருக்குழாயாண்ட போனப்ப எங்க வூட்டாண்ட நின்னுதானே பார்த்தாங்க. அதே மாதிரித்தான் நாம்பளும் பண்ணனும். சந்தயிலே ஆடு, மாடு, கோழி வாங்கறாப்பலயா பொண்ண நிக்க வச்சுப் பாக்கறது,

https://telegram.me/aedahamlibrary

கேவலமில்ல அது.”

சின்னத்தாயி கன்னியம்மாளின் அருகே உட்கார்ந்து ஆதரவாக அவள் கையைப்பிடித்துக் கொண்டு தைரியம் சொன்னாள். ஆதிலட்சுமி மூலையில் வைத்திருந்த டிரங்குப் பெட்டிக்குள் இருந்த சேலையை எடுத்து மாற்றிக்கொண்டாள். இருவரும் புறப்பட்டார்கள்.

“காவேரி! விநாயகருக்கு வேண்டிக்க. போற வேல நல்லபடி முடிஞ்சு அண்ணனுக்கு சீக்கிரமா கல்யாணம் ஆவணும்டாப்பா. அதுக்கு அப்புறம்தானே எனக்குன்னு சொல்லிக்க” என்ற கேலி பேசிய சின்னத்தாயிடம் “போ அத்த ஒனக்கு கேலியாக்கீது” என்றவள் “வேல முடிஞ்சதும் சீக்கிரமா வந்துடுங்க. அக்கா வேறக்கீதா, அவங்க மாமியா வூட்டு மனுசா யார்னா நியாயங்கட்ட வந்து இங்க எதுனா தகராறு பண்ணு வாங்களோன்னு பயமாக்கிது” என்றாள்.

# 5

**தி**ண்ணையில் உட்கார்ந்திருந்த காசிக்கு, குடிசைக்குள்ளேயிருந்து காவேரியும் கன்னியம்மாளும் பேசும் சத்தம் கேட்டது. கன்னியம்மாளின் குரல் பலவீனமாகக் கேட்டது. கட்டிக்கொடுத்த தினத்திலிருந்தே கண்ணீரும் கம்பலையுமாகி விட்ட அக்காவின் வாழ்க்கை அவன் நெஞ்சுக்குள் நெருப்பை உண்டாக்கியிருந்தது. சம்பவங்களாகவும் செயல்களாகவும் விவரிக்க முடியாவிட்டாலும் அக்காவின் வாழ்க்கையில் அவர்கள் எல்லோருக்கும் தெரிந்திருப்பதை விட வேறு எதோ ஒரு சிக்கல் இருக்கிறது என்றும் அவன் மனதிற்குப்பட்டது.

வீட்டுக்குள்ளே போய் கன்னியம்மாளிடம் நாலு வார்த்தை பேச வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது, நினைத்துக் கொண்டே திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். ஒரு நாளைக்கு இதற்காகவென்றே இரு நூறு மில்லி அதிகமாகப் போட்டுக் கொண்டு போய் கன்னியம்மாள் புருஷனை மிதி மிதியென்று மிதித்துவிட்டு வரவேண்டும் என்று தனக்குள்ளே முடிவு செய்து கொண்டான். குமாரைப்போன்ற அயோக்கியர்களுக்கு அந்த

https://telegram.me/aedahamlibrary

பாசைதான் புரியும். அடி, உதை என்றால்தான் பயப்படுவான். உட்காரவைத்து நல்லதனமாகப் பேசினால் அவனுக்கு உறைக்காது.

சுசீலா மாதிரி ஒருத்தி சொன்னால் உறைக்கும். அவள் அத்தனை அருமையாகச் சொல்லுவாள். கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு அலுப்பு வராத படி சொல்லுவாள். கேட்டுக் கொண்டிருப்பவர்கள் அசட்டை செய்து விடமுடியாத படி சொல்லுவாள். அவள் எவ்வளவு படித்தவள், எவ்வளவு விவரம் தெரிந்தவள், இருந்தும், அவள் அந்தப் பகுதியில் வசிக்க வந்த போது அந்தக் குடிசைவாசிகள் எல்லோரும் அவளை எத்தனை சந்தேகத்தோடு பார்த்தார்கள்? பெரிய படிப்பு படித்த அவள் ஏன் கை நிறையச் சம்பாதிக்கிற வேலைக்குப் போகாமல் இங்கே வந்தாள்? வசதியான குடும்பத்தில் பிறந்த அவள் அழுக்கும் வறுமையும் நிறைந்த குடிசைப் பகுதிக்கு ஏன் வந்தாள்? இவள் எதாவது ஒரு புதிய மதத்துக்குத் தங்களை மாற்ற வந்தவளா?

வருஷத்துக்கு ஒரு தடவையாவது உயிரை பலிவாங்கும் தரைக்கிணறு ஒன்று அந்தப் பகுதியில் இருந்தது. பொரும்பாலும் கட்டிடத் தொழிலாளர்களே வசிக்கிற அந்த இடத்தில் அந்த கிணற்றைச்சுற்றி ஒரு சுற்றுச்சுவர் எழுப்பப்படாமல் இருந்ததே அதற்குக் காரணம். சுசீலா சொல்லிப் பார்த்தாள். வீட்டு வாசலில் உண்டியல் கட்டிப்போட்டாள். ஒவ்வொரு குடிசைக்குள்ளும் போய் சொல்லிப் பார்த்தாள். 'காசு இல்ல' என்று அந்தப் பகுதி மக்கள் சொல்லாமல் சொன்னார்கள். அவர்கள் வேலைக்கு போன பெரிய இடத்துக் காண்டிராக்டர்களை சுசீலா சந்தித்தாள். கொஞ்சம் கல்லும் கொஞ்சம் சிமெண்டும் தருவது அவர்களுக்குத் தொல்லையாக இல்லை. வேலை முடிந்து திரும்பும் போது ஐந்து செங்கல்லும், பத்து செங்கல்லும் அரைப்பை சிமெண்டுமாக கொண்டு வந்து சேர்த்ததில் சுமக்கிற சிரமமும் தெரியவில்லை. கல்லும் மண்ணும் தான் நாங்கள் புழங்குகிற பொருள்கள். கொஞ்சம், கொஞ்சமாகச் சேர்த்த கட்டிடப் பொருட்களை சேமிக்கிற கிடங்கானது சுசீலாவின் வீடு.

சுசீலாவின் குடிசைக்குள் கால் வைத்தவர்கள் அவர்களை

https://telegram.me/aedahamlibrary

அறியாமலே அவளோடு நெருக்கமானார்கள். சுசீலா, அவர்களில் ஒருத்தியானாள். அவர்கள் உண்ணுகிற உணவையே உண்டாள்.

அவர்களைப் போலவே உடுத்தாள். எதிர்ப்படுகிற எல்லோரையும் நேசித்தாள். அதனாலேயே அவளைச்சுற்றி வாழ்ந்த அத்தனை மனிதர்கள் மேலும் நம்பிக்கை கொண்டாள். ஸ்லாப் செட்டானதும் எடுத்துப் போட்டு விடுகிற சட்டத்தைப்போல அறிவை மட்டும் வைத்துக்கொண்டு பல்கலைக் கழகத்தில் படித்த படிப்பை முயற்சி செய்து மறந்தாள்.

காவேரி மட்டும்தான் சுசீலாவின் வாழ்க்கை பற்றிய ஒரு உண்மையைக் கண்டுபிடித்தாள். கட்டிடத் தொழிலாளர்கள் வாழ்கின்ற பகுதியை சுசீலா ஏன் தான் வாழும் இடமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்? எத்தனையோ பிரச்சினைகள் உலகத்தில் இருக்கும் போது சுசீலா ஏன் கட்டிடத் தொழிலாளர்களின் பிரச்சினையில் கவனம் செலுத்தினாள் என்கிற புதிர்களுக்கும் காவேரிக்கு விடை கிடைத்தது.

சுசிலா எம்.ஏ படித்தாள். அதற்கு பிறகு டாக்டர் பட்டத்துக்கான ஆய்வுக்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள். அந்த ஆய்வுக்காக அவள் எடுத்துக் கொண்ட தலைப்புதான் கட்டிடத் தொழிலாளர் பிரச்சினை. இரண்டு மாதங்கள் வீடியோவிலும் கேமிராவிலும் தொழிலாளர்கள் உருவங்களைப் படம் பிடித்து அவர்களுடைய பேச்சுக்களைக் கையோடு கொண்டு போகிற டேப் ரிக்கார்டர்களில் பதிவு செய்து கொண்டு போய் ஆங்கில மேற்கோள்களை அங்கும் இங்கும் போட்டு, போட்டோ லேசர் பிரிண்டில் ஒரு காகிதத் தலைகாணியைத் தயாரித்து அதற்கு ஒரு வெல்வெட் உறையும் போட்டு பல்கலைக் கழகத்துக்குத் தந்து, அவள் ஒரு டாக்டராக வலம் வந்திருக்கலாம். அதைக் காட்டி, அவள் நாலு இலக்கம் சம்பளம் பெறுகிற ஒரு உத்யோகத்தில் உடனே சேர்ந்து, நகப்பூச்சு குலையாத நளின வாழ்க்கையை மேற்கொண்டிருக்கலாம். சுசீலா வேறுமாதிரி பெண்ணாக இருந்தாள்.

கட்டிடத் தொழிலாளர் பிரச்சனைகளைக் குறித்து ஆய்வு செய்யப்போன சுசீலா அவர்களில் ஒருத்தியாகவே

https://telegram.me/aedahamlibrary

மாறிப்போனாள். என்ன விசித்திரம்? பொதுவாக தொழிலாளர்களால் செய்யப்படும் பொருள்கள் விற்பனைக்குப் போகும். தொழிலாளர்கள் தங்களுக்கு என நியமிக்கப்பட்ட அதே இடத்தில் இருந்து உழைப்பார்கள். இந்தத் தொழிலிலோ செய்யப்பட்ட பொருட்கள் நிலைப்பட்டு நிற்க தொழிலாளர்கள் இடம் பெயர்ந்து கொண்டே இருந்தார்கள். உயர்ந்து நிற்கிற எந்தக் கட்டிடமும் தன் இருப்புக்கு முதல் போட்டவன் பெயரைச் சொன்னதே அல்லாமல் தன்னை உண்டாக்கியவனின் பெயரைச் சொல்லவே இல்லை. இந்த உண்மைகள் சுசீலாவை ஈர்த்தன. அவர்களின் பிரச்சனைகளை எழுதிப் பட்டம் பெறுவதை விட அந்தப் பிரச்சினைகளை அவர்களோடு பகிர்ந்து கொள்வதிலும் அவற்றை தீர்ப்பதில் பங்கெடுத்துக் கொள்வதிலும்தான் தனக்கு சந்தோஷம் இருக்கிறது என்று அவளுக்குப் பட்டது.

“இருந்தாலும் நீங்க இப்படி குட்ச்சுக்குள்ள பூந்துகிட்டது வெளக்க கொடத்துல வச்சாப்பலங்கறாங்களே அப்படித்தான ஆயிடிச்சி” என்று காவேரி ஒரு தடவை அங்கலாய்த்தாள். சுசீலா வெறுமனே சிரித்தாள்.

“கோபுரத்து விளக்கு பார்வைக்கு அழகாக இருக்கலாம் காவேரி. ஆனா, அதுக்குன்னு இருக்கிற எண்ணெய், திரி, எலெக்டிரிசிடி எல்லாத்தயும் கொண்டு போய் கோபுர விளக்குக்கு மட்டுமே கொட்டிட முடியுமா? நிஜத்தச் சொன்னா, அங்கே இருக்கிற சுடரவிட குடிசக்குள்ளே எரியற விளக்கும் அடுப்புக் குள்ளே எரியற நெருப்பும்தான மனுஷனுடைய வாழ்க்கைக்கு ரொம்ப உபயோகமா இருக்குது? அதென்னவோ தெரியல நம்ப ஜனங்களுக்கு உபயோகமில்லாததயெல்லாம் தலயில் தூக்கி வச்சிகிட்டு கொண்டாறதே வழக்கமாப் போச்சு.”

காவேரி, சுசீலா பேசவதையெல்லாம் ஆச்சர்யத்துடன் கேட்டுக்கொண்டிருப்பாள். குழாயடியிலும், கிணற்றங்கரைகளிலும் வீட்டுத் திண்ணைகளிலும் இப்படி வேறுபட்ட கருத்துக்கள் உண்டாகின்றன என்று வியக்கக்கூடத் தெரியாத அந்தப் பகுதி மக்கள், அவள், அவர்கள் மேல் காட்டிய அன்பையும், அக்கறையையும் உணர்ந்துகொண்டே ஒரே காரணத்தால் அவற்றை ஒப்புக்

https://telegram.me/aedahamlibrary

கொள்ள செய்தார்கள்.

“ஒரு வேள நீங்க என்னமோ ஒண்ணு சொன்னீங்களே அத எளுதி முடிச்சி மேலிடத்திற்கு அனுப்பிச்சிருந்தா அவுங்க எங்க கஸ்டம் தெரிஞ்சு எதுனா நிவாரணம் குடுத்தாலும் குடுத்திருப்பாங்க” என்று ஒரு தடவை பக்கிரி சொன்னான். சுசீலாவுக்கும் கோபம் வரும் என்று அந்தப் பகுதி மக்கள் அன்றுதான் தெரிந்து கொண்டார்கள்.

சுசீலா சொன்னாள் “எதுனா குடுத்திருப்பாங்களா? என்ன பக்கிரி இது. எதோ பாவப்பட்டு போடற பிச்சயச் சொல்றாப்பல சொல்றீங்க. இங்க பாருங்க... சுதந்திரம் வாங்கிட்டோம்னு சொல்றோம். சுதந்திரமான இந்த நாட்டிலே உழைக்கறது நம்ப கடம. உழைச்சவனுக்க கெடக்க வேண்டியதக் கேட்டு வாங்கறது நம்ப உரிம. அதுக்கு மேலேயும் போய் உழச்சவனுக்கு ஊதியத்தயும் நல்ல உழப்பாளிய ஊக்கப்படுத்தறதுக்கு சலுகைங்கள், பரிசுங்கள் கொடுக்க வேண்டியது ஜனநாயக நாட்டிலே ஒரு அரசாங்கத்துக்கு பெருமை. அத விட்டுட்டு 'எதுனா கொடுப்பாங்க'ன்னு பேசறது ஒரு பேச்சா? அப்படிக் கொடுக்கறதுக்கு அரசாங்கங்கறது ஒண்ணும் அந்தக் காலத்து வள்ளலும் இல்ல, கொடுக்கறதயெல்லாம் ஏத்துக்கறதுக்கு நாம்ப தன்மானத்த இழந்த பிச்சக்காரக் கூட்டமும் இல்ல. இன்னொன்ணையும் நீங்க தெரிஞ்சுக்கணும். வள்ளல்ங்கறவன் ஏதோ ஒரு அற்புத பிறவின்னு அவன் முன்னாலே கையேந்தி நின்னு அவனால் ஆதாயம் அடைஞ்ச அந்தக் காலத்துப் புலவருங்க எளுதி வச்சுட்டுப் போயிட்டாங்க. அந்த ராஜாவுங்க காலத்துல அப்படி நடந்தத வேணா மன்னிக்கலாம். ஆனா, இப்ப எல்லோரும் இந்நாட்டு மன்னர்னு சொல்லிச் சுதந்திரம் வாங்கி இத்தினி வருஷம் ஆன பின்னாலேயும் இத்தினி பேர் வறுமயிலே தவிக்கிறதும், வர்றதயெல்லாம் ஏத்துக்கறதும், தர்ரவன எல்லாம் வள்ளல்ங்கறதும் அவமானப்பட வேண்டிய விஷயங்க. சரியாச் சொன்னா வள்ளல்கறவங்க யாரு? தங்களப் பெரிய மனுசங்களா காட்டிகிட்டு, ஜனங்கள ஏய்க்கறதுக்கும் தங்களுக்கு விருப்பமான நேரத்திலே தங்களுக்குத் தர்ரதுக்கு சௌகர்யமா இருக்கிற பொருள் எடுத்துக் கொடுத்துவிட்டு

https://telegram.me/aedahamlibrary

நெஜமாகக் குடுத்ததவிட பலமடங்கு அதிகம் குடுத்ததா கணக்கு காட்டி, அந்தத் தொகயவிட அதிகமான தொகய செலவு பண்ணினதா விளம்பரம் செஞ்சு, ஒரு பெரிய கூட்டத்தோட மனசுக்குள்ளே இடம் புடிக்கப் பார்க்கறவங்க. இதுக்கெல்லாம் வசதியா தங்களச்சுற்றி இருக்கிற லட்சக்கணக்கான பேர வறுமக் குழிக்குள்ளேயே வைச்சிருக்கறவங்க. வள்ளலுங்க எல்லாரும் நல்லவங்கன்னு நாம் நினைக்கிறோமே அது தப்பு. வள்ளலுங்க அவங்களுடைய வஞ்சகத்தால் வறுமய வளக்கறவங்க தன்மான முடய மக்கள் நாம்பங்கறது உண்மையானா, இப்படி 'சும்மா எதுனா குடுத்தா வாங்கிக்கலாமு'ங்கற நெனப்ப முதல்லே ஒழிக்கணும்.”

ஆயிரக்கணக்கான மக்கள் வாழும் அந்தப் பகுதியை சுசீலா மாற்றிக் கொண்டு வந்ததை அனைத்துக் கட்சி பிரமுகர்களும் கவனித்துக்கொண்டிருந்தார்கள். கொடுப்பதை வாங்கிக் கொண்டு கும்பிடு போடுகிற கூட்டத்தை, தலைவர் என்றாலே எதோ தேவலோகத்திலே இருந்து வந்தவர் என்று நினைத்து வழி விலகி நின்று கன்னத்தில் போட்டுக் கொள்கிற கூட்டத்தை, அவள் தன்மானமுள்ள மனிதர்களாக்கிக் கொண்டு வந்தது அவர்களுக்கு சங்கடமாக இருந்தது.

இவளை இப்படியே வளர விட்டால், பேட்டைக்குப் பேட்டை இது போல ஒருவர் தோன்றினால் என்ன ஆகும்? உரிமையைக் கோருவது என்பதையே ஒழுங்கைக் குலைப்பது என்று எண்ணிக்கொள்ளும், உள்ளூர்ப் பிரமுகர்கள் சுசீலாவைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

மக்களின் அறியாமையையும் வறுமையையும் வேடிக்கையாக்குகிற இளைஞர்களையும் அவள் கண்டித்தாள். பள்ளம் விழுந்துவிட்ட தெருக்குழியை ஒரு கல்லையும் மண்ணையும் போட்டு இட்டு நிரப்புவதற்குப் பதிலாக 'இந்தியப் பிரதமர் இதைக் கவனிக்க வேண்டும்' என்று காரசாரமாக இந்து பத்திரிகைக்குக் கடிதம் எழுதுகிற கூட்டம்; அது தேங்கி நிற்கிற நீருக்குப் பக்கத்தில், 'கொசு வளர்ப்புப்பண்ண நடத்துகிற அரசாங்கத்துக்கு நன்றி' என்று தட்டி நடுபவர்கள்; எரியாத தெரு விளக்குகளுக்கு ஈமச்சடங்கு நடத்துபவர்கள்; இவர்கள் எல்லோருமே

https://telegram.me/aedahamlibrary

சுசீலாவின் கண்டனத்துக்கு ஆளானார்கள்.

அந்தப் பகுதி மக்கள் சுசீலாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்க ஆரம்பித்தார்கள். நாள் முழுவதும் தேடியும் வேலை கிடைக்காமல் திண்ணையில் விழுந்து கிடந்த காசிக்கும், அதே குடிசைக்குள் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த கன்னியம்மாளுக்கும் அதைக்கண்டு கவலைப்பட்டுக் கொண்டிருந்த காவேரிக்கும் ஏதோ ஒரு விதத்தில் எல்லாம் நல்லபடி நடக்கும் என்று நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டிருந்தாள் சுசீலா.

# 6

**சி**ந்தாதிரிப்பேட்டையிலிருந்து திரும்பிய ஆதிலட்சுமி திண்ணையில் அலங்கோலமாக விழுந்து கிடந்த காசியை எழுப்பினாள். காசி, சிரமத்துடன் கண்களைத் திறந்து பார்த்து விட்டு அடுத்த கணமே கண்களை மூடிக்கொண்டான். வாய் மட்டும் குழறியது.

“யம்மா, யம்மா, எனுக்கு சைக்கிளு வேணும். நானு இப்பிடி வுளுந்துக் கெடக்கறேனே. சைக்கிளு வாங்கித் தாயேம்மா. இல்லாட்டி நானும் கொல்லு வேலக்கு போவப் போறேன். மேஸ்திரி கையிலே சொல்லி வையம்மா. அப்பனாட்டம் நான் சாரத்திலேந்து கீளே வுளுந்துடுவேன் ஒனுக்கு பயமா? யம்மா. நானு இப்பிடி வுளுந்துக் கெடக்கறேனே. எனுக்கு ஒரு சைக்ளு” என்று பேசிக் கொண்டே போனான்.

“ஏண்டா பாவி! குடி குடிக்கற நேரமாடா இது? நான் பெத்த புள்ளயாட்டம் யோக்கியசாலி இல்லேன்னு பொண்ணு வீட்ல இப்பத்தானேடா சொல்லிட்டு வர்ரேன். எந்தல எயித்தே. நான் என்னா பண்ணுவேன்?” ஆதிலட்சுமி இரண்டு கைகளாலும் தலையில் பட்பட்டென்று அடித்துக்கொண்டாள்.

அதுவரை அமைதியாக இருந்த சின்னத்தாயி ஆதிலட்சுமியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். “நல்லாக்கீது போ. எதோ வயசுப் பையன் தெரியாம பண்ணிப்புட்டான். நீயே தண்டோரா போட்டு பட்டணம் பூரா எம்மவன் குடிகாரன்னு பேரு பண்ணிடுவே போலக்கிதே.

https://telegram.me/aedahamlibrary

கத்தாத இரு மொதல்ல நீ வூட்டுக்குள்ள வா" என்று அதட்டியவள், ஆதிலட்சுமியை இழுத்து வராத குறையாக குடிசைக்குள் கொண்டு வந்து சேர்த்தாள்."எங்க பூடிச்சிங்க இந்தப் பொண்ணுங்க ரெண்டும்" என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டாள்.

"நான் ஒண்டிக்காரி என்னா பண்றது அண்ணி. அந்தக் கன்னியம்மா பொண்ணு மூஞ்சப் பார்க்க சொல்லவே அடி வவுறு கலங்கிப்பூடுது. என்னாத்தயோ மூடி மறைச்சுக்கினு அது படற அவஸ்த கண்ல பார்க்க முடியல. இந்தப் பையன் இன்னாடான்னா" என்றவள் மீண்டும் கைகளை ஓங்கித் தன் தலையில் அறைந்து கொண்டாள்.

"அடத்தூ. நீ ஒரு பொம்மனாட்டியாட்டம் ஒரு சொல்லு சொன்னா காதுலே ஏறணும். நெஞ்சிலே ஒறக்கணும். நாபாட்டுக்கு சொல்லிக்கினேக்றேன் நீ பாட்டுக்கு கூவிக்கினே இருந்தா என்னா அர்த்தம். அப்பாலே எம்பேச்சுக்கு என்னா மருவாதி. இன்னொரு தபா தலயிலகிலயில் அட்ச்சிக்கினு கூவிக்கினின்னா பாரு நாம் பாட்டுக்குப் பூடுவேன். இன்னாடா இது பேஜாரு. இப்ப என்னா ஆயிப்பூடிச்சி. என்னுமோ ஊர்ல ஒலகத்துல நடக்காதது என்னா நடந்துடிச்சி இப்ப. இந்தப் பேட்டயிலே குடிக்காத ஆளு எவனாவதுகீறானா? பொண்ண கட்டிக்குடுத்தா அலுத்தா, சலிச்சா, கோச்சிக்கினா ஆத்தா வூட்டுக்கு வர்ரதில்லயா. அதுக்கு இன்னா இம்மா கூச்சல்? எம் புள்ள குட்ச்சுப்புட்டு வந்துட்டான்னு ஊரக்கூட்டி சொல்லிப்புடுவியாங்காட்டியும்" என்ற சின்னத் தாயி, மூலையில் இருந்த பானையில் இருந்து தண்ணீரை எடுத்து 'கடக்கடக்' என்று சத்தம் எழ குடித்தாள். சொம்பிலிருந்த நீர் வழிந்து கழுத்தை நனைத்தது. அதே செம்பில் தண்ணீரை எடுத்து வந்து ஆதிலட்சுமியின் கையில் திணித்தாள்.

சின்னத்தாயியின் பேச்சால் சற்றே அமைதி அடைந்தவளாக ஆதிலட்சுமி கண்களைத் துடைத்துக்கொண்டாள். மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பானைகளின் உச்சியில் இருந்த பித்தளை தேக்சா காணாமல் போயிருந்ததும் தேக்சாவுக்குள் போட்டு வைத்திருந்த துருப்பிடித்த ஆணிகளும், வேறு பொருட்களும் தரையெங்கும் இறைந்து சிதறிக் கிடந்ததும் அவள்

https://telegram.me/aedahamlibrary

கண்களில் பட மீண்டும் புலம்ப ஆரம்பித்தாள். சின்னத்தாயிக்கு பயந்தோ என்னவோ இந்த முறை புலம்பல் சற்று அடங்கி ஒலித்தது.

“இந்த அநியாயத்தப் பார்த்தியா அண்ணி. வூட்ல இருந்த தேக்சாவ எடுத்தும் போயி அடகு வச்சிட்டு குடிச்சுட்டு வந்துங்கறானே. கல்லாட்டம் தேக்சா. கலாய் பூட்ச்சு. போட்டுக்கலாம் போட்டுக்கலாமுன்னு வச்சிந்தேன். அதுக்குள்ளே நாசமாப்போன தேளு வந்து கொட்டி ஓட்டவுளுந்துடிச்சி. காசு வந்ததும் பத்த வச்சி, கையோட கலாய் போட்டுடலாம்னு நெனச்சிக்னு இருந்தேன். இப்படிப் பண்ணிட்டானே பாவிப்பய. அவங்க அப்பன் பேர எடுக்கப் போறான்னு இருந்தனேண்ணி. குடிகார நாயாப்பூடுவான் போலக்கீதே” என்றாள்.

“ஆமா அப்படித்தான் பூடுவான். அவங்கப்பன் பேரு எப்படி வாங்குவான். நீ தானே குறுக்க பூந்து மறிக்கிற. அவங்கப்பனுக்கு என்னா பேரு. அதுங்கயிலே அப்பேர்ப்பட்ட வேல இருந்துச்சி. மணியாஸ் கட்டயும், மூலமட்டத்தயும், குண்டயும் எடுத்துக்னு ரோட்டுக்கு வந்து நின்னிச்சின்னா பாத்த கண்ணு பூத்தப் போவும். நீதான் இந்தப் பையனப் போட்டு அடக்கோழியாட்டம் அடச்சு வச்சிங்கறியே. அப்புறம் ஏன் அவன் புத்தி இப்படிப் போவாது? வயசுப் பசங்க கெவனம் வேலமேல நிக்கணும். அவங்கப்பன் பேரு எடுக்கணுங்கறிய தவுத்து நீ, அவங்க அப்பனாட்டம் வேலக்கு அவன போகவுட்டாத்தான. ஏதோ தல எயித்து அண்ணனுக்கு அப்படி ஆயிடிச்ச. அதயே நெனச்சிக்கினு நீ இவன போட்டு சத்தாச்சின்னா அவன் என்னா பண்ணுவான்? அவனுக்குத் தொளிலுன்னு சொல்லிக்கிறதுக்கு எதுனா உண்டா? சொல்லு. அங்க போயி நிக்கிறதும், இங்க போயி நிக்கிறதும், வேல கெடைச்சா உண்டு, இல்லேன்னா... இல்லேன்னான்னு நெனச்சி நெனச்சி பேஜாராவறதும். அத மறக்கறதுக்குன்னு போயி இப்படி எதுனாச்சிம் பண்ணிப்புட்டு வர்ரதும். நீயே ரோசன பண்ணிப்பாரு.”

“என்னா அண்ணி நீயும் அவனாட்டமே பேசறே. எதோ ஒங்கண்ணனுக்கு நடந்துடிச்சின்னு விட்டுடறாப்பல வேலயா அது. நமக்குத் தெரிஞ்சு எத்தினி பேரு செத்தவங்க? எத்தினி பேரு கையக்கால ஒடிச்சுக்கிட்டவங்க? எத்தின

https://telegram.me/aedahamlibrary

பேரு மாசக் கணக்கா தருமாஸ்பத்ரியிலே வுளுந்து கெடந்தாங்க? ஒலகம் மாறிடிச்சு மாறிடிச்சுங்கறாங்க. நான் பாண்டு தூக்கிம்போன காலத்தல இருந்து இந்த இருபத்தஞ்சி வருசத்துல இவங்க பொழப்பு மாறவே இல்லியே அண்ணி. நம்ப தல எயித்து அப்படி கீதே”

சின்னத்தாயி அலுப்புடன் தலையை நொடித்துக் கொண்டாள். “ஆமா, இதயே சொல்லிக்கினு இரு. ஒன்னாட்டமே எல்லாரும் இருந்துட்டா விடிஞ்சாப்பல தான்.”

சற்று நேரத்தில் வாசலில் நிழலாட்டமும் பேச்சுக் குரலும் கேட்டு சின்னத்தாயி பேச்சை நிறுத்தினாள். கன்னியம்மாள் இடுப்பிலிருந்த பிளாஸ்டிக் குடத்தை இறக்கி வைத்தாள். காவேரி, திண்ணையில் கிடந்த காசியிடம் ஏதோ பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். அவளை அதட்டி உள்ளே வரும்படி ஆதிலட்சுமி சீறினாள்.

“சும்மாரு காவேரி, நீ வாய வச்சிக்கினு சொம்மா இருந்திருந்தீன்னா அவன் கடப்பக்கமே போயிருக்கமாட்டான். மறுக்கா எதுனா சொல்லிக்கினே இருக்காதே” என்றாள் கன்னியம்மாள்.

ஆவேசங் கொண்டவள் போல ஆதிலட்சுமி எழுந்து போய் காவேரியின் தலைமுடியைக் கொத்தாகப் பற்றிக் கொண்டாள். “வாய் துளுத்த நாயே, என்னாடி சொன்ன அவன” என்றாள்.

சின்னத்தாயி ஆதிலட்சுமியின் பிடியில் இருந்து காவேரியை விடுவித்தாள். சற்றும் கலங்காமல் திடமாக நின்ற காவேரி இடுப்புக் குடத்தை அப்படியே இறக்கி திண்ணையிலேயே வைத்து விட்டு இடுப்பில் ஊன்றிய கையுடன் திண்ணையில் கிடக்கும் காசியையும், குடிசையின் உள்வாசலில் நின்ற தன் அம்மாவையும் எரித்துவிடுவதுபோலப் பார்த்தாள்.

“அய்யே! உன் லச்சணமான புள்ளய இப்ப என்னா சொல்லிப் புட்டாங்களாம்? தண்ணி வண்டி வந்துச்சி. இது வேலயில்லன்னு வந்து திண்ணயில சும்மா குந்திக்கினு கெடந்துச்சி. சும்மாதானக்கிற போயி ரெண்டு கொடம் தண்ணி புடிச்சாயேன்னு சொன்னேன்.”

https://telegram.me/aedahamlibrary

மீண்டும் காவேரியை அடிக்கப் போகிறவள் போல முன்னால் அடி எடுத்து வைத்தாள் ஆதிலட்சுமி. “கேட்டுக்னியா அண்ணி அவ வாய்க் கொழுப்ப. நீ ஒரு பொம்பள தடிச்சி இருக்க சொல்ல ஆம்பளப்புள்ள போய் தண்ணி புடிச்சாறதா ஏண்டி.”

“ஏன்? என்னா தப்பு? ஆம்பளப் புள்ளக்கி குடிக்கத் தண்ணி வேணும், குளிக்கத்தண்ணி வேணும், கையக் கால கழுவத்தண்ணி வேணும். ஆனா தண்ணி புடிச்சாற மட்டும் கூடாதா?”

“பாத்தியா அண்ணி, எம்புள்ள கை கழுவன தட்டக்கூட எடுத்துப் போயி ஊத்த வுட்டதில்ல நானு. கொடத்தத் தூக்கிம் போய் தண்ணி புடிச்சாரணும்னு தல எயித்தாடி எம்புள்ளக்கி. ஒனுக்கு என்னா ஒரு தில்லு இருந்தா அவனப்போயி தண்ணி புடிச்சாறச் சொல்லியிருப்பே. ஒரு நாளு வேல இல்லாம வந்து அந்தப் பையன் வுளுந்து கெடந்தா ஒனுக்கு அத்தினி இளக்காரமாப் பூடிச்சாடி? நாயே. சீமான்டி எம்மவன் சீமான்” என்று மூச்சு வாங்கக் கத்தினாள் ஆதிலட்சுமி.

“வுடும்மா அத. நீ போயி வந்த வெஷயம் என்னாச்சி. தம்பிக்குப் பொண்ணப் பார்த்தியா? அவுங்க வூட்டு மனுசாளோட எதுனா பேசினியா? அதச்சொல்லு” என்ற கன்னியம்மா, ஆதி லட்சுமியின் அருகில் வந்து நின்றாள். கன்னியம்மாள் அங்கு இருப்பதையே அப்போதுதான் ஞாபகத்துக்கு வந்ததுபோல அவளைத் திரும்பிப் பார்த்த ஆதிலட்சுமி, பதில் பேசாமல் மீண்டும் பழையடி சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

“பொண்ணைப் பாத்தோம். மெட்ராஸ்காரப் பொண்ணு. பத்தாங்கிளாஸ் வரைக்கும் படிச்சிங்குது. கேக்கணுமா? ஷடைலா நல்லாதான் கீது. ஒரே ஒரு அண்ணன்காரன், ஆட்டோ வச்சிங்கறான். நல்ல வசதி. தம்பிக்காரன் படிக்கறாப்பலக்கீது. ஒரே பொண்ணுன்னு ரொம்ப செல்லமா வளத்துங்கறாங்க. அவங்கம்மாக்காரிகிட்ட சித்த நேரம் பேசிட்டு வந்தோம். நல்ல மனுசாளுன்னுதான் சொல்றாங்க. பொண்ணுக்கு அப்பன் டூட்டிமேல போயிட்டாரு போல அந்தம்மா புடி குடிக்காமத்தான் பேசிச்சுது. ஞாயம்தான? நாளக்கு நம்ப காவேரியப் பொண்ணு கேட்டு யாருனா வந்த

https://telegram.me/aedahamlibrary

நாம்பளும் அப்படித்தானே பேசுவோம்? யாரு எவருன்னு தெரிஞ்சுக்காம பேச்ச வுட்டுடுவமா? அப்படிதான் அந்தம்மாவும் பேசிச்சு. இதுக்கு மேல அவங்களும் நம்ப வூட்டப் பத்தி நாலாபக்கமும் வெசாரிச்சி, வூட்டயும் பையனையும் பாத்துட்டாங்கன்னா அப்புறம் முடிவு பண்ணிட வேண்டியது தான். அப்புறம் அவன் தல எயித்து எப்படிக்கிதோ" என்று சின்னத்தாயி விவரம் சொன்னாள்.

"ஆமா, இந்தச் சீமான இப்ப வந்து பாக்கணும் பொண்ணு வீட்டுக்காரங்க. அடுத்த முகூர்த்தத்துலே கல்யாணம் வச்சிக்கலான்னுடுவாங்க" காவேரி மெல்ல முனகினாள்.

"அதான் நானும் இம்மாந்நேரம் சொல்லிக்கினுக்கிறேன். அவனைச் சொல்லி என்னா பண்றது ஒங்கம்மா, அந்தப் புள்ளய நெலயா ஒரு தொழிலு ஒரு எடமுன்னு வேலக்கிப் போவ வுட்டாத் தானேனு சொல்லிகினுந்தேன்." சின்னத்தாயி ஆதிலட்சுமியின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். அவள் எதிர்பார்க்கிற பதில் கிடைப்பதற்கான அறிகுறிகள் ஏதும் இல்லாததில் சங்கடத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"என்ன அத்த நீ வேற வெவரமில்லாமப் பேசறே? ஒரு ஆம்பளய புடிச்சி வேலக்குப் போன்னு உடுனுமாங்காட்டியும். இப்ப யாரு கொண்டு போய் வுட்டாங்கன்னு குட்ச்சுட்டு வந்து இப்படி வுளுந்து கெடக்குது? அத்த சொல்லேன். நான் நல்லதுக்குச் சொன்னாலும் அவங்கவங்ளுக்கு பொத்துக்குனு வந்துடுது" என்ற காவேரி கலைந்திருந்த தலைமுடியைக் கோதி முடிந்து கொண்டாள்.

"ஏய்! சும்மா இருடி. நீ அவன் கிட்டே கையடிச்சு சத்தியம் வாங்கறாப்பல கொல்லு வேலக்குப் போகவே கூடாதுன்னு அம்மா சொல்றப்ப அவன் என்னாடி பண்ணுவான்?' என்று குறுக்கிட்டு கன்னியம்மாள் ஒரு நிமிட யோசனைக்குப் பின்னால் ஆனா, சுசீலாம்மா பேசனதக் கேட்டப்பவே நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். யாரு என்ன சொன்னாலும் நான் கேக்கப் போறதில்ல. நான் நாளயிலேருந்து பாண்டு சட்டியத் தூக்கிக்கினு போவத்தான் போறேன், இன்னிக்கு சாயங்காலமே போய் மேஸ்திரி கைல சொல்லிட்டு வரப் போறேன்"

https://telegram.me/aedahamlibrary

“இன்னாடி இது ஆளாளுக்கு ஆடறீங்க? கட்டிக்குடுத்த பொண்ணு ஒழுங்கா மொறயா குடித்தனம் பண்ணத் தாவலயா? எதுக்கோ வந்தே, சரி. என்னாவோ சலிப்பு சங்கடம். ரெண்டு நாளு இருந்துட்டுப் போவட்டும்னு இருந்தேன். நீ என்னாடி இங்கியே காலத்துக்கும் குந்திக்கப் போறவளாட்டம் பேசறே” ஆதிலட்சுமியின் கேள்விக்கு பதில் சொல்லாமல் கன்னியம்மாள் திண்ணையில் படுத்திருந்த தம்பியை எழுப்பிக்கொண்டு வந்து குடிசைக்குள் படுக்க வைக்கும் முயற்சியில் முனைந்தாள். அப்போது “யம்மா! எனக்கு ஒரு பளய சைக்கிளாவது வாங்கித்தந்துடு” என்று முணகிக்கொண்டிருந்தான்.

“இந்தப் பையன் சும்மா அப்பலேயிருந்து சைக்ளு, சைக்ளுங்கறானே! என்னாவா இருக்கும்” என்றாள் சின்னத்தாயி.

“அதெல்லாம் போத எறங்கினா நெதானமா வெசாரிச்சுக்கலாம். அத்த, மொதல்ல கன்னிம்மாக்கா வெவகாரத்தைப் பாரு. அதுல என்னமோ பெருசா சிக்கலு இருக்குதுன்னு சுசீலாம்மா சொல்றாங்க. அக்கா என்கிட்டே சொல்லவே மாட்டேங்குது” என்றாள் காவேரி.

# 7

**சு**சிலாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்கப் பிடிக்காமல் ஆதிலட்சுமி தலையைக் குனிந்து கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

“இங்கே பாருங்கம்மா. இப்படி நீங்க அழறதனால என்ன ஆயிடப் போவுது? எதோ இந்த மட்டும் கன்னியம்மாவுக்கு விவரமும் தைரியமும் இருந்திச்சே. அதுவே பெரிசு. அதுவும்தான் என்ன பண்ணும்? டாக்டரம்மா சொன்னகதப் போய் புருஷன்கிட்டே சொல்லி அவன வைத்தியம் பண்ணிக்கச் சொல்லியிருக்குது. அவன் ஏடாகூடமாய் பேசியிருக்கறான். இப்பவும் ஒண்ணும் குடி முழுகிப் போயிடல. காசயி அனுப்பி, அவன இங்க வரவைங்க. நான் பக்குவமா சொல்லிப் பார்க்கறேன். எத்தினியோ பெரிய மனுசனுங்ககூட பண்ற தப்புதான். எதோ சிறுவயசுலே

https://telegram.me/aedahamlibrary

தெரியாத்தனமா தப்புப் பண்ணிட்டே வரக்கூடாத வியாதி வந்துடிச்சி. இத வெளியில் சொல்ல கூச்சப்பட்டுக்கிட்டு, மூடி, மடி மறச்சா மோசமாத்தான் போவும். சரியானபடி வைத்தியம் பண்ணிக்கிட்டு ஒழுக்கமா இரு. இல்லாட்டி ஒன்னாலே கன்னியம்மா உடம்பும், கர்ப்பத்துலே இருக்கற புள்ள ஒடம்பும் கூட கெட்டுப்போயிடும்ன்னு சொல்லிப் பார்க்கறேன்"

சுசீலா சொன்னதை ஏற்றுக்கொண்டவளாக ஆதிலட்சுமி, முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள். குடிசையை நோக்கி நடந்தாள். என்றைக்கோ இறந்துபோன கணவனை நினைத்துக் கண்ணீர் பெருகியது. அவன், கைக் குழந்தையாயிருந்த கன்னியம்மாளைச் சீராட்டியதும் கொஞ்சியதும் நெஞ்சில் நிழலாட 'நீ மட்டும் இருந்திருந்தின்னா ஒம் மவளுக்கு இப்பிடி ஆயிருந்திருக்காதே. நான் தலயில்லாத பொம்பளன்னுதானே எல்லாருமே சேந்து என்ன ஏமாத்திட்டாங்க. வெளியில் சொல்ல முடியாம உள்ளவே வச்சு அந்தக் கன்னிம்மாப் பொண்ணு மருகி, மருகி சாவுதே. நான் என்னா பண்ணுவேன். நீ உசுரோட இருந்தீன்னா உம்மவன் யோக்கியதயப் பார்த்தியான்னு நாக்க புடுங்கிக்கிறாப்பல சம்பந்தியம்மாள நாலு கேள்வி கேட்டிருப்பியே. எந்தலையெழுத்து இப்படி ஆயிப்போச்சே' என்றெல்லாம் புலம்பினாள்.

குடிசைக்குள் இருந்த புகை கண்ணைக் கரித்தது. ஊது குழலும் கையுமாக அடுப்பு முன் உட்கார்ந்திருந்தாள் கன்னியம்மாள். கன்னியம்மாளைக் கண்டதும் அவளை அப்படியே கட்டிக் கொண்டு கதற வேண்டும் போல இருந்தது ஆதிலட்சுமிக்கு.

"அய்யோ! எம்மவளே! இப்பிடியா ஆவணும் ஒனுக்கு? சொல்லி ஆத்திக்க, முடியாதபடிக்கு இப்பிடியா ஒனுக்கு ஒரு வேதன ஒரு வேதன வரணும், சின்னஞ்சிறுசுக எப்படியெப்பிடியோ இருக்க வேண்டிய வயசுலே புருசங்காரன் பக்கத்துல வந்தாக்கவே பயந்து ஒதுங்கி ஓடறாப்பால ஒனக்கு ஆவணுமா? போதாத கொறைக்கு ஒன் உடம்பும் பாழாயி அத வெளியிலே சொல்றதுக்கும் அஞ்சிக்கினு நீ எப்படியெல்லாம் பதச்சியோ. அப்புறம்

https://telegram.me/aedahamlibrary

என்னான்னுதான் டாக்டரம்மாவாண்ட சொன்னியோ? ஒம் புருசன் நடவடிக்க சரியில்லாததனாலதான் ஒனுக்கு இந்த வியாதி வந்துடுச்சின்னு அந்தம்மா சொன்னப்ப ஒம்மனசு என்னாபாடு பட்டிச்சோ? எல்லாத்துக்கும் மேலே ஒம்புருசன்கிட்டப் போய் விசயத்தச் சொல்லி வைத்தியம் பண்ணிக்கங்கன்னு நீ சொன்னதுக்கு, நான் ஏன் வைத்தியம் பண்ணிக்கணும் ஒனுக்கு நடவடிக்க சரியில்லன்றதால இந்த வியாதி வராதா, நீ பண்ணிக்க வைத்தியமுன்னு சொன்னானாமே அந்தப் பாவி. என்னா பேச்சுப் பேசிப்புட்டான். இப்பிடி ஒரு சொல்லு வந்துடக்கூடாதுன்னுதான அத்தினி அவசரமா ஒனுக்குக் கல்யாணத்தப் பண்ணி வச்சேன். எப்பேர்ப்பட்ட வார்த்த கேட்டுங்கிறான். பேமானி. ஒந்தல எயித்து இப்படியா இருக்கணும்? ஒன்ன எப்படிடி நான் கரயேத்தப் போறேன்" என்று அரற்றிப் புலம்பியது அவள் மனம்.

வெளித்திண்ணையில் உட்கார்ந்து காசியுடன் தாயம் ஆடிக் கொண்டிருந்த காவேரியின் மனதில் தாயின் புலம்பல் கேட்டிருக்க வேண்டும்.

"என்னாம்மா! ஏன் அப்பிடி நோவு வந்த கோழி கணக்கா தலையைத் தொங்கப் போட்டுக்கினே" என்று கேட்டாள்,

ஆதிலட்சுமி மூக்கை உறிஞ்சிக் கொண்டாள். முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள். ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டவளைப் போல தலையை உதறி முடிந்து கொண்டாள். "ம். எல்லாம் இந்தக் கன்னியம்மா பொண்ணு வெவகாரம்தான். அவங்க மாமியாக்காரி கிட்டவே போய் நாலு வார்த்த கேட்டுட்டு வந்திடலாமான்னு பார்க்கறேன்."

கன்னியம்மாள் ஊதுகுழலைக் கீழே வைத்துவிட்டுத் திரும்பிப் பார்த்தாள். "ஏனாம்? நாம்பளா எதுக்கு வலியனா போவணும். என்னடா பொண்டாட்டிக்காரி திடுதிப்புன்னு கௌம்பிப்புட்டாளேன்னு ஒரு ஆம்பளக்கு சுர்ருன்னு வரத்தாவல. எதுக்குடி இங்கே வந்தேன்னு வந்து முதுகுலே நாலு வச்சி தலமயிரப் புடிச்சி தரதரன்னு இழுத்தும் போவத்தாவல. என்ன ஆனா எங்கே போனான்னு ஒரு கவலயும் இல்லாம அவங்க பாட்டுக்கு இருக்கச் சொல்ல நாம்பளா ஏம்போவணும்?" என்றான் காசி வீறாப்பாக.

https://telegram.me/aedahamlibrary

“ஏம்மா! அக்காளக் கட்டிக் கடுத்த புதுசுலே ஒரு தபா போனமே. அப்பவே அந்த மாமியாக்காரி நறுக்குன்னு உள்ளூர்ல பொண்ண கட்னாலே இப்பிடித்தான். வந்து அப்பப்ப இப்படி உக்கார்ந்து திங்கறதுக்கு இது சத்திரமா சாவடியான்னிச்சே,ஞாபகம் இல்லியா? அந்தப் பொம்பள சண்ட சாடி இல்லாம இருந்தப்பவே அத்தினி கொணமாக பேசும். இப்ப சலிப்பு சங்கடம் பேசறதுக்குப் போனா எத்தினி அளகாப் பேசுமோ?” என்றாள் காவேரி.

அடுப்பின் மேல் இருந்த அலுமினியப் பாத்திரத்தைத் திறந்து கரண்டியால் ஒரு கிளறு கிளறி விட்டு நெற்றி வேர்வையைத் துடைத்தபடி கன்னியம்மாள் ஆதிலட்சுமியின் அருகே வந்து உட்கார்ந்தாள்.

“எதுக்கும்மா இந்தப் பேச்சியெல்லாம். நான் இங்கக்கிறது ஒனுக்கு கேவலமாக்கிதா? காசிக்குக் கல்யாணம் பேச வர்றவங்க மின்னாடி எம்மவ வாழாம் வந்துட்டான்னு சொல்றதுக்கு ஒனுக்கு கஸ்டமாக்கிதா? சொல்லும்மா. நானும் சித்தாளு வேலக்குப் போயி நாலுகாசு சம்பாரிச்சு நாம்பாட்டுக்கு தனியா இருந்துடறேன் அவ்ளோவ்தான். நானு மறுக்கா அந்த வூட்டுக்குப் போவ மாட்டேன். அதுக்கு மேலே என்னியப் போபோன்னு சத்தாய்சின்னா அப்புறம் பாத்துக்க” என்று சொல்லும்போதே கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது அவளுக்கு.

கன்னியம்மாளைத் தன் தோள் மேல் சார்த்தியபடி அவள் தலையை ஆதரவாகத் தடவிக்கொடுத்தாள் ஆதிலட்சுமி. ஆதி லட்சுமி நீண்ட பெருமூச்சு விட்டாள். பிறகு, தாழ்ந்த குரலில் நிதானமாக சொன்னாள்.

“என்ன பேச்சுப் பேசறே கன்னீம்மா? நீ இங்கக்கிறதுலே எனக்கு என்னா கஷ்டம்? புருசங்காரனோட சந்தோசமா இருந்துக்னு, மாமியாருகையில் தகராறு இல்லாம இங்க வந்து எத்தினி நாளு இருந்தா என்னா சொல்லப்போறோம்? காசி கல்யாணத்துக்கும் இதுக்கும் என்னாத்துக்கு முடிச்சிப் போடறே? அட அப்பிடியேதான் கேட்டுப்புட்டாங்கன்னா என்னா? ஆமா எம்மவ குளிகுளிக்கறதுக்கு வந்துங்கறான்னு சொல்லிட்டுப் போறேன். எனக்கென்னா பயமா? ஆனா, நீ வாழற வயசுலே இப்படி வந்து நின்னுப் பூட்டின்னா நல்லாவாக்கிது? அதுதான் வெவரமில்லாம

https://telegram.me/aedahamlibrary

வந்துடிச்சின்னா இன்னா எதுன்னு நீ வெசாரிக்கிறதில்லியான்னு நாலுபேரு என்னியத்தான கேப்பாங்க? அவுங்களுக்கு நான் என்னா பதிலு சொல்லுவேன்?" ஆதிலட்சுமி பேசப்பேச கன்னியம்மாளின் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது.

"எம்மா! அண்ணன அனுப்பி மாமன இட்டாரச் சொல்லும்மா. அதுங்கயிலே பேசிப் பார்க்கலாம். சுசிலாக்காவயும், சின்னத்தாயி அத்தயயும் வச்சிப் பேசலாம். சரியாப் பூடும்" என்றாள் காவேரி.

தரையில் தாயக்கட்டையை உருட்டினான் காசி, "நல்லாக்கிதே. நான் இன்னாத்துக்குப் போயி பொம்பளிங்க கைலே மாட்டிக்கப் போறேன். கட வீதியிலே அங்க இங்க மாமா போற எடத்துலே அப்பிடியே அசால்ட்டாப் பார்த்துப் பேசறாப்பல பேசி இட்டாரேன். அதெல்லாம் நம்ப கையில வுட்ருங்க" என்றான்.

"ஆமா! அதான் நல்லது. வரட்டும் அந்தாளு. சுசீலாக்காவ வச்சுப் பேசனா எல்லாம் சரியாப்பூடும். காசி கண்ணாலத்துக்குள்ள எல்லாம் சரியாயிடணும். கண்ணாலத்துக்கு ஒங்க மாமியாரும் அவங்க வூட்டு மனுசாளும் இருந்தாத்தானே தேவல. இல்லேன்னா அதுக்கும் நாலு தினுசா பேசுவாங்களே" ஆதிலட்சுமி, வயிற்றைத் தடவி விட்டுக்கொண்டாள். இப்போதெல்லாம் அவளைப் புரட்டிப் போடுவது போல வயிற்றுவலி அடிக்கடி வந்து பாடாய்ப் படுத்துகிறது.

ஆதிலட்சுமியின் நெற்றிச் சுருக்கத்தைக் கண்டு அவளுடைய வலியைப் புரிந்து கொண்டாள் காவேரி. "என்னம்மா, வவுத்த நோவுதா? சொன்னாக் கேட்டாத்தானே? காத்தால எழுந்ததும் வேலக்குப் போறேன்னு ஓடிப்பூடறே. ஆஸ்பத்திரிக்குப் போன்னா போனாத்தான."

"ஆசுபத்திரி..! அங்க போயி குந்திக்னா செட்டியாரு வூட்ல சொம்மா படி அளப்பாங்களா? எதோ ஒரு அவசரம்னா அங்க போயி கைநீட்ட முடியுமா? எந்தல எயித்து வயித்த நோவுது. வந்தத அனுபவிச்சுத்தானே ஆவணும்."

"அவங்க படி அளந்தது போதும். இன்னமே வூட்டோட கெட.

https://telegram.me/aedahamlibrary

நாங்க சம்பாரிக்கறோம்” என்றாள் காவேரி.

“சர்த்தான். இன்னா வேலக்குப் போவப் போற நீயி? உங்கக்காக்காரி என்னடான்னா வவுத்துப் புள்ளயோட சித்தாள் வேலக்கிப் போறேங்கறா. அவன் என்னடான்னா சைக்கிளு வாங்கித் தர்றியா, இல்ல கொல்லு வேலக்கிப் போவட்டுமான்னு மெரட்டறான். எல்லாம் எந்தல எயித்து. நீ இன்னா வேலக்கிப் போவப் போற?”

காவேரி சிரித்தாள். “இதப்பாரும்மா. இந்தக் காவேரிய நீ என்னான்னு நெனச்சே? சுசீலாக்கா புதுசா ஒரு ஆபீஸ் வக்கப் போறாங்கம்மா. ம் எப்பிடிச் சொல்றது. ஆபீஸ் இல்லம்மா, பள்ளிக்கூடம் மாதிரின்னு வச்சுக்கவேன். அதும் பேரும் கூட சொல்லிச்சே. என்னாது ஆமா. கட்டடத் தொழிலாளரு மய்யம். அதுல சேரப் போறேன், பாரு”

ஆதிலட்சுமி, வயிற்று வலி தாளாமல் மௌனமாகச் சுருண்டு படுத்தாள். கன்னியம்மாள் தங்கையைப் பார்த்தாள்.

“நீ வேலக்கிப் போறது ஒரு பக்கம் கெடக்கட்டும். பொண்ணு வூட்டுக்காரங்க வர சொல்ல மதிப்பா சொல்றாப்பல மொதல்ல உங்க அண்ணங்காரனுக்கு எதுனா வேல கெடைக்குமான்னு சுசீலாம்மா கையிலே கேட்டுப்பாரு. அப்பத்தான் அவனுக்குக் கல்யாணம் ஆவும்” என்ற சொல்லிக்கொண்டே எழுந்து கன்னியம்மாள் அடுப்படியை நோக்கி நடந்தாள்.

# 8

**கா**சியின் திருமணம் கூடி வந்தது. ஆட்டோக்கார மாரிமுத்துவிடம் அவன் காண்டிராக்ட் வேலை செய்வதாகச் சொல்லப்பட்டதைக் கேள்வி கேட்காமல் நம்பினார்கள் பெண் வீட்டார்கள்.

“அந்தக் காலத்துலே எங்க அண்ணாத்த கூடத்தான் நளிதா பத்துமினின்னா உசுரவுடுவான். எங்க அண்ணாத்த என்னா, ரொம்பப் பேரு அப்பிடிதான். புள்ளங்களுக்கு பத்துமினி பேருவுடுவாங்க. ஆனாக்கா இது என்னா புச்சாக்கிதே ராகினின்னு?” சின்னத்தாயி, ராகினியின் தாயாரிடம் பேச்சுக்

https://telegram.me/aedahamlibrary

கொடுத்தாள்.

“அவுரு வேல பாத்த கம்பெனியில எப்பவோ போட்ட காலண்டருலே ராகினி படம் இருந்திச்சு. எங்க ராகினி என் வயத்துல இருந்தப்ப தெனம் எழுந்ததும் அந்தப் படம் தான் கண்ணுல வுழும். அப்புறந்தான் ராகினி பொறந்துச்சு.

புள்ளைய பார்த்ததும் அவுரு அப்பிடியே ராகினி மாதிரியே இருக்குதேன்னாரு. அதே பேரா நெலச்சிப் போச்சி” ராகினியின் தாய் முந்தானையை இழுத்துத் தோளை மறைத்தாற் போலவும் அதே நேரத்தில் கழுத்துச் சங்கிலி தெரிவது போலவும் சேலைத் தலைப்பைக் கழுத்தைச் சுற்றிப்போட்டுக்கொண்டாள்.

அழுக்குத் தெரியாமல் துவைத்த சேலையில் பளிச்சென்று இருந்த ராகினியின் தாயைக் காசி வீட்டாருக்குப் பிடித்திருந்தது.

“இது என்னடி இது? பொண்ண உட்டுட்டு ஓயாம் அவங்கம்மாளப் பத்தி இந்த உருகு, உருகறீங்க” என்று சின்னத்தாயி கூட கேலி செய்தாள்.

“அதுக்கு இல்ல அண்ணி. நூலப்போல சேல தாயப் போல புள்ளன்னு சொல்லுவாங்க இல்ல. கன்னியம்மா மாமியா மாதிரி இன்னொரு பஜாரி கூட சம்பந்தம் வச்சுக்க எனக்குத் தெம்பு இல்ல. இந்தம்மா அந்த அண்ணனக் கண்டு ஒரு நடு நடுங்குது பாரு. புருஷனுக்கு எதிர்ல உட்கார்றது கூட இல்லியாமே. எப்பேர்ப்பட்ட மருவாதியான குடும்பம்” ஆதிலட்சுமி மகிழ்ந்து போனாள்.

கன்னியம்மாளின் கணவனை அழைத்து வந்து சுசீலாவிடம் பேச வைத்தது. வைத்தியத்துக்கு அவனைச் சம்மதிக்க வைத்தது, அவனுடைய வீட்டாரை நிச்சயதார்த்தத்தில் கலந்து கொள்ள வைத்தது என்று அத்தனை அலைக்கழிப்புகளுக்கும் இடையே காசி, கல்யாணம் பற்றிய கனவுகளில் மிதப்பது மட்டும் நிற்கவில்லை. நடுவே ஆட்டோக்கார மாரிமுத்துவிடம் போய் தன் கல்யாணத்துக்குக் கட்சி தலைவரைத் தலைமை தாங்க அழைக்க வேண்டும், அது தன் மதிப்பை உயர்த்தக்கூடும் என்றும் சொல்லிவிட்டு வந்தான்.

திருமணமானதும் வீட்டுக்கு வரும் மனைவிக்கு ஒரு புதிய

https://telegram.me/aedahamlibrary

சூட்கேஸ் வாங்க வேண்டும். புதுப் புடவையும், புது மஞ்சள் சரடும், புதிய வெள்ளி மெட்டியும் மினுங்கத் தன்னோடு வரும் மனைவியுடன் ஒரு சூட்கேஸைக் கையில் பிடித்தபடி அந்தத் தெருவில் நடந்து போவதான ஒரு கற்பனை அவன் மனத்தில் தோன்றித் தோன்றி மறைந்தது.

ராகினியின் அம்மா சொன்ன படி குடிசையின் ஒரு மூலையில் சாணிபோட்டு வழித்த மூங்கில் தட்டிகள் இரண்டைக் கட்டி ஒரு சிறிய அறையைக் கட்டினான். தட்டியின் உட்புறம் காலண்டர்ப் படங்களைக் கத்தரித்து ஒட்டினான். கதவு என்ற அனுமானிக்கப் பட்ட இடத்தில் சரக்குப் பெட்டிகள் சுற்றி வரும் கோணித் துணியால் திரை போட்டான்.

கல்யாணத்தன்று வைப்பதற்காக ரிக்கார்டுகளை அவனே போய்த் தேர்ந்தெடுத்தான். ஒவ்வொரு பாடலையும் கேட்டுக் கேட்டு ராகினி எப்படியெல்லாம் மலர்ந்து போவாள் என்ற நினைத்து அந்த நினைப்பில் இவனே மலர்ந்து போனான்.

திருமணம் முடிந்து, “மொய்” வழங்கல் துவங்கியது. கல்யாணத்துக்கு என்று வாங்கிய கடனில் ஏதாவது ஒரு பகுதியை அடைப்பதற்காகவது இந்த மொய் தேறுமோ என்று கணக்கில் ஆதிலட்சுமி மனம் துடித்துக்கொண்டிருந்தது.

காசியின் கவனம் முழுவதும் ஆட்டோக்கார மாரிமுத்துவும் நண்பர்களும் வழங்கிய திருமண வாழ்த்து மடலில் மாலை சூடியவாறு ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். சரோஜா தேவி படத்திலேயே இருந்தது.

ஆனால், அன்று இரவு ராகினி அவர்களுக்கென்று உருவாக்கப்பட்ட அந்த அறைக்குள் நுழைந்து அவன் அருகே உட்கார்ந்தாள். மிகச் சாதாராணமாக “தூங்கிட்டீங்களா அதுக்குள்ள” என்றாள்.

காசிக்குத்தான் கூச்சமாக இருந்தது. “ம்.. இல்ல,” என்று மெல்ல முனகினான்.

“இங்க பாருங்க. ஒரு மாசத்துக்கு உங்களுக்கு எவ்வளவு வருமானம் கெடைக்கும்” என்று கேட்டாள் ராகினி.

https://telegram.me/aedahamlibrary

காசியின் மனசு சருங்கிப்போயிற்று.

# 9

**ரா**கினி அந்த வீட்டுக்கு வந்த பின்னர் பல மாற்றங்கள் உண்டாயின. அந்தக் குடிசையின் பெரும்பகுதியை ராகினியே ஆக்கிரமித்துக் கொண்டது போலத் தோன்றியது. குடிசையின் இடதுபுறச் சுவரில் பெரிய கண்ணாடி இடம் பிடித்துக் கொண்டது. வலதுபுற மூலையில் காசியும் அவளும் பிறை நிலவின் மேல் நெருங்கி உட்கார்ந்து புன்னகை புரிகிற திருமண போட்டோ. பக்கத்தில் மரத்தால் ஆன ஸ்டாண்ட். அதில் தகர டப்பாவுக்குள் பல் துலக்கும் பிரஷ், சோப், மஞ்சள் கட்டிகள். மூங்கில் தட்டிகள் இரண்டைக் கட்டி அமைக்கப்பட்டிருந்த தனி அறையை ராகினி இப்போது கொஞ்சம் விசாலமாக்கிவிட்டாள். கதவுக்கு வலுவான துணியினால் மறைப்பு ஏற்படுத்தி விட்டாள்.

“ம் இப்பப் பாருங்க. கதவு வச்சாப்பல” என்று காசியிடம் அவள் திருப்தியோடு சொன்னாள். “புது சிம்னி வெளக்கு மாட்னதும் அளகா இருக்குதில்ல” என்று கேட்டாள். “உடனே ஒரு சின்ன கட்டிலு வாங்கிப் போடணும்” என்று ஒரு கட்டளை போல அவள் பேசியதைக் கேட்டதும் காசியின் முகம் சட்டென்று சுருங்கிப்போயிற்று.

“ஏன். உங்களுக்கு இப்ப என்ன ஆயிடிச்சி? நான் இப்ப அப்படி என்ன சொல்லிட்டேன்?”

“ஒண்ணுமில்ல”

“கட்ன பொண்டாட்டி கையில பொய் சொல்லாதீங்க” கொஞ்சலும் பிரியமுமாக வார்த்தைகள் இழைந்தன.

“சே! ஒண்ணுமில்ல.”

“பொய், பொய் சொல்றீங்க. நான் கட்லு கேட்டது உங்களுக்குப் புடிக்கல.” காசி, அவளை வெறுமையாகப் பார்த்தான். “உங்களால முடியலன்னா நானே எங்கம்மா வீட்ல சொல்லி வாங்கிக்கிறேன்.”

ராகினியின் கையை, தன் மேலிருந்து விலக்கிவிட்டு காசி

https://telegram.me/aedahamlibrary

சற்று நேரம் மௌனமானான். மேற்கூரையில் எலி ஓடுகிற சத்தம். நிமிர்ந்து பார்த்தான். பார்வையை அங்கேயே நிறுத்தினான். பிறகு, "சீ! அது அசிங்கம். நெனச்சிக்கினாப்பல போய் அந்தக் கொண்டா இத்தக் கொண்டா சம்பந்தம் பண்ணவூட்ல போயி கைய நீட்டக் கூடாது" என்றான்.

அவள் சொன்ன வார்த்தைகள் காசியின் மனதுக்குள் கனமாகப் பதிந்தன. அவளை ஏறிட்டுப் பார்க்க முடியாத கூச்சத்துடன் கால் நகத்தைச் சுரண்டிக் கொண்டே மௌனமாக உட்கார்ந்திருந்தான். அவன் அதுவரை அனுபவித்திராத கவலையும் இனம் புரியாத அவமான உணர்ச்சியும் அவனை வதைத்தன.

ராகினி அவனையே பார்த்தபடி இருந்தாள். அவள் நெஞ்சுக்குள் கசிந்த ஊமைக் கோபம் வெளிப்பட்டுத் தெரியாத போதிலும் ஏக்கம் கண்களில் பொங்கியது. "ஒண்ணுமே பேசாம உக்காந்திருந்தா என்ன அர்த்தம்? பொழுதுக்கும் இப்படியே சும்மாவே குந்திக் கெடக்கறேன். ஒரு ரேடியோவா, டி.வி.யா? போர். உங்க வீடு இப்பிடி இருக்கும்னு நாங்க நெனக்கல. ஒரு நல்ல ரேடியோ கூடவா வச்சிருக்க மாட்டீங்க."

நான்கு பக்கமும் ரிப்பனும், வாழை நாரும் சேர்ந்துக்கட்டிய தன்னுடைய டிரான்சிஸ்டரை எடுத்துக் காட்ட காசிக்குத் தயக்கமாக இருந்தது. நிமிர்ந்து, உறுதியோடு அவளைப் பார்த்தான். "எனக்கு மட்டும் வூட்ல கட்லு, ரேடியோவெல்லாம் வெச்சிக்கணும்னு ஆச இல்லியா? கொஞ்சம் நாள்ல வாங்கலாம்."

"ஆசை இருந்தா போதுமா?" ராகினி சீறினாள்.

காசி, சட்டென்று தலை உயர்த்தினான். பேரளவில் சுவராய் இருந்த மூங்கில் தடுப்பின் மறுபக்கத்தில் அது வரை கேட்டுக் கொண்டிருந்த குரல் திடீரென்று நின்று போனதை உணர்ந்தான். "மொள்ளமா பேசு. வெளியே ஆளுங்க இருப்பாங்க - அவங்க காது வரை இதெல்லாம் போனா அசிங்கமாயிடும்" கொஞ்சுவது போலச் சொன்னான் காசி.

"இப்ப நான் அசிங்கமா என்னத்த சொல்லிட்டேன்" வேண்டுமென்றே செய்பவள் போல ராகினி குரலை உயர்த்தினாள்.

https://telegram.me/aedahamlibrary

“நம்பளைப் பத்தி அவங்க என்ன நெனைப்பாங்க! வீணா வீட்டுக்குள்ளே தகராறு வர வக்காதே”

“அப்ப, நான் தகராறு பண்றவளா? என்ன சொல்றீங்க?”

விருட்டென்று எழுந்தான் காசி “வுடும்மா அந்தப் பேச்சை, உன்னோட பேச என்னால முடியாது. நான் அப்புறமா வர்றேன்” என்றபடி வெளியே போனான்.

ஒரு வாரம் கழித்து ராகினியின் தாய் வேலம்மா மகளைப் பார்க்க அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். கூடவே துணிப்பையில் அதிரசம், கை முறுக்கு, கடலை உருண்டை, கொஞ்சம் கமலாப் பழங்கள்.

“வாங்கம்மா” என்ற ராகினியின் குரலில் சோர்வு படிந்திருந்தது. மகளை ஆதரவோடு அணைத்துக் கொண்டு மூங்கில் தடுப்புக்குள் ஒளிந்திருந்த அவளுடைய தனியறையை வேலம்மா பார்த்தாள். “இதான் உம் ரூம்பா? இந்தக் கிழிசப்பாய்தான் படுக்கயா?” வேலம்மா பெருமூச்சு விட்டாள். ராகினி, தலையைக் குனிந்த படி நின்றாள்.

“கெடக்குது வுடு. ஒங்கப்பா கையிலே சொல்லி ஒரு கட்டிலு வாங்கியாந்து போடச் சொன்னா போச்சு. இதுக்குப் போயி மூஞ்ச இத்தனூண்பாவச்சிக்கினு நிக்காத” என்று சமாதானமும் சொன்னாள்.

“வாணாம்மா” ராகினி அவசரமாய்க் குறுக்கிட்டாள்.”

“அவரே வாங்கிடுவாரு” என்றாள்.

வேலம்மாள் பையிலிருந்து ஒரு எவர்சில்வர் டப்பாவை எடுத்துத் திறந்தாள். ஆடிமாதத்துப் பாதாம் இலை போல சிவந்து எண்ணெய் மின்னும் அதிரசங்கள். “அதிரசம் எடுத்துக்கம்மா. உனக்கு உசிராச்சேன்னு வாங்கியாந்தேன்.”

ராகினியின் முகத்தில் குழந்தையின் பரவசம் நிறைந்தது. அதிரசத்தைப் பிட்டு வாயில் போட்டாள் ராகினி. கண்களை மூடி நெற்றி கூரையை நோக்க சப்புக் கொட்டினாள். “ம். பிரமாதம். அப்பாடா. இப்பிடி சாப்பிட்டு எத்தினி நாளாச்சு” என்று தன்னை மறந்த ஆனந்த பரவசத்தில் சொன்னாள். அடுத்த கணமே சொல்லக் கூடாதது எதையோ சொல்லி விட்டதை போல அசட்டுக் குழந்தையாகச் சிரித்தாள்.

ராகினியின் வார்த்தைகள் தூண்டில் முள்ளாக நெஞ்சை

https://telegram.me/aedahamlibrary

துளைத்தது. வேலம்மா திகைப்புற்றவளாக ராகினியின் பொய்ச் சிரிப்பை உற்றுப் பார்த்தாள். “நீ என்னம்மா சொல்றே” என்று மகளை நிதானமாக விசாரித்தாள்.

“ஒண்ணுமில்ல வுடும்மா” என்று தட்டிக் கழிக்க முனைந்த ராகினியைப் பார்த்தபடி பெருமூச்சு விட்டாள், அவள் மனசுக்குள் சுரீரிட்டு எதுவோ எரிந்தாற் போல இருந்தது 'இந்தக் கண்ணாலத்த அவசரப்பட்டு நடத்தி வைத்து விட்டோமோ?' என்ற எண்ணம் அவள் இதயத்தில் தீயிட்டது.

“எங்கே அவங்கள்ளாம்?”

“வெளியே போயிருப்பாங்க.” ராகினி, பெரிய விள்ளலாக வாய் கொள்ளாதபடி ஒரு அதிரசத் துண்டை வாய்க்குள் போட்டுக் கொண்டு தலையைக் கோணியவாறு சுவைத்தாள். முந்தானையை எடுத்து வாயைத் துடைத்துக்கொண்டாள். மாராப்பின் மேல் விழுந்த துணுக்குகளைத் தட்டி விட்டாள். கைகளைத் தட்டிய படி, “சரிம்மா, இரு. ஒரு ஓட்டம் போய் பக்கத்துக் கடையில இருந்த காபி வாங்கியாறேன்” என்று நடந்தாள். அவளைத் தொடர்ந்து வேலம்மாளும் வாசலுக்கு வந்தாள்.

“அவசரப் பட்டு இவள இங்கே கட்டிக் கொடுத்து விட்டோமோ?”

“அப்படியே திண்ணையிலே கொஞ்ச நேரம் ஒக்கார்ந்திரும்மா. இப்ப வந்துடறேன்.”

செம்பை எடுத்துக் கொண்டு காப்பி கடைக்குப் புறப்பட்டாள் ராகினி.

# 10

“**சி**ந்தாதிரிப்பேட்டயிலிருந்து இந்தக் கொளுத்தற வெயில்ல வருவானேன்? வந்த வேகத்திலே ஓடுவானேன்? நாங்கள்ளாம் மனுசாளப் படலியா ஒங்கம்மாவுக்கு? இருந்து கலந்துக்கின போவாத” கோபமும் சலிப்புமாக காசி பேச்சும் முணு முணுப்புமாக எதையோ சொன்னான்.

“என்ன சொன்னீங்க? இருந்து கலந்துக்கறதா? யாரோட? எங்கம்மா வர்றாங்கன்னு மரியாதயா வூடு தங்கி “வாங்க.

https://telegram.me/aedahamlibrary

இருங்க”ன்னு உங்கவூட்டுச் சனமும் நீங்களும் மரியாதயா நடந்துக்கிட்டீங்க பாருங்க. அதுக்காக நாலுநாள் தங்கிப் போவாதது தப்பாப் போயிடிச்சி. இல்லியா?”

“என்ன சொல்றே நீ?”

“ம். எங்கம்மா வந்தாங்க. வூட்லே ஒரு ஈ காக்கா கூட இல்ல. நானே சொம்ப எடுத்துக்கிட்டுப் போயி காப்பிக் கடையிலேயிருந்து காப்பி வாங்கியாந்தேன். எங்கம்மாவுக்கு கண்ணே கலங்கிடுச்சு.”

“எங்கம்மா எங்க போயிடுச்சு”

“ஆப்பக்காரம்மாக்கிட்ட போயிருக்கும்”

“அக்கா?”

“அவளயும் கூட்டிகிட்டுத்தான் உங்கம்மா போயிடிச்சி”

“காவேரி?”

“அவ எங்க போறா எப்பவர்றான்னு யாருக்குத் தெரியும்? அவ என்ன எங்கயில சொல்லிட்டா போறா. எப்பப்ப பார்த்தாலும் அந்த சுசீலாவோட சேர்ந்துக்கிட்டு சுத்தறா.”

“அப்ப சோறு?”

“தண்ணி சோறதான்”

“தண்ணி சோறா?”

“ஆமா”

கையிலிருந்த பேப்பரை சுவரில் விசிறியடித்தான் காசி. முகம் கோபத்தில் இறுகியது. “எப்பப் பாரு தண்ணிசோறு. இல்லன்னா பழைய சாம்பாரு. சீ! நாக்கே செத்துப் போச்சு.”

“வகைவகையா பண்ணிச் சாப்பிட யாருக்கு ஆசயில்ல? துட்டு வேணுமே” எகத்தாளமாய்ப் புன்னகை செய்தாள் ராகினி.

“கிண்டலா பண்றே?”

“இதுல என்னா கிண்டல்? எங்க அண்ணனப் பாருங்க. பதினாறு வயசுலே சம்பாதிக்கப் போனான். இன்னக்கு வரக்கும் அங்க ஒரே கததான். “டாண்'ணு சொலயா பணத்தக் கொண்டாந்து அம்மாகிட்டே தந்துடுவான். மூணுவேளயும் கறியும் சோறும் போட்டாத்தான் ஆச்சும்பான். நம்மால

https://telegram.me/aedahamlibrary

அப்படி முடியுமா? உங்கம்மா ஒருத்தரு ஒழச்சு நாம்ப நாலுபேரும் சாப்பிட்டா வாயத்தொறந்து இது வேணும் அது வேணும்னு கேட்க முடியுமா? நெஜத்தச் சொன்னா இப்பிடி வேலயில்லாம ஜோலியில்லாம வாரத்துக்கு நாலு நாள் வீட்டில வுளுந்து கெடக்க சொல்ல நாம்ப இந்த வீட்ல ஒரு முடக்குத் தண்ணி குடிக்கறது கூட கேவலம்தான்.” ராகினியின் வார்த்தைகள் சாட்டைகளாக அவன் இதயத்தில் அறைந்தன. “நல்லா யோசன பண்ணிப் பாருங்க. கல்யாணமாகி இத்தன நாளாச்சு. உங்க வரும்படியிலே எனக்கு என்ன வாங்கிக் கொடுத்திருக்கீங்க” என்றாள் ராகினி.

காசி அவளை மிரட்டுவது போலக் குரல் கொடுத்தான். மறுபடியும் வாயைத் திறக்க அஞ்சுவது போல அவளை அதட்டியும் அடக்கியும் வைக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால், அவள் சொன்னவற்றில் அவன் எதை மறுப்பான்? எதை ஒதுக்குவான்? எதைத் தவறு என்பான் அல்லது பொய் என்பான்? அவன் சொன்ன வார்த்தைகள் மனத்துக்குள் ஈட்டிகளாகப் பாய அவன் குமைந்து போனான்.

அருகே வந்து உட்கார்ந்து அவன் மோவாயைத் தொட்டு நிமிர்த்தினாள் ராகினி. கனிவும் அதே சமயத்தில் உறுதியும் தெரிய நிதானமாக மெதுவாகச் சொன்னாள். “கோவிச்சுக்காதீங்க. நான் சொல்றதைக் கேளுங்க. இனிமே நீங்க சம்பாதிக்கணும். தினமும் வேலக்குப் போகணும். எங்க வீட்டு ஆம்பளங்க அப்பிடித்தான். இனிமே நீங்களும் அப்பிடித்தான் இருக்கணும். அங்கியும் இங்கியும் போறதும் சும்மா சுத்தறதும் வேல எதுவும் கெடைக்கலன்னு திரும்பி வர்றதுமா இப்படியே இன்னும் எத்தினி நாளக்கு இருக்கப் போறீங்க? நிரந்தர வருமானம் வர்ர, வேலக்கு நீங்க போயாகணும். நாளைக்குக் காத்தால எங்க அண்ணன் வருவான். அவன் கூடப் போங்க. அவன் உங்களுக்கு எங்கேயோ வேல ஏற்பாடு பண்ணியிருக்கறான்.

காசி, மௌனமாய் நின்றான்.

அவனுடைய பதிலை எதிர்பார்க்காதவளாக வெளியே போனாள் ராகினி.

https://telegram.me/aedahamlibrary

# 11

**வெ**ளியே மண்தரையில் நிழலில் படுத்திருந்த வெள்ளையன் தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்தது. சோர்ந்து போயிருந்த அதன் கண்களில் உற்சாகம் எட்டிப்பார்த்தது. அவளைப் பார்த்து அது மெல்ல முனகியது. எழுந்து வந்து அவள் கால் அருகே நின்றபடி செல்லமாய் உறுமியது. அதன் பாஷையைப் புரிந்து கொண்டவள் போல, “என்னாடா?” என்று கன்னியம்மாள் பேச்சைத் துவக் கியதும் நாய் அள வற்ற சந்தோஷம் கொண்டதாக வாலைக் குழைத்தது. முகத்தை உயர்த்தி அவள் முழங்கால்களோடு இழைத்தது.

கன்னியம்மாள் மேடிட்டுக்கிடந்த தன் வயிற்றைத் தடவிய படியே குனிந்து அந்த நாயைப் பார்த்தாள். “அந்த வாயில்லாப் பிராணியோட கண்ல எத்தன வாஞ்ச? மனுசங்களாட்டம் வாயைத் தொறந்து பேசலியே தவுத்து எத்தினி ஆசையா அலையுது இது? ஆளைக் கண்ல பார்த்ததும் செல்லங்கொஞ்சிக்கினு அது முனகறதும், இதுக்கு எத்தினி பாசம்? அம்மா வர்றவரிக்கும் ரோட்ட, ரோட்ட பார்த்துக்குனு அது எத்தினி பிரியமா காத்துங் கெடக்குது? அம்மா வர்றதுக்கு ரொம்ப லேட்டாயிடுச்சுன்னா இப்பிடியும் அப்பிடியும் என்னமா அலபாஞ்சிப்புடுது! அம்மா வந்த வழிய வழியப் பார்க்கறதும் இதுக்கும் அதுக்குமா ஓடறதுமா என்னா பாடுபடுது! அம்மா தலை கண்ல பட்டுச்சோ இல்லியோ, உடம்ப முறுக்கிக்கினு பாஞ்சி ஓடிப்போயி அம்மா ஒசரத்துக்குக் கால எக்கிக்கினு நிக்கறதும் கொஞ்சறதுமா எப்பிடி அமர்க்களப்படுத்துது.” யோசித்தபடியே கன்னியம்மாள் திண்ணையில் உட்கார்ந்து அங்கே பச்சிலைச் சாற்றினால் வரையப்பட்டிருந்த ஆடுபுலி ஆட்டக் கோடுகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். மனச குழம்பியது. இனந்தெரியாத வேதனை இதயத்தில் படர்ந்தது. வெள்ளையன் பாந்தமாக அவள் காலுக்கு அருகே தரையில் சம்பிரமமாய்ப் படுத்துக்கொண்டு, “என்னாதான் விஷயம் என்னிடம் சொல்லேன்” என்பது போல அவளை ஏறிட்டுப் பார்த்தது.

கன்னியம்மாள் தன் கணவனை நினைத்துக் கொண்டாள்.

https://telegram.me/aedahamlibrary

'நான் மனம் சோர்ந்து போனதப் பார்த்ததும் இந்த நாய் எத்தினி ஆதரவாய் நடந்துக்குது? இதுக்கு எம்மேல எத்தினி பிரியம் இதுல ஒரு சொட்டாவது அந்த மனுசனுக்கு எம்மேல உண்டா?' கன்னியம்மாள் தனக்குத்தானே சொல்லிக்கெண்டாள். பிரியமில்லாட்டிப் போவுது. தன்னைப்போல ஒர உசுருன்னாவது அது என்னைப்பத்தி நெனச்சிங்கிதா? ஒரு மனுஷின்னாவது நெனங்சிங்கிதா? அதிகாரம் என்னா? பவுரு காட்டறது என்னா? அடேங்கப்பா! பேசிக்கினு இருக்க சொல்லவே பட்டுப் பட்டுன்னு அடிச்சு நொறுக்குமே. அழுதுகினு அந்த எடத்த விட்டு எழுந்து போய் மறவா நின்னுக்குவேன். அப்பவும் உடாது. அங்க வந்து கையப்புடிச்சி முறுக்கும். என்னாடி ரொம்பத்தான் பிகு பண்ணறே. சும்மா ரெண்டு தட்டு தட்னேன். அதுக்கே இந்த மாய்மாலம் போடறே. ஆம்பளன்னு இருந்தா பொண்டாட்டிக்காரிய அடிக்காதவேவா இருப்பாங்க?" ங்குமே, அதும்மேல குத்தம் சொல்லி என்ன ஆவப் போவுது. இப்பேர்ப்பட்ட மனுசனுக்கு அத்தினி அவசரமா கட்டிக் குடுத்துச்சே அம்மா, அத்த சொல்லணும் உடம்ப வலிக்கறாப்பல அடிக்கறதும், கை கால் வீங்கி கன்னிப் போறாப்பல உதக்கறதும், வண்ட வண்டயாப் பேசறதும் மொரட்டுத்தனமா பாயில தள்ளி உருட்டறதும். கிழிஞ்சுப்போன அந்தப் பாயைத் தடவிகிட்டே அழுதுகினு கெடப்பேன். ஏண்டி அழுவறேன்னு ஆசயா, பாசமா ஒரு வார்த்த கேக்காது. "பொண்டாட்டி கையில தன்மையா பேசி கொஞ்சிக்கினுக்கற பொட்ட இல்லம்மே நானுங்குமே. என் கிட்ட ஆதரவா, பாசமா இருக்கறது தப்புன்னு அது நெனைக்கும் போலக்கிது."

காசியின் கல்யாணத்துக்கு தன் கணவனும் மாமியார் வீட்டாரும் ஏதோ கடனே என்பதுபோல வந்ததும் வந்த வேகத்திலே போனதையும் நினைக்க நினைக்க அவளுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. வெள்ளையன் விருட்டென எழுந்து நின்றது. இழைந்தது. கண்ணீர் நிரம்பிய அவளுடைய விழிகளைக் கண்டு தலையை ஆட்டியது. கண்களைத் துடைத்துக் கொண்டு கன்னியம்மாள் வெள்ளையனைத் தடவிக் கொடுத்தாள். வாசலில் குரல் கேட்டது. அவள் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். சுசீலாவும் காவேரியும்தான் வந்து

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தார்கள். சிவந்து பளபளக்கிற மூக்கு நுனியும், சிவப்பேறிய கண்களும் அவள் அழுது கொண்டிருந்ததை காட்டிக் கொடுக்க, காவேரி "அக்கா என்ன பண்ணிக்கினுக்கிற" என்றாள்.

"சும்மாதான் உக்காந்துங்கறேன்" கன்னியம்மாள் மூக்கை உறிஞ்சிக்கொண்டாள்.

ராகினி உள்ளே இருக்கிறாளா என்று சைகையாலேயே காவேரி விசாரித்தாள்.

"அது சினிமாவுக்கு போயிங்குது. அதோட அம்மா வந்து இட்டுக்கினு போயிங்கிது. சினிமா பார்த்துட்டு அம்மா வூட்டுக்குப் போயிட்டு லேட்டாத்தான் வரும் போலக்கிது" என்று சொல்லிய படி அவள் உள்ளே போனாள். அடுப்பில் புகை தணிந்து கனல் கனந்து நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவளுக்கு ஏனோ சிரிப்பு வந்தது. இதிலே சிரிக்க என்ன இருக்கிறது என்பது போல காவேரி அவளை வினோதமாகப் பார்த்தாள்.

"ஏங்க்கா சிரிக்கிற"

"ஒண்ணுமில்ல"

காவேரி, அவள் தோளில் கையை வைத்து "சொல்லுக்கா எதுக்கு சிரிச்சே."

கன்னியம்மாள் மௌனமாக அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

"எனக்கு என்னா பெரிய சந்தோசம் வந்துடப் போவுது சிரிக்கறதுக்கு? இத்தினி நேரம் எப்பிடி எப்பிடியோ மல்லுக் கட்னேன். எரியவே மாட்டன்னுடுச்சி இந்த அடுப்பு. தொலையுது சனியன்னு சலிச்சுப்போய் உட்டுட்டு வாசலுக்கா வந்து நின்னேன். இப்பப் பார்த்தா, தானே புடிச்சுக்கினு எரியுது. அடுப்புக்குக்கூட நானுன்னா எளக்காரமா பூடுச்சேன்னு நெனச்சேன் சிரிச்சேன். அதான், அவள் கூறியதைக் கேட்டுவிட்டு அப்படியே காவேரியைப் பார்த்து, "என்ன காவேரி யோசிக்கறே" என்றாள் கன்னியம்மாள்"

"இல்ல நானாயிருந்தா என்னா நெனச்சிருப்பேன். பார்த்தியா இந்த அடுப்பை நாம்ப சலிச்சுக்கிட்டதும் தானே எரியுது. பரவாயில்லியே இது நம்பபிரண்டுதான்னு

https://telegram.me/aedahamlibrary

நெனச்சிருப்பேன்."

அப்போது அங்கு வந்து சுசீலா. "குட்" காவேரியைத் தட்டிக் கொடுத்தாள் "நீ சொல்றது ரொம்பச் சரி காவேரி. அப்படித்தான் நெனக்கணும். எல்லாத்திலேயும் நல்லதயே பார்க்கணும். அதுதான் நமக்கு நம்பிக்கவும், சந்தோஷத்தயும் தெம்பயும் தரும்" என்றவள் கன்னியம்மாளின் பக்கம் திரும்பி "இப்பிடி சும்மா ஒக்கார்ந்து கண்ணக் கசங்கிக்கிட்டிருக்கறதுக்குப் பதிலா எங்கேயாவது வேலக்குப் போகலாமில்லியா" என்றாள்.

"இன்னாது நான் வேலைக்கு போறதா? அய்யய்யோ. எனுக்கு இன்னா வேல தெரியும்" என்றாள்.

"அக்கா எப்பவுமே இப்பிடித்தான், அன்னிக்கு என்னுமோ தைரியமா, பாண்டு சட்டியைத் தூக்கினு நானும் சித்தாளு வேலைக்குப் போறேன்னிச்சி. இப்ப அதுக்குள்ள பயம் வந்துடிச்சி. எல்லாத்துக்கும் பயப்படும். பயந்து பயந்து சாவும் ம்" என்ற காவேரியைக் கன்னியம்மாள் பரிதாபமாகப் பார்த்தாள். "என்ன இன்னா பண்ணச் சொல்ற. சின்னதுல இருந்தே எனக்கு அப்படியே பழகிப் பூடுச்சே" என்று தணிந்த குரலில் சொன்னாள்.

"அதயெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா மாத்திக்கணும் கன்னியம்மா. அவங்கவங்க சொந்தக் கால்லே நிக்கக் கத்துக்கணும்"; என்றாள் சுசீலா.

"அக்கா நீங்கதான் அதைப் பண்ணனும். மொள்ளமா மாத்தணும்" என்றாள் காவேரி.

"அதுக்கென்ன" என்றாள் சுசீலா நம்பிக்கையுடன். "அதெல்லாம் மாத்திடலாம்."

ராகினி வார்த்தைகளைக் கேட்டதும் காசிக்கு கோபம் பற்றிக்கொண்டு வந்தது. அவளை உதைத்துத் தள்ள வேண்டும் என்று தோன்றியது. ஆனால் ராகினியை அதட்டி அடக்கக்கூட அவனால் முடியவில்லை. காதுமடலில் செருகியிருந்த பீடியை எடுத்து அதைத் துணுக்குத் துணுக்காகப் பிய்த்தெறிந்தான். அவன் பத்து வார்த்தை பேசினால் அவள் ஒரேயொரு வார்த்தையில் அவனைப் பொடிப்பொடியாக நொறுக்கினாள். அலட்சியப் பார்வையால் அவனைக் குறுகிப்போக வைத்தாள்.

https://telegram.me/aedahamlibrary

“போய்யா உன்னயும் உன் கையாலாகாத்தனத்தயும் எனக்குத் தெரியாதா” என்று அவனை எகத்தாளப் படுத்தியது அந்தப் பார்வை.

“என்னை என்னடி பண்ணச் சொல்ற” என்றான் அவன் எரிச்சல் கலந்த குரலில்.

“நீங்க ஒண்ணும் பண்ண வேண்டியதில்ல. உங்களால ஒண்ணும் பண்ண முடியாது. எங்க அண்ணன் உங்களப் பத்திச் சொல்றப்ப எனக்கு அப்படியே நாக்கப் புடுங்கிக்கலாமான்னு தோணிச்சு. ஒங்களுக்கு ஒரு வேலயும் சுத்தமா தெரியலியாமே. இவ்வளவு வயசாயியும் உருப்படியா எந்த வேலயும் பண்ணத் தெரியலைன்னா.. சீ!” அவள் பாயை எடுத்து உதறினாள்.

“பொண்ணு கேட்டு வந்தப்ப வாய் கூசாம நீங்க சமயத்துல ஐநூறும் சம்பாதிப்பீங்க, ஆயிரமும் சம்பாதிப்பீங்க. சில சமயத்துல ரெண்டாயிரம் வரைக்கும் கூட கொண்டாருவீங்கன்னு சொன்னாங்களே. அந்தப் பேச்ச எங்க அப்பாவும் அம்மாவும் அப்பிடியே நம்பிட்டாங்க. அப்பவும் எங்க அண்ணன் வெசாரிக்கணும் வெசாரிக்கணும்னு சொல்லிக்கிட்டே இருந்துச்சி. அதும் பேச்ச யாருமே காதுல வாங்கிக்கல. எந்தலையெழுத்து”

“மெதுவாப்பேசுடி.” அதட்டலாய் வெளிப்பட்டது காசியின் குரல்.

“எதுக்கு மெதுவாப் பேசணும்.”

“மத்தவங்க என்னா நெனைப்பாங்க?”

ராகினி பற்களைக் கடித்துக் கொண்டே கண்களைத் துடைத்துக் கொண்டாள். குரல் தழுதழுக்க “இங்க மத்தவங்க யாரு? இருக்கறாங்க. எல்லாம் கூட்டாச் சேர்ந்து என் பொளப்புல மண்ணப் போட்டவங்கதான. எல்லாருமாச் சேர்ந்து இந்தப் பொண்ண நல்லா ஏமாத்தினோம்னுதான் நெனப்பாங்க” என்றாள்.

காசி தலையில் அடித்துக் கொண்டான். “நான் பேசாம இருந்திருக்கணும். ப்ச். நான் என்னென்னமோ நெனச்சிக்கினு இருந்தேன். இன்னாடான்னா கட்ச்சியிலே இப்பிடி ஆயிடுச்சி” என்றான்.

https://telegram.me/aedahamlibrary

ராகினியின் பேச்சைக் கேட்டு வேதனை பொறுக்க முடியாதவளாக ஆதிலட்சுமி சுவர் மீது சாய்ந்து பெருமூச்சு விட்டாள். ராகினியின் வார்த்தைகளில் நியாயம் இருப்பதாகவே பட்டது கன்னியம்மாளுக்கு. அதே சமயம் அவள் இப்படி நெருப்பாகக் கக்குகிற வார்த்தைகளை வாங்கிக் கட்டிக் கொள்கிற காசியை நினைத்து சங்கடமாகவும் இருந்தது.

காசி, மங்கிய வெளிச்சத்தில் சுவரைப் பார்த்தான். சுவரில் அவர்களின் திருமணம் முடிந்த கையோடு எடுத்த போட்டோ மாட்டப்பட்ருந்தது. அவர்கள் இருவரும் பிறை நிலவின் மேல் நெருங்கி உட்கார்ந்து புன்னகை புரிந்து கொண்டிருந்தார்கள். அதையே பார்த்துக் கொண்டு சற்று நேரம் அமைதியாக இருந்தான் காசி. ராகினியைச் சமாதானப்படுத்த வேண்டும் போலத் தோன்றியது அவனுக்கு. இப்படியே சண்டை போட்டுக் கொண்டு இருந்தால் மட்டும் என்ன ஆகப் போகிறது?

முழங்காலுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ராகினியின் தலைமேல் அவன் மெதுவாகத் தன் கையை வைத்தான். அவள் அவன் கையை வெடுக்கென எடுத்து எறிந்தாள். ஒரு கணம் அவன் அதிர்ந்தான். மறுகணம் சட்டென்று அவள் பாதங்களைப் பற்றிக் கொண்டான். அவள் காலை இழுத்துத் தன் மடிமேல் வைத்துக் கொண்டான். அவள் திமிறவில்லை. “என்ன வுடுங்க” என்றவாறு அவன் மார்பின் மேல் தன்கையை ஊன்றி அவனை விலக்கித் தள்ளினாள். தன் கைகளை முஷ்டியாகக் குவித்து அவன் மார்பில் குத்தினாள். “எனக்கு வோணும். நல்லா வோணும். அப்பிடியே என்னக் குத்திக் கொன்னுடு”
சட்டென்று அவள் குத்துவதை நிறுத்தினாள். கண்கள் இமைக்காமல் அவனையே உற்றுப் பார்த்தாள். அவள் கண்கள் கலங்கின. பொல பொலவென்று கண்ணீர் உதிர்ந்தது. உதடுகள் துடித்தன. அவனை இறுக அணைத்துக் கொண்டாள். “எதுக்கு அப்பிடிச் சொல்றீங்க.” அவள் திரும்பத் திரும்ப அதையே கேட்டாள். குரல் சற்றே கீழே இறங்கியது.

அவன் அமைதியாகத் தரையைப் பார்த்துக் கொண்டே

https://telegram.me/aedahamlibrary

உட்கார்ந்திருந்தான். அவள், தன் காலை அவன் மடியிலிருந்து நகர்த்திக் கொண்டாள். “நான் சொல்றது உங்களுக்குப் புரியுதா? நீங்க ஏதாவது ஒரு வேலக்குப் போயி உருப்படியா சம்பாதிச்சாத்தான நாம்ப சந்தோஷமா இருக்க முடியும்? இல்லேன்னா நாலுபேரு முன்னால் அவமானந்தானே...” ராகினி தழுதழுத்தாள். அவளைச் சமாதானப்படுத்துபவன் போல அவள் கைகளை மென்மையாகப் பற்றிக் கொண்டு காசி, அப்படியே நெடு நேரம் உட்கார்ந்திருந்தான்.

# 12

**ரா**கினியின் அண்ணன் துரை வற்புறுத்திய பிறகுதான் காசி அதற்குச் சம்மதித்தான்.

“அப்படியொண்ணும் கௌரவக் குறைச்சலான வேல இல்ல. அந்தக் காம்பவுண்டுக்குள்ளேயே ஒரு பக்கமா நீங்க தங்கறதுக்கும் வசதி பண்ணிக் குடுத்துடுவாங்க. சௌகரியமாயிருக்கும். ஆனா ரொம்ப ஜாக்கிரதயா இருக்கணும். காம்பவுண்டுக்குள்ள நெறயப் பொருளுங்க இருக்கும். முக்கியமா ராத்திரி நேரத்துல ரொம்ப ரொம்பக் கவனமா இருக்கணும். அந்தப் பக்கமெல்லாம் அத்தினி நல்லதில்ல.”

காசி ராகினியைப் பொறுமையாகப் பார்த்தான்.

“சம்பளம்?”

“எடுத்த எடுப்பிலே ஆயிரத்து ஐநூறு தர்றதா சொல்லியிருக்காங்க. இது வாட்ச்மேன் வேலக்கு மட்டும் தர்ற சம்பளம். பில்டிங் வேல ஆரம்பமானதும் எதுனா வேற கட்டட வேலயும் பார்க்கலாம். அதுல எப்படியும் நானூறு ஐநூறு நிக்கும். நாம்ப வேல செய்யறதப் பொறுத்தது. நல்லபடி ஒழச்சா நிறய சம்பாதிக்கலாம்.”

“அது சரி” என்றாள் ராகினி. மௌனமாய் இருந்த காசியின் தோளைத் தொட்டு உலுக்கினாள்.

“என்ன பேச மாட்டேங்கறீங்க? வாயைக் கூட தெறக்க மாட்டேங்கறிங்களே”

https://telegram.me/aedahamlibrary

“ம்.” என்று தயங்கித் தயங்கி இழுத்தான் காசி. “நாள் பூரா கொட்டுக் கொட்டுன்னு அடைக்கோழி மாதிரி இங்கேயே முடங்கிகிட்டிருக்கறதுக்கு ஆயிரத்து ஐநூறு ரூவாதான் கூலியா. அநியாயமா இருக்குதே.”

அவன் சொன்னதைக் கேட்டு ஏளனமாய் சிரித்தாள் ராகினி. கேலியான குரலில் இகழ்ச்சி துள்ள “ஓஹ்ஹோ பெரிய அநியாயமா அநியாயம். சும்மா தண்டமா உக்காந்துகிட்டு வெட்டிப் பொழுது போக்கறது ரொம்ப நியாயம். அப்பிடித்தானே! நீங்களும் உங்க நியாயங்களும்? என்னாடா வாடகை இல்லாம வீடு தர்றாங்களேன்னு ஒரு மனுஷனுக்குத் தோணவேணாம். பேசாம எங்கண்ணன் சொல்ற வேலய ஒத்துக்குங்க எதோ என் தலைவிதி இப்படி ஆச்சின்னு விதிய நொந்தகிட்டு நானும் அங்கயே கெடக்கிற வேலய எதையாவது செய்யறேன்” என்றாள் ராகினி.

“என்னது? என்ன சொன்னே? நீ கட்டட வேல செய்யப் போறியா? ஏம்மா அதுக்காகவா உன்ன கண்ணுக்குள்ள வச்சு வளர்த்தோம்? என்னா பேச்சும்மா இதெல்லாம்” துரை ராகினியை அதட்டினான்.

ராகினி பதில் பேசாமல் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். “வேறே வழி தெரியலியே” என்றாள்.

துரை பரிவோடு அவளைப்பார்த்தான். “கவலயே படாதம்மா. நீ நல்லா இருப்பே” என்றான்.

அதைக் கேட்டு ராகினி வறட்சியும் விரக்தியுமாகச் சிரித்தாள். வாழ்க்கையைப் பற்றி அவள் என்னென்ன கனவுகள் கண்டாள். அழகாக, விதம் விதமாக உடுப்புகள் அணிந்த, பளிச்சென்றிருக்கும், இளமையும் துடிப்பும் மின்ன கைநிறையச் சம்பாதிக்கிற, அவளையே சுற்றிச்சுற்றி வருகிற, அவளுடைய விருப்பங்களைத் துருவித் துருவிக் கேட்டு உடனுக்குடன் நிறைவேற்றி வைக்கிற ஒருவனை அவள் மானசீகமாக மனத்துக்குள் குடி வைத்திருந்தாள். ஆனால், இப்போது... அவள் கண்கள் பனித்தன.

கண்கலங்கிய ராகினியைப் பார்க்க துரைக்கு சங்கடமாக இருந்தது. “எல்லாம் நல்லபடி நடந்து, உழைப்பும், முயற்சியும் இருந்தா உம் புருசன் ரெண்டு மூணு வருசத்துல பில்டிங் காண்டிராக்டராவே ஆயிடலாம்.

https://telegram.me/aedahamlibrary

ஆயிரக்கணக்கில் பணம் புரட்டலாம்” என்றான் துரை.

“ம்... உன் வாக்குப் பலிக்கணும். அப்படி நடந்தா சந்தோசந்தான்” என்றாள் ராகினி.

துரையுடன் போன காசி சுற்றிலும் உயரமான சுவர் எழுந்து நின்ற அந்த பரந்த நிலத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனான். “இவ்வளவு பெரிய நிலம் முழுக்கவா வீடு கட்டப் போறாங்க” என்று ஆச்சர்யத்துடன் கேட்டான். அவனுடைய திகைப்பைப் பார்த்த துரைக்கு சிரிப்பு வந்தது. “கால் வாசி நிலத்துலதான் முதல்ல பிளாட்ஸ் கட்டுவாங்க. நாலு நாலு பிளாட்டா மூணுமாடி.”

“ஓ” என்றான் காசி.

“லட்லட்சமா பணம் செலவாகும். மளமளன்னு கட்டி முடிச்சிடுவாங்க. ஓணரு சினிமாப்படமெல்லாம் எடுக்கறவரு.”

“அதான பார்த்தேன்” என்று சிரித்தபடி சொன்னான் காசி.

“இன்னும் ஒரே வாரத்துல இங்கே கிணறும், உங்களுக்கு தங்கறதுக்கு சின்னதா ஒரு ஷெட்டும் ரெடி பண்ணிடுவாங்க. அப்புறமா பெரிசா மூணு ஷெட் அநேகமாக பதினஞ்சி, இருபது நாளிலே அஸ்திவாரம் தோண்ட ஆரம்பிச்சுடுவாங்க. அவங்க கையால நீங்க சாவிய வாங்கிட்டா இன்னியிலிருந்தே உங்களுக்கு சம்பளம் போட்டுடுவாங்க.”

சம்பளத்துல ஒரு ஐந்நூறைக் கூட்டி இரண்டாயிரமாகத் தரச் சொல்லும்படி கேட்க வேண்டுமென்று காசி நினைத்தான். ஏனோ அதை வாய் விட்டுக் கேட்காமல் அப்படியே விட்டுவிட்டான். திடீரென்று நினைத்துக் கொண்டவன் போல, “இங்க எத்தினி பேரு வேல செய்ய வருவாங்க” என்றான்.

“ஒரு முப்பது முப்பத்தஞ்சு பேரு வருவாங்க” என்று சொல்லிக் கொண்டே துரை வெளியே பார்த்தான். தூரத்தில் வந்த காரை அடையாளம் கண்டு கொண்டு, “ஓணர் வர்ராப்பல இருக்குது. போய் கேட்ட திறங்க” என்றான் துரை. காசி ஓடிப்போய் அந்தப் பெரிய இரும்புக் கேட்டைத் திறந்தான். பெரிய படகுக்கார் புழுதியைக்

https://telegram.me/aedahamlibrary

கிளப்பிக்கொண்டே அந்தக் கட்டடத்துக்குள் நுழைந்தது. துரை ஓடிப்போய்க் கார்க் கதவைத் திறந்து விட்டான். காருக்குள் இருந்து இரண்டு நபர்கள் இறங்கினார்கள். துரை அவர்களுக்கு வணக்கம் சொன்னான். காசியின் தலையும் தன்னையறியாமல் தாழ அவன் கைகள் கூப்பி வணக்கம் கூறினான்.

துரை, காசியை காரில் வந்தவனுக்கு அறிமுகப்படுத்தினான். வந்தவனுக்கு வயது நாற்பது இருக்கும். வாட்டசாட்டமாக இருந்தான். கறுப்புக் கண்ணாடியின் அதீதக் கருமையால் அவன் யாரைப் பார்த்துப் பேசுகிறான் என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. “ஷெட்டெல்லாம் ஒரே வாரத்துல ரெடியாயிடும். நாளுக்கு நல்ல நாள். கிணறு வெட்டத் தொடங்கிடுவாங்க. நீ தான் புதுவாட்ச்மேனா? தண்ணி, கிண்ணி போடுவியா?” என்று காசியைப்பார்த்துக் கேட்டான் ஓணர் ஆர்.ஆர்.எம்.

துரை அவசரமாகக் குறுக்கிட்டான். “இல்லீங்க அவர்கிட்டே எந்தக் கெட்ட பழக்கமும் இல்லீங்க” என்றான்.

ஆர்.ஆர்.எம்மின் முகம் சிவந்தது. கரகரத்த குரலில் “வாட்ச்மேனத்தானேய்யா நான் கேட்டேன்” என்றான். துரை வாயை மூடிக்கொண்டு காசியைப் பார்த்தான். காசி மெல்லிய குரலில் “என்கிட்டே அந்தப் பழக்கமெல்லாம் இல்லீங்க” என்றான்.

“அப்படி எதுனா இருந்தா இப்பவே நீ போயிடலாம்” என்று சொல்லியபடியே தன்னோடு வந்த தன் வயதை ஒத்த தன் மேனேஜரை பார்த்து 'விச்சு, 'லிப்ட்' கம்பெனி பெயரை போர்டுல எழுதிப் போட்டுடலாமா?' என்று கேட்டான்.

“அதுமட்டுமில்ல. பிளாட்ஸ் விற்பனக்கு உள்ளதுனு இங்கிலீஸ் பேப்பர்லே ரெண்டு நாளக்கு விளம்பரம் பண்ணிரலாம்.”

“எல்லா பிளாட்டுங்களயுமா வித்துடப் போறீங்க?”

ஆர்.ஆர்.எம் புன்னகை செய்தான்.

“ஆமா, ஏன் உனக்கு வேணுமா?”

“அதுக்கில்ல சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்டேன்” என்றான்

https://telegram.me/aedahamlibrary

விச்சு.

“அட! சும்மா சொல்லப்பா, வேணுமின்னா சொல்லு, ஜாலியா இருக்கறதுக்கு இங்கேயே ஒரு பிளாட் வாங்கிப் போட்டா என்ன? ஏற்கனவே இருக்கற மூணு பங்களாவோட இதுவும் ஒண்ணா இருந்துட்டுப் போகட்டும்.”

“சாரங்கட்ட சவுக்குக் கொம்புங்க வந்துடும்னு காண்டிராக்டர் சொன்னார். கரெக்டா கணக்குப் பார்த்து அடுக்கி வச்சிரணும். சரியா காசி?” என்றார் ஆர்.ஆர்.எம் அப்புறமாக. “ஆமா உனக்குக் கல்யாணம் ஆயிடிச்சா?” என்று கேட்டார்.

“ஆயிடிச்சு சார்” என்றான் காசி துரையைப் பார்த்தபடியே.

“குழந்தங்க இருக்குதா?”

“இல்லிங்க”

“ரொம்ப நல்லது. பிளாட்ஸ் கட்டி முடியவரை அதெல்லாம் இல்லாம இருக்கறதே நல்லது. இப்பத்திக்கு ஒண்ணும் வேணா” என்றவர் “இஷ்டமாயிருந்தா ஒம் பொண்டாட்டியக்கூட நீ இங்கேயே அழச்சுகிட்டு வந்துடலாம். ஆனா, ஒரு நிமிஷம் கூட இந்தக் காம்பவுண்டுக்கு வெளியே போய் நீ தங்கக் கூடாது என்ன?” என்றார் அதிகாரக் குரலில்.

“சரிங்க” என்ற காசி தலையை அசைத்தான்.

ஆதிலட்சுமி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். காசியின் சின்னஞ்சிறிய வீடு போன்ற ஷெட்டிலிருந்து அப்போதுதான் அவள் திரும்பி வந்திருந்தாள். அந்தப் பெரிய காம்பவுண்டின் இடதுபுற மூலையில் காசியின் “ஷெட்” அது ஒரு தனி அறை, ஹால், சமையலறை என்று பிரிக்கப்பட்டிருந்தது. சிமெண்ட் பூசிய தரை. எந்நேரமும் இதமாய் வீசும் காற்று. ஷெட்டின் முன்புறத்தில் ராகினியே நட்டு வளர்க்கும் பூச்செடிகள். கிணற்றில் தண்ணீர் சலசலவென்று ஊறிற்று. தண்ணீர் கற்கண்டாய் இனித்தது. ராகினியின் முகத்திலும் வார்த்தைகளிலும் சந்தோஷம் படர்ந்திருந்தது.

கிணற்றடியிலும் நாலு ரஸ்தாளி வாழைக் கன்றுகளை ஓணரின் கையில் கொடுத்து நடச்சொன்னாள் ராகினி. ராகினியின் சுறுசுறுப்பும், சூட்டிகையான பேச்சும் ஓணருக்கு

https://telegram.me/aedahamlibrary

மிகவும் பிடித்துப் போய்விட்டன.

ஓனர் ஒருநாள் காம்பவுண்டுக்குள் நுழைந்தபோது ராகினி எதையோ படித்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த போது வியப்போடு. "நீ படிச்சிருக்கியா?" என்று கேட்டார். உள்ளே படுத்திருந்த ஆதிலட்சுமியின் காதிலும் அந்தக் கேள்வி விழுந்தது.

"ஆமா சார். டென்த் வரக்கும் படிச்சிருக்கேன்"

"நெஜமாவா?" சற்றே அளவுக்கு மீறிய வியப்பு ஆர்ஆர்.எம்மின் குரலில் கேட்டது.

"இங்கிலீஷ் கூட படிப்பியா"

"கொஞ்சம், படிப்பேன் சார்"

"கணக்கு"

"கணக்கும் தான் சார்"

"வெரி குட்" என்றார் ஓனர். பின்னர் இளகிய குரலில், "அது சரி. நீ படிச்ச பொண்ணா இருக்கறே. பாலிஷ்டா இருக்கிறே. அப்புறம் எப்படி இந்த முட்டாப் பயல கட்டிக்கிட்டே" என்றான் ராகினி தன் முகத்தில் யாரோ காறித் துப்பியது போல உணர்ந்தாள். "என்னம்மா நான் கேட்டது பிடிக்கலியா" என்றான் ஆர்.ஆர்.எம். அவனை உற்று நோக்கியபடி பெரு மூச்சு விட்டாள் ராகினி.

"உனக்கு விதியிலே நம்பிக்கை இருக்கா?" என்று திடீரென்று ஆர்.ஆர்.எம் அவளிடம் கேட்டான். ராகினி உணர்ச்சியற்றுச் சிரித்தாள். பிறகு நெற்றியைச் சுருக்கிக்கொண்டே "எதுக்காக அப்பிடிக் கேட்டீங்க?" என்றாள்.

"இந்தக் கட்டட கன்ஸ்ட்ரக்ஷன் விவரங்கள் எழுத இந்தக் காம்பவுண்டுக்குள்ளே ஒரு கணக்குப்பிள்ள தேவப்படுது, டென்த் படிப்பு இதுக்கெல்லாம் போதும், நம்பிக்கயான ஆளா இருக்கணும். நல்லா ஆளா கெடக்கணுமேன்னு நெனச்சிக்கிட்டேயிருந்தேன். பார்த்தா நீ இங்கியே இருக்க. என்ன சொல்றே? மாசம் ரெண்டாயிரம் ரூபாய் தந்துடறேன். உன்னால முடியும்னு நெனக்கறேன்."

ராகினிக்கு எதையும் நம்ப முடியவில்லை.

"என்ன சொல்றே"

https://telegram.me/aedahamlibrary

ஆர்.ஆர்.எம்.மின் உரத்த குரல் காதில் விழுந்த பின்தான் அவளுக்கு சுய நினைவு வந்தது.

“உனக்கு இஷ்டம்தான" என்று அவன் மறுபடியும் கேட்டான்.

,

“இஷ்டம்தான் சார்” என்றாள் ராகினி

“சார்! இது நீங்க எங்களுக்கு செய்யற பெரிய உதவி. இத நான் உசுரு உள்ள வரக்கும் மறக்க மாட்டேன் ரொம்ப தாங்க்ஸ் சார்.”

ஆர்.ஆர்.எம், கண்களைச் சிமிட்டிக் கொண்டார்.

“இப்பவே நோட்புக் பேனா எல்லாம் கணக்கு எழுதத் தோதா உன் கைக்கு வந்துடும்.”

“சார். இப்படி வாங்க” என்று ஆர்.ஆர்.எம்மை ஒதுக்குப் புறமாக அழைத்துக்கொண்டு போன விச்சு.

“என்ன சார்? எதுக்கு இவங்களுக்கு எடுத்ததும் இவ்வளவு சம்பளம் தர ஒத்துக்கறீங்க? யோசன பண்ணுங்க” என்றான்.

“ம்... எல்லாம் யோசித்துத்தான் செய்யறேன் விச்சு. பிசினஸ்மேன் நான். ஆதாயமில்லாம எதுலயும் காலவிட மாட்டேன். திருட்டுப்புரட்டு இல்லாததுங்க. இந்த செட் ஆளுங்க நம்ப கஷ்ட வேலக்கு என்னென்னிக்கும் உதவியா இருக்கறாப்பல வளைச்சுப் போட்டம்னா நமக்குத்தான் லாபம். ஆயிரம் வைக்க வேண்டிய எடத்துல நூறு வச்சாலேயே இதுங்க பூரிச்சுப் போயிடும். பாரேன் நாளாவட்டத்திலே நமக்கு இவங்களால ரொம்ப சௌரியமிருக்கப் போகுது. பத்து ரூபா தந்தாலே மகிழ்ந்து போயிடுங்க. பார்த்துக்கிட்டேயிரு.”

அவன் அங்கிருந்து போன பின்பும் வெகு நேரமாக வெளியிடலேயே உட்கார்ந்திருந்தாள் ராகினி. ஆதிலட்சுமி எழுந்து அவள் அருகே வந்தாள். அவளைக் கண்ட ராகினி மெதுவாக எழுந்தாள். “நான் புறப்படறேம்மா?” என்ற ஆதிலட்சுமி, புன்னகையோடு அவளுடைய தோளைத் தொட்டாள்.

“மகாராசிம்மா நீ. பானை புடிச்சவ பாக்கியசாலியா இருந்தா எல்லாம் நல்லபடி நடக்கும் பாங்க. உனுக்கு அந்தப் பாக்கியம் இருக்குது. இனிமே நமக்குக் கவலயில்ல. நம்ப

https://telegram.me/aedahamlibrary

கஷ்டமெல்லாம் விடிஞ்சுடும்” என்று சொல்லி விட்டு “எனக்கு நீ ஒரு ஒத்தாச பண்ணனும் தாயி” என்றாள்.

“மொதலாளி கையிலே சொல்லி அந்தக் காவேரி பொண்ணுக்கு இங்கியே எதுனா ஒரு வேல வாங்கிக் கொடுத்துடு. உனுக்கு புண்ணியமா போய்டும். என்னா பண்றது? நீ தான் பாத்தியே கன்னம்மா வூட்டுக்காரன எப்பிடி எலும்பும் தோலுமா பூட்டான். அவனுக்கு வுடாம காய்ச்சலு அடிச்சிக்கினே இருக்குதாம். தர்மாஸ்பத்திரிலே சேத்துங்கறாங்க. புருசன் பொண்டாட்டி சேராமக்கிறதுதான் நெல்லதன்னு ஆஸ்பத்திரியிலேயே சொல்றாங்களாம். இந்தக் கன்னிம்மாப் பொண்ணும் மாமியா வூட்டுன்னாவே சிங்கம் புலியக் கண்டாப்பல பயந்துக்குது. இருந்ததே இருந்துடிச்சி தலப்பிரசவமா வேறக்கிது. நாம்பளே வச்சிருந்து நல்லபடி பார்த்துடலாம்னா எல்லாம் செலவுதான். அதனால தான் சொல்றேன். காவேரிக்கும் இங்கியே ஒரு வேல ஏற்பாடு செஞ்சுப்புடு ராகினி” என்றாள் ஆதிலட்சுமி கெஞ்சும் குரலில்.

## 13

**ஆர்**.ஆர்.எம். வாங்கிக் கொடுத்த சின்ன மேசையில் கணக்குப் புத்தகங்களை அடுக்கி வைத்து விட்டு ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டாள் ராகினி. மீண்டும் அந்தக் கணக்குப் புத்தகங்களை எடுத்துப் பார்த்தாள். முந்திய தினத்தில் அவள் எழுதியிருந்தவற்றைப் பார்த்துவிட்டு அவன் சொன்ன வார்த்தைகள் இப்போதும் அவள் காதில் கேட்டுக் கொண்டிருந்தன.

“ரொம்ப நல்லா எழுதியிருக்கியே குட். நீட்டா இருக்கு. நான் நெனச்சதவிட கெட்டிக்காரியா இருக்கியே”

சாரப்பலகைகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு போய் இரண்டாவது ஷெட்டில் அடுக்கிக் கொண்டிருந்த கன்னியம்மாள் வியர்வையைத் துடைத்துக்கொண்டாள். அவளுக்கு மூச்சு வாங்கியது. அங்கே அவள் வேலைக்குச் சேர்ந்து இரண்டு வாரங்கள் ஓடி விட்டன. சித்தாள் வேலை. முன்போல இப்போது ஓடியாடி வேலை செய்ய

https://telegram.me/aedahamlibrary

முடியவில்லை. முழங்காலும் முழங்கையும் மூட்டுக்கழன்று விடுவதுபோல நொந்தன. வாரத்துக்கு ஒரு தடவை உயிரை எடுக்கிற ஒற்றைத் தலைவலிவேறு தவறாமல் வந்து கொண்டிருந்தது.

ஆதிலட்சுமியிடம் அவள் வேலைக்குப் போவதாகச் சொன்ன அந்தத் தினத்திலும் அவளுக்குத் தலையை வலித்துக் கொண்டு தான் இருந்தது. மண்டையோட்டுக்குள் பாறாங்கல்லை வைத்தது போல பாரம். உளிகொண்டு பிளப்பது போல வலி. வலியின் கொடுமை தாங்காமல் கண்கலங்கி அதனால் மேலும் வலி அதிகமாகி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள் கன்னியம்மாள். வலிக்கிறது என்பதற்காக படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளக்கூடிய நிலையிலா அவள் இருந்தாள்? புருசன் அவளைப் பற்றி கவலைப்படாமல் இருக்கும்போது வேறு என்னதான் செய்வது? தன் பிரசவத்துக்கும் பிறக்கப்போகிற பிள்ளைக்கும் ஆகக்கூடிய செலவுகளுக்கும் ராகினியின் கையையா எதிர்பார்ப்பது? 'ஒவ்வொருத்தரும் தன் கால்லேயே நிக்கணும்' என்று சுசீலா அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் தந்த தைரியமே அவளைத் துணிய வைத்தது.

கன்னியம்மாளுடன் முப்பத்தியைந்து பேர் வேலை பார்த்தார்கள். அதில் பாதிப்பேர் பெண்கள். அவர்களில் ஐந்து பேர் கல்யாணமானவர்கள். இரண்டு பெண்கள் பிள்ளைகளுடனே அங்கே வந்து விடுவார்கள். லாரிதான் அங்கே எல்லோரையும் அள்ளிக்கொண்டு வந்து கொட்டும். எட்டு மணிக்குத் தொடங்குகிற வேலை முடிய சாயங்காலமாகிவிடும். வாரச் சம்பளம்.

விடியற்காலையில் லாரியில் வந்து இறங்கிய கம்பிக் கட்டுகளை முதல் ஷெட்டில் அடுக்கி வைத்து விட்டு தனது ஷெட்டுக்கு வந்த காசி, ஸ்டூலில் உட்கார்ந்து எதையோ யோசித்துக் கொண்டிருந்த ராகினியை எரிச்சலோடு பார்த்து விட்டுத் தொண்டையைச் செருமினான். “ஒரு மனுஷன் வந்து நிக்கறதைக் கூட கண்டுக்காம என்ன யோசனை. நான் வந்து நின்னது கூடவா தெரியலை?”

ராகினி சாதாரணமாக அவனைப் பார்த்தாள்.

“என்ன வேணும் சொல்லுங்க”

https://telegram.me/aedahamlibrary

“ம். டீ வேணும்?”

“மொதல்ல கம்பி வாங்கியாந்த ரசீதக் குடுங்க. கணக்கிலே எழுதிடலாம்.”

“நான் இப்ப என்ன கேட்டேன்? அதை மொதல்ல கவனி. என்னமோ நான் சொன்னது காதுலயே வுழாத மாதிரி கணக்கு கிணக்குன்னுட்டுக்கிறே”

“என்னது. வாயில் வர்ரதயெல்லாம் பேசறீங்க. மொதல்ல ரசீத இப்படிக் குடுங்க. டீ குடிக்காட்டி ஒண்ணும் கொறஞ்சி போயிடாது . ஓனரு வர்ர நேரம். கணக்கு எழுதியாகணும். முதல்ல ரசீதக் குடுங்க”

நறநறவென்று பற்களைக் கடித்தபடி மடியில் இருந்த ரசீதை எடுத்து ராகினியின் முன்னால் இருந்த மேசையில் போட்டான் காசி.

“சீ! சீ! எதுக்கு இப்படி இந்த ரசீதக் கசக்கி வங்சிருக்கீங்க. இப்படிப் போய் பண்ணுவாங்களா யாராவது. சரி. சரி. கொஞ்ச நேரம் உக்காருங்க. இத எழுதிட்டு வந்த டீ போட்டுத்தர்ரேன்” என்றாள்.

காசிக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை. காதில் செருகியிருந்த பீடியை எடுத்தான். பற்ற வைத்துக் கொண்டான். “டீயும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம். நான் போறேன். நீயே போட்டு நீயே குடிச்சுக்க” என்று வெறுப்போடு சொல்லிவிட்டு சுவரைப் பார்த்தபடி நடந்தான்.

“இந்தாப்பா வாட்ச்மேன் ஒரு வாய் தண்ணி குடுக்கறியா?” என்று தளர்ந்த குரலில் பொன்னம்மா அவனைக் கேட்டாள். காசி திரும்பி பொன்னம்மாவைப் பார்த்தான். சுருங்கிய தோல் எலும்பை மூடியிருந்தது. இடுங்கிய கண்கள். பார்க்கவே பாவமாயிருந்தது.

“கொஞ்சம் இரு. ஆயா” என்று சொல்லி விட்டுக் கிணற்றடிப் பக்கமாகப் போனான் காசி. வாளியில் தண்ணீரை நிறைத்துக் கொண்டு சின்ன டின்னை எடுத்துக்கொண்டு அவளை நெருங்கினான். டின்னில் தண்ணீரை மொண்டு பொன்னம்மாவுக்குக் கொடுத்தான். பின்னர் தானும் குடித்தான். தண்ணீர் அவன் உடலுக்குத் தெம்பூட்டியது. கொத்தனார் குப்பு அவனை வேடிக்கையாய்ப் பார்த்தார்.

https://telegram.me/aedahamlibrary

“என்ன தம்பி! டீ குடிச்சிட்டு வர்றன்னு போன, போன சுருக்கிலே வந்து டின்டின்னா தண்ணி குடிக்கறே. வீட்ல டீ சாப்பிடலியா” என்றார் சாதாரணமாக, அவர் சொன்ன வார்த்தைகள் அவனுக்குச் சுருக்கென்று உறைத்தன.

“இல்லியே டீ குடிச்சுட்டு தான் வர்ரேன்” என்றான்.

“அது சரி” என்றார் குப்பு புன்னகை மாறாமல். மறு கணமே அவர் குரல் மாறியது. கடுமை கூடியது. தலையில் கூடையைச் சுமந்து கொண்டு மெல்ல நடந்து வந்து கொண்டிருந்த ஈஸ்வரியைப் பார்த்து, “ஏம்மா சுறுசுறுப்பா வேலயப் பாரு. என்னமோ நட பழகிகிட்டிருக்கற” என்றார்.

ஈஸ்வரிக்கு பிரசவமாகி ஒரு மாதம்தான் ஆகியிருந்தது. ஷெட்டின் அருகே இருந்த குட்டையான வேப்பமரத்தில் ஏணை கட்டி குழந்தையைப் படுக்க வைத்திருந்தாள். ஈஸ்வரியின் சின்னத் தங்கை துளசி குழந்தையின் அருகே இருந்தாள். குழந்தை அழும்போது மட்டும் ஈஸ்வரி போய் பால் கொடுத்து விட்டு வருவாள்.

திடீரென்று மரகதம் வீலென்று கத்தினாள்.

“என்னது? என்ன அங்க சத்தம்” அதட்டினார் குப்பு.

மரகதம், செங்கற்களைத் தூக்கிக் கொண்டு நின்ற இடத்துக்கு பங்கஜமும் உண்ணாமலையும் பதட்டதோடு ஓடி வந்தார்கள் “என்னம்மா என்ன ஆச்சு” மரகதம் 'ஓ' வென்று கதறினாள்.

“தேள் கடிச்சிருச்சி”

“எங்கே தேளு?”

“அடிச்சுப் போட்டுட்டேன். செத்துடுச்சி”

“எங்க”

“அதோ” உடைந்து கிடந்த செங்கல்லைக் காட்டினாள் மரகதம். வலி தாளாமல் துடித்தாள்.

செங்கல்லைப் புரட்டிய பங்கஜம், “அய்யய்யோ. எம்மாம் பெருசு. கருந்தேளு” என்றாள்.

ஓட்டமும் நடையுமாக அங்கு வந்தான் காசி. “வூட்ல எதுனா மருந்து வச்சிங்கிறியா” என்று காசியைக் கேட்டாள் பங்கஜம்.

https://telegram.me/aedahamlibrary

“இல்லியே”

மரகதம் தோளிலிருந்து நழுவிய அவளுடைய மாராப்புச் சேலையை சரி செய்து போட்ட கன்னியம்மா “அண்ணே உன்னோட சைக்கிள்லே மரகதத்த ஏத்திக்கிட்டு டாக்டர்கிட்டே போவலாம். பாவமாக்கீது” என்றாள்.

“ஆமா ராசா” என்றாள் முனியம்மாள்.

“டாக்டர் வூடு பக்கத்து சந்துலதான் கீது” என்றான் கிருஷ்ணன்.

கொத்தனார் சத்தம் போட்டார். கெட்ட வார்த்தைகளால் திட்டியபடி அங்கு வந்து சேர்ந்தார். “என்ன ஆயிடுச்சி, இப்படி எல்லாரும் கூட்டமா கூடிக்கினீங்க”

“கருந்தேளு போட்ருச்சிங்க. பாவம் புள்ள. போனமாசந்தான் சடங்காச்சி” கவலையோடு சொன்னாள் சரோஜா.

“யாருகிட்டயும் சுண்ணாம்பு இல்லியா? அதைப் பூசுங்க. அப்படியே அந்தக் கருந்தேளை ஒரு சின்னப் பாட்டில்ல போட்டு வையிங்க. கிருஷ்ணாயில் ஊத்தி வச்சா அப்பறமா தேள்கடிக்கு உதவும்” இவை எல்லாவற்றையும் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த ராகினி, தொலைவில் கேட்ட ஹார்ன், சத்தத்தில் திடுக்கிட்டாள்.

“ஓணர் வர்ராரு” சத்தமாக அவள் குரல் கொடுத்ததும், “ம். போதும். போங்க. போங்க. போங்க எல்லாம் போய் அவங்கவங்க வேலயப் பாருங்க.” என்றவாறு கேட் பக்கமாக பார்த்தார் கொத்தனார்.

காசி ஓடிப் போய் கேட்டைத் திறந்தான். ஓணர் காரை விட்டு இறங்கினான். கொத்து வேலைக்காரர்கள் எல்லோரும் மாயமாக மறைந்தார்கள். அப்படி மறையாவிட்டால் வேலை கெட்டுவிட்டதென்று ஆர்.ஆர்.எம். எப்படி பயங்கரமாகக் கத்துவான் என்று அவர்களுக்குத் தெரியும். தேள் கடிக்கு அனுதாபம் கொள்கிற மனிதத்தன்மையை ஆர்.ஆர்.எம். புரிந்துகொள்ளமாட்டான் என்பதை அவர்கள் தங்கள் அனுபவத்தில் நன்றாகவே தெரிந்து கொண்டிருந்தார்கள்.

“என்னய்யா நடக்குது இங்கே? ஒருத்தனும் வேலை பார்க்காம எல்லோரும் கூட்டமா நின்னு கதை

https://telegram.me/aedahamlibrary

பேசிக்கிட்டிருக்கறீங்க"

"தேள் கொட்டிரிச்சிங்கய்யா. மரகதத்த"

"இப்ப என்னா அதுக்கு. கல்லுல மண்ல கை வச்சி வேல செய்யறதுன்னு வந்துட்டா பூச்சி பொட்டு தீண்டாமலா இருக்கும்?"

"கருந்தேளுங்க" என்றாள் பங்கஜம்.

அவளை முறைத்துப் பார்த்த படி, "போம்மா, போ. போயி வேலையைப் பாரு" என்று உரத்தகுரலில் சொன்னான் ஆர்.ஆர்.எம்.

"இப்பத்தான் ஆளாச்சுங்க அந்தப் பொண்ணு" என்றாள் சரோஜா.

"ஓஹோ. அப்பிடியா எங்க அந்தப் பொண்ணு"

"அதோங்க" என்று செங்கல் ஓரமாக மயங்கிச் சரிந்து கிடந்த மரகதத்தைக் காட்டினாள் பங்கஜம்.

"இப்ப எப்படியிருக்குதும்மா ஒனக்கு" என்றபடி செங்கல் இருந்த இடத்துக்குச் சென்றார் ஓணர்.

மரகதத்தின் மாராப்புச் சேலையை சரி செய்து அவளை நிமிர்த்தினாள் கன்னியம்மா. கன்னியம்மாவை எரிச்சலோடு பார்த்தான் ஆர்.ஆர்.எம். "நீ யாரும்மா, நீ இந்தப் பொண்ணுக்கு அக்காவா இந்தப் பதறு பதர்றியே" என்றான் பல்லைக்கடித்துக் கொண்டு.

"இல்லிங்க நான் காசியோட அக்கா" என்றாள் கன்னியம்மா ஆர்.ஆர்.எம்.மின் கேள்வியில் இருந்த நக்கல் விளங்காதவளாக.

காசிக்குக் குறுகுறுத்தது. "இப்போ என்ன பண்றது இந்தப் பொண்ணுக்கு?"

"யாருன்னா டாக்டர் கிட்டே இட்டும் போனா நெல்லதுங்க" என்றாள் பங்கஜம்.

"பக்கத்துச் சந்துலதான் டாக்டர் இருக்காரு"

"யார் கூட அனுப்பறது"

"நான் வேணா இட்டும் போறாங்க" என்றான் காசி.

நையாண்டி பொங்கும் குரலில் ஆர்.ஆர்.எம் "ஆமா

https://telegram.me/aedahamlibrary

இட்டும்போ. நீ இப்படி கேப்பேன்னுதான் நானும் நெனச்சேன்"

காசியின் முகம் சுருங்கியது, நிமிர்ந்து ராகினியைப் பார்த்தான்.

"சீ... வயசுப் பொண்ணுன்னா கார்த்திக மாசத்து நாயாட்டம் நாக்கத் தொங்கப் போட்டுக்கினு நாம் போறன் நாம்போறேன்னு பறக்கறியே வெக்கமில்லாம்" என்றவாறு ஷெட்டுக்குள் போனாள்.

"**நெ**சமா அந்தப் பொண்ணு அப்படியா சொல்லிச்சி" ஆதிலட்சுமியின் குரல் உடைந்துபோயிருந்தது.

"நெசந்தாம்மா"

"நாலுபேர வச்சுகிட்டு புருஷன அப்பேர்பட்ட கேள்வி கேட்டுங்கறாளே. அத்தினி தெகிரியமா அவளுக்கு" என்றாள் ஆதிலட்சுமி.

"என்ன பண்றதும்மா. நம்ப காசிதான் அப்படியே பயந்து ஒடுங்கறானே"

"நீ சொல்றது சரிதான். அவ படிச்சவ. சள்ளு புள்ளுன்னு பேசனாலும் ஒத்தாசயாக்கிறா. நாலு காசு இன்னிக்கு காசிகிட்டே இருக்குதுன்னா அது அவளாலதான. அவ மேல கோச்சுகினு நம்ப தலயிலயே நாம்ப மண்ண வாரிப் போட்டுக்கினா எப்பிடி" ஆதிலட்சுமி தன்னைத்தானே தேற்றிக்கொள்வதுபோலச் சொன்னாள். கன்னியம்மா மௌனமாக நின்றாள்.

# 14

**வே**லை முடிந்து வந்து ஆயரசத்துடன் திண்ணையில் உட்கார்ந்தபடி எதையோ யோசித்துக்கொண்டிருந்தாள் கன்னியம்மாள். மகளைக் கவலையுடன் பார்த்துக் கொண்டே நின்றாள் ஆதிலட்சுமி. அவளோடு எதாவது பேச வேண்டும் என்று ஆதிலட்சுமிக்குத் தோன்றியது. அவளுக்கு இப்போதெல்லாம் எதைப் பேசினாலும் அழுகை வந்து விடுகிறது.

https://telegram.me/aedahamlibrary

மௌனமாகவே அங்கிருந்து பின் பக்கம் போனாள். அவளுடைய மனம் சம்பந்தியம்மாளைச் சுற்றிச் சுழன்றது. மனசு கேட்காமல் சின்னத்தாயின் துணையோடு மருமகனைப் பார்க்க மருத்துவ மனைக்குப் போனதும், சம்பந்தியம்மாள் அவளைக் கட்டிக்கொண்டு அழுததையும் நினைத்துக் கொண்டாள். எப்படியிருந்த மனுஷி. ஆணவமும் திமிரும், இடக்குப் பேச்சும் போன இடம் தெரியாமல் இப்படியாகி விட்டாளே என்று ஆதிலட்சுமியின் மனம் அவளுக்காகக் கவலைப்பட்டது. கன்னியம்மாளின் புருஷன் சாவோடு போராடிக்கொண்டிருந்தான். பிழைப்பது அரிது என்று டாக்டர்களே கை விரித்து விட்டார்களாம். ஆதிலட்சுமிக்கு பகீரென்றது. அவனுக்கு ஏதாவது ஒன்று என்றால் கன்னியம்மாளின் கதி என்ன? சின்னத்தாயி சொன்னதால் இந்தத் தகவல்கள் எதையும் அவள் வீட்டில் சொல்லவில்லை.

பின்பக்கம் சென்றவள் எதிரே அவசர அவசரமாக வந்து கொண்டிருந்த காவேரியைப் பார்த்து நின்றாள். அந்தப் பகுதியில் வாழ்கிற பெண்களை விட உருவத்திலும், நடை உடை பாவனைகளிலும் காவேரி இப்போதெல்லாம் நிறையவே வேறுபட்டுத் தானிருந்தாள். தலைமுடியை இரட்டைப் பின்னலாகப் பின்னி தொங்க விட்டிருந்தாள். சுத்தமான பாவாடை தாவணி அணிந்திருந்தாள். சும்மா இருக்கிற நேரத்தில் எதையாவது படித்துக் கொண்டிருந்தாள். இவையெல்லாம் ஆதிலட்சுமிக்கு மனதினுள்ளே பெருமையும் சந்தோஷம் அளித்த விஷயங்கள். பரபரப்பாக வந்த காவேரி “சுசீலாக்கா வந்தாங்களாம்மா” என்று கேட்டாள்.

“இல்லியே”

“அய்யய்யோ” என்று பதைத்தாள் காவேரி.

“எதுக்கு இப்ப அந்தம்மாவத் தேடறே”

“என்னை தையல் ஸ்கூல்ல கொண்டு போய் சேக்கறேன்னு சொல்லியிருந்தாங்க”

“ஸ்கூலா? என்னத்துக்கு? அன்னிக்கு என்னவோ கட்டிட மய்யத்துல சேர்ந்து கொல்லுவேல கத்துக்கறேன்னே. இன்னிக்கு தையல்ங்கறே.”

https://telegram.me/aedahamlibrary

“மய்யத்துக்கு விண்ணப்பம் போட்டுருக்கேம்மா. உத்தரவு வந்து அங்க போய் சேரதுக்குள்ள சும்மா எதுக்கு இருக்கணும்னு சுசீலாக்கா தையல் கத்துக்கறதுக்கு ஏற்பாடு பண்றேன்னாங்க அதான்.”

ஆதிலட்சுமி காவேரியை வியப்போடு நிமிர்ந்து பார்த்தாள், “அதுக்கெல்லாம் துட்டுவேணாமா? இப்ப என்னாத்துக்கு அதெல்லாம்” என்றாள்.

காவேரி உதட்டை நெளித்துக்கொண்டு செல்லமாய்ச் சிணுங்கினாள். “தையல் கத்துக்கிட்டேன்னு வச்சுக்கயேன். என் கையில நல்ல தொழில் ஒண்ணு இருக்குமில்லே. அதுக்கு அப்புறம் யாருக்கும் பயப்படத் தேவயில்லயே. சுசீலாக்கா எப்பவும் இதைத்தாம்மா சொல்லிக்கிட்டேயிருக்காங்க, நம்ப பொம்பளங்களுக்கு இது தோணறதேயில்லேன்னு அவங்க ரொம்ப கவலப்படறாங்கம்மா “

“அதெல்லாம் சரிதான். ஆனா, துட்டுக்கு என்னா பண்றது?”

“மாசம் நூறு ரூபாயாவது வேணும்” என்று காவேரி மெல்ல முணுமுணுத்தாள்.

“நூறு ரூபான்னா சும்மாவா?”

“வேறு எங்கனாச்சும் வேல பார்த்து சம்பாரிச்சுக்குவம்மா” என்றாள் காவேரி.

“வேலயா. என்னா வேலக்குப் போவப் போற? அத்தினி சுருக்கா வேல கெடச்சுடுதா” வேதனை தொனித்தது ஆதிலட்சுமியின் குரலில்.

“ஆமா. சேல்ஸ் கர்ள். வேலக்குப் போவப் போறம்மா” என்றாள் காவேரி.

“அது என்னா வேல”

“காலயில பத்துமணியில இருந்து நாலு மணி வரக்கும் கம்பெனிக்காரங்க தர்ர பொருளக் கொண்டுபோய் வீடுவீடா விக்கணும். மாசம் முந்நூத்தியம்பது ரூபா சம்பளம் தர்ராங்களாம். சுசீலாக்காதான் என்னச் சேத்து விடறதா சொன்னாங்க” ஆதிலட்சுமி பதில் பேசாமல் நின்றாள்.

“சாயங்காலம் அஞ்சுமணியிலேயிருந்து எழுமணிவரதான்

https://telegram.me/aedahamlibrary

தையல் கிளாஸ்.”

ஆதிலட்சுமி எதையோ யோசித்தாள். “என்னம்மா? சொல்லேன்”

“காசி துட்டு தர்ரதில்ல. இந்தக் கன்னீம்மா பொண்ணு வாயும் வவுறுமாக்கிது. என்னா பண்றது? அவளுக்கு உண்டான செலவயும் நாம்பதான் பாக்கணும்”

“தையல் கத்துகிட்டு ஒரு மெஷின் வாங்கிட்டேன்னு வச்சுக்கயேன், வீட்ல தைத்சே பணத்த சம்பாரிச்சுடலாம்”

“அய்யோ, மிஷினு கிஷின்லாம் ரொம்ப துட்டு புடிக்குமே”

“ஆமாம்மா. அது ஒரு மூவாயிரத்துக்குப் பக்கம் கொண்ட போய் வுட்ரும்”

“அப்பாடா” என்றாள் ஆதிலட்சுமி.

“சுசீலாக்கா கிட்ட சொல்லி, இன் சால்மெண்ட்டுலே வாங்கிக்கலாம்மா. மாசாமாசம் கட்டிரலாம்”

அவநம்பிக்கையுடன் அவளை பார்த்த ஆதிலட்சுமி, “சரி... என்னவோ பண்ணு” என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நடந்தாள்.

சுசீலா, காவேரியை அதற்குள் தேடிக்கொண்டு வந்து விட்டாள்.

**சா**ரத்தடிகளையும், பலகைகளையும் நீளமான கம்பிகளையும் லாரியிலிருந்து கூலியாட்கள் இறக்குவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள் ராகினி. அவற்றை இரண்டாவது ஷெட்டில் காசி, ராமு, கிட்டா எல்லோருமாக இறக்கி அடுக்கிக் கொண்டிருந்தார்கள். லாரி கிளீனர் சண்முகம் ரசீதை ராகினியிடம் கொடுத்துவிட்டு அங்குமிங்குமாகப் பார்த்தவாறு தலையைச் சொரிந்தான்.

“என்ன?” என்று அதட்டுகிறவள் போல கேட்டாள் ராகினி.

“சொல்றம்மா. ஆனா, நான் சொன்னதா நீ யாருக்கும் சொல்லிப்புடாத”

“அப்பிடியெல்லாம் சொல்லமாட்டேன். சொல்லு”

“நம்ப காண்டிராக்டரும் கடக்காரனும் சேர்ந்து கோல்மால் பண்ணி “

https://telegram.me/aedahamlibrary

அவசரப்பட்டாள் ராகினி. “கோல்மால் பண்ணி.”

“மட்டமான கம்பிங்கள இங்கே தள்றாங்க. இந்தக் கம்பி வெலகூட கம்மிதான். இங்கயும் உள்ளாளுங்க இருக்கறாங்க.”

“யாரு”

“அதெல்லாம் எனக்குத் தெரியாது”

“பொய் சொல்றே”

“நிஜமாத் தெரியாதுங்க”

“ஓணர்கிட்ட சொன்னா என்ன நடக்குமுன்னு தெரியுமா? போலீசக் கூப்பிடுவாங்க முட்டிக்கு முட்டி தட்டி அவங்களே உண்மையக் கக்கவச்சிடுவாங்க.”

“அய்யய்யோ“ என்றான் அவன்.

“அப்ப நெஜெத்த சொல்லு”

“தெரியலீங்க சத்தியமா.” வெளியே ஹாரன் சத்தம் கேட்டது. ராகினி பரபரப்போடு வெளியே பார்த்துவிட்டு, “ஓணர் வர்ராரு நீ போ” என்றாள். ஓணர் ஆர்.ஆர்.எம். காரிலிருந்து புன்னகையோடு இறங்கினான். கையிலே ஒரு பார்சல். ராகினி வணக்கம் சொன்னாள்.

“வணக்கம்” என்று முணுமுணுத்தபடி கை சற்றே ஆசீர்வதிப்பது மாதிரி உயர்த்திய ஆர்.ஆர்.எம். “சிமென்ட் லாரிக்காரன் வந்தானா” என்றார்.

“வரல. கம்பியும் சாரமும் மட்டும்தான் வந்திருக்குது”

“லாரிக்காரங்ககிட்டே ஜாக்கிரதையா இருக்கணும்” சொல்லிக் கொண்டிருக்கும் போதே கம்பி லாரி டிரைவர் கருப்பையா அங்கே வந்தார்.

“வணக்கங்க.”

“ம்” என்றான் ஆர்.ஆர்.எம். அலட்சியமாக.

“ஒண்ணுமில்லீங்க. நான் புறப்படறேன்” என்று சலிப்போடு சொன்னான் கருப்பையா.

திடீரென்று ராகினி “கொஞ்சம் நில்லுங்க” என்றாள் அவனைப் பார்த்து. கருப்பையா, முகத்தைச் சுளித்துக்கொண்டு அவளை நோக்கினான். ஆர்.ஆர்.எம்.

https://telegram.me/aedahamlibrary

அவர்கள் இருவரையும் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"என்னம்மா. ராகினி. என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்ல சார். இந்தக் கம்பிங்கள்ளாம் சரியா இருக்கான்னு நீங்க கொஞ்சம் பாருங்க."

"ஏன், என்னாச்சு?"

"என்னமோ தப்பு நடந்திருக்கறாப்பல தெரியுது"

அப்போதுதான் அங்கு வந்த காசி அவள் சொன்னதைக் கேட்டதும் திடுக்கிட்டான். அவன் முகம் லேசாக வேர்த்தது. உடல் நடுங்கியது. மனம் படக்படக்கென்று அடித்துக்கொண்டது.

"என்ன தப்பு?"

"நீங்க ஆர்டர் குடுத்த கம்பிங்கதானா இதுங்கன்னு பாருங்க" அவள் பேச்சை முடிப்பதற்குள் சிமென்டு லாரி பயங்கர சத்தத்துடன் அங்கே வந்து நின்றது. ஆர்.ஆர்.எம்.மின் காரைக் கண்ட சிமின்ட் லாரியின் டிரைவர் அழகப்பனின் முகம் சட்டென்று சுருங்கியது. மெதுவாக லாரியிலிருந்து கீழே இறங்கி ஆர்.ஆர்.எம்.முக்கு வணக்கம் சொன்னான்.

"ரசீத வாங்கிக்கம்மா" என்றவன் காசியின் பக்கம் திரும்பி "காசி, சிமென்டு மூட்டங்கள் எண்ணிக்க" என்று கட்டளையிட்டுவிட்டு "கருப்பையா நீ கொஞ்சம் நில்லு" என்று கனத்த குரலில் சொன்னான் ஆர் ஆர்.எம். வெளிறிப்போன முகத்துடன் நின்ற காசி, சிமென்டு மூட்டைகளை இறக்குவதற்காக ராமு, கிட்டா, சோலை எல்லோரையும் கூப்பிட்டான்.

ராகினி, இறக்குகிற மூட்டைகளை கவனமாகப் பார்த்து எண்ணிக் கொண்டிருந்தாள். லாரியிலிருந்து இறக்கிய மூட்டையொன்றைத் தோளில் சுமக்க முடியாமல் சட்டென்று சரிந்தான் கிட்டா. மூட்டை அவனது கால்களை நசுக்க, அவன் வேதனை தாங்கமுடியாமல் அலறினான்.

"சோனிப்பசங்க! எதுக்குய்யா இவங்களயெல்லாம் வேலக்குச் சேர்க்கறீங்க" என்று வெறுப்போடு சத்தமிட்டார் ஆர்.ஆர்.எம். ராகினிக்கு என்னவோ போலாயிற்று. பாவம் கிட்டா. அவள் மனம் கிட்டாவுக்காக பரிந்தது. கிட்டாவின் காலை நசுக்கிக் கொண்டிருந்த சிமென்டு மூட்டைகளை

https://telegram.me/aedahamlibrary

மூன்று பேராகச் சேர்ந்து தூக்கிப் புரட்டிப் போட்டார்கள்.

அமுங்கி விழுந்த மூட்டையின் வாய் பிளந்து சிமென்ட் சிந்தியது. ராகினி அந்த மூட்டையின் அருகே சென்று பார்த்தாள். நிலத்தில் சிந்திய சாம்பலும் மண்ணும் கலந்த பொடியை அள்ளினாள். “இதப்பாருங்க சார்” என்றபடி ஆர்.ஆர்.எம்மிடம் காட்டினாள்.

ஆர்.ஆர்.எம். மின் முகம் சிவந்தது. கோபத்தால் உடம்பு ஆடிற்று. பற்களை நறநறவெனக் கடித்தான். “திருட்டுப் பொறுக்கிங்க. யாரடா ஏமாத்தறீங்க?” என்று கத்தினான்.

“கலப்பட சிமென்ட்ட வச்சாடா என் பில்டிங்க கட்றீங்க. இந்தப் பொண்ணு இல்லேன்னா என்ன ஆயிருக்கும்? இன்னியோட வேலய நிறுத்துங்க. திருட்டு நாயிங்க. எம் பேர கெடுக்கப் பாத்தீங்களாடா? முதல்ல போய் உங்க மேல போலீசுக்கு கம்ப்ளெயிண்ட் தரப்போறேன்.”

இரண்டாவது தளத்துக்கு குழைத்த சிமின்டைக் கொண்டு சென்றவாறிருந்த சித்தாள்களும், கொத்தனாரும் அவரது உரத்த சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு ஸ்தம்பித்துப் போய் நின்றனர். “எங்கிட்டியாடா உங்க சாமர்த்தியத்தக் காட்டறீங்க. இந்த ஆர்.ஆர்.எம். யாருன்னு காட்டறேன். ஒவ்வொருத்தனயும் கம்பி எண்ண வக்கிறனா இல்லியான்னு பாருங்க.”

ஆர்.ஆர்.எம். சுற்று முற்றும் பார்த்தான். கோபம் கொப்பளிக்கிற பார்வையோடு, தன் எதிரே கைகட்டியபடி நிற்கிற காசியைப் பார்த்து, “காசி” என்று சத்தம் போட்டு அழைத்தான். வேலையாட்கள் எல்லாம் கூட்டமாகக் கூடி விட்டார்கள். காசி நடுக்கத்தோடு அவன் எதிரே போனான்.

“ஒரு தளம் கட்டி முடிச்சாச்சி. இங்கே நடக்கிற மோசடிய நீ கண்டுபிடிக்காம இருந்திருக்கறே” காசியை நெருங்கி ஆர்.ஆர்.எம். அவனுடைய தோள்மேல் கை வைத்தான்.

“சொல்லுடா” அவன் தலையைக் குனிந்துகொண்டு நின்றான்.

“சிமென்டு குழக்கறப்ப நீ பார்த்ததில்ல. பக்கத்தில நின்னதில்ல? இவங்க பண்ற மோசடி உனக்குத் தெரியாது? சொல்லுடா?” என்றான் ஆர்.ஆர்.எம்.

https://telegram.me/aedahamlibrary

“சொல்லுங்க. உண்மையச் சொல்லுங்க” என்றாள் ராகினி, சத்தமாக. காசி மௌனமாக நின்றான்.

“ஜல்லிக்கலவ மிக்ஸ் பண்ணறப்ப யார்யாரு பக்கத்துல நின்னீங்களோ அவங்கள்ளாம் வாங்கடா” ஆர்.ஆர்.எம். உரத்துக் கத்திவிட்டு, பளீரென்று காசியின் கன்னத்தில் அறைந்தான்.

பதறிப்போன கன்னியம்மாள் “வேணாங்க” கீச்சிட்ட குரலில் கத்தினாள்.

ராகினி திகைத்துப் போய் நின்றாள். வார்த்தைகள் வரவில்லை. ஆர்.ஆர்.எம்மை வெறுப்புடன் பார்த்தாள். யாரோ செய்த தவறுக்கு தன் அப்பாவிக் கணவன் பழியும் தண்டனையும் சுமக்கும்படி ஆனது அவளுக்குத் தாங்கமுடியாத வேதனையை ஏற்படுத்தியது.

# 15

**த**ன் மகன் காசியின் மீது கட்டடத்தின் ஓனர் கை நீட்டிய சம்பவத்தைப் பற்றிக் கன்னியம்மாள் சொன்னதைக்கேட்டு ஆதிலட்சுமி கலங்கிப்போனாள். சின்னப் பிள்ளையாக இருக்கும்போது காசி செய்த குறும்புக்களுக்காகக் கூட அவள் அவனைக் கைநீட்டி அடித்ததில்லை.

“இன்னா பண்ணுவாங்களோ தெரியலே. இனிமே என்ன வேலக்கு வேணாம்னு சொன்னாலும் சொல்லிப் புடுவாங்க” என்று கலங்கிய குரலில் சொன்னாள் கன்னியம்மாள். ஒரு கணம் தான். மறுகணமே, வீட்டை நெருங்கிக் கொண்டிருந்த சங்கரனும், அகிலாண்டமும் கண்ணில்பட சுதாரித்துக்கொண்டு, “வாங்க வாங்க” என்று அவர்களை வரவேற்றாள்.

“இன்னா இது ஆச்சரியமாக்கீது. விடிகாலைல இந்தாண்டப் பக்கம் வந்துங்கறீங்க”

கன்னியம்மாளின் எதிரே தன் கொல்லுருவையும் மட்டப் பலகையையும் போட்டு வைத்திருக்கும் சணல் பையை வைத்தான் சங்கரன். “கன்னீம்மா! இன்னிக்கும் நீ வேலக்கிப் போவியா” என்று தூக்குக்குண்டை வைத்திருந்த

https://telegram.me/aedahamlibrary

துணிப்பையை திண்ணைமேல் வைத்தபடி கேட்டாள் அகிலாண்டம்.

"ஏன் நீங்க ரெண்டு பேரும் போவலியா?" என்றாள் கன்னியம்மாள்.

"கட்ன பொண்டாட்டி எதிர்க்க நிக்க சொல்லவே துடுக்கா அந்தாளு காசி மேல கைய நீட்டிப்புட்டான். எத்தினிதான் பணக்காரனாவே இருந்தாக்கூட தான் என்னா. மனசே ஆறல கன்னீம்மா" என்றான் சங்கரன்.

அகிலாண்டம் "அந்தப் பொண்ணு ராகினி கண்ணுல கூட தண்ணி வந்திரிச்சு" என்றாள்.

"தொள்ளாளி பொழப்பு அத்தினி கேவலமா பூடுச்சி. எப்படி தொள்ளாயில்லாம் மாடி வூடும் கட்டிப்புடுவாங்க பாக்கலாம். இவுங்க கையில இருக்கிற துட்டும், பாங்கியிலக்கற துட்டும் வந்து சாரத்து மேல நின்னுக்கினு வேல செய்யுதான்னு பாக்கலாம். நம்பள அவங்களே வந்து கூப்பிட்டுதான ஆவணும். அப்ப நாம்ப ஒத்துமயா இருக்கணும்" என்றார் சங்கரன்.

"நல்லதாப்பூடுச்சின்னு நம்பள கழட்டி வுட்டுட்டு வேற யாரயாவது கூட்டிப்போயிடப் போறாங்க. அதுதான் பஜார்ல, தெருவுலே கூட்டம் கூட்டமா நம்ப சனங்க நிக்குதே" என்றாள் கன்னியம்மாள்.

"ஒரு தொள்ளாளிய அநாவசியமா கைநீட்டி அடிச்சுங்கராரு ஓணருன்னு தெரிஞ்சிக்கனாங்கன்னா கூடவா அவங்களுக்கு சாதகமா நம்ப சனங்க போவாங்க" என்றாள் அகிலாண்டம்.

"அட! அப்பிடியேதான் விசியம் தெரியாத வெளியாளுங்க வந்து வேல செய்யறாங்கன்னு வங்சுக்கவேன். நாம்ப சும்மா வுட்ருமா? தட்டிக்கேக்க மாட்டமா?"

"அப்பன்னா, இப்ப நாம்ப என்னா பண்றது?" என்று திரும்பத் திரும்பக் கன்னியம்மாள் கேட்டாள். அவளுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தாள் ஆதி லட்சுமி,

"மத்தியானம் வரக்கும் பார்க்கலாம். அந்தப் பெரிய மனுசன் எறங்கி வர்ராரான்னு" என்ற சங்கரன் ஆதிலட்சுமியைப்

https://telegram.me/aedahamlibrary

பார்த்து, 'கொஞ்சம் தண்ணி குடும்மா' என்றான்.

“மத்தவங்க என்னா சொல்றாங்க?” என்றாள் கன்னியம்மாள். சங்கரனைப் பார்த்து. “பாரேன். கன்னீம்மா மனசுல எத்தினி திகிலு. வேல இல்லாமப் பூடுச்சின்னா என்னா பண்றதுன்னு கிலி புடிச்சிக்கினு எப்படி கேட்டதய கேட்டுங்குது பாரேன்.” சங்கரன் முகத்தில் சோகம் அப்பிக்கிடந்தது. கன்னியம்மாவுக்கு ஆதரவாக, தைரியமாக, தான் எதையாவது செய்யவேண்டும் என்று அவனுக்குள் எண்ணம் வந்தது. கன்னியம்மாளுக்கு நடந்த அவசரக் கல்யாணமும் அதைவிட அவசரமாக நிகழ்ந்த பிரிவும் அதன் காரணங்களையும் முன்பே அவள் அவனுக்குச் சொல்லியிருந்தாள்.

“என்னாங்க பண்றது. இந்த வேலயும் இல்லாமப் பூட்டா நான் என்னா பண்றது? இப்ப வேலதான் எனக்கு புருசன். புள்ள, மாமியா வூடுன்னு எல்லாம். என் உசுரே அதான்னு வச்சுகுங்களேன்”

“மெய்தான் கன்னிம்மா” என்றாள் அகிலாண்டம் “நீ எத்தினியோ துணிச்சலுக்காரி. நீ இப்பிடி மனசை உடறே. ம்”

“கொல்லு வேலைக்காரங்கன்னாவே என்னுமோ அடிமைங்கங்கற மாதிரியாயிடிச்சி” என்று அலுத்துக் கொண்ட சங்கரன் “என் தம்பி கூடதான் மில்லுலே வேல செய்யறான். இப்பிடித் துடியா எவனாவது கை நீட்டிருவாங்களா? என்னுமோ சங்கம்ங்கிறான். எந்தம்பி கூட அதுல மெம்பரு. இத்தினிக்கும் அவன் அங்க வேலக்கிச் சேர்ந்து ஆறு மாசந்தான் ஆவுது. வேலக்குத் தக்க கூலி, அநுபவத்துக்குத் தக்க புரமோஷன் இல்லேன்னாலும் மானம்; மருவாதி கெடாதுங்கறான். நம்பளுக்கும் அப்பிடிச் சங்கம் இருந்திச்சின்னா இப்பேர்ப்பட்ட அநியாயம் அக்கிரும்ம் நடக்கறப்ப தட்டிக் கேக்கலாம்.” என்றான்.

தன் மனதில் உருவங்கொள்ளாதிருந்த எதோ ஒரு விஷயத்தை சங்கரன் விளக்கமாக எடுத்துச் சொல்லி விட்டதில் தெளிவு கொண்டாள் அகிலாண்டம். “படிச்சவுங்களுக்குத்தான் வெவரமா சங்கம்லாம் வைக்கத் தெரியும். எதுனாச்சும் உருப்படியா பண்ண முடியும், படிச்சவுங்க என்னாத்துக்கு கொல்லு வேலக்கு

https://telegram.me/aedahamlibrary

வரப்போறாங்க" என்று சங்கரன் ஏங்கியபடி பெருமூச்சு விட்டான். டீயுடன் வந்த ஆதிலட்சுமி, செம்பைக் கன்னியம்மாள் கையில் கொடுத்து "குடு கன்னியம்மா. காவேரிக்கும் குடு" என்றாள்.

"காவேரி வந்துட்டாளா? உள்ளாறவாக்கீறா" என்று கன்னியம்மாள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஆமா. என்னத்தயோ படிச்சினுக்கிறா" காவேரிக்கென்று டீயை எடுத்துக் கொண்டு உள்ளே போன கன்னியம்மா யோசனையில் ஆழ்ந்து போயிருந்த காவேரியைப் பார்த்து. 'காவேரி' என்றாள்.

காவேரி, திடுக்கிட்டாற்போல தலையைத் தூக்கி எதிரில் நின்றிருந்த கன்னியம்மாளைப் பார்த்து "என்னக்கா? ஒண்ணு மில்லக்கா" என்றாள்.

"ஒண்ணுமில்லன்னு ஒரேடியா பொய் சொல்லாத"

"நெசமாலுமே ஒண்ணும் இல்லக்கா"

"எந்தலயெயுத்து இப்பிடியாயிடுச்சி. உனுக்கு என்னாடி கொறச்சலு. ராசாத்தியாட்டங்கற. படிச்சிங்கிற. என்னாத்துக்கு மூஞ்சக் கவுத்துக்கினு மூலயில உக்காந்துங்கறே."

காவேரி, பரிவோடு, "இந்த வயித்துச் சுமையைத் தூக்கிக்கினு வேலக்கிப் போறியேக்கா" என்றாள்.

"வேற என்னா பண்ணா சொல்ற. இத்த என்னா எறக்கி வங்கிட்டா போவ முடியும்?" என்றாள் கன்னியம்மா. வெளியே இருந்து ஆதிலட்சுமி தன்னை அழைக்கும் குரல் கேட்டு கன்னியம்மாள் திண்ணைக்கு வந்தாள்.

வாசலில் பத்துப் பதினைந்து கட்டடத் தொழிலாளர்கள் நின்று கொண்டிருந்தார்கள். 'அய்ய என்னா இது, எல்லாரும் இங்க வந்துட்டாங்க' என்று குழம்பிப் போனவளாகக் கன்னியம்மா சங்கரனைப் பார்த்தாள்.

"நாந்தாம்மா சொன்னேன். எல்லோருக்கும் இது பக்கம். அதுக்கோசரந்தான்" என்றான் சங்கரன்.

வீட்டுத்திண்ணையருகே இரண்டு மட்டப் பலகைகள், ஐந்தாறு கொலுத்துக்கரண்டிகள், மூன்று நீர்மட்டப்

https://telegram.me/aedahamlibrary

பலகைகள், சில தூக்குக் குண்டுகள் எல்லாம் ஒழுங்காக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

“தப்புப் பண்ணா தண்டன தரட்டும். வேண்டாங்கல. ஆனா, எடுத்த எடுப்பில தொழிலாளி மேல கைய நீட்டறது, அவங்கள் வாய்க்கு வந்த மாதிரி திட்டறதுங்கறதெல்லாம் மோசமான சமாசாரம். இத இப்படியே விட்டுரக் கூடாது” கணீரென்ற குரலில் சங்கரன் பேசினான்.

“அவுங்ககிட்டே பணபலம் கீது. எதுனாச்சிம் பண்ணுவாங்க. எப்படியும் பொழச்சிக்குவாங்க. நம்பளப் போல ஏழைங்க என்னா பண்ண முடியும்? என்னாத்தயும் பொறுத்துக்கினுதான் போவணும்” என்றான் மணி.

“இன்னாடா பெரீய்ய பணக்காரனுங்க” மீனாட்சிக் கிழவி கத்தினாள். “பணக்காரனுங்களாயிருந்தா எத வேணா பண்ணிப்புடு வானுங்களா? ரோட்டோரமா கடந்துச்சே பொணம் இவுங்ககிட்ட கீற பணத்துனாலே அத எழுப்பிட முடியுமா? மனுசாளு இல்லாம என்னாடா செய்யும் பணம்?”

சுண்ணாம்புக் கலவை ஏறி ஏறித் தோலுரிந்து கறையாய்த் தெரியும் பாதங்களையே பார்த்துக் கொண்டிருந்த பாப்பாத்திக்கு, மீனாட்சிக் கிழவி சொன்னது சரி என்று பட்டது.

“எங்க அந்த காசிப் பையன்” என்று விசாரித்தாள் சின்னம்மா.

“வருவான். எல்லாரும் வந்துடுவாங்க” என்று உறுதியும் தைரியமுமாக அகிலாண்டாம் சொன்னாள்.

“அதா. அஞ்சாறு பேரு இங்கே வர்ராப்பலக்கீது” என்று சொன்ன கன்னியம்மாளின் குரலில் சோகம் கரைந்து பெருமிதம் லேசாக எட்டிப் பார்த்தது. ஆட்கள் வந்த திசையைப் பார்த்தாள் மீனாட்சிப் பாட்டி.

“நாம்ப பாட்டுக்கு இங்க உக்காந்துக்கினே இருக்கறதுலே அர்த்தமில்ல. யார்ன்னா ‘சைட்’கிட்டே போயி பார்த்துக்கினு வந்தா நல்லது” என்றான் சங்கரன்.

“நான் போய் பார்த்துக்கினு வருட்டுமாப்பா” என்றான் அய்யப்பன்.

“ஆமா. ஒரு ஓட்டம் போய்ப் பார்த்துட்டு வந்துடு என்னா

https://telegram.me/aedahamlibrary

செஞ்சிக்கினுக்கிறாங்க. யார் யாருக் கீறாங்கன்னு பார்த்துகினு வா.”

பதினாறு வயதும் நிரம்பாத பையன் அய்யப்பன் ஓடினான்.

புழுதியைக் கிளப்பிக்கொண்டு வந்த படகு காரைக் கண்டதும் ராகினியின் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. இன்றைக்கு மூன்றாவது நாளாக கொத்து வேலைக்காரர்கள் வரவில்லை என்று தெரியவந்ததும் ஆர்.ஆர்.எம் குதிப்பான். கொத்து வேலைக்காரர்கள் செய்வது தப்பென்று அவளுக்குப் படவில்லை. தவிர அவள் புருஷனுக்காக அவர்கள் எடுத்த முடிவு அது. உள்ளே நின்ற காசியை சத்தம் போட்டு அழைத்தாள். வேறு என்ன செய்வது? “ஓணர் வர்ராப்பல தெரியுது. போயி கேட்டத் திறக்கணும்” வெறுப்பு கொப்பளிக்கிற கண்களுடன் எரிச்சல் பொங்க காசி அவளைப் பார்த்தான்.

வெளியே ஹாரன் அலரும் சத்தம் கேட்டது.

என்ன நினைத்தாளோ ராகினி, விறுவிறுவென்று போய் கேட்டைத் திறந்தாள். காசிக்கு மனம் கசந்தது. அவன் வெளி வாசலில் வந்து நின்றான்.

கார் உள்ளே வந்தது. காரிலிருந்து இறங்கிய ஆர்.ஆர்.எம். எதிரே நின்ற காசியைப் புன்னகையோடு பார்த்தான். அவனைப் போன்றவர்களுக்குத்தான் இந்தத் தந்திரங்கள் கைவந்த கலையாயிற்றே. அப்பாவிகளைப் போல உள்ளத்து உணர்ச்சிகளை வெளியில் காட்டாமல் இருப்பதும் முடிந்தால் உள்ளே இருக்கிற எண்ணத்துக்கு முற்றிலும் மாறான தோற்றத்தைக் காட்டுவதும் தானே அவனைப் போன்றவர்களின் பழக்கம்.

“காசி. இந்த பையப்பிடி.” பெரிய பை ஒன்றை அவன் கைகளுக்குள் ஆர்.ஆர்.எம். திணித்தான். ராகினி திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“என்னா காசி. உனக்கும் உன் சம்சாரத்துக்கும் புது டிரஸ் வாங்கிட்டு வந்தேன். கொஞ்சம் பழம், பலகாரம்லாம் இருக்குது. வேறொண்ணுமில்ல. சும்மா கொண்டுபோய் உள்ளாற வையி.” ஆர்.ஆர்.எம். முகம் மலரப் புன்னகை செய்தான்.

https://telegram.me/aedahamlibrary

“எதுக்குங்க இதெல்லாம்” ராகினியின் குரல் தளும்பியது.

“மொதல்ல உள்ள கொண்டுட்டுப் போய் வையி காசி” ஆர்.ஆர்.எம். உரிமையோடு கண்டிக்கும் தொனியில் ஒரு செல்ல அதட்டல் போட்டான். காசி வீட்டுக்குள் போனான்.

“எம்மேல கோவந்தானே உனக்கு?” அடங்கிய குரலில் கேட்டான் ஆர்.ஆர்.எம். ராகினி மௌனமாக நின்றாள்.

“சொல்லு ராகி கோவந்தானே..”

“..........”

“என்னமோ ஆத்திரத்துல அப்படிப் பண்ணிட்டேன். யாரு மன்னிக்காட்டியும் நீ என்ன மன்னிச்சுடணும். காசிக்கு ஒரு அண்ணன் இருந்தா அவனைக் கண்டிக்க மாட்டானா? அந்த மாதிரி நெனச்சுக்க.” ஆர் ஆர்.எம்.மின் வார்த்தைகளைக் கேட்டு ராகினி திகைத்துப்போனாள்.

“அய்யய்யோ, பெரிய வார்த்தங்கள்ளாம் சொல்லாதீங்க சார்”

“என்னா செய்யறது ராகி, எம்மனசு கேக்க மாட்டேங்குதே”

“சரி. அந்தப் பேச்ச விட்ருங்க” என்ற ராகினி ஒரு நொடி தாமதித்து “இன்னிக்கு யாரும்” என்று சொல்லி நிறுத்தினாள்.

புன்னகையோடு அவளைப் பார்த்தார் ஆர்.ஆர்.எம் “வேலைக்கு யாரும் வரலேன்னு தானே சொல்ல வந்தே”

“ஆமா. யாருமே வரல”

“சரி. அது கிடக்கட்டும் விடு, காசி டிபன் பண்ணிட்டானா”

ராகினி தலையைக் குனிந்து கொண்டாள். “இல்லை” என்பது போல தலையை இப்படியும் அப்படியுமாக அசைத்தாள்.

“ம். நீங்க மட்டுமா சாப்பிட்டிருக்க மாட்டீங்க. மத்த தொழிலாளிங்களும் பசியும் பட்டினியுமாத்தான் இருப்பாங்க” என்று கரிசனத்துடன் சொல்லிவிட்டு மௌனமானான் ஆர் ஆர்.எம்.

“என்னம்மா.. டல்லாயிருக்கிறே. ரெண்டு பேரும் சண்ட போட்டீங்களா?”

“பார்த்துக்க. இதான் நான் அப்பவே சொன்னது.

https://telegram.me/aedahamlibrary

இப்பிடித்தான் ஆவும். உனக்குப் படிப்பு இருக்குது. எல்லா வெவரமும் புரியுது. அவனுக்கு என்னா புரியும் சொல்லு. எதுக்கு சண்ட போட்டீங்க? இங்கே வேலயே நாம்ப பாக்கவாணாம். கௌம்புன்னிருப்பான். கெடச்ச வேலயையும் தொலச்சுட்டு என்னா பண்றதுன்னு நீ பதிலுக்குக் கத்தியிருப்பே. நான் சொல்றது கரெக்ட் தானே?"

அதுவரையில் அப்படி நினைக்காத ராகினிக்கும் காசிக்கும் சட்டென்று வேலையில்லாமல் வறுமையோடு போராடும் வாழ்வின் அலைச்சல் நினைவுக்குவர மனசு அலக்கழிப்புக்களானது. மனம் முழுக்க நிறைந்திருந்த கசப்பும் கோபமும் கரையத்தொடங்கியது.

"என்னா ராகினி! நீ படிச்சவ தானே? ஆடற மாட்ட ஆடிக் கறக்கணும். பாடற மாட்டப் பாடிக்கறக்கணும்னு நீ படிச்சதில்ல?"

"படிச்சிருக்கறேன்"

புத்தம் புதிய பத்து ரூபாய்தாள்கள் ஐந்தை நீட்டினான் ஆர்.ஆர்.எம்.

"அய்ய வாணாங்க"

"வச்சுக்க. டிபனுக்கு. செலவுக்கு ஆவும். மத்த ஆளுங்க அத்தினி பேருக்குமா சேர்த்து டிபன் ஏற்பாடு பண்ணிடுங்க"

"எதுக்குங்க"

"பாத்தியா. பேசாம வாங்கிக்க. டிபன் வாங்கியாந்து நீங்க எல்லாரும் சாப்பிடுங்க."

"என்ன சொல்றீங்க. நீங்க" ராகினி குழற்றினாள்.

"ஆமா, மொதல்ல காசி சாப்பிடட்டும். அப்புறம் எல்லா ஒர்க்கர்ஸையும் அவன்தான் போய் கூட்டியாரணும்"

"அய்யோ... அவரா? அவரு போவாரா?" ராகினி கீச்சிட்டாள்.

"தபாரு ராகினி! நீ சொன்னா காசி கேட்பான்" உறுதியான குரலில் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லியபடி அவளைப் பார்த்தான் ஆர்.ஆர்.எம்.

"நீ கட்டாயப்படுத்தி அவனுக்கு ஒறைக்கிற மாதிரி சொன்னா அவன் நிச்சயம் கேட்பான். நீ கெட்டிக்காரி. புத்திசாலி. படிச்சவ. எப்படி சொல்லணுமோ அப்படி சொல்லி

https://telegram.me/aedahamlibrary

அவன அனுப்பிவை”

காசி இருந்த திசையைப் பார்த்துக்கொண்டு ராகினி மௌனமாக நின்றாள்.

# 16

**ம**ழை லேசாக பெய்து கொண்டிருந்தது. காசியும் ராகினியும் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தனர். ரோட்டில் போய்க் கொண்டிருந்த சினைப்பசு ஒதுங்க இடம் தேடி, வாசலில் இருந்த இரும்பு கேட் பக்கமாக வந்ததும் ராகினி சட்டென்று எழுந்தாள். “சூ சூ...” என்று சத்தமாக மாட்டை விரட்டினாள். ராகினி மௌனமாக இருந்த காசியைப் பார்த்தாள்.

“டிபன் சாப்பிட வேணாவா?”

“வேணா”

“ஏன்?”

“பசிக்கலே”

“ஏன் பசிக்கலே”

“நான் ஆர்.ஆர்.எம். கிட்ட பணம் வாங்கினது புடிக்கலியா?”

“மத்த வேலயாளுங்கள் நான் எந்த மூஞ்சியோட பார்த்துப் பேசறது?”

அவளும் சங்கடப்பட்டுப் போனவளாக அவன் முகத்தில் பதிந்திருந்த பார்வையைத் தரைக்குத் தாழ்த்தினாள்.

“என்னியப்பத்தி அவங்க என்னா நெனச்சிக்குவாங்க.” சொல்லியவாறு எழுந்தான் காசி.

“அந்த ரோஷமெல்லாம் சரி தான். ஆனா, எல்லாருக்கும் வயிறுன்னும் ஒண்ணு இருக்கதில்ல. அந்த மனுசனும்தான் இவ்வளவுக்கு எறங்கிவந்து வாயத்தொறந்து மன்னிப்புக் கேக்காத குறையா பேசிட்டு போறாரு. காரியம் பெரிசா வீரியம் பெருசா?”

நன்றாக யோசனை செய்த பிறகு முடிவாகச் சொல்லுபவனைப் போல அவளைப் பார்த்துப் பதில் சொன்னான் காசி; “வேற எங்காவது போகலாம். கூலி வேலதான? எங்கியாவது போய் வேல செஞ்சி மானத்தோட

https://telegram.me/aedahamlibrary

பொளக்கலாம். எனக்கு இங்கே பிடிக்கல?"

"சர்த்தான் ரொம்ப நல்லாயிருக்குது. எங்கே போனாலும் நம்மப்போல வசதியில்லாதவங்க அவமானப்பட வேண்டியதாத்தான் இருக்கும். போற புது எடத்திலே இங்கே கெடக்கற மரியாதகூட கெடக்குமோ கெடக்காதோ? இது உங்களுக்கு பொருத்தமான வேல. மத்தபடி வேற வேலயத் தேடறதுன்னா, அப்படி உங்களுக்கு உருப்படியா என்னா வேல தெரியும்?"

"குத்தியா காட்டறே?" காசி, அவளை எரிச்சலோடு பார்த்தான். பிறகு, பெருமூச்சு விட்டபடி பொருமினான்.

"நாலு பேருக்கு முன்னால் நான் அசிங்கப்பட்டது உனக்கு ஒறைக்கலியா?" அந்தக் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை. மனத்துக்குள் என்னவோ நெருடியது. அவள் மனதிலும் அந்த நிகழ்ச்சி ஈட்டி முனையாகத் தைத்துக்கொண்டு இருந்தது. ஆர்.ஆர்.எம்.மின் எண்ணப்படி பேச வேண்டி வந்ததில் அவளுக்கு வெட்கமாக இருந்தது. ஆனாலும் இந்த இடத்திலிருந்து எங்கே போவது? ராகினியின் கண்கள் பனித்தன. பெற்றவர்கள் தன்னைப் பாழுங்கிணற்றில் தள்ளி விட்டு விட்டதைப்போல உணர்ந்தாள். விசும்பலும் அரைகுறைப் புலம்பலுமாக வந்த அவளுடைய தீனமான குரல் காசியின் மனத்தைக் கரையச் செய்தது. ராகினியின் பக்கத்தில் உட்கார்ந்து பரிவோடு அவள் தோளில் கையை வைத்தான். அவளை நிமிர்ந்து பார்த்த ராகினி, "இங்கே வேல பாக்கணும்னு எனக்கு மட்டும் ஆசைன்னா நெனைக்கறீங்க? வேற வழி இல்லியே" அவள் மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

"சொல்றனில்ல"

"சரி சரி, அழாத. தலய வலிக்கப்போவுது. நான் போய் டிபன் வாங்கியார்ட்டா."

"வேணாம்"

"ஏன்"

"இப்ப எனக்குப் பசிக்கல"

"ப்ச்... நான் வாங்கியாரேன்" என்று சொல்லியவாறு அவன்

https://telegram.me/aedahamlibrary

எழுந்தான். கண்களைத் துடைத்தபடி ராகினியும் எழுந்தாள்.

“பிளாஸ்கைக் கொண்டு போங்க. பணம்?”

“அதெல்லாம் எங்கையிலக்கீது” ஆச்சர்யத்துடன் ராகினி அவனைப் பார்த்தாள்.

“மழை கனமா வந்துடப் போவுது. எதுக்கும் குடையைக் கொண்டு போங்க.”

ஓடிப்போய் குடையை எடுத்து வந்து அவன் கையில் ராகினி திணித்தாள்.

“அடேங்கப்பா. அக்கறயப் பாரு” என்றான் காசி

“ஆமா” வெடுக்கென்று பேசினாள் ராகினி. “அக்கறயில்லாமத்தான் இப்பிடி மாஞ்சிபோறனாங்காட்டியும்.”

டிபன் வாங்கிக்கொண்டு திரும்பிய காசி, ராகினியோடு ஆதிலட்சுமி, கன்னியம்மா, சங்கரன், அகிலாண்டம் ஆகியோர் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டதும் ஆச்சர்யப்பட்டுப் போனான். மற்ற தொழிலாளர்களைத் எதிர்கொள்வது தனக்குத் தர்ம சங்கடமாக இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு ராகினியே வீடு வரைபோய் அவர்களை அழைத்து வந்திருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது. எப்படித்தான் அவர்கள் மனதை மாற்றினாளோ என்று வியந்துபோனான். ஆனாலும் அதை வெளியே காட்டாமல் “அதான பார்த்தன் என்னாடா இது இப்பிடி காலமில்லாத காலத்திலே இப்படிப் பேய் மழ புடிச்சுக்குச்சேன்னு” என்றான் சகஜபாவத்தில் வெளியே பலமாக இடி இடித்தது.

ஆதிலட்சுமி புன்னகையோடு மகனைப் பார்த்தாள். “இம்மாம் நேரம் களிச்சுத் தானாடா நாஷ்டா பண்றது? ஏண்டா இப்பிடிப் பண்றே?”

“ஓம் மருமவளக் கேளு”

“அது இன்னா பண்ணும். பாவம்”

ஃபிளாஸ்கை அவனிடமிருந்து வாங்கி டம்ளரில் காப்பியை ஊற்றி முதலில் ஆதிலட்சுமியிடம் கொடுத்தாள் ராகினி. “நீ குடி ராக்கு” என்றவாறு அந்த டம்ளரை ராகினியின்

https://telegram.me/aedahamlibrary

கையிலேயே கொடுத்தாள் ஆதிலட்சுமி. "நீங்க முதல்ல குடிங்க" பெருமையோடு ஆதிலட்சுமி டம்ளரை வாங்கிக் கொண்டாள். காப்பியைக் குடித்தவாறு. "காசி, ராக்கு எல்லாம் சொல்லிச்சி" என்றாள். காசி வியப்புடன் ராகினியைப் பார்த்தான்.

"ஓணர்தான், தான் பண்ண தப்ப உணர்ந்து மனசுக்குள்ளே பீல் பண்ணி ராகினிகிட்டே சொல்லிட்டாருல்ல, அப்புறம் என்ன?" என்றான் சங்கரன். காசியின் நெற்றி சுருங்கிற்று. "வேணுமின்னா நேர்ல எங்கயிலவே சொல்றேன்னாராமே. அதான் பெரிய மன்சன்றது. சரிவுடு. என்னாவோ நடக்கக்கூடாதது நடந்து போயிடிச்சு."

"வேல செய்யாட்டாலும் இன்னிக்கு சம்பளம் போட்டுத் தர்ரேன்னு சொல்லிங்கறாராமே. உங்கயில ரொம்ப மருவாதியா பேசனாராமே" என்றாள் குரலில் திருப்தியோடு அகிலாண்டம்.

"இன்னாடா கம்னு குந்திங்கறே" என்று கேட்டாள் ஆதிலட்சுமி.

காசி ராகினியைப் பார்த்தான். அவள் அமைதியாக உட்கார்ந்து காப்பி குடித்து கொண்டிருந்தாள். காசி "ஆமாம்மா, ரொம்ப மருவாதியா பேசனாரு, அன்னிக்கு என்னமோ அப்படி ஆயிரிச்சி."

"அப்ப, என்னா பண்றது இப்ப?" கன்னியம்மாள் ஆர்வத்துடன் கேட்டாள். "நாளயிலிருந்து வேலக்கு ஒழுங்கா மொறயா வந்துட வேண்டியதுதான்" என்றான் சங்கரன். சங்கரனின் வார்த்தைகளை வேலையாட்கள் அனைவரும் ஒரு தீர்ப்பைப் போல ஏற்றுக் கொண்டார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு கலைந்து போனார்கள்.

மழை ஓயவில்லை. விடாமல் பெய்து கொண்டிருந்ததால் வீதியெங்கும் வெள்ளம். ஸ்டோர் ரூம் பக்கமாக காசி எட்டிப் பார்த்தான். மண் போட்டு மனையை உயர்த்திக் கட்டியிருந்ததால் வெள்ளம் தேங்கி நிற்காமல் வீதிப்பக்கமாக வழிந்து கொண்டிருந்தது. அதையே பார்த்துக்கொண்டு நின்ற காசிக்குத் தன் சொந்தக் குடிசையின் நினைவு வந்தது. மழை வந்த கையோடு அங்கே வெள்ளம் வந்துவிடும். வழியெல்லாம் சேறும்

https://telegram.me/aedahamlibrary

சகதியுமாக நிறைந்துவிடும். ஒவ்வொரு குடிசையும் வெள்ளத்தின் நடுவே தனித்தனித் தீவாக, திட்டாகத் தெரியும், கூரையும் ஒழுகும். அம்மாவும் கன்னியம்மாவும் காவேரியும் மழை ஒழுகும் இடங்களில் சட்டி, பானை, அலுமினிய குண்டான், பிளாஸ்டிக் பாத்திரங்கள் என்று கிடைக்கிறவற்றை வைத்துக்கொண்டிருப்பார்கள். அடுப்பைப் பற்ற வைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லாமல் தரையெல்லாம் நீருறிக் கசகசக்கும். வைக்கோலைத் தரையில் பரப்பி அதன் மேல் பாய் விரித்துத்தான் படுக்க முடியும். இந்தமாதிரி சமயத்தில் ராகினியும் அங்கே இருக்க வேண்டி இருந்தால் எவ்வளவு அவஸ்தைப்பட வேண்டியதிருக்கும். அதை நினைத்ததும் அவனுடைய உடம்பே கூசியது. இந்தச் சிறிய வீட்டின் தரையும் அறையும் எத்தனை சௌகரியமாக கதகதவென்று குளிருக்கு இதமாக இருக்கிறது. சின்ன மழைத்துளி கூட உள்ளே புகாத அருமையான வீடு.

“என்ன யோசனை பண்றீங்க?” காசியின் தோளைத் தொட்டு ராகினி அசைத்தாள். திடுக்கிட்ட காசி. “ஒண்ணுமில்ல” என்றான்.

“பொய் சொல்றீங்க?” என்றாள் ராகினி குறும்பாக.

“இல்ல”

“பொய் சொல்றீங்க” என்றாள் ராகினி கொஞ்சலாக.

“சொல்றனில்ல” என்றான் காசி லேசான கடுமையோடு. தன் மனதில் ஓடிய சொந்தக்குடிசையின் மழைக்காலக் காட்சியை அவளுக்கு எப்படி சொல்வான் அவன்?

“ம் பொய் சொல்றீங்க” ராகினி கொஞ்சினாள். சிரிக்காமலேயே சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லி விளையாட்டுக் காட்டினாள்.

“என்கிட்டே உள்ளதைச் சொல்லாம, ஒண்ணுமில்லேன்னு நீங்க பொய் சொல்றீங்க.”

“சரி அப்படியே வச்சிக்க.”

“அப்ப சொல்லுங்க” லேசான கோபத்தோடு அவளைப் பார்ப்பதுபோல் பாவனை செய்தான் காசி.

“மழத்தண்ணி வாய்க்காவாட்டம் ஒடறதப்

https://telegram.me/aedahamlibrary
பார்த்துக்கிட்டிருந்தேன்னு சொல்றனில்ல” அவள் அவனுடைய மேவாயைத் தொட்டு நிமிர்த்தினாள்.

“சரி, நீங்க என்னா நெனச்சிகிட்டிருந்தீங்கன்னு நானே சொல்லட்டுமா? வூட்டாண்ட வந்தவங்க கிட்டே நான் இப்பிடிப் பயங்கரமா பொய் சொல்லிட்டனேன்னுதான யோசிக்கறீங்க.” அவன் மௌனமாக அவளைப் பார்த்தான்.

“சொல்லுங்க”

“நிஜமா சொல்றேன். அதப்பத்தி நான் நெனக்கவேயில்ல.”

“ஒண்ணுமே நினைக்கலியா?”

“நெனைச்சேன்”

“என்ன நெனைச்சிங்க”

“புத்திசாலிப் பொண்ணுன்னு”

“திருட்டுப் பொண்ணுன்னு நெனக்கலியே”

“இல்ல” காசி திட்டவட்டமாகச் சொன்னான். அவள், ஆறுதலாகப் பெருமூச்சு விட்டாள். பிறகு பிரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

“நிஜம்மாவா?”

“ஆமா. ஆமா ஆமா போதுமா?”

ராகினியின் பார்வை அவன் மேலேயே இருந்தது. அவன் சட்டென்று சொன்னான். “நீ படிச்சவ. அறிவுடயவ, பக்குவமா பேசத்தெரிஞ்சவ, என்னப் போலவா?”

“என்ன சொல்றீங்க?”

“ஆமா. நான் படிப்பில்லாதவன். வேல வெட்டி தெரியாதவன். உருப்படாதவன். எதுக்கும் புரோசனமில்லாதவன்” திடுக்கிட்டுப் போனவளாக ராகினி பதட்டத்துடன் கேட்டாள்.

“யார் அப்படிச் சொன்னாங்க.”

“யார் சொல்லணும். அதுதான் நெஜம். நானே சொல்றனே” என்ற அவன் நிதானமாக பதில் சொன்னான்.

“இல்ல. காலயில நான் ஏதோ ஒரு பேச்சுக்குச் சொன்னத மறக்காம கோவத்துல சொல்லிக்காட்டறீங்க” என்றபடி

https://telegram.me/aedahamlibrary

எழுந்தாள் ராகினி. அவள் கண்கள் கலங்கின. உதடுகள் துடித்தன.

“நான் ஒரு பேச்சுக்கு சொன்னேன். அதுக்குப் போயி?”

“சும்மா எதுனா சொல்லாதீங்க” ராகினியின் குரல் விம்மிற்று.

“என்ன எதுக்கு இம்ச பண்றீங்க”

“அட!” காசி அவள் அருகே சென்று அவள் தோளில் கைவைத்தபடி “சொன்னாக் கேட்டுக்கணும்” என்றான்.

அவள், அவனுடைய கையைத்தட்டி விட்டாள் “போங்க.”

மறுகணம் காசி, ராகினியை அவள் எதிர்பாரதவிதமாக அணைத்தான். வெளியே மின்னல் சடசடத்தது. ராகினி தும்மினாள் 'எடுத்ததுக்கெல்லாம் அழுதா இப்படித்தான்' என்றபடி, காசி அவள் முகத்தைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக்கொண்டான்.

# 17

https://telegram.me/aedahamlibrary

**கா**லையிலேயே ஆர்.ஆர்.எம்மின் படகுக் கார் வந்து நின்றதும், ஆதிலட்சுமியோடு பேசிக்கொண்டிருந்த ராகினியும் காசியும் திகைத்துப் போய் விட்டனர். அவர் அப்படி வந்ததே நல்லதாகி விட்டது என்று நினைத்தபடி, காசி அவசர அவசரமாக கேட்டைத் திறக்கப் போனான். ராகினியும் அவன் பின்னாலேயே நடந்தாள்.

ஆர்.ஆர்.எம்மைப் பார்த்து, “வணக்கம் சார்” என்றாள் ராகினி. ஆர்.ஆர்.எம்மின் முகம் வாடிப்போயிருந்தது. “குட்மார்னிங்க” என்றான். காசி கேட்டைத் திறந்ததும், “வேணாம்ப்பா. நான் பொறப் படறேன். கார உள்ள கொண்டாரல” என்றான்.

“ராகினி, ஒரு முக்கியமான விஷயம்” என்றான்.

“என்ன சார்”

“அது யாரு? உன்னாட மாமியார் தான.”

“ஆமா சார்”

https://telegram.me/aedahamlibrary

“அவங்க எதுக்கு வந்தாங்க.”

“எங்க நாத்தனாரை ஆஸ்பத்திரியிலே கொண்டுபோய் சேர்த்துருக்காங்களாம். அதான் சொல்லிட்டுப் போலாமுன்னு வந்திருக்காங்க.”

“ஏன்? என்னாச்சி? உன் நாத்தனாருங்கறது கன்னிம்மா தான? என்னாச்சு அதுக்கு? பிரசவத்துல எதாச்சும் சிக்கலா?”

“இல்லீங்க”

“அவங்கள வரச்சொல்லு”

காசி, தன் அம்மாவைக் கூப்பிட்டான். ஆதிலட்சுமி பயபக்தியோட வந்தாள்.

“என்னம்மா. உம் பொண்ணுக்கு எப்படியிருக்குது?”

“இடுப்ப நோவுது. வயத்த வலிக்குதுன்னு அழுவறா”

“டாக்டர் என்ன சொன்னாங்க.”

“பிரசவத்துக்கு நாள் இருக்குதுனு சொல்றாங்க. இது வேற என்னமோ சிக்கலுன்றாங்க”

“ஆஸ்பத்திரியில உம் பொண்ணு கூட யாரு இருக்கறாங்க.”

“எஞ்சின்ன மவளும் ஆப்பக்கார சின்னத்தாயும், இருக்கறாங்க.”

ஆர்.ஆர்.எம். பாக்கெட்டுக்குள் கையை விட்டு மூன்று நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து “இந்தாம்மா” என்று ஆதிலட்சுமியிடம் நீட்டினான். “என்னங்க இது?” என்று பதறியவாறு காசியையும் ராகினியையும் பார்த்தாள் ஆதிலட்சுமி.

“வைத்திய செலவுக்கு வச்சிக்கங்க. பணம் தேவைப்படுமே. சொல்லு ராகினி.” ராகினி ஒன்றும் பேசாமல் மாமியாரைப் பார்த்தாள். ஆதிலட்சுமி அந்த நோட்டுகளை வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டாள்; “மகராசனாய் இருக்கணும்.”

“காசி உங்கிட்ட செலவுக்கு எதாவது இருக்குதா?” காசி மௌனமாக நின்றான்.

ஆர்.ஆர்.எம். மறுபடியும் மூன்று நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து அவனிடம் நீட்டினான். “அய்யய்யோ எதுக்குங்க இவ்வளவு பணம்?” என்றாள் ராகினி.

https://telegram.me/aedahamlibrary

“பணம் எதுக்குன்னு கேக்கற முதல் ஆளு நீதாம்மா. இப்போ தேவப்படும். ஆஸ்பத்திரி செலவெல்லாம் இருக்கும். வாங்கிக்க சொல்லும்மா ராகினி.”

ராகினி மறுபடியும் மௌனமாக நின்றாள். “சொல்லும்மா ராகினி” ஆர்.ஆர்.எம். நோட்டுகளை காசியின் கையிலே திணித்தான்.

பிறகு ராகினியைப் பார்த்து “ராகினி நான் இன்னும் காபி குடிக்கல” என்றான் ஆர்.ஆர்.எம்.

காசி ராகினியைக் கேள்வியோடு பார்த்தான்.

“வீட்ல ப்ளாஸ்க் இருக்குதா?”

“எங்க வூட்டுப் பிளாஸ்கில வாங்கியாந்தா குடிப்பீங்களா?” ஆச்சரியத்தோடு ஆர்.ஆர்.எம்மைப் பார்த்தாள் ராகினி. “அதனால் என்ன? பிளாஸ்கைக் காசி கிட்டே குடுத்து காபி வாங்கியாறச் சொல்லு.”

ராகினி மறு வார்த்தை பேசாமல் உள்ளே போனாள். பிளாஸ்கை எடுத்துக் கழுவினாள். அவளைப் பின் தொடர்ந்து வந்த காசியிடம் பிளாஸ்கைக் கொடுத்து “பாருங்க ஹாட்வாட்டர்லே பிளாஸ்கை மொதல்ல நல்லாக் கழுவச் சொல்லுங்க. ஸ்பெஷல் காப்பியாக வாங்கிக்கங்க. பணம் அதிகமானாலும் பரவாயில்ல. நல்லா இருக்கணும். பக்கத்திலே நின்னு பார்த்துப் போட்டு வாங்கிட்டு வாங்க” என்றாள். பின்னர், சூட்கேஸைத் திறந்து பத்து ரூபா நோட்டை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு “அந்தப் பணத்தை எங்கிட்ட கொடுங்க” என்றாள்.

“எந்தப் பணம்?”

“இப்ப அவரு கொடுத்த பணம்”

“ம்.. மறந்தே போயிட்டேன்” என்று அசடு வழியக் கூறியபடி சட்டைப் பைக்குள் இருந்த மூன்று நூறுரூபாயை அவளிடம் கொடுத்துவிட்டு வெளியே போனான் காசி. “சீக்கிரமா” என்றபடி சூட்கேசுக்குள் பணத்தை வைத்து மூடிவிட்டு, அதைக் கீழே வைத்து சூட்கேஸ் இருந்த ஸ்டூலை எடுத்துத் துணியால் அழுத்தித் துடைத்துவிட்டு, வெளியே கொண்டு வந்து போட்டு ஆர் ஆர்.எம். முக்கு பக்கத்தில் பயபக்தியோடு வைத்தாள் ராகினி.

https://telegram.me/aedahamlibrary

“உட்காருங்க சார்”

“எதுக்கும்மா சிரமம்?” என்றவாறு ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டான் ஆர்.ஆர்.எம்.

“உம்மருமவ தங்கமான பொண்ணு, புத்திசாலி” என்றான் ஆர்.ஆர்.எம். ஆதிலட்சுமியிடம்.

“ஆமாங்க. அது மகாலச்சுமிங்க” என்றாள் ஆதிலட்சுமி பெருமை பொங்கும் குரலில். “அது வந்தவுட்டுதான் இந்தப் பய மனுசனாக்கீறான்.”

மாமியார் தன்னைப்பற்றிச் சொன்ன வார்த்தையில் நெகிழ்ந்து போனவளாய் நின்றாள் ராகினி. இன்னும் இரண்டு தளங்கள் கட்டி முடிந்து, சிமெண்ட் பூசி வெள்ளையடித்து, எலக்டிரிகல் வேலைகள் வரைதான் இங்கே குடியிருக்கமுடியும் என்று நினைவு வந்ததும் அவள் மனசு கனத்தது. இந்த இடமே சாஸ்வதம் என்பதுபோல அவள் போட்டிருந்த சின்னத் தோட்டத்தையும், மல்லிகைக் கொடியையும் பார்த்து பெருமூச்சுவிட்டாள். புதிய உறவாக, தெரு நாய் ஒன்று சாப்பாட்டு வேளைக்கு அவள் காலைச் சுற்றத் தொடங்கியிருந்தது. இந்த நிம்மதியும் உறவும் இன்னும் கொஞ்ச நாள் என்ற எண்ணம் தோன்றியதும்...

“என்னம்மா யோசனை பண்றே?” என்றார் அவர்.

“ஒண்ணுமில்லங்க” என்றாள் அவள்.

“எல்லாம் எனக்குத்தெரியும். இந்தக் கட்டட வேல முடிஞ்சப்புறம் என்ன பண்றதுன்னுதானே யோசிக்கிறே?”

வியப்போடு அவரைப் பார்த்தாள் ராகினி.

“பாரு. எனக்கு இன்னும் பிளாட்ஸ் கட்ட வேண்டி இருக்கு. எல்லாத்துக்கும் நீ தான் சூபர்வைசர். அது மட்டுமில்ல. இந்த பிளாட்ஸ்ல காசிதான் வாட்ச்மேன். அதோ பாரு கீழே இருக்கிற முன் ரூம். அது வாட்ச்மேன் ரூம். வெறும் ரூம் மட்டுமில்ல. டாய்லட், கிச்சன், எல்லாம் சேர்ந்த ரூம். இத, இப்ப சொல்லக் கூடாதுன்னுதான் இருந்தேன். உன்னோட கவல தெரிஞ்சதுனால மனசு கேக்காம சொல்லிட்டேன். நான் இருக்கறவர நீ எதுக்குமே கவலப்படக்கூடாது.”

ஆதிலட்சுமி ஆர்.ஆர்.எம். பக்கம் திரும்பி கையெடுத்துக் கும்பிட்டாள். “முப்பாத்தம்மா உனக்கு நூறு வயது

https://telegram.me/aedahamlibrary

கொடுப்பாய்யா “

ராகினியின் கண்கள் பனிந்தன. மனம் சந்தோஷத்தால் பூரித்தது.

ஆர்.ஆர்.எம். கண்ணாடியைக் கழற்றிவிட்டு அவளை, அவள் கண்களின் வழியாக ஊடுருவுவது போலப் பார்த்தான். ராகினி தன்னையறியாமலேயே தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

“ராகினி, அவங்க ரெண்டு பேரும் ஆஸ்பத்திரிக்குப் போகட்டும். நீ சாயங்காலமாப் போ. இனிமேல்தான் கட்டடத்த ஜாக்கிரதயாப் பார்த்துக்கணும். எல்லாமே ஒசத்தியான பொருளுங்க.”

“கவலயே படாதீங்க. எங்க உசுரு போனாலும் பொருளு பத்திரமா இருக்கும்” என்றாள் ராகினி.

ஆர்.ஆர்.எம். “அதென்ன பேச்சு. உசுரு போனாலுமுன்னு படாருன்னு சொல்லிட்டியே, எனக்கு இந்தப் பேச்செல்லாம் பிடிக்காது. சின்னப் பொண்ணு வாயில இந்த மாதிரி வார்த்தயெல்லாம் வரலாமா?”

ராகினியின் மனசு ஆர்.ஆர்.எம். மனிதர் மீது காட்டும் அக்கறையில், அன்பைக் காட்டிய அவனுடைய அந்த வார்த்தைகளில் குளிர்ந்துபோனது. ஆர்.ஆர்.எம்மின் மீது அவள் கொண்டிருந்த மரியாதை கூடியது.

காப்பியை ஆர்.ஆர்.எம், குடித்து முடிந்ததும், காசியும் ஆதிலட்சுமியும் அங்கிருந்து புறப்பட்டார்கள். கன்னியம்மாள் எந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் என்பதையும் புறப்படுவதற்கு முன் ஆர்.ஆர்.எம். விசாரித்துக்கொண்டான். பிறகு உள்ளே கட்டடத்தைப் பார்க்கச் சென்றான். வெளிப்புறமாக கட்டடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து ஸ்டூலில் உட்கார்ந்தான். ராகினி பிளாஸ்கைக் கழுவி வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

“ராகினி வீட்டுப்பூட்ட கொண்டாம்மா” என்றான் ஆர்.ஆர்.எம்.

ராகினி ஒன்றும் புரியாமல் வீட்டின் பூட்டைக் கொண்டு வந்து அவன் கையில் கொடுத்தாள். அதைப் பரீசிலிப்பது போலப் பார்த்தான். “இது போதாது. நீ இன்னும் கொஞ்சம்

https://telegram.me/aedahamlibrary

கனமான பூட்டா வாங்கணும். நான் வேணும்னா பணம் தரட்டுமா” என்றான்.

“அய்யோ ! பணம்தான் குடுத்திருக்கீங்களே”

“ராகினி நீ என்னைப் பத்தி என்ன நெனக்கிறே?” என்றான் திடீரென்று, ராகினி அந்தக் கேள்வியால் திகைத்துப்போய் விட்டாள்.

“சொல்லு ராகினி” அவளையே உற்றுப் பார்த்தான் ஆர்.ஆர்.எம்.

“சொல்லும்மா”

“நீங்க ரொம்ப நல்லவரு”

“அப்புறம்?”

“சமயத்துல திட்டினாலும் கத்தினாலும் ஒரு பக்கத்தில் ஏழைங்களுக்கு இரக்கப்படறவரு”

“அப்புறம்”

“பெரிய பணக்காரரு”

“அவ்வளவுதானா?” என்று சொல்லிவிட்டு ஆர்.ஆர்.எம். அவள் மேல் ஊன்றிய பார்வையை விலக்காமல் மிகவும் மிருதுவான குரலில் “ராகினி என் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசாம எனக்காக நீ ஒரு உதவி செய்யணும்.”

“என்ன சார், நீங்க போய் எங்கிட்டே” தடுமாறினாள் ராகினி.

“நான் இப்ப உங்கிட்ட சொல்லப்போற விஷயத்த யாருக்கும் சொல்லமாட்டேன்னு மொதல்ல சத்தியம் பண்ணனும். அப்புறமா தான் சொல்லுறன்”

ராகினி யோசனையோடு மூன்றாவது தளத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மனசு குழம்பி கேள்விகள் முளைத்து எழுந்தன.

“என்ன இது இப்பிடி யோசிக்கிற. சரி. அப்போ வேணாம் ராகினி. நான் புறப்படறேன்.” ஆர்.ஆர்.எம். சுருங்கின முகத்தோடு எழுந்தான்.

ராகினி, கைகளைப் பிசைந்து கொண்டாள். சமாளித்துக் கொண்டு, “உக்காருங்க சார்” என்றாள்.

ஆர்.ஆர்.எம்மின் முகம் லேசாக மலர்ந்தது. உட்கார்ந்தான்.

https://telegram.me/aedahamlibrary

“குட் கேர்ள். நான் நெனச்சது சரியாப்போச்சு.”

“சொல்லுங்க” என்றாள் ராகினி.

“நீ சத்தியம் பண்ணணும் ராகினி. மூணாவது ஆளுக்கு இந்த விஷயம் தெரியவே கூடாது.”

“சத்தியமா. முப்பாத்தம்மா மேல சத்தியமா. எம்புருசன் மேல சத்தியமா.”

“நான் உன்ன நம்பறேன்” என்று சொல்லிவிட்டு ஆர்.ஆர்.எம். விஷயத்தைச் சொன்னான். ராகினி அதைக் கேட்டதும் அதிர்ந்து போய் நின்றாள்.

மூன்றாவது மாடியிலிருந்து நாலாம் ஐந்தாம் மாடிகளுக்கான சாரங்கள் வேகமாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன. கம்பிகளும் சாரத்தடிகளும் சிமிண்ட் மூட்டைகளும் புதிதாக வந்து இறங்கின. மத்தியானத்திலிருந்து பத்து பேர் புதிதாக வேலைக்கு வந்திருந்தார்கள். தற்காலிகமாக இன்னொரு ஷெட் போடப்பட்ட மின்சார உபகரணங்கள், லிப்ட் போடுவதற்கான கம்பிகள் ஆகியவை அங்கே வைக்கப்பட்டன.

ராகினி கணக்கு விபரங்கள் எழுதிய நோட்டுப் புத்தகங்களை உள்ளே கொண்டுபோய் வைத்தாள். பிறகு அனுமந்துவைக் கூப்பிட்டாள்.

“என்னக்கா?” என்றவாறு அங்கே வந்தான் அனுமந்து.

“அனுமந்து நீ இப்ப உடனே கடைக்குப் போகணும்.”

“சரிக்கா “

“மூணு சூட்கேசும் பெரிய பூட்டும் வாங்கியாரணும்.”

“என்னா சைசு சூட்கேஸ்க்கா?”

“ரொம்பப் பெரிசுமில்லாம சிறுசுமில்லாம அஞ்சாறு செட்டு துணிமணி வைக்கறாப்பல மூணு சூட்சேசுங்க வாங்கியாயேன்.”

“ஏங்க்கா ஊருக்குப் போறியா?”

“பேசாம போய் சொன்னத வாங்கிட்டு வா.” அவளை ஏறிட்டான் அனுமந்து. “ஏங்க்கா இப்பிடி உம்முன்னு

https://telegram.me/aedahamlibrary

இருக்கறே”

“சீக்கிரமா போ” என்று சொல்லிவிட்டு வெளியே பார்த்தாள் ராகினி. ஆர் ஆர்.எம். சொன்னதில் ஐம்பது சதவீத வேலையை செய்து முடித்துவிட்டது போலிருந்தது அவளுக்கு. வெளியே அழகப்பனின் லாரி செங்கற்களோடு வந்து நின்றது.

# 18

**கொா**த்துக் கரண்டியும் மட்டப் பலகையும் இரண்டாவது தளத்திலிருந்து சட்டென்று கீழே விழுந்ததும் அஞ்சலை திகைத்துப்போய்விட்டாள். கீழே இருந்து சிமெண்டும் சரளைக் கற்களும் நிறைந்த தலைச்சுமையுடன் சாரத்தின் மேல் ஏறி வந்துகொண்டிருந்த கம்சலையின் கால்மீது கொத்துக் கரண்டி விழுந்த வேகத்தில் ரத்தம் பீரிட்டது “அய்யோ...” என்று கம்சலை துடித்துப் போனாள்.

“என்ன. என்னாச்சு?”

“அய்யோ வெரலு போச்சே”

“ஒதுங்கிப் போ”. காசி கீழ்த் தளத்துக்கு ஓடி வந்தான்.

கம்சலையின் இரண்டு விரல்கள் தனியாகத் தொங்கின. வேகமாகக் கீழே விழுந்த கொத்துக்கரண்டி சொல்லி வைத்தாற்போல் அந்த விரல்களைத் துண்டாடியிருந்தது. அறுந்து தொங்கும் சதையும் ரத்தமும் தரையை நனைத்தன.

“அய்யய்யோ.” சொல்லிக்கொண்டே கம்சலை சரிந்தாள். காசிக்கு தலையைச் சுற்றியது. நெற்றிப் பொட்டுகளை அழுத்திப் பிடித்துக்கொண்டான்.

சரிந்து கிடந்த மணல்மேடு போல தரைமேல் விழுந்து கிடந்த கம்சலையிடம் போன அன்னம். தனது முந்தானையை சர்ரென்று கிழித்தாள். தொங்கிக்கிடந்த விரலை அடுத்திருந்த ரத்தக் காயத்தை துடைத்துவிட்டு காசியின் பக்கம் திரும்பி, “காசி, கொஞ்சம் தண்ணி குடுப்பா” என்றாள். காசி தன்னுடைய ஷெட் பக்கம் ஓடினான். அப்போதுதான் ராகினி எங்கோ போய்விட்டு திரும்பி வந்து

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தாள். அவளோடு காவேரியும் வந்து கொண்டிருந்தாள். பதட்டத்தோடு வந்த காசியைப் பார்த்து ராகினி பரபரப்பாக, “என்ன? என்ன ஆச்சு? சொல்லுங்க” என்றாள்.

நடந்ததை ஒருவரியில் சொல்லி விட்டு காசி தண்ணீர் எடுப்பதற்காக ஓடினான். படபடவென்று வந்தது ராகினிக்கு. ஒரு நொடியில் சமாளித்துக் கொண்டு வேகமாக கீழ்த்தளத்துக்குப் போனாள். காவேரியும் அவளைத் தொடர்ந்தாள். அதற்குள் தண்ணீர்ச்செம்பும் கையுமாக காசி வந்தான்.

கம்சலையின் ரத்தம் ஒழுகும் காலைப் பார்த்ததும் காவேரி திடுக்கிட்டுப் போய்விட்டாள். அன்னம் துணியைத் தண்ணீரில் நனைத்து கம்சலையின் விரல்களை ஒன்றாகக் கட்டினாள்.

“சீக்கிரமா ஆஸ்பத்தரிக்குப் போவணும்.”

“மூஞ்சில தண்ணி தெளி.”

“சூடா காப்பி வாங்கி வா”

“சோடாவாச்சும் குடுங்க, மயக்கமாயிட்டாப்பல தெரியுதே.”

காசி ஷெட்டை நோக்கி ஓடினான். காவேரி ராகினியைப் பார்த்தாள். ராகினி பதட்டத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் நின்றாள்.

“ஆஸ்பத்திரிக்கு உடனே போயிடணும். ரத்தமாக் கொட்டுதே” ராகினி பதட்டத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் நின்றாள்.

“ஆஸ்பத்திரிக்கு உடனே போயிடணும். ரத்தமாக் கொட்டுதே”. ராகினி ஒன்றும் பேசாமல் சீனிவாசனைப் பார்த்தாள். “சீனி, ஓடிப்போய் தெரு முனயில இருந்து எதுனா ஆட்டோ கூட்டிக்கினு வாயேன்”. சீனிவாசன் ஒரே ஓட்டமாக ஓடினான்.

“சரி, மத்தவங்க போய் அவங்கவங்க வேலயப் பாருங்க” என்றாள் ராகினி.

அஞ்சலை எரிச்சலோடு ராகினியைப் பார்த்தாள். “கம்சல போனவாரம் முழுசும் ஜொரம்னு கெடந்தா. என்ன பண்ணப்

https://telegram.me/aedahamlibrary

போறாளோ.” கம்சலையின் முகம் வலியால் சுருங்கி நெரிந்தது. கண்களைத் திறக்காமலே ஈனஸ்வரமாக முனகினாள். அவள் கைகள் லேசாக நடுங்கின. ஆட்டோ வரும் சத்தம் கேட்டது.

காசி காபி டம்ளரை ராகினியிடம் கொடுத்தான். ராகினி அதை அஞ்சலையிடம் கொடுத்தாள். அஞ்சலை, கம்சலையின் தலையைத் தனது மடியில் தாங்கி அவளுக்குக் காபியை வாயில் ஊற்றினாள். அன்னம் பக்கத்திலிருந்த முறத்தினால் கம்சலைக்கு விசிறிவிட்டாள்.

“ஆட்டோ வந்திரிச்சி” என்றபடி சீனி ஓடி வந்தான்.

“கம்சலை கூட தொணைக்கு யாரு போறது?” என்று ராகினி அஞ்சலையைப் பார்த்துக் கேட்டாள்.

“நான், அன்னம் அக்கா. ரெண்டு பேரும் போதும்.”

“யாருனா ஆம்பளையாளுங்குகூட போனாப் பரவால்ல” என்றாள் தனம்.

“ஆமா”, என்றாள் அஞ்சலை. “யாருனா ஒரு ஆளு வாங்க”

“நான் வரட்டுமா?” என்று ராகினியைப் பார்த்தவாறே காசி கேட்டான்.

“வா” என்றாள் அஞ்சலை. ஆட்டோக்காரனுக்கு தர்ரதுக்கு துட்டு சரிபண்ணணுமே?” என்று கேள்வியுடன் அஞ்சலை ராகினியைப் பார்த்தாள்.

“உங்ககிட்ட எதுனாக்கிதா” என்று காசி விசாரித்தான்.

“கம்சலை கதியத்தவ. ஒணர்கிட்ட சொல்லி நீதாம்மா எதனாச்சும் வாங்கிக் கொடுக்கணும். இப்ப ஆஸ்பத்திரிக்குப் போறதுக்கு உங்கையிலெயிருந்து எதுனா குடுத்துட்டு அப்பறமா ஓணர்கையில் வாங்கிக்கம்மா” என்று லெச்சுமிக்கிழவி ராகினியிடம் சொன்னாள்.

“நல்லாக்கிது. இங்க யாரு கிட்டக்கிது துட்டு?” என்றாள். ராகினி.

“அய்யோ அம்மா” என்று முணகினாள் கம்சலை.

காவேரி வேதனை பொங்கும் மனத்துடன் கம்சலையைப் பார்த்தாள். பிறகு காசியையும் அன்னத்தையும் மாறி மாறிப்

https://telegram.me/aedahamlibrary

பார்த்தாள்.

“ஆட்டோவுக்கு எவ்வளவு துட்டு ஆவும்?”

“இருபது ரூபா கேப்பாங்க. அப்பறமா மருந்து, மாத்திரைன்னு சீட்டு எழுதிக் குடுப்பாங்க அத்த வாங்கணும்.”

“சரி, அப்ப கொளம்புங்க. எங்கிட்ட கொஞ்சம் துட்டுக்கிது. நான் தர்ரேன்” என்றாள் காவேரி.

காவேரி தனது கைக்குள் வைத்திருந்த சின்னஞ்சிறு பர்சை விரித்து ஐந்து ரூபாய், இரண்டு ரூபா என்று அழுக்கேறிக்கிடந்த நோட்டுக்களை எடுத்து எண்ணினாள். முப்பத்திநாலு ரூபாய் தேறியது. அதை காசியிடம் நீட்டினாள்.

“பொறப்படுங்க.”

“மகராஜி பெத்தது. நல்லாயிருக்கணும். நீயி” என்று அவள் கன்னத்தை வழித்து அன்னம் நெட்டி முறித்தாள். ஆட்டோ அங்கிருந்து புறப்பட்டது.

காவேரி ஷெட்டில் இருந்தபடியே அந்தக் கட்டிடத்தில் வேலை செய்து கொண்டிருந்த பெண்களை பார்த்துக்கொண்டிருந்தாள். ஆண்கள் இளம்பெண்கள் சிறுவர்கள் கிழவிகள் என்று எத்தனை விதமான தொழிலாளர்கள். ஒடிசலான இடுங்கிய கண்களுடனான பார்வைக்கு வேதனையைத்தரும் மனிதர்கள். வாழ்விலும் தொழிலிலும் எந்தப் பாதுகாப்பும் அற்ற மனிதர்கள்.

“காவேரி” என்றவாறு உள்ளேயிருந்து வந்த ராகினி 'டிபன் சாப்டுறியா?' என்று கேட்டாள்.

“வேணாம்.”

“வர்ரப்ப பசி, பசின்னியே”

“இங்க இருக்கறவங்க நெலமயயும் கம்சலை பட்ட பாட்டையும் பார்த்ததும் பசியே மறந்து போயிடிச்சி.”

“சரியாப் போச்சு போ”

“அந்தப் பொண்ணு கம்சல ரொம்பப் பாவமில்ல அண்ணி?”

“ஆமா. பாவம். ரெண்டு வெரலு போயிடிச்சி. காயம் ஆற

https://telegram.me/aedahamlibrary

எத்தினி நாளாவுமோ”

“கம்சலைக்கு ஓணர் எதுனா உதவி பண்ணுவாரா அண்ணி?”

“நமக்கு என்னா தெரியும்”

“இல்ல வேல பண்ணிக்கினு இருக்கச் சொல்லதானே கம்சலக்கு வெரலு போச்சு, ஞாயமாப் பார்த்தா அவர் உதவி பண்ணியாவணும் தானே?”

“அப்பிடி கண்டீஷனா சொல்லிட முடியுமா? அவராப் பாத்து பெரிய மனசு பண்ணி அய்யோ பாவம்னு நெனச்சா உண்டு. அவ்வளவுதான்.”

“இவங்களா கேக்க மாட்டாங்களா?”

“நா என்னாத்தக் கண்டேன்”

“நீங்க சொல்ல மாட்டீங்களா?”

ராகினி மௌனமாக நின்றாள்.

“நீங்க படிச்சவங்க. வெவரம் தெரிஞ்சவங்க, ஓணர்கிட்ட எடுத்துச் சொல்லி ஞாயமா கம்சலைக்கு என்ன பண்ணனுமோ அத நாம்பதான் பண்ணணும். அந்தப்பொண்ணு பாவமில்ல. நீங்க சொன்னா ஓணர் கேட்பாருங்கறாங்க” காவேரியின் பார்வை மேல்தளத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பார்த்துவிட்டு மீண்டும் ராகினியின் மேல் படர்ந்தது.

“இவங்க நம்பளப்போல ஏழப்பட்ட ஜனங்க. அண்ணி நம்பளலதான் இவங்க கஷ்டத்தப் புரிஞ்சுக்க முடியும். நாமதான் இவங்களுக்கு சப்போட்டா இருக்கணும்” என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே விம்மலும் கதறலுமா ஓடி வந்தாள் கம்சலையின் அம்மா பங்கஜம்.

“எம்மவ எங்க. அவளுக்கு என்னா ஆயிடிச்சி” என்று கேட்டு கதறினாள் அவள்.

“பொறுமயா இரும்மா. இப்ப என்ன ஆயிடிச்சி” மேல் தளத்தில் இருந்து ரங்கன் ஓடிவந்தான்.

“பாட்டி, கம்சல அக்காவோட ரெண்டு வெரலும் தெறிச்சிருச்சி. ரத்தமா ஊத்திச்சி ஒரு பக்கிட்டி ரத்தம் போயிருக்கும்” என்றான் அய்யப்பன்.

https://telegram.me/aedahamlibrary

“அய்யோ” என்று தலையில் அடித்துக்கொண்டு மண்ணில் உட்கார்ந்து அலறத் தொடங்கினாள் கிழவி. அவள் அழும் சத்தத்தைக் கேட்டு மேல்தளத்தில் வேலை செய்துகொண்டு நின்ற வர்கள் கீழே இறங்கி வந்தார்கள். லெச்சுமிக்கிழவி, பங்கஜத்தருகே வந்து உட்கார்ந்து அவளுடைய கையை ஆதரவாகப்பற்றி “பங்கஜம் உம்மவளுக்கு ஒண்ணும் ஆவல. என்னாத்துக்கு வீணா பேஜாரு படற. பேசாம இரு. என்றாள் பரிவுடன்.

“எக்கா” என்று விம்மலோடு லெச்சுமியின் முகத்தைப் பார்த்தாள் பங்கஜம்.

“எம்மவளுக்கு என்னா ஆச்சு?”

“ஒண்ணும் ஆகல தாயி. கொத்துக்கரண்டி காலுலே பட்டுடிச்சி. அவ்வளவுதான்.”

“விரல் போயிடிச்சாமில்ல.”

“அதெல்லாமில்ல. நீ என்னாத்துக்கு வீணா அழுவறே? கொஞ்சம் காயம். அம்புட்டுத்தான்”

பங்கஜம் மூக்கைச் சிந்தினாள்.

“ரங்கன் சொன்னானே.”

“அவனுக்கு என்னா. சின்னப்பசங்க அப்பிடித்தான் எல்லாத்தயும் பெரிசு பண்ணி சொல்லிக்கினுருப்பானுங்க. சித்தாளு வேலக்குன்னு வந்துட்டா காயம் படாம, அடிபடாம, வலி படாம வேலையாவுமா?”

“கம்சலய எங்கக்கா எடுத்துக்குனு போயிங்கறாங்க. நான் அவளைப் பார்க்கணும்.”

“காசி தம்பி வந்தாத்தான் தெரியும். தெரிஞ்சதும் போலாம். உங்ககூட நானும் வர்ரேன். தெகிரியமா இரு”. பங்கஜம், முந்தானையால் கண்களைத் துடைத்துகொண்டாள்.

வெளியே கேட்டில் ஆர்.ஆர்.எம்.மின் படகுக் கார் வந்து நின்றது.

# 19

**ஆ**.ர்.ஆர்.எம் கோபத்தில் இருப்பதைக் கண்டதும்

https://telegram.me/aedahamlibrary

அங்கிருந்தவர்கள் மெல்ல மெல்ல அங்கிருந்து நகர்ந்தார்கள். பங்கஜம் மட்டும் அழுது கொண்டேயிருந்தாள். அவளுக்கு ஆர்.ஆர்.எம்மைத் தெரியாது. ராகினி மௌனமாக நின்றாள்.

“யாரும்மா நீ? இப்ப என்னத்துக்கு இப்படி ஓயாம அழுவற. நிறுத்தும்மா உன் அழுகய” என்றார் ஆர்.ஆர்.எம். “ராகினி, இந்தம்மா இங்கியா வேல செய்ய றாங்க? எனக்குப் புரியலியே. இதென்ன இது? கொத்துக்கரண்டி, மட்டப்பலகையெல்லாம் இப்படி விழுந்து கெடக்குது. என்ன ஆச்சி?”

ஆர்.ஆர்.எம் எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் பாறையென இறுகிய முகத்துடன் நின்றான். கண நேரத்துக்குப் பின் திடீரென நினைத்துக் கொண்டவனாக சட்டென்று கேட்டான். “அதெல்லாம் இருக்கட்டும். வேலையைப் பார்க்காம இப்ப காசி எங்கே போய்ட்டான்?” ராகினியின் முகம் சிறுத்தது,

“அவரு ஆஸ்பத்திரிக்குத்தான் போயிருக்காரு.”

“என்னா அநியாயம்? வேலக்கு வந்தவங்கள்ள பாதிப்பேரா ஆஸ்பிடலுக்குப் போறது? ராகினி, நீயும் வாயத் தொறந்து ஒண்ணும் சொல்லாம சும்ம இருந்தியா? நான் என்ன கள்ள நோட்டா அச்சடிக்கிறே. ஒழச்சு சம்பாரிச்ச காசத்தானே இவங்களுக்கு சம்பளமுன்னு அழுது தொலக்கறேன். இப்படிப் பண்றாங்களே?” என்று சலித்துக்கொண்ட ஆர்.ஆர்.எம். காது கொடுத்துக் கேட்கமுடியாத வசைமொழிகளைப் பொழியத் தொடங்கினான்.

“எம்பொண்ணு கதியப் பாத்தியா சார்” என்றாள்.

“ஏம்மா நானா உம்மவளை காயம்பட்டுக்கச் சொன்னேன்? வேலை செய்யறவ வேலமேல கவனமா, கண்ணுங்கருத்துமா, பார்த்து செய்யவேணாம்?”

பங்கஜம் விம்மினாள். “எங்கவூட்ல கம்சல வேல செஞ்சிதான் அடுப்பெரிஞ்சிக்னு இருந்திச்சி. இப்டி ஆயிடுச்சே. நான் என்னா பண்ணப்போறேன் ஆத்தா. என்னப்பெத்தவளே”

காவேரி அப்போதுதான் ஆர்.ஆர்.எம் நின்றிருந்த இடத்துக்கு

https://telegram.me/aedahamlibrary

அருகே வந்தாள். ஆர்.ஆர்.எம் மின் பேச்சு காதில் விழுந்து அவள் மனதில் எரிச்சலை ஏற்படுத்தியது. ஆர்.ஆர்.எம் அலட்சியமாக அவளை “யாரும்மா நீ?” என்று கேட்டான்.

காவேரி வாயைத் திறப்பதற்குள் முந்திக்கொண்டு ராகினி, “என் நாத்தனாருங்க. காவேரின்னு” என்றாள்.

“காசியோட தங்கங்சியா?”

“ஆமா”

காவேரியை மேலுங்கீழுமாகப் பார்த்தான் ஆர்.ஆர்.எம். “என்னா வேல பண்ணுது?”

“வூட்லதான் சும்மாக்கறா. ஆனா படிச்சிங்குது”

“அப்படியா” காவேரியைப் பார்த்துப் புன்னகை புரிய முயன்றான் ஆர்.ஆர்.எம்.

பங்கஜம் மீண்டும் அழுதாள். குமுறினாள்.

“சார் எம் பொண்ணை நான் எங்கண்ணால பாக்கணும் சார்”

“இதென்ன தலைவலியாப் போச்சு. இந்த அம்மாவை மொதல்ல இங்கேயிருந்து போவச் சொல்லுங்க. வூட்டுக்காவது போவச் சொல்லு” என்று ஆர்.ஆர்.எம் சொல்லி கத்தினான்.

“கம்சலையோட கால்வெரலுங்க இரண்டும் துண்டாப் போயிட்டதுங்க. ரத்தம் நெறைய கொட்டிருச்சிங்க” என்றாள் காவேரி.

“அதுக்கு நான் என்னம்மா பண்றது?”

“உங்க கட்டடத்துல வேல பார்த்துக் கிட்டிருக்கறப்பதான அவளுக்கு இப்படி ஆயிருக்குது?”

“அதுக்கு நான் என்னாம்மா பண்றது. நீ என்னமோ படிச்சவள்னு ராகினி சொல்லுது. நீ என்னடான்னா கொஞ்சம்கூட அறிவில்லாம பேசறியே”

“என்னம்மா சொல்ற நீ? ரெண்டு வெரலு போயிடிச்சா. அய்யோ. அய்யோ. மாரியாத்தா எம்பொண்ணுக்கு மெய்யாலுமே ரெண்டு வெரல் போயிடிச்சா” என்று வாயில் அடித்துக் கொண்டாள் பங்கஜம்.

“ச்சே. வாய மூடும்மா” என்று சத்தம் போட்டான்

https://telegram.me/aedahamlibrary

ஆர்.ஆர்.எம்.

“பெத்தவ வயறு துடிக்காதா சார்?” என்றாள் காவேரி எரிச்சலுடன்.

ராகினி அதிர்ச்சியோடு காவேரியைப் பார்த்தாள். அவள் முகத்தில் வெறுப்பு படர்ந்திருந்தது.

“இப்ப, நீ என்னை என்னம்மா பண்ணச் சொல்ற” என்று காவேரியைப் பார்த்துக் கேட்டான் ஆர்.ஆர்.எம். கொஞ்சம் அளவுக்கு மேலேயே வார்த்தைகளைக் கொட்டிவிட்டோமோ என்ற குறுகுறுப்பும் தொழிலாளர்கள் வேலையை நிறுத்தி தொல்லை தந்துவிடுவார்களோ என்ற எண்ணமும் அவனுக்குள் மேலோங்கியிது. “சொல்லும்மா. தைரியமா சொல்லு?”

“ஏழப்பட்டவங்க. கம்சலய நம்பியிருக்கற குடும்பம். நீங்க அவங்களுக்கு உதவணும்.”

“சரி அவ்வளவுதானே. செஞ்சுட்டாப் போச்சு.”

காவேரி திகைத்துப்போனாள். அந்த வார்த்தைகளை ஆர்.ஆர்.எம். நையாண்டியாகச் சொல்கிறாரா என்று கூட நினைத்தாள். ராகினியும் ஆச்சரியத்துடன் ஆர்.ஆர்.எம்.மையும் ராகினியையும் மாறிமாறிப் பார்த்தாள். ஆர்.ஆர்.எம். பாக்கெட்டிலிருந்த பர்சை எடுத்தான். அதற்குள்ளேயிருந்து பத்து, பத்து ரூபாய் நோட்டுக்களை உருவி, பங்கஜத்திடம் நீட்டினான். “இதைப் புடிம்மா. உம்பொண்ணு பேரு கம்சலைதானே. அந்தக் கம்சலைக்கு உடம்பு சரியானதும் வேலக்கு அனுப்பு போ”

பங்கஜம் அந்த நோட்டுகளை இருகைகளையும் நீட்டி வாங்கிக்கொண்டாள். கண்களைத் துடைத்தபடி, “மகராசனா இருக்கணும்” என்றாள்.

“போதுமா?” என்று காவேரியின் மீது ஒரு பார்வையை வீசிய ஆர்.ஆர்.எம். ராகினியிடம், “ராகினி, இன்னைக்கு கம்பி, சிமென்டு எல்லாம் வரும். பார்த்துக்க. ரசீதுல எதுனா கோல்மால் பண்ணுவானுங்க” என்றான்.

காவேரி திகைப்பிலிருந்து மீளாதவளாக நின்றிந்தாள்.

அப்போது அங்கே அவசர அவசரமாக வந்தான் காசி. ஆர்.ஆர்.எம்.மைப் பார்த்து குழம்பியவனாக நின்றான்.

https://telegram.me/aedahamlibrary

ஆர்.ஆர்.எம். சாதாரணமாகக் கேட்டான். “காசி! என்னப்பா ஆச்சு?”

“ரெண்டு வெரலு போயிடிச்சி சார். ஆஸ்பத்தியில் அட்மிட் பண்ணச் சொல்லிட்டாங்க”

“எந்த ஆஸ்பிடல்?” காசி பதில் சொன்னான்.

“மத்தபடி பயப்படறதுக்கு ஒண்ணுமில்லியே”

“மயக்கம் தெளியல”

“அவ கூட யார் இருக்கறாங்க?”

“அஞ்சல.”

“அது யாரு?”

“நம்பகிட்ட வேல செய்ற பொண்ணு.”

“காசி நீ ஒண்ணு பண்ணு. இந்த அம்மாளை ஆஸ்பிடலுக்கு அழச்சிட்டுப் போ” என்றான் ஆர்.ஆர்.எம். “அப்புறம் இன்னொரு சங்கதி. நம்ப கட்டட வேல ரொம்ப ஸ்லோவா இருக்குதுப்பா. வேற ஒரு கட்டட வேல வேற தொடங்க வேண்டியதாயிருக்குது. அதயும் உடனடியாச் செஞ்சாவணும். மழக்காலம் வந்துடிச்சின்னா ரொம்பக் கஷ்டமாயிடும். புரியுதா. இன்னும் இருபது பேர் வேலக்கி வச்சிக்கிட்டாலும் சரிதான். வேல ஆவணும். சாயங்காலம் வர்ரப்ப கொத்தனார்கிட்ட பேசிக்கறேன். நீயும் அப்ப இங்கியே இரு என்ன சொல்றே?” ஆர்.ஆர்.எம் எதிரே தெரியும் கட்டிடங்களைப் பார்த்தபடியே சொன்னான். “உங்ககிட்ட இன்னொரு விஷயம் சொல்லணும். புதுசா கட்டிடம் கட்றப்ப நெறயக் கணக்கு வழக்குல்லாம் வரும். ராகினிக்கு இப்பவே கைநிறய வேல. மூச்சு முட்டற வேல புதுசா. ஒரு ஆளை போட்டுக்கலாமான்னு பாக்கறேன்.”

காசி திடுக்கிட்டவன் போல ராகினியைப் பார்த்தான். அவள் முகம் சட்டென வாடியது. வேறு என்னென்னவோ ஆசைகளோடு இருக்கும் தன் சின்ன நாத்தனாரும் இதே தொழிலில் விழுந்து, இதே ஆர்.ஆர்.எம்மிடமா வேலை பார்ப்பதா என்று யோசித்தாள்.

“என்னப்பா சொல்றே?” என்றவன் ராகினியைப் பார்த்து. “நீ என்ன சொல்றே ராகினி” என்றான்.

https://telegram.me/aedahamlibrary

“சரிங்க” என்றாள் ராகினி அரைமனதாக.

“அது உங்க நம்பிக்கைக்குரிய ஆளா இருக்கறதுதான் முக்கியம்” என்றான் ஆர்.ஆர்.எம்.

ராகினியும் காசியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஆர்.ஆர்.எம். புன்னகையுடன் சொன்னான். “நம்ப காவேரியைப் பார்த்தா அந்த வேலைக்குப் பொருத்தமானவளா இருப்பான்னுதான் எனக்குப் படுது. நீங்க ரெண்டு பேரும் என்ன சொல்றீங்க?”

காவேரியின் மனத்தில் சந்தோஷம் பெருகியது. எதுவும் பேச முடியாதபடி ஏதோ ஒரு விதமான பரபரப்புடன் அவள் நின்றாள். தனக்கும் ஒரு வேலை கிடைத்து விட்டது.

காசி ஆச்சர்யம் தாங்காமல், “சார்! என்ன சார்” என்று தடுமாறினான்.

“காவேரி! உனக்கு இஷ்டம்தானே?” என்றார் ஆர்.ஆர்.எம். காவேரி தலையை ஆட்டினாள். ராகினி நெற்றியைத் தடவியபடி ஆர்.ஆர்.எம்மை பார்த்தாள். அதை லட்சியம் செய்யாமல் ஆர்.ஆர்.எம். கிளப்பிப் போனான்.

சாரக்கம்புகளும், கம்பிகளும், பலகைகளும் இரண்டு லாரிகளில் அங்கு வந்து இறங்கின. கன்னையனும், காத்தமுத்துவும், சிட்டிபாபுவும் லாரிகளில் வந்த பொருட்களை அந்தந்த இடங்களில் இறக்கிக் கொண்டிருந்தனர்.

ராகினியின் மனம் ஒரு நிலையில் இல்லை. என்னவென்று புரியாத சங்கடம் இதயத்தைப் பிசைந்தது. ஆர்.ஆர்.எம்மின் சுயநலம், வேலை நடந்தால் போதும் வேலையைச் செய்து கொண்டிருக்கிற மனிதர்கள் எக்கேடு கெட்டால் என்ன என்று எண்ணும் போக்கு, பத்தையும் நூறையும் கொடுத்து, ஏழைகள் வாயை அடைப்பது, ஏய்ப்பது என்ற அவ்வளவையும் நினைத்து அப்படிப் பட்டவன் தரும் வேலையை காவேரியைப் போன்ற ஒருத்தியும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வதைப் பற்றி யோசிக்க வைத்தது. கணக்கெழுதும்போது அடிக்கடி தடுமாறினாள். விரலைக் கடித்துக்கொண்டாள்.

https://telegram.me/aedahamlibrary

“என்னம்மா உனக்கு என்ன ஆச்சு?” என்று அவளைப் பார்த்துக் கேட்டான் சிட்டிபாபு.

“ஒண்ணுமில்ல.”

“பொய் சொல்றே. நீ கணக்கெழுதினா ஒரு தப்பு வராமா எழுதுவியே. இன்னிக்குப் பார்த்து ஏன் இப்படி அடிச்சு அடிச்சு எழுதறே” என்றவன் காசியின் பக்கம் திரும்பி, “காசி, ராகினிக்கு என்ன ஆச்சு?” என்றான் சிட்டிபாபு.

சிட்டி பாபுவின் பக்கம் திரும்பி, “ஒத்தைத் தலைவலியா இருக்குதுண்ணே “ என்றாள்.

“அய்ய மனுஷன் ஒரேடியா கொண்ணு போடாம அது மொள்ள மொள்ள மென்னுல்ல துப்பிக்கிட்டிருக்கும். கடுகு இல்லேன்னா சுக்க அரச்சு பத்துப் போட்டுப் பாரேம்மா” என்றான் சிட்டிபாபு.

ராகினி அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவள் போல மௌனமாக இருந்தாள். மூன்று பேர் உள்ளே வந்தார்கள். காசி அவர்களைப் பார்த்தான்.

“யாருங்க வேணும்?”

“நாங்க கொத்தனாருங்க. அய்யா இங்க வரச்சொன்னாரு. புதுசா கட்டடம் கட்டணும், அஸ்திவாரம் போடணும்னு சொன்னாரு”

“அப்டியா. அப்ப இருங்க. இன்னும் கொஞ்ச நேரத்துல அய்யாவே வந்துடுவாரு” என்றான் காசி.

“உங்களோட வேல செய்யறதுக்கு எத்தினி பேர் வருவாங்க”

“ஒரு முப்பது பேர் வருவாங்க”

“அடேயப்பா” என்றான் சிட்டிபாபு.

“மழ ஆரம்பிக்கறதுக்குள்ள கட்டட வேலய முடிச்சுக்கணுமின்னு அய்யா சொல்றாரு. அதனால் வெளியூர்ல இருந்தே வேலக்கு ஆளுங்கள அழைச்சார்ரோம்.”

“அவங்கள்ளாம் எங்க தங்குவாங்க?”

“அட! இதென்னங்க பெரிய பிரமாதம். பின்னால தெரியற பொட்டல்லே, இல்லேன்னா அந்தா தெரியற மரத்துக் கீளே.

https://telegram.me/aedahamlibrary

நாலு குடிசையை போட்டுக்கனா போச்சு. ஆறேழு குடும்பங்க. அப்படியே குடும்பம் குடும்பமா வாரவங்கதான. அது என்னான்னா அப்படி வந்தாத்தான் ராப்பகலா வேல செய்யலாம். நமக்கும் பணச்செலவு அதிகமாவாது.”

“அது சரி” என்றான் சிட்டிபாபு.

ஆதிலட்சுமி வருவது காசியின் கண்களில் பட்டது. அவனுக்குச் சந்தோஷமாயிருந்தது. திரும்பி ராகினியைப் பார்த்தான். அவள் கணக்கைச் சரிபார்ப்பதில் ஆழ்ந்து போயிருந்தாள். அவன் ஒன்றும் பேசாமல் கேட் பக்கம் நடந்தான்.

# 20

**ச**ட்டென்று வாடிய ராகினியின் சமுகத்தைக் கண்ட ஆதி லட்சுமி, “என்னம்மா. என்ன ஆச்சு?” என்று கேட்டாள்.

ராகினி அவளை ஏறிட்டுப் பார்தாள்.

“ஒண்ணுமில்ல”

காசி “ஒத்தத் தலவலின்னு கஷ்டப்படறா.” என்று சொன்னான்.

“எப்பப் பாரு பொஸ்தகத்த கையில வச்சிக்கினு கணக்கு கணக்குன்னு எழுதிக்கினே இருந்தா தலய நோவாத என்னா பண்ணும்? எழுந்து இந்தப் பக்கம் வாம்மா. நான் சுக்குப்பத்து போட்டு வுடறேன்”

இதெல்லாம் தன் தலைவலிக்குக் காரணமில்ல. ஆர்.ஆர்.எம் மூலமாக, கணவனுக்கும் குடும்பத்தாருக்கும் தெரியாமல் மனசில் பூட்டி வைத்திருக்கிற ரகசியத்தின் பாரம்தான் அவளுடைய தலைவலிக்குக் காரணம் என்று சொல்ல முடியாமல் திணறினாள் ராகினி.

காசி இருந்த திசையில் நோக்கி ஆதிலட்சுமி பார்த்தாள். காசி புதிதாக வந்த கொத்தனார்களுடனும், வேலையாட்களுடனும் பேசிக்கொண்டு நின்றான்.

மாமியாரின் பேச்சு காதில் விழாதது போல ராகினி விருட்டென்று எழுந்து 'ஸ்டோர் ரூம்' பக்கமாகப் போனாள்.

https://telegram.me/aedahamlibrary

அவளுடைய போக்கைப் புரிந்து கொள்ள முடியாமல் காவேரியும், ஆதிலட்சுமியும் ஒருவரையொருவர் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டனர்.

இரண்டு நாட்களுக்குள் அந்தக் கட்டடத்தின் பின்னால் தெரியும் பொட்டலுக்குள் ஆறு குடிசைகள் கட்டப்பட்டுவிட்டன. ஆறு குடிசைகளுக்குள்ளும் ஆறு குடும்பங்கள். குடிசைகளுக்கு வெளியே கல் அடுப்புகள், சட்டி பானைகள், தட்டுமுட்டுகள் என்று சாமான்கள் நிறைந்து விட்டன. எப்போது பார்த்தாலும் சத்தமாக இருந்தது.

அஸ்திவாரம் போடுகிற வேலை ஆரம்பமானது. அன்று காலையிலேயே கையில் பெரிய நோட்டுகள், பேனாக்களுடன் ஆர்.ஆர்.எம். வந்துவிட்டான். நோட்டுகளை ராகினியிடமும், காவேரியிடமும் கொடுத்தான். புதிய கட்டிடத்துக்கான கணக்கு வழக்குகளைப் பார்க்கிற வேலை காவேரியிடம் ஒப்படைக்கப் பட்டது. புதிய கட்டிடத்தின் கட்டிட வேலைப்பொறுப்பு முழுவதும் வீராசாமியின் வசமே விடப்பட்டிருந்தது. பெயருக்கேற்ற ஆஜானுபாகுவான தோற்றம். அழுத்தமான பேச்சு. பதினைந்து வருடங்களுக்கு மேலாக பெரிய கட்டிடங்களைக் கட்டும் வேலைகளை பொறுப்பெடுத்துச் செய்துவருகிற அனுபவம். கண்டிப்பான மனிதன் என்ற ஒரே காரணத்துக்காவே ஆர்ஆர்.எம் அவரை இங்கே அழைத்து வந்திருந்தான்.

அஸ்திவாரம் தோண்டுகிற வேலை மும்முரமாக நடை பெற்றுக்கொண்டிருந்தது. சுறுசுறுப்பான வேலையாட்கள் தான். ஏழரை மணிக்கே வேலைக்குத் தயாராக வந்து சேர்ந்துவிடுவார்கள். மத்தியானம் கொஞ்சநேரம் சாப்பாட்டுக்காக ஓய்வு. பிறகு பொழுது மங்குகிறவரை வேலைதான்.

'நல்லா வேலை பார்க்கறாங்க நம்ம ஆளுங்க' என்று ஆர்.ஆர்.எம்மிடம் சந்தோஷம் பொங்கச் சொன்னார் வீராசாமி.

ஆர்.ஆர்.எம் முகத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல், “பரவால்ல” என்றான். தொழிலாளிகள் எவ்வளவுதான் மாடாக உழைத்தாலும் அவர்களைப்

https://telegram.me/aedahamlibrary

பாராட்டி ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாது. அது அவர்களுடைய உழைப்புத்திறனைக் குறைத்துவிடும். எப்போதும் அதிருப்தியோடு நடந்து கொண்டால்தான் அவர்கள் நன்றாக வேலை செய்வார்கள் என்பது ஆர். ஆர்.எம்மின் தத்துவம். கடந்த இருபது ஆண்டுகளாக அந்தத் தத்துவத்தையே அவன் இம்மியும் பிசகாமல் கடைப்பிடித்து வருகிறான்.

“முடியறாப்பல இருக்கற அந்தக் கட்டடத்துக்குத்தான் வேலக்கு ஆளு சரியா அமையல. காலையில் கட்டடத்துக்கிட்டே வந்து சேரவே ஒம்பது மணி ஆயிடுது. உள்ளூர்க்காரங்க. அதப் பார்க்கறப்ப அவங்களுக்கு இவங்க கொஞ்சம் பரவாயில்லதான்.” தன் வேலையாட்களுக்குக் கிடைத்த பாராட்டு கொஞ்சம்தான் என்றாலும் அதைக்கேட்டதும் சுருங்கிக் கிடந்த வீராசாமி முகத்தில புன்னகை மலர்ந்தது.

“அதெல்லாம் நம்ம ஆளுங்க வேலயில ரொம்ப கரெக்ட்டா இருப்பாங்க. என்ன ஆனாலும் முணு முணுக்கமாட்டாங்க. எல்லோருமே சொந்தக்காரங்க தான்”

“அப்படியா? ரொம்ப நல்லாதாப்போச்சு.” கறுப்புக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்தவாறே சொன்னான் ஆர்.ஆர்.எம். பிறகு சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவனாக வீராசாமியைப் பார்த்தான்.

“இன்னொன்னும் முக்கியமாச் சொல்லணும்.”

“சொல்லுங்க சார்” பணிவோடு ஆர்.ஆர்.எம்மைப் பார்த்தார் வீராசாமி.

“எங்க பார்த்தாலும் கட்டட வேலங்க நடந்தபடியே இருக்குது. சில சமயங்களிலே கொத்துவேலக்காரங்களுக்கோ சித்தாளுங்களுக்கோ ஒண்ணு ரெண்டு ஆக்சிடெண்ட் கூட நடந்துடலாம். எதுவுமே நம்ப கையிலே இல்ல”

“ஆமாங்க.”

“ஏதோ எதிர்பாராதவிதமா கட்டடம் கட்ற தொழிலாளிங்களுக்கு எதுனா ஆகித் தொலச்சிடுது. கவன்மா இருக்க வேண்டியது அவங்க பொறுப்பு. அதை

https://telegram.me/aedahamlibrary

வுட்டுட்டு பராக்கா இருந்து கையைக் கால ஒடைச்சுக்கிட்டு ரெண்டாயிரம் குடு, அஞ்சாயிரம் குடுன்னு கேட்டா எனக்குப் பிடிக்காது”

வீராசாமி பேசாமல் நின்றார்.

“சொல்லுங்க. எதா இருந்தாலும் சொல்லுங்க. என்கிட்டே எதையுமே ஓப்பனா பேசலாம். சொல்லுங்க” என்றான் ஆர்.ஆர்.எம்.

“அதில்ல. கட்டட வேலக்கு வர்றவங்க எல்லோருமே ஏழப் பட்டவங்க. அன்னன்னிக்கு உழைச்சு அன்னிக்கு செலவுக்கு வழி பண்ணிகிட்டு மானமா பொழைச்சாப் போதும்ன்னு நெனக்கறவங்க. அன்னாடம் சம்பாதிச்சு அன்னாடம் வயித்த ரொப்பிக்கறவங்க. திடீர்னு எதுனா ஆயிட்டா என்னா பண்ணுவாங்க”

“அப்பிடி ஆயிடக்கூடாது. ஆயிட்டாக்கூட எதுனாச்சும் கொடுத்தாகணும்னு நெனக்கறேன். எனக்குத் தெரிஞ்ச வர அப்பிடித்தான் நடந்துருக்குது.”

“எவ்வளவு குடுக்கணும்?”

“ஏதோ நூறு இருநூறு கொடுக்கலாம்னு நெனக்கறேன்”

ஆயிரக்கணக்கில் எதிர்ப்பார்க்காமல், இந்தக் குறைந்த தொகையை வீராசாமி சொன்னாரே என்ற ஆறுதலோடு மனதிற்குள் பெருமூச்சு விட்டுக் கொண்டான் ஆர்.ஆர்.எம். பிறகு லேசான குரலில், “இதுவர நான் அப்படிப் பண்ணதில்ல. இப்ப நீங்க சொல்றீங்கறதுக்காக நெனச்சிப் பார்க்க வேண்டியதாயிருக்குது. சரி. அப்படியே பண்ணிடுவோம். புண்ணியமாவது சேரட்டும்.”

எதிரே இளவயதுப் பெண்கள் பாண்டு சட்டியும், கையுமாய் நடப்பது ஆர்.ஆர்.எம்மின் கண்களில் பட்டது.

“இன்னொண்ணு சொல்லணும்.”

“சொல்லுங்க சார்.”

“ஒழுக்கம் நமக்கு ரொம்ப முக்கியம். வயசுப் பொண்ணுங்களும் வாலிபப் பசங்களும் சேர்ந்து வேல பார்க்கறாங்க. கசாமுசான்னு பேசறது, சிரிக்கிறது அது இதுன்னு எதுனா எசகு பிசகா இங்க நடந்துச்சின்னா

https://telegram.me/aedahamlibrary

எனக்குக் கெட்ட கோவம் வந்துடும்."

"அது சரிங்க. எனக்குக்கூட அதெல்லாம் பிடிக்காதுங்க."

"இந்த காம்பவுண்ட்லே வேல முடியறவரைக்கும் குடித்தனம் பண்ணப்போறாங்க. இங்க இருக்கறவரக்கும் டீசண்ட்டா இருந்துக்கணும்."

"அதெல்லாம் சொல்லிடலாங்க. ஆனா ஒண்ணு." வீராசாமி இழுத்தார்.

ஆர்.ஆர்.எம். அவர் என்ன சொல்லப்போகிறானோ என்று எண்ணியபடி அவனை ஏறிட்டுப் பார்த்தான்.

"இவங்க எல்லாரும் சாமி பக்தருங்க. நாளு கெளமையில கோயிலுக்குப் போகணும்பாங்க."

"அவ்வளவுதானே." சத்தமாகச் சிரித்தார் ஆர்.ஆர்.எம்.

"இந்த காம்பவுண்டுக்குள்ளார அழகா சின்னதா அவங்க இஷ்டப்படி ஒரு கோயில அவங்களே கட்டிக்கட்டும். எவ்வளவு செலவு ஆனாலும் சரி. ஒரு சாமி விக்கிரகத்த நானே வாங்கிக் கொடுத்துடறேன்."

வீராசாமி திகைத்துப் போனார்.

"நாம்ப நம்ப முயற்சியிலே கட்டற கோயிலுக்குப் பலன் அதிகம். அங்கேயிருக்கற சாமிக்குப் பவரும் அதிகம்" என்றான் ஆர்.ஆர்.எம்.

"நீங்க சொல்றதும் சரிதான்."

"அப்ப கோயிலுக்கும் சேர்த்தே அஸ்திவாரம் போட்ருங்க. மேற்கொண்டு அதுக்கு எவ்வளவு செலவாகும்னு சொல்லுங்க"

"அய்யய்யோ. கோயில் கட்றதுக்கு நமக்குக் கூலியே வேண்டாங்க"

"அதெப்படி?"

"நம்ப ஆளுங்க கேக்கமாட்டாங்க. கொடுத்தாலும் வாங்கிக்க மாட்டாங்க."

"எந்தச் சாமி சிலய வைக்கறது?" யோசித்தான் ஆர்.ஆர்.எம்.

"நீங்கதான் சொல்லணும்."

https://telegram.me/aedahamlibrary

“புள்ளையார்தானே ஆதிமுதல்”

“ஆமாங்க”

“அப்ப நான் உடனே ஒரு புள்ளயார் விக்கிரகத்துக்கு சொல்லிடறேன்.”

“அம்மனயும் இவங்க கும்பிடுவாங்க” குறுக்கிட்டார் வீராசாமி.

“அப்படியா” யோசித்தார் ஆர்.ஆர்.எம்.

“பிள்ளையாருன்னா மதிப்பா இருக்குமில்லே. மூணு காம்ப்ளெக்சுக்கு ஒரே கோயில். வாடகைக்கு பல விதமான ஆளுக வருவாங்க. மார்வாடி, சேட்டுக, மேல்ஜாதிக்காரனுங்க, சினிமாக் காரங்கன்னு பெரிய பெரிய ஆளுங்க வருவாங்க.”

“அம்மன் நம்ப சாமிதானே” இழுத்தார் வீராசாமி.

“இல்லயின்னா நான் சொல்றேன். அம்மன் சிலயக் கொண்டாந்து வச்சா அதுக்கு வேற அர்த்தம் வந்துடும். பாக்கறவங்க நான் என்னமோ கஷ்டப்பட்டு மேல வந்த புதுப்பணக்காரான்னு நெனச்சிடுவாங்க. அம்மன் கோயில் இந்த மாதிரி பிளாட்ல வைக்கறதில்ல. பிள்ளயார வச்சிடலாம். அது எல்லாரும் ஏத்துக்கற சாமி” பேச்சை நிறுத்திவிட்டு, என்ன சொல்கிறீர்கள் என்பதுபோல வீராசாமியைப் பார்த்தான் ஆர்.ஆர்.எம். “என்ன நான் சொல்றது. சாமியிலே பிள்ளையாரு என்ன. அம்மன் என்ன, மனசுக்குள்ளதான் எல்லாமே இருக்குது. நீங்க சொன்னா அவங்க ஒத்துக்குவாங்க. சொல்லிடுங்க” என்று பேச்சை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தான் ஆர்.ஆர்.எம்.

**க**ம்சலையைக் கண்டதும் ராகினி திடுக்கிட்டுப் போய் விட்டாள். அக்குளில் ஒரு கட்டையை வைத்துத் தாங்கியபடி எக்கி எக்கி நடந்துவந்த அவளுடைய உருவமே மாறிப்போயிருந்தது. இளைத்துக் குச்சியாகி இருந்தாள். ராகினியைக் கண்டதுதான் தாமதம். அவள் விக்கிவிக்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

ராகினியின் மனம் கம்சலையைக் கண்டதும் நெகிழ்ந்து கசிந்தது. கம்சலையின் காலில் இருந்து இரண்டு

https://telegram.me/aedahamlibrary

விரல்களை வெட்டி எடுத்திருந்தனர். சரியான மருத்துவமும், கவனிப்பும் இல்லாமல் புண் செப்டிக் ஆகிவிட்டிருந்தது. விரல்களைத் தாண்டி பாதத்திலும் பரவி விட்டது. மிகவும் கவனத்தோடு சரியான வைத்தியம் பார்க்கவேண்டும் பார்க்கவில்லையென்றால் பாதம் முழுவதையுமே ஆபரேஷன் பண்ணி முழுசாக வெட்டி எடுக்க வேண்டி வந்துவிடும் என்று டாக்டர் சொன்னது ராகினியின் காதுவரை வந்திருந்தது.

"நான் என்ன பண்ணப் போறேனோ தெரியல. வலி தாங்க முடியல. உசுரு போகுது. அப்பப்ப ஜுரம் வேற வந்துடுது. எதுக்கோசரம் பொளச்சிருக்கணும். செத்துப் போயிரலாம்னு கூடத் தோணுது" விம்மிவிம்மி அழுதாள் கம்சலை.

"சாப்பிட்டியா?" பரிவோடு கேட்டாள் ராகினி. "சாப்பாடு கிடக்கட்டும்க்கா" என்று முணுமுணுத்தாள்.

"சாப்பிட்டியா இல்லியா சொல்லு"

"வருமானம் இல்ல. வேல இல்ல. சாப்பாட்டுக்கு எங்கக்கா போறது. கடன உடன வாங்கி நேத்து ராத்திரி அம்மா கஞ்சி காச்சி குடுத்துடுச்சி. அதோட சரி."

"சரி. வா நீ மொதல்ல எதுனா சாப்பிடு"

"இருக்கட்டும்க்கா"

"ஏம்மா அப்படி சொல்றே"

"இல்லக்கா. மனசு வர்ல. இன்னிக்கு காலயிருந்து அம்மாவும் சாப்பிடல."

"அம்மாவுக்கும் குடுக்கறேன். வாம்மா"

"இந்த வேளை சாப்பாடு நீங்க தர்ரீங்க. நாளைக்கு யாரு குடுப்பாங்க?"

ராகினிக்கு சுளீரென்றது.

"அக்கா, நான் இங்க வந்தது ஒரு வேளை சாப்பாட்டுக் கில்லக்கா."

"எனக்கு ஒரு வேல போட்டுக் குடுங்க"

"ஒன் உடம்பு இருக்கற நெலமயில ஒன்னால என்ன வேல பண்ண முடியும் கம்சல?"

https://telegram.me/aedahamlibrary

“ஏங்க்கா. வெரலுதானே போயிடிச்சி. வெரலு இல்லன்னா என்ன, காலாபோயிடிச்சி. நம்பள மாதிரி ஏழ உழப்பாளிங்களுக்கு கையும், காலும்தான் சொத்துன்னு அம்மா சொல்லும்.”

“அதுக்கும் காயம் ஆறணுமே”

“அது ஆறும்னு எனக்குத் தோணல. காஞ்சனாவுக்கும் விரல்ல இப்படித்தான் வந்திச்சு. ரெண்டு வருஷத்திலே போயிட்டா. நான் இருக்கறவரை அம்மா கண்கலங்காம இருக்க நான் ஏதாவது பண்ணணும்க்கா”

எல்லாவற்றையும் பின்னாலே நின்று கேட்ட காவேரி அவர்களுக்கு முன் வந்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. ராகினியைப் பார்த்தாள்.

“அண்ணி” என்றாள்.

ராகினி கேள்வியோடு அவளைப் பார்த்தாள்.

“கம்சலைக்கு முதலாளி ஏதாவது ஒத்தாச பண்ண மாட்டாரா?”

ராகினி வெறுமையாகச் சிரித்தாள். ஆர்.ஆர்.எம். மின் சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப்பிடிக்கும் போக்கும் அவளுக்கும் தெரிந்திருந்தது. காவேரிக்கு ஆர்.ஆர்.எம்.மின் பாணி பிடிபட இன்னும் கொஞ்சம் நாளாகும் என்று நினைத்துக் கொண்டாள். சொல்லி வைத்ததுபோல ஆர்.ஆர்.எம்.மின் படகுக் கார் கேட்டில் வந்து நின்றது.

# 21

**ரா**கினி திடுக்கிட்டு விழித்தெழுந்தாள். வெளியே குழந்தைகள் வீரிடும் குரலும், பெரியவர்களின் சத்தமும் மழையின் பேரிரைச்சலுடன் கலந்து கேட்டது. மழை காற்றோடு கூடிச் சுழன்று சுழன்று அடித்தது. மின்னல்கள் வெட்டின. இடிச்சத்தம் காதுச் சவ்வுகளைக் கிழித்தது. ராகினி ஜன்னல் அருகே பார்த்தாள். ஜன்னல் கதவுகள் படபட வென்று அடித்தபடி இருந்தன. எழுந்து கதவைத் திறந்தாள். காற்று, மழைநீரை அறைக்குள் வாரியிறைத்தது. வீதி விளக்குகள் சட்டென்று அணைந்தன. அடர்ந்த

https://telegram.me/aedahamlibrary

திரையாக இருள் எங்கும் கவிழ்ந்தது. குழந்தைகள் அலறின.

காசியின் டார்ச் வெளிச்சம் ராகினியின் மேல் படிந்தது. காசி தெப்பமாக நனைந்திருந்தான். வாசற்படியில் நின்று சட்டையைக் கழற்றினான். ராகினி எதுவும் பேசாமல் அவன் கையிலிருந்து டார்ச்லைட்டை வாங்கிக்கொண்டு உள்ளே போனாள். லுங்கியையும், துண்டையும் எடுத்துக்கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள். அவன் நடுங்கிக் கொண்டிருந்தான். அவளுக்கு அவனைப் பார்க்கப்பார்க்க உள்ளம் உருகிப்போயிற்று.

அவன் நனைந்த துணிகளைப் பிழிந்தான், லுங்கியைக் கட்டிக் கொண்டான். இடி பெருத்த சத்தத்துடன் இறங்கியது. மின்னல் வெளிச்சத்தில் எதிரேயிருந்த கட்டடத்தில் நனைந்த தோற்றத்துடன் நிற்கிற வேலையாட்கள் ராகினியின் பார்வையில் பட்டனர். அன்று மாலை காவேரி வீட்டுக்குப் போய்விட்டதே ஒரு விதத்தில் நல்லதாகப்பட்டது. காசி, டார்ச்லைட் வெளிச்சத்தோடு உள்ளே சென்றான்.

ராகினி படுத்துக்கொண்டாள். அவன் படுக்காமல் உட்கார்ந்திருந்தான். வெள்ளத்தினால் கட்டடத் தொழிலாளர்கள் படும் அவஸ்தை அவன் இதயத்தைக் குடைந்தது. அவர்களின் குடிசைகளில் தண்ணீர் புகுந்துவிட்டது. துணிமணிகள், தட்டுமுட்டுப் பொருள்கள் எல்லாம் வெள்ளக்காட்டில் புதைந்து கிடந்தன. இத்தனைக்கும் இது மழைக்காலம் இல்லை. திடீர் மழை. கட்டிட வேலை கெட்டுப்போனது. ஆர்.ஆர்.எம்முக்கும் கஷ்டம்தான். வைத்த கெடுவுக்குள் வேலை முடிக்காததில் ஆர்.ஆர்.எம்முக்கும் சில சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிவரும். மொத்தத்தில் எல்லோருக்கும் கஷ்டம்தான்.

“என்ன?”

“ஒண்ணுமில்ல”

"படு"

“தூக்கம் வரல.”

“ஏன்?” என்று கேட்டவள் அவனை இழுத்துப் படுக்க வைத்தாள். அவளுடைய கை அவன் உடம்பில் ஊர்ந்தது.

https://telegram.me/aedahamlibrary

அவனுடைய உடம்பின் உஷ்ணம் அவளுடைய விரல்வழி அவளுக்குள் பரவியது. அவனுடைய தோளில் அவள் கைகள் அழுந்தின. டமாரென்கிற சத்தத்துடன் இடிச் சத்தம் கேட்டது. "இடியிடிக்கிற வேகத்தப் பாருங்க. பயம்மா இருக்குது. இங்க எங்கயாவது விழுந்து வைக்கப்போவுது"

"........."

"என்ன யோசன?"

"ஒண்ணுமில்ல" என்ற காசி மௌனமாக அவளை அணைத்துக் கொண்டான்.

ரோட்டின் ஓரத்தில இருந்த மரம் சடசடவென்று முறிந்து விழுந்த சத்தம் கேட்டது. காற்று மூர்க்கங்கொண்டு ஜன்னலை மோதியது. காசிக்கு பீடி குடிக்க வேண்டும் போலத் தோன்றியது. எழுந்தான். பீடிப்புகை ராகினிக்குப் பிடிக்காது. முணுமுணுப்பாள். பீடியை இப்போது எடுப்பதுகூடச் சிரமம்தான். இருந்தாலும் தவிப்பை அடக்க முடியாதவனாக டார்ச்லைட்டை எடுத்தான்.

"இப்ப இந்த இருட்டில் என்ன பண்றீங்க?" அவளுக்குத் தெரியும். அவனுடைய பீடி வெறி. எரிச்சலோடு எழுந்தாள் ராகினி. மௌனமாயிருந்தான் காசி.

"வாயிலே என்ன வச்சிருக்கீங்க. கேக்கறனில்ல. சொன்னா என்ன"

"ஒண்ணுமில்ல. பீடி எதுனா இருக்குமான்னு" தயக்கத்துடன் சொன்னான் காசி.

"சீச்சீ! இந்தப் பழக்கத்த விடமாட்டீங்களா?" என்றாள் ராகினி. "என்னமோ பண்ணுங்க" சலிப்போடு அவள் மீண்டும் படுத்தாள். வருத்தத்துடன் அவள் சொன்ன வார்த்தைகள் அவனை என்னவோ செய்தன. பீடி குடிக்கும் ஆசையும் மறைந்து போனது. பாயில் ஒடுங்கினான்.

ராகினிக்கு தூக்கமே வரவில்லை. அம்மா வேறு 'கட்டிட வேலை முடிந்ததும் ஆர்.ஆர்.எம். வீட்டை அநேகமாக காலி பண்ணத்தான் சொல்லுவான். அவன் பசப்பல் வார்த்தைகளை நம்புவதற்கில்லை' என்று சொல்லிவிட்டுப் போயிருந்தாள்.

துரையண்ணனின் ஆட்டோ விபத்தில் நொறுங்கி விட்டது.

https://telegram.me/aedahamlibrary

அலுப்படைந்து சோர்ந்தது. அவளை எல்லோரும் ஏமாற்றி விட்டதாக நினைத்தாள். ஒவ்வொருவரைப் பற்றியும் அவள் வைத்திருந்த கனவுகளும் நம்பிக்கைகளும் துண்டு துண்டாகச் சிதறிப்போய்விட்டன. அப்பா, அம்மா, புருஷன் என்று யாருமே அவளை மதித்துப் பேசியதில்லை. "ஒரு நாளாவது ராகினி! இது உனக்கு நல்லாயிருக்கும். வாங்கிக்க" என்று காசி சொன்னதில்லை.
நினைவுகளுக்கிடையே ஆர்.ஆர்.எம். வந்தான் ஏதோ ஒரு வேலை. இருக்க ஒரு இடம். கை நிறையச் சம்பளம் என்று சிறிது நம்பிக்கை அளித்த மனிதன். தன்னைப் பாராட்டி உற்சாகம் ஊட்டிய ஆள். இப்படித்தான் ராகினி அவனை நினைத்திருந்தாள். ஆனால் நாளாக நாளாக அதுவும் பொய்யாக, நடிப்பாக, பாசாங்காக, சுயநலமாக இருந்ததை அவள் உணர்ந்தாள். சில தினங்களுக்கு முன்னால் ஒரு நாள் தன்னிடம் மிகுந்த அன்பாகவும், அக்கறையாகவும் பேசி மூன்று சூட்கேஸ்களைப் பத்திரமாக வைத்திருந்து தரும்படியும், வேற எவருக்கும் அது தெரியக்கூடாதென்றும், யார் வந்து கேட்டாலும் அது அவனுடையதென்று சொல்லக்கூடாதென்றும் முப்பாத்தம்மா பேரிலும் காசியின் பேரிலும் சத்தியம் வாங்கினான்.

வேறொரு மாலைப் பொழுதில் மூன்று நாலு பேர் ஒரு காரில் வந்து அவளிடம் ஆர்.ஆர்.எம்மைப் பற்றி விசாரித்ததும், கட்டடப் பகுதிகளைப் பார்த்துவிட்டு அவன் எப்போது கடைசியாக அங்கே வந்தான் என்றெல்லாம் துருவித் துருவிக் கேட்டதும், "ஒரு வாரத்துக்கு மேல ஆச்சு" என்று அவள் பொய் சொன்னதும், அவளுடைய பொய்யில் காசி திகைத்துப்போய் நின்றதும்... அந்தக் கனத்த சூட்கேஸ்களை காசிக்குக்கூடத் தெரியாமல் அவள் வீட்டுப் பரணில் மறைத்துவைக்க அவள் பட்டபாடும், ஒரு வாரம் கழித்து அவன் கேட்டதும் திருப்பிக் கொடுத்ததும்... எப்படியெல்லாம் ஒவ்வொருத்தரும் அவர்கள் வசதிக்கு அவளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்ததும் அவளுக்கு குறுகுறுத்தது. ஆனால் அந்த சூட்கேசுக்குள் என்ன வைத்திருந்தீர்கள் என்று அவனிடம் அவள் ஒரு நாள் கூடக் கேட்டதில்லை.

https://telegram.me/aedahamlibrary

அவனே தான் சொன்னான். "அது நிறையப் பணமும், தங்கமும் வச்சிருந்தேன் ராகினி." அவள் தன் திகைப்பை அடக்கிக் கொண்டாள்.

"ஆனாலும் நீ ரொம்பக் கெட்டிக்காரி. யாருக்கும் தெரியாம ரகசியத்தைக் காப்பாத்திட்டே" என்றான் ஆர்.ஆர்.எம். ஒரு தினுசாக சிரித்தபடி இதுவரையும் அவள், அவனைப்பற்றி மனத்தில் வைத்திருந்த நல்ல அபிப்ராயமெல்லாம் ஒவ்வொன்றாகப் பொய்யாகி, அவள் மனதில் ஒருவகையான சலிப்புண்டாக்கியது. அவளுக்கு எரிச்சல் ஏற்படுத்தும் நினைப்புடனும் உன்னை விட்டால் எத்தனையோ பேர் என்று காட்டவுமே அவன் காவேரியை அங்கே வேலைக்குச் சேர்த்துக் கொண்டானோ என்றுகூட அவள் அடிக்கடி நினைத்துக் கொள்வாள். அப்படியும் இருக்கலாம். ராகினி புரண்டு படுத்தாள்.

காசி குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அவள் வெறுப்போடு புரண்டாள். வெளியே மழை ஓயாமல் பெய்து கொண்டிருந்தது.

விடிந்ததுகூடத் தெரியாத இருட்டு. மழை இன்னமும் பெய்து கொண்டிருந்தது. கதவைத் திறந்துகொண்டு வெளித் தாழ்வாரத்துக்கு வந்தாள் ராகினி. ஆட்களின் நடமாட்டம் இருந்தது.

கட்டி முடிந்த கட்டிடத்தின் கீழ்ப்பக்கத்தில் வேலைக்குப் புதிதாக வந்த கட்டிடத் தொழிலாளர்கள் உட்கார்ந்திருந்தனர், பின்புறமிருந்த அவர்களுடைய குடிசைகள் தண்ணீரில் மிதந்தன. காம்பவுண்டுக்குள் தண்ணீர் வெள்ளமாகப் பரவிப் பெருகிக் கொண்டிருந்தது. புதிய கட்டிடத்துக்கென அமைக்கப்பட்டிருந்த சாரங்கள் முறிந்து நிலத்தில் சரிந்திருந்தன. நான்கைந்து சாரக் கட்டைகள் வெள்ளத்தினால் கேட்டில் செருகியபடி கிடந்தது. ராகினி நன்றாகக் தூங்கிக்கொண்டிருந்த காசியை எழுப்பினாள்.

"எழுந்திருங்க."

"எதுக்கு?"

"ஸ்டோர் ரூமுக்குள்ள வெள்ளம் புகுந்திடுச்சோ என்னமோ தெரியல. சிமெண்டு மூட்டைங்க நனைஞ்சிடப்போவுது.

https://telegram.me/aedahamlibrary

காசி துள்ளி எழுந்தான்.

“மழை இன்னும் விடலியா?”

வேகமாகப்போய் விளக்கு மாடத்திலிருந்த பீடிக்கட்டையையும், குளிர்ந்து போயிருந்த தீப்பெட்டியையும் எடுத்துக்கொண்டு வெளியே போனான் காசி. பிறகு உள்ளே வந்து பரணிலிருந்த கோணி ஒன்றை எடுத்து வாகாக முக்கோணமாக அமைத்து மடித்து தலையில் போட்டவாறு பீடியைப்பற்ற வைத்தான். தீப்பெட்டி பற்றவில்லை. நனைந்து போயிருந்தது. வெறுப்புடன் கீழே இறங்கினான். எதிரேயிருந்த கட்டடத்திலிருந்த கிழவி ஒருத்தி 'குளிருது. டீத்தண்ணியாவது வாங்கிக்குடு சாமி' என்று கெஞ்சினாள். ராகினி மௌனமாக நின்றாள். காசி காதில் பீடியைச் செருகிக் கொண்டான்.

“கொஞ்சம் பொறுங்க. மழை நிக்கட்டும்”

“குளிருதுப்பா .”

“கடை எதுவும் திறக்கலையேம்மா. எங்கே போய் டீத் தண்ணி வாங்கியாரது கடைங்க திறக்கட்டும். பொறு” காசி ஆறுதல் சொன்னான். ஒரு பெண் சத்தம் போட்டு திட்டிக்கொண்டிருந்தாள்.

“கட்டடத்துக்குள்ளேயே எல்லா அசிங்கத்தையும் பண்ணிட்டாங்க. கண்றாவி. ஒரே நாத்தம் அடிக்குது. குடலப்புடுங்குது.” அந்தக் குரல் கேட்டதும் ராகினி முகம் சுழித்தாள்.

“அய்யய்யோ! ஓனர் இதுக்கும் சேர்த்து பயங்கரமா நம்பளைத்தான் திட்டப் போறாரு”

காசி மேலும் பேசுவதற்கு முன்பு கேட்டில் ஆர்.ஆர்.எம்மின் படகுக்கார் வந்து நின்றது. அதேநேரம் புதிய கட்டடத்தில் ஒட்டியபடி தொங்கிக் கொண்டிருந்த சாரம் தடதடவென்ற சப்தத்துடன் சரிந்து விழுந்தது. கட்டிடத்துக்குள் இருந்தவர்கள் வீறிட்டு அலறினர்.

https://telegram.me/aedahamlibrary

**கா**வேரிக்கு, பாஞ்சாலியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. சுசீலா தன் கைப் பையைத் திறந்து சாவிக் கொத்து ஒன்றை எடுத்து பாஞ்சாலியின் கைகளுக்குள் அதை அடக்க முயன்ற போது ராகினி, பெரிய சாவியொன்றைக் கொண்டுவந்து சுசீலாவிடம் நீட்டினாள். அதை வாங்கிப் பாஞ்சாலியின் கைகளுக்குள் திணித்தாள் ஆராயி. உடம்பு குலுங்கி முறுக்கித் திருகிய வேகத்தில் பாஞ்சாலி வீட்டு விலக்காயிருந்தாளோ என்னவோ பாஞ்சாலி, ஜன்னி குலுக்கலில் கால் வழியே ரத்தம் வழிந்தது.

ஆராயி, பாஞ்சாலியின் ஆடைகளைச் சரிசெய்தாள். ரத்தம் கசிந்து பெருகி பாவாடையையும், தாவணியையும் நனைப்பதை வேதனையோடு பார்த்தாள். ஆராயி, வேற துணி இருந்தா நல்லது. ரங்கனையும் வீரய்யனையும் மற்ற ஆண்களையும் பார்த்து, பாஞ்சாலிக்கு தீட்டு வந்துட்டாப்பால இருக்குது. துணி மாத்திக் கட்டணும் என்று எண்ணியபடி. “நீங்கள்ளாம் அந்தப் பக்கமா போங்க” என்றாள் அவர்கள் கேள்விக் குறியுடன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தார்கள்.

“பொம்பள ஜென்மம்னா எவ்வளவு கஸ்டங்கப்பா” என்றான் வீரய்யன் கவலையோடு. ரங்கன் மௌனமாகத் தலையை அசைத்தான். ஆராயியின் கையில் ஆதிலட்சுமி பழைய பாவாடை ஒன்றைக் கொடுத்தாள்.

“இன்னிக்காவது இந்தப் பொண்ணு வீட்டோட இருந்திருக்கலாம்” என்று உமா முணுமுணுத்தாள்.

“ஏழபாளங்க இதெல்லாம் பாத்துக்கிட்டிருக்க முடியுமா? போம்மா” என்றாள் லட்சுமி வெறுப்போடு. அப்போது காம்பவுண்டுக்குள் ஆட்டோ வந்து நின்றது.

பாஞ்சாலி அசைவற்றுக் கிடந்தாள். வாயிலிருந்தும் ரத்தம் லேசாகக் கசிந்து கொண்டிருந்தது. உதட்டையோ நாக்கையோ கடித்துக்கொண்டிருக்க வேண்டும். ஆராயி, தன் முந்தானையால் பாஞ்சாலியின் வாய்ப்புறத்தை நெற்றியிலும் கைவைத்துப் பார்த்தாள். திடுக்கிட்டவளாக, “ஒடம்பு நெருப்பாட்டம் காயிது” என்றாள். சுசீலாவும் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். அவளுடைய முகம்

https://telegram.me/aedahamlibrary

வேதனையால் சுருங்கியது. “காவேரி இப்பிடி ஒரு கை குடு. பாஞ்சாலிய ஆட்டோவுல ஒக்கார வைக்கலாம்" என்றாள் சுசீலா.

ஆதிலட்சுமி சுசீலாவுக்கு அருகே வந்தாள். பாஞ்சாலி கனமற்றிருந்தாள். ஆட்டோ அங்கிருந்து புறப்பட்டு தெருத் திருப்பத்தை தாண்டுவதற்கு முன்னால் ஆர்.ஆர்.எம்.மின் படகுக் கார் அங்கே வந்து நின்றது. புதிய கட்டிடத்தின் அருகே கவலையோடு குழுமி நின்றவர்களின் முகத்தில் கவலையும் அச்சமும் படர்ந்தன. திடுக்கிட்டு அசைவற்றுப்போய் நின்றார்கள்.

ராகினி அதிகாரத்துடன் "போங்க போய் வேலயப் பாருங்க” என்றாள்.

காசி வேகமாக கேட் பக்கமாக நடந்தான். காரிலிருந்து இறங்கிய ஆர்.ஆர்.எம்மின் முகத்தில் ஆத்திரம் பொங்கியது. “என்னய்யா எல்லாரும் என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க” என்று சத்தம் போட்டார் ஆர்.ஆர்.எம். காசி தலையைச் சொரிந்துகொண்டான்.

“என்னய்யா என்ன ஆச்சு? நான் கேக்கறனில்ல.”

காசி எச்சிலை விழுங்கிக்கொண்டான். “பாஞ்சாலின்னு ஒரு சின்னப் பொண்ணு. வலிப்பு வந்திரிச்சு. ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கினு போயிருக்கறாங்க.”

“என்னய்யா இது எழவு. எப்பப் பார்த்தாலும் இதே கருமமா? இது வேல நடக்கற எடமா. தர்ம சத்திரமா? எப்பவாவது நான் வர்ற நேரத்தில அவங்கவங்க வேலய அவங்கவங்க பார்த்துக்கிட்டு இருந்திருக்கிறீங்களாய்யா? எங்கய்யா அந்தப் பொண்ணு? உந்தங்கச்சி”

காசி தயங்கியபடியே "அவளும் பாஞ்சாலியோட போயிருக்கறா” என்றாள்.

“தோ, பார்யா. இனிமே அவ இங்க வேல பார்க்கத் தேவயில்ல. திமிர் புடிச்சவ! சொல்லிடு அவகிட்ட “ஆனா” ராகினி தயங்கிய படியே அவன் முன் வந்தாள்.

“தோபாரு ராகினி இனிமே அந்தப் பொண்ணு இங்கே வேலக்கி வேணா.”

“எல்லாத்தயும் பழையபடி நீயே பாத்துக்க. ஆமா, மேஸ்திரி

https://telegram.me/aedahamlibrary

எங்கே?”

ராகினி தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள். “மூணுநாளா ஜூரம். ஆனா, அதோடவே வேல பார்த்தாரு. காலையில ரொம்ப முடியலேன்னு குடிசையில படுத்துட்டாரு.”

ஆர்.ஆர்.எம் பற்களை கடித்துக் கொண்டான் அவனுடைய கை முட்டிகள் இறுகின.

மூட்டம் விலகாத வானத்தைப் பார்த்து விட்டு இறுக்கமான குரலிலே, “இன்னிக்கு யாரும் வேல செய்ய வேண்டியதில்ல. சம்பளமும் தரவேண்டியதில்ல அப்புறமா நான் வந்து சொல்றேன்”

ராகினி பயத்துடன் தலையை அசைத்தாள். வீரய்யனின் மனம் குறுகுறுத்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஆர்.ஆர்.எம்மின் எதிரேபோய் தயங்கி நின்றான்.

“என்னய்யா” கொதித்து விழுந்தன. ஆர்.ஆர்.எம்மின் வார்த்தைகள்.

“இன்னிக்கு செவ்வாய் கௌமைங்க. இன்னும் போனவாரச் சம்பளமே கைக்குக் கிடைக்கல. ரொம்பக் கஷ்டமாயிருக்குது.”

“போய்யா வாய மூடிக்கிட்டு” வெறுப்போடு கத்தினார் ஆர்.ஆர்.எம்.

“வேல பாக்கற லட்சணத்துக்கு சம்பள பாக்கி ஒரு கேடு. எனக்கு ஆகாசத்திலிருந்தா பணம் கொட்டுது? மொதல்ல மனச்சாட்சிக்கு விரோதமில்லாம வேலயப் பாருங்க. அப்பறமா மத்ததப் பேசலாம்” சட்டென்று ஆர்.ஆர்.எம். அங்கிருந்து புறப்பட்டான். அவன் சொன்னதைக் கேட்டு எல்லாருமே திகைத்து போய் நின்றார்கள்.

“சே! ஈவு எரக்கமில்லாத மனுசன்” என்றாள் ஆராயி வெறுப்புடன்.

“அந்தப் பொண்ணைப்பத்தி சொன்னோம். அதப்பத்தி ஒரு வார்த்தயாவது கேட்டாரா இந்த ஆளு. என்ன மனுஷன்” என்றாள் உமா கசப்புடன்.

“சாப்பாட்டுக்கு இப்ப நாங்கள்ளாம் என்னாக்கா பண்றது?” என்று ராகினியைப் பார்த்து பரிதாபமாகக் கேட்டான் ரங்கன்.

https://telegram.me/aedahamlibrary

ராகினியின் முகம் வழக்கத்துக்கு மாறாக வாடிப்போயிருந்தது. “எங்கிட்ட கொஞ்சம் பணம் இருக்குது தர்ரேன்” என்று சொன்னாள்.

“மகராசி” என்றாள் ஆராயி. “எப்படின்னாலும் நீ நம்ப கஷ்டம் தெரிஞ்ச பொண்ணு. நீ நல்லாயிருக்கணும்மா”

வினோதமாக அவளைப் பார்த்தான் காசி. “முதலாளி எதுனா சொல்ல மாட்டாரா?”

“அதுக்கில்ல” காசி இழுத்தான்.

“அவங்களும் வாயும் வவுறும் உள்ள மனுஷங்கதான். அவங்க காத்தயா திம்பாங்க."

அந்தக் கட்டிடத்தொழிலாளர்களின் நிலையை நினைத்ததும் காசியின் அடிமனதில் சட்டென்று முள் தைத்தது மாதிரி இருந்தது. அதை அவளும் உணர்ந்து கொண்டாள். “என்ன பேசாம இருக்கறீங்க?" என்று வானத்தையே பார்த்துக்கொண்டிருந்த காசியைப் பார்த்துக் கேட்டாள் ராகினி.

“ஒண்ணுமில்ல”

“சும்மா சொல்லுங்க. முதலாளி எதுனா திட்டுவாருன்னு யோசனையா?”

“என்னமோ தெரியல. நம்ப ஜனங்களப் பார்க்கப் பார்க்க என் மனசுக்கு என்னமோ ரொம்ப கஷ்டமாயிருக்குது. அவங்க என்ன பாடுபடறாங்க. இதெல்லாம் எதுக்கு? பாதி வயித்தயாவது ரொப்பத் தான்.”

ராகினி பெரு மூச்சுவிட்டாள். பின்னர் எதிரேயுள்ள கட்டிடப்பகுதியில் ஒதுங்கி நிற்கிறவர்களை இரக்கம் பொங்கப் பார்த்தாள். “ஒவ்வொரு நாளும் இவங்க படற பாட்டப் பார்த்து எம்மனசுலே நெறய கேள்விங்க உண்டாயிடுச்சி” அவள் தனக்குத் தானே பேசிக்கொள்பவள் போலச் சொன்னாள். “சாவறத்துக்கு ஒரு நிமிஷம் வரையில் இவங்க ஒழைச்சாக வேண்டியதாயிருக்குது. இவங்கக்கிட்ட என்ன இருக்குது? வீடா வாசலா? துணிமணியா? ஒண்ணுமில்ல. இவங்க கஷ்டத்தைப் பார்த்துப் பார்த்து எம்மனசு புண்ணாயிடுச்சி.”

காசி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். மாலை

https://telegram.me/aedahamlibrary

வேளையில் இந்த கூலித் தொழிலாளர்களுடன் அவள் பேசுவதும் தனியாக உட்கார்ந்து யோசிப்பதும் அவன் நினைவுக்கு வந்தன.

“கொஞ்சநாள் பழக்கத்துலே நான் ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கிட்டங்க. இவங்க மனசுல கள்ளங்கவுடு இல்ல. வேஷமில்ல. ஏமாத்து இல்ல. சந்தர்ப்பத்துக்கு தகுந்தாப்பல யார்கிட்டவும் பழகறதில்ல. மனுஷனை மனுஷன் உதாசீனம் பண்றதைவிட மோசம் வேற ஒண்ணுமில்ல ஆனா வசதி உள்ளவங்களுக்கு இதெல்லாம் தண்ணிபட்டபாடு.”

# 23

**ம**ருத்துவமனையிலிருந்த தன் அக்கா கன்னியம்மாவைப் பார்த்து விட்டு காவேரி அப்போதுதான் வீட்டுக்கு வந்திருந்தாள். கன்னியம்மாளின் உடல்நிலை தேறியிருந்தது. சின்னத்தாயியும் ஆதிலட்சுமியும் கன்னியம்மாளுடனே தங்கியிருந்தார்கள். இன்னும் மூன்று நாட்களில் பிரசவம் ஆகிவிடும் என்று மருத்துவர்கள் சொல்லியிருந்தார்கள். காவேரியிடம் ஆர்.ஆர்.எம். பேசிவிட்டுப் போயிருந்ததை ராகினி சொன்னாள். அதைக்கேட்ட காவேரி, “இது நான் எதிர்பார்த்ததுதான். இவங்கெல்லாம் அவங்க நன்மைய நாம்ப பாதுகாக்கற வரைக்கும்தான் நம்மளையெல்லாம் இங்கே தங்க வச்சிருப்பாங்க. அப்பிடி இல்லேன்னா இரக்கமேயில்லாம நம்மளத் தூக்கி கடாசி எறிஞ்சிடுவாங்க” அர்த்தத்துடன் பேசிக்கொண்டிருந்த காவேரியைப் பார்த்தாள் ராகினி.

“சுசீலாக்காக்கிட்டப் பேசினேன். கட்டிடத் தொழிலாளர் சங்கத்துக்கு என்னக் கூட்டிப் போறதாச் சொன்னாங்க. சங்கத்துல நாங்கெல்லாம் கட்டாயமாகச் சேரணும்னு சொல்றாங்க.”

“சேர்ந்து என்னா பண்றது?” ஆர்வமாகக் கேட்டாள் ராகினி.

“அவங்க நெறயச் சொன்னாங்க. அதக்கேட்கவே ஆச்சரியமா இருந்திச்சி.”

“அப்படியா என்னது?”

https://telegram.me/aedahamlibrary

“நாம்பயெல்லாம் கடைசிவர பொம்பளைங்கறவ சித்தாள் வேலக்குத்தான் லாயக்கானவங்க'ன்னு நெனச்சுக்கிட்டிருக்கோம். பொம்பளங்க கொத்தனார்க்கூட ஆவலாமாம்.”

“அப்படியா” ராகினியின் முகத்தில் நம்பிக்கையின்மை படர்ந்தது. என்னவோ சொல்வதற்கு வாயெடுத்தாள். அதற்குள் காவேரி குறுக்கிட்டு:

“நீங்க லேசில நம்பமாட்டீங்கன்னு எனக்குத்தெரியும். ஆனா நான் சொல்றது நிஜம்.”

“அப்படியா?” வியப்புடன் அவளைப் பார்த்தாள் ராகினி.

“கொஞ்சம் விவரமாகச் சொல்லு. சுசீலா சொல்றது பொய்யா இருக்காது.”

“அதாவது சங்கத்துல பொண்ணுங்களுக்கு கொத்தனார் வேலக்கு டிரெய்னிங் கொடுக்கறாங்க. பத்து மாசத்துக்கு சொல்லிக் கொடுப்பாங்களாம். அப்புறம் எந்தப் பொண்ணாலும் கொத்தனா ராக ஆயிட முடியும்னு அவங்க அடிச்சுச் சொல்றாங்க.”

“அப்படின்னா சுசீலாவ நானும் பாத்து இதப்பத்திப் பேசணும். அவங்க எப்ப வருவாங்க?”

“சாயந்தரம் வருவாங்க”

ராகினியின் ஆர்வம் காவேரிக்கு வியப்பையும் சந்தோஷத்தையும் கொடுத்தது.

**மா**லை அவர்கள் சுசீலாவைச் சந்தித்துப் பேசியபோது, “மாநில சங்கத்தில் போன அஞ்சு வருஷமாவே பொண்ணுங்களுக்கு கொத்தனார் டிரெய்னிங் கொடுக்கறாங்க. பத்து மாசப் பயிற்சி, இந்தப் பத்து மாசத்துக்கும் பணம் தர்ராங்க. அது டில்லியிலிருந்து வருது. தொழிலாளர் நன்மைக்குன்னே இருக்கிற டிபார்ட்மென்டு அதப் பண்ணுது” என்றாள் சுசீலா.

“டிரெயினிங்குங்கறீங்களே. அது என்ன அதப்பத்தி கொஞ்சம் சொல்லுங்க” ஆர்வத்தோடு கேட்டாள் ராகினி.

“இந்த டிரெய்னிங்லே முதல் மாசம் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பாங்க. அப்புறம் அடிப்படையான கல்வி விபரங்கள்

https://telegram.me/aedahamlibrary

சொல்லித்தருவாங்க. அடுத்த நாலு மாசம் செங்கல் அடுக்க, கட்டிடம் மார்க் செய்ய, அளக்க, ஒட்டு வேல, பூச்சுவேல, சன்னல் கதவு வைக்கறதுக்கு டிரெய்னிங். இப்படி அஞ்சு மாச கால டிரெய்னிங். இப்படி அஞ்சுமாச காலம் டிரெய்னிங்குக்குப் பின்னால் கொத்தனாரு உதவியோட சாரம் ஏறி பூசத்தொடங்குவாங்க. ஏற்கனவே டிரெய்னிங் முடிச்ச பொம்பளங்க ரொம்ப நல்ல கொத்தனாரா இருக்கிறதா சொல்றாங்க. பேப்பர்லகூட எழுதியிருக்காங்க"

காவேரி ஏதோ யோசனையில் இருந்ததைக் கண்ட சுசீலா வாஞ்சையோடு அவள் தோளில் கைவைத்தாள்.

"என்ன யோசன பண்றே?"

"ஒண்ணுமில்ல" யோசனை கலைந்த காவேரி சுசீலாவைப் பார்த்தாள்.

"கட்டிடத் தொழில்லேயிருக்கற பொண்ணுங்களுக்கு இப்படியெல்லாம் உதவி இருக்குதுன்னு வெளியிலே யாருக்குமே தெரியல. நீங்க சொல்றதப் பார்த்தா எனக்கே கொத்தனாராகணும்னு ஆச உண்டாகுது"

"காவேரி, நீ சொல்றதக்கேட்க எனக்கு சந்தோஷமாயிருக்குது. ஒன்ன மாதிரிப்பட்டவங்க நெறயப்பேர் இந்தத் தொழிலுக்கு வரணும். நெறயப்பேர் கட்டடத் தொழிலாளிங்களா இருக்கிறாங்க. ஆனா, அவங்க படுற கஷ்டம் கொஞ்ச நஞ்சமில்ல. அறியாமை, பயம் இப்படிப் பல காரணங்களால இவங்க முன்னேற முடியாமத் தவிக்கிறாங்க."

"மத்தவங்களுக்குக் கைகட்டி பயந்து நின்னுகிட்டுத் தொழில்னு எதையும் பண்ணாம சம்பளம் வாங்கறது அவமானம்தான். ஆர்.ஆர்.எம். பேசற பேச்சுக்கள் நினச்சாலே எனக்கு வெறுப்பாயிருக்குது. கையிலெ நமக்குன்னு தொழில் ஒண்ணு இருந்தா யாருக்கும் பயப்படாம வாழலாம்." ராகினியின் ஒவ்வொரு வார்த்தையும் காவேரிக்கு ஆச்சர்யத்தை உண்டாக்கிற்று. ஒவ்வொரு நாளும் அங்கு வேலை செய்கிற தொழிலாளர்களின் கஷ்டங்களை பார்த்துப் பார்த்து ராகினியின் மனம் இப்படி மாறிவிட்டதா?

"நான் இங்க வந்த பின்னாலதான் சாதாரண மனுசங்க

https://telegram.me/aedahamlibrary

படக்கூடிய கஷ்டங்கள் நேருக்கு நேராகப் பார்க்க முடிஞ்சுது. ஆர்.ஆர்.எம்.மைப்போல இரக்கமில்லாத மனுஷனப் பாக்க முடிஞ்சது."

காவேரியைப் போல சுசீலாவுக்கும் இப்போது ராகினி ஆச்சரியமானாள். எதையுமே பேசாமல் சிடுசிடுவென்றே இருந்த அந்தப் பெண்ணா இப்போது இப்படி பேசுகிறாள்? ராகினியை வாஞ்சையுடன் காவேரிப் பார்த்தாள்.

“என்ன சுசீலா அப்படிப்பாக்கறீங்க, சிடுசிடுங்கற ராகினி யான்னு இருக்குதா? என்ன பண்ணச் சொல்றீங்க? எதுக்கும் பயந்து சாகிற என் வீட்டுக்காரரப் பார்க்கிற போதெல்லாம் எனக்கு ஒரு மாதிரி கஷ்டமாயிடுது. ஆர்.ஆர்.எம்.மை பார்த்தாலே அவர் வேர்த்து விறுவிறுத்துப் போயிடறார். முதல்ல எல்லாம் அந்தப் பாக்கறப்பவே எனக்கு எரிச்சலா வரும். இப்ப அவர நெனச்சா பாவமா இருக்குது. யோசித்துப் பார்த்தா, ஒரு மனுஷன் இன்னொரு மனுஷனுக்கு எதுக்காகப் பயப்படணும்? அதுமாதிரியான வாழ்க்கையே வேணாமேன்னு தோணுது. உங்க பேச்சக் கேட்கிறப்ப ஏன் நாம்பளே ஒரு கொத்தனாராக ஆகக் கூடாதுன்னு தோணுது”

தான் கேட்க ஆசைப்பட்ட வார்த்தைகளைக் கேட்ட சுசீலாவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. தன்னைப் போல உணர்வு கொண்ட இன்னொருவரை எதிர்பாராத விதமாக சந்தித்தால் உண்டாகிற ஆனந்தம் அது. ராகினியின் கைகளைப் பற்றிக் கொண்டாள் அவள்.

“உங்க ரெண்டு பேர் முடிவயும் கேட்கறப்ப எனக்கு சந்தோஷமா இருக்குது”

“பெண்கள் எதயும் சாதிக்க முடியும்னு காட்டுறதுக்கு எதச் செய்ய முடியுமோ அதயெல்லாம் செய்யணும். நான் மேல்தட்டுப் பெண்களப் பத்திச் சொல்ல வரல, அடித்தட்டிலே வாழுற தொழிலாளி வர்க்கத்தப் பத்திச் சொல்றேன்.”

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது ஆதிலட்சுமி அந்த இடத்திற்கு வந்தாள். முகத்தில் பரபரப்பு. பார்வையில் இனந் தெரியாத அச்சம். அவளின் முகக்குறிப்பினை உணர்ந்துகொண்ட காவேரி வியப்போடு அவளைப்

https://telegram.me/aedahamlibrary

பார்த்தாள்.

"என்னம்மா, என்ன ஆச்சு?"

முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டே ஆதி லட்சுமி அவர்கள் மூவரையும் பார்த்தாள். .

"கட்டிடத்துக்கிட்டே போயிருந்தேன். ஆர்.ஆர்.எம். அங்கே காசியப் பயங்கரமாகத் திட்டிக்கினுக்கிறாரு. சைட்டுலெ இல்லேன்னு ஒன்னையும் திட்டிங்கறாரு."

"எதுக்கு என்னத் திட்டணும்?" என்று கேட்டாள். ராகினி.

"காவேரிய இனிமே வேலக்கு வர வேணாம்னு சொல்லச் சொன்னாரு. அதான் வந்தேன். அவருகிட்டே சொல்லிட்டுத்தான் வந்தேன். என்னமோ தெரியல்ல. அந்தாளு அப்படிக் குதிக்கிறான். ஏழபாழங்கன்னா எல்லாருக்கும் இளக்காரந்தான். என்னா பண்றது?" சலித்துக்கொண்டாள் ஆதிலட்சுமி.

"சரி, கொஞ்சம் இரு. நான் காப்பி தண்ணி வாங்கிக்கினு வர்றேன்"

"நானே போறேம்மா" என்றாள் ராகினி.

அன்றிரவு ராகினி, சுசீலாவைச் சந்தித்த விவரங்களைச் சொல்லக்கேட்ட காசியின் முகத்தில் ஆச்சரியமும் அச்சமும் தெரிந்தன. ராகினியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அவனால் அவள் சொன்னவற்றை நம்ப முடியவில்லை. அவளைப் பற்றி அவன் வைத்திருந்த தவறான எண்ணங்களெல்லாம் பொடிப்பொடியாக நொறுங்கிப் போய்க்கொண்டிருந்தன.

"என்ன யோசன பண்றீங்க?" என்று கேட்டாள் ராகினி. "பணக்காரங்க, ஆர்.ஆர்.எம். மாதிரிப் பட்டவங்க நம்மயெல்லாம் தூசவிட கேவலமா மதிக்கும்படி எதுக்கு நாம்ப நடந்துக்கணும்? இந்தாள நம்பித்தானா நாம்ப இந்த உலகத்திலே பிறந்திருக்கிறோம். எதுக்குப் பயப்படறீங்க?"

காசி தயக்கத்துடன் அவளைப் பார்த்தான்.

"நீங்களே யோசன பண்ணிப்பாருங்க. இந்த ஏழ பாழ சனங்களுக்கு உள்ள மனசாட்சி ஆர்.ஆர்.எம்.முக்கு இருக்குதா? இந்தக் கட்டடம் கட்டறதுக்காக அவங்க

https://telegram.me/aedahamlibrary

எவ்வளவு பாடுபடறாங்க. சம்பளம் கிடக்கல்லேன்னாலும் அரவயிறானாலும், மழ அடிச்சாலும் அவங்க முணுமுணுக்காம வேல செய்றாங்க. ஆனா இந்தச் சனங்கள் ஒரு புழுவுக்கு சமமாக்கூட அந்தாள் மதிக்கிறதில்ல, எப்பப் பாரு திட்டுதான்."

"கூலி தர்ர முதலாளி திட்டினா கேட்டுக்காம ஏழங்க வேற என்ன செய்ய முடியும்?" சலிப்போடு கேட்டான் காசி.

"அந்தக் காலமெல்லாம் மாறிப் போச்சின்னு சுசீலா அடிச்சுச் சொல்றாங்க. அது உண்மைன்னுதான் எனக்குத் தோணுது."

காசி மௌனமாக இருந்தான்.

"ஆர்.ஆர்.எம். எனக்கு முன்னால உங்களத் திட்டத் தொடங்கினப்போ, நான், சார் அவரத் திட்டாதீங்க. அவர் ஒண்ணும் தப்புப்பண்ணல. உங்களுக்கு எங்களப் பிடிக்கலேன்னா சொல்லுங்க. நாங்க போயிடறோம்ன்னு சொன்னப்போ அந்தாள் முகம் எப்படிச் சுருங்கிப்போச்சி"

"நீ பாட்டுக்குச் சொல்லிட்டே இப்போ என்ன செய்யறது?"

"நம்ப வேல அந்தாளுக்கு வேணும்னா அந்தாள் நம்மகிட்ட சரியாக நடந்துக்கணும். நம்பமேல அக்கரகாட்டணும், அப்படியில்லாமெ அடாவடி பண்ணினா நாம் இந்த இடத்த விட்டுப் போயிட வேண்டியதுதான். வேறு வழியில்ல."

திகைத்துப்போனான் காசி. அவன் நெற்றி சுருங்கியது. தொண்டை அடைத்ததுபோல் உணர்ந்தான்.

"வேலயப் பாதியில வுட்டுட்டுப்போறது தப்பில்லயா ராகினி?"

தயக்கத்தோடு அவள் எதிரேயிருந்த பூனையைப் பார்த்தான் காசி. பூனை எதையோ பிடிக்கப் போவது போல பதுங்கியபடி எழுந்தது.

அவனை நேருக்குநேராகப் பார்த்தாள் ராகினி.

"அத அந்தாள்தான் முதல்ல யோசன பண்ணணும், அந்தாள் நம்ம மூஞ்சியில எட்டி உதக்கிறப்ப அந்தக் காலுக்கு முத்தம் குடுக்கணும்னா நீங்க சொல்றீங்க, என்னப் பொறுத்தவர்க்கும் நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேங்க" என்றாள் ராகினி தீர்க்கமான குரலில்.

https://telegram.me/aedahamlibrary

# 24

**ஆர்**.ஆர்.எம்மின் முகம் சிவந்திருந்தது. ஆத்திரத்தில் கைகள் இறுகின. கோபத்தில் காறித்துப்பினான். "நன்றி கெட்ட பொறுக்கிப் பசங்க. எல்லாத்தையுமே மறந்துட்டானுங்க" என்றவாறே வாசலைப் பார்த்தபடியே நின்ற காவேரியைப் பார்த்து, “கடைசியாக இப்ப என்ன முடிவு செஞ்சிருக்கீங்க” என்றான் ஆர்.ஆர்.எம்.

ஓரமாக உட்கார்ந்திருந்த ஆராயியைப் பார்த்தான் காசி.

ஆராயி நிமிர்ந்து பார்த்தவாறே “ஏழைங்க சொன்ன சொல்ல மீற மாட்டாங்க. உசிரக் கொடுத்தும் காப்பாத்துவாங்க” என்றாள் உறுதியான குரலில்.

“அப்படின்னா?”

“இந்தக் கட்டடம் கட்டி முடிஞ்சதும் நம்மள விட்டுடுங்க சாமி.”

லேசான நிம்மதியோடு அவளைப் பார்த்தார் ஆர்.ஆர்.எம்.

“ராகினி என்னமோ சொல்லிச்சே”

“ஆமா, அவ இங்கே இனி ஒருநாள்கூட வேல செய்ய முடியாதுன்னு சொல்லிட்டா. அதுதான் குடிசயக் காலி பண்றேன்” ஆராயி ராகினியின் வீட்டைப் பார்த்தவாறு நின்றாள்.

“காசி நான் உங்களுக்கு என்ன குறை வச்சன்னு சொல்லப்பா”

காசியின் முகம் தெளிவாயிருந்தது.

“அதுக்கில்லீங்க அவங்கெல்லாம் கட்டடத் தொழிலாளர் ஊர்வலத்துக்கும், மாநாட்டுக்கும் போகணுமுன்னு கேட்டானுங்க, நீங்க ஒத்துக்கல அதான்.”

“நீங்க போங்க, அதப்பத்தி எனக்கொண்ணும் தடயில்ல. ஆனா இதெல்லாம் வேஸ்டுப்பா. எதுக்குப்பா தொழிலாளர்களுக்கு பாலிடிக்ஸ். மாநாடு, ஊர்வலம், கைது இதெல்லாம் நமக்கு அவசியந்தானா? நாம் தொழிலாளிங்க. செய்யிற தொழில்தாம்பா. நமக்குத் தெய்வம். சரிசரி,

https://telegram.me/aedahamlibrary

ராகினிய வரச்சொல்லு. நான் அவகூடப் பேசணும்”

காவேரி ராகினியைத் தேடிக்கொண்டுபோனாள்.

“காசி, தைமாசம் கிருகப்பிரவேசம் வைக்கத் தீர்மானிச்சிருக்கு. அதுக்குள்ள நீங்கள்ளாம் இப்படிப் பண்ணினா நான் என்னப்பா செய்யிறது?”

ஆர்.ஆர்.எம்.மின் குரலில் தளர்ச்சி தெரிந்தது.

“சரிப்பா எங்கே வேணுமோ போங்க. ஆனா வேலயச் செஞ்சி முடிச்சிட்டுப் போங்க.”

காவேரி ராகினியுடன் வந்தாள். “ஏம்மா இப்படி ஆயிட்டே?”

ராகினி சுற்றி நின்றவர்களைப் பார்த்தவாறே மெல்லிய குரலில் சொன்னாள். “இவங்க நியாயமாச் சொன்னதத்தான் நான் உங்ககிட்ட சொன்னேன். நீங்க ஒத்துக்கல, அதுக்குமேல நான் என்ன பண்ணமுடியும், சொல்லுங்க”

“மேஸ்திரி எங்க?”

“அவருக்கு காய்ச்சலுங்க. கஞ்சிக்குக்கூடப் பணமில்லாம அவஸ்தப்படுறாரு” என்றாள்.

“நீங்கதான் போனவாரக் கூலிப் பணத்தயே இன்னமும் கையில கொடுக்கலியே” என்றாள் தனம்.

“இப்படியெல்லாம் பண்ணினா அவங்க என்ன செய்வாங்க? என்னத்தான் கேட்கிறாங்க. என்ன பதில் சொல்றதுன்னே தெரியல. அவங்க சொல்றத நீங்க கேட்கமாட்டேங்கிறீங்க, அப்புறம் நான் என்ன செய்யறது?” சலிப்போடு சொன்னாள் ராகினி.

“இப்போ என்ன என்ன செய்யச்சொல்றே? ஒளிவுமறவில்லாம வெளிப்படயா சொல்லு?”

“அவங்க நியாயமாக் கேக்கிறதச் செய்ங்க. போதும்”

கண்ணாடியைக் கழற்றிவிட்டு அவளைப் பார்த்தான் அவன்.

“அப்போ நீ?”

“எனக்குப் பதிலா வேற யாராவது பார்த்துக்குங்க”

“எதுக்கு நீ இப்படி அடம்பிடிக்கறே?” சட்டென்று அவன் முகம் சுருங்கிப்போயிற்று.

https://telegram.me/aedahamlibrary

அவள் மௌனமாக நின்றாள்.

“காசி நீ கொஞ்சம் சொல்லுப்பா” இறங்கி வந்தது போல இருந்தது. ஆர்.ஆர்.எம்மின் போக்கு

ராகினி காசியைப் பார்த்தாள்.

“த பாரம்மா ராகினி, இப்போதக்கு இந்தக் கட்டட வேலய முடிச்சிடுங்க, அப்புறம் எத வேணாலும் பண்ணுங்க.”

“ஆமா ராகினி, ஐயா சொல்றதுலயும் ஞாயம் இருக்கு” என்றான் காசி. ராகினி வெறுப்புடன் அவனைப் பார்த்தாள்.

“இப்படிப் பேசிப் பேசியேதான் நம்ம கதி இந்த நெலைக்கு வந்திருக்கு” என்ற அவளை காசி அமைதியாகப் பார்த்தான்.

மேஸ்திரி முனகிக்கொண்டே அங்கு நடந்துவந்தார்.

குரலில் இரக்கம் இழைய ஆர்.ஆர்.எம். “மேஸ்திரி, எப்படி இருக்கிறீங்க?” என்று கேட்டான்.

மேஸ்திரி கைகளைக் கூப்பினார். “உடம்புக்கு சுத்தமா முடியல. ஐயா, சம்பளப்பணம் கூடக்கொடுக்கல. ரொம்ப கஷ்டமாயிருக்கு. சோறு தண்ணி இல்லாம என்ன பண்ண முடியும்? கேட்டுக்கேட்டு தொண்டத் தண்ணி வத்திப் போச்சு. அப்புறம்தான் எங்காளுங்க இந்த முடிவுக்கு வந்தாங்க.”

தலையை ஆட்டிக்கொண்டே சொன்னான் ஆர் ஆர்.எம்.

“சரி எனக்குத் தோணினதச் சொன்னேன். கேக்கமாட்டேங்கிறீங்க. என்னவோ பண்ணுங்க. போங்க, போங்க, எல்லோரும் அவங்கவங்க வேலயப்பாருங்க. காசி இதோ பாரு. இதிலே சம்பளப் பாக்கி, ரெண்டு வார அட்வான்ஸ் எல்லாம் இருக்கு. எடுத்துக்க. இதுக்கு மேலயும் ஏதாவது பண்றதுண்ணா அது உங்க இஷ்டம், நான் நாளைக்கு வர்ரேன்.”

பெரிய கவர் ஒன்றை அவனது கையிலே சட்டென்று கொடுத்து விட்டு அங்கிருந்த காரை நோக்கி ஆர்.ஆர்.எம். வேகமாகச் சென்றான். எல்லோரும் திகைத்துப்போய் நின்றிருந்தனர்.

“முதலாளிங்க, பணக்காரங்க எல்லாருமே இப்படித்தான் பண்ணுவாங்க. நாம்ப அவங்க காலப் பிடிச்சோமுன்னா

https://telegram.me/aedahamlibrary

நம்ம தோளில் ஏறி உட்கார்ந்துக்குவாங்க. நம்ம உறுதியா நின்னு கேள்வி கேட்டா நம்ம வழிக்கு வந்துடுவாங்க. ஆனா, அதுகூட அவங்க வேல ஆவற வரதான்” என்றாள் சுசீலா காசியைப் பார்த்து.

“இப்போ என்ன பண்றது? பணத்தக் கண்டதும் பாதிக்குப் பாதி ஆளுங்க மௌனமாயிட்டாங்க. அந்த ஏழங்க கையில் பைசாப் பணம்கூட இல்ல ஆனாலும் நீங்க சொல்றபடி கேட்கறேன்னு சொல்றாங்க.” நெகிழ்வோடு கூறினாள் ராகினி.

காவேரி ராகினியைப் பார்த்தாள். அவளை நினைத்தால் காவேரிக்கு இப்போதெல்லாம் பெருமையாக இருந்தது. எப்படியிருந்த ராகினி எப்படி இப்படி மாறிவிட்டாள்? திரும்பத்திரும்ப அவள் இதையே யோசித்துக்கொண்டிருந்தாள்.

“ஒரு மாற்று ஏற்பாடில்லாமல் இந்தத் தொழிலாளருங்களை வேலயவிட்டு வெளியில கொண்டுவந்த நிறுத்த வேணாம். இதுக்கு நாம் சமரசம் செஞ்சுகிட்டோம்னு அர்த்தமில்ல” என்று சுசீலா தெளிவாகச் சொன்னாள். “இவங்களயெல்லாம் முதல்ல நாம்ப தொழிற்சங்கத்தில் சேர்க்கணும். நாம்ப தனியா இல்லங்கற உறுதி இவங்களுக்கு வரணும்.”

“எனக்கென்னவோ, ஒரு நிமிஷம்கூட அந்த காம்பவுண்டுக்குள்ள இருக்கப்பிடிக்கல.”

“நீ அங்கே இல்லேன்னா மத்தவங்க அங்கே இருப்பாங்கன்னு எனக்கு தோணல” என்றாள் ஆதிலட்சுமி.

சட்டென்று சொன்னாள் காவேரி. “அம்மா சொல்றது சரிதான்”

“ஆமா ராகினி, எங்க எல்லாருடைய நன்மைக்காவும் நீ இருந்துதான் ஆவணும்.” ராகினியின் தோளை அழுத்தியவாறு சொன்னாள் சுசீலா. ராகினி மௌனமாக இருந்தாள்.

நீலவானப் பின்னணியில் ஓங்கிவளர்ந்து, வெள்ளை பூசிக் கொண்டிருக்கும் அந்தத் தொடர் மாடி வீடுகள் இரண்டையும் பார்த்தாள் ராகினி. எவ்வளவு வேகமாக

https://telegram.me/aedahamlibrary

ஓடிப்போய்விட்டது காலம். வீச்சான காட்டாற்றைப்போலத் தாவிப்போய் வியக்கவைக்கிற காலம். நேற்றுப்போல இருக்கிறது. வெறுமையான நினைவுகளை எச்சமாகவிட்டுப் போயிருக்கிறது காலம்.

“ராகினி” பரிவோடு கேட்ட குரலில் திரும்பிப் பார்த்தாள் ராகினி. சுசீலா நின்றிருந்தாள்.

“என்ன ராகினி, அப்படிப் பார்த்திட்டே நிக்கிறே”

“மனுஷன் மகத்தானவன்னு சொன்னீங்களே. அது சத்தியமான வார்த்தை. அரவயிறும் கால் வயிறுமாயிருந்து வெய்யிலயும் பனியயும் தாங்கிக்கிட்டு இந்த ஜனங்க எப்பேர்ப்பட்ட வேலயச் செய்து முடிச்சிருக்கிறாங்க." ராகினியின் குரல் தளும்பிற்று.

“உண்மைதான். ஆனா இவங்க தங்களுக்கு ஒரு வீடில்லாம பனியிலயும் வெய்யில்லேயும் மழையிலேயும் வாழ்நாள் பூரா அலயப்போறவங்க.”

வெற்றுவானத்தைப் பார்த்தவாறே சொல்லிவிட்டுப் பெரு மூச்செறிந்தாள் சுசீலா. காவேரி மெதுவாகக் கேட்டாள்: “ஆர்.ஆர்.எம். மூணாவது பிளாட்ஸ் கட்டணும்னா நம்மளத் தான் தேடிவருவாரு"

“இன்னும் அதப்பற்றி எதுவும் பேசல. நாம் தொழிற்சங்க உறுப்பினராக இருக்கறதால இனிமே நம்மகிட்ட் ரொம்ப ஜாக்ரதையா இருப்பாரு” என்றாள் ராகினி.

“நம்பள வேலக்கு வேணான்னுப்புட்டாருன்னா?” பூவாயி சந்தேகமாகக் கேட்டாள்.

ராகினி புன்னைகையோடு அவளைப் பார்த்தாள். பூவாயியின் தோளை ஆதரவாகத் தொட்டாள். “நமக்கு கையும் காலும் மட்டுமில்ல மனசில இருக்கிற துணிச்சலும்தான் சொத்து. பயப்படாதே, நம்மள விட்டுவிட்டு வேற ஆளுங்கள் அவரு கொண்டாந்தா நாம்ப அவங்களயும் சங்கத்தில் சேர்த்திடலாம்.”

காவேரியின் முகம் மலர்ந்தது.

“ஆமா, தொழிலாளருங்க தங்களோட பலத்த உணர்ந்துட்டா, பாதி பிரச்சன தீர்ந்திடும்” என்று நம்பிக்கையான குரலில் சொன்னாள் சுசீலா.

https://telegram.me/aedahamlibrary

# 25

**வெ**ய்யிலின் வெம்மை தாங்க முடியவில்லை. உயர்ந்து கம்பீரமாக எழுந்து நிற்கும் வெள்ளையடிக்கப்பட்ட அடுக்குமாடி வீடு, மனித முயற்சியின் ஒப்பற்ற அடையாளமாக இருந்தது. பிரம்மாண்டமான வானத்தின் கீழே அந்தப் புத்தம்புது வெண்மை, கண்களையும், மனதையும் நிறைப்பதாக ராகினி உணர்ந்தாள்.

இன்று, அந்த அடுக்கு மாடியின் முதலடுக்கிலுள்ள முதல் வீட்டில் பால் காய்ச்சி கிரகப்பிரவேசம் செய்து வைக்கிறான் ஆர்.ஆர்.எம். அந்தப் பகுதிலுள்ள வக்கீல்கள், காவல்துறையினர், சினிமாக்காரர்கள் என்று பலதரப்பட்டோரும் அங்கே வந்திருக்கிறார்கள். வேலையாள் மாவிலைக் கொத்துடன் அவசர அவசரமாகவே மேலே போவதை வெறுமையாகப் பார்த்துக்கொண்டு நின்றாள் ராகினி. அவளையறியாமலே பெரு மூச்சுக் கிளம்பியது. கீழே பரவியிருந்த மணலில் தகித்த சூட்டைத் தாங்க முடியாமல் ஒரு பாதத்தோடு இன்னொரு பாதத்தை மாற்றி மாற்றி உராசிக் கொண்டு அவஸ்தைப்படும் சிறுமியை ஆராயி வேதனையோடு பார்த்தாள். சொல்லிவைத்தாற்போல, புதிய கட்டடத்தின் முன்னே வரிசையாக காய்ந்து, கறுத்து ஒட்டடைக்கம்புகளாக நின்றுகொண்டிருந்தார்கள் அந்தக் கட்டடத்தை உருவாக்கிய தொழிலாளர்கள்.

“நம்மயெல்லாம் மாடிக்கு கூப்பிடமாட்டாங்களா” ஆர்வம் பொங்கியது. காவேரியைப் பார்த்துக் கேட்ட பதினாறு வயதான சின்னமணியின் குரலில் ஏக்கம் நிறைந்திருந்தது. காவேரி அவளைப் பரிவோடு பார்த்தாள்.

“சொல்லுக்கா”

“நீ எதுக்கு இப்ப மாடியைப் பார்க்கணுங்கிறே” வெடுக்கென்று கேட்டாள் காவேரி.

“நாம வேல செஞ்சமில்ல”

"செஞ்சா?”

“காய்ச்சல் அடிக்க அடிக்க நான் அங்க கல்லுங்களைச்

https://telegram.me/aedahamlibrary

சுமந்துக்கிட்டுப் போயிருக்கேன். அப்பவே நெனச்சேன் நாம் இந்தக் கட்டட வேல முடிஞ்சப்புறம் எல்லா இடத்தையும் சுத்திச்சுத்தி ஓடிப்பார்க்கணும் அப்படீன்னு”

“பைத்தியம்! இப்ப இதுக்குள்ளார நீ நொளஞ்சா ஒனக்கு ஒதத்தான் கெடக்கும்.”

“எதுக்கு?”

“நம்ம வேல முடிஞ்சு போச்சு, அப்புறம் எதுக்கு அவங்க நம்மள பாக்கப்போறாங்க?” கனத்த குரலில் சொன்னாள் பங்கஜம். அவளுடைய வார்த்தைகள் குப்பனின் காதுகளில் செங்கல்லாக அறைந்தன. தகிக்கும் வெய்யிலின் உஷ்ணம் இப்போது அவனுக்கு மறந்துபோய்விட்டது. நெஞ்சுக்குள் சுரீரென ஏதோ சுட்டது. துயரத்தோடு பங்கஜத்தைப் பார்த்தான்.

“என்னக்கா சொல்றே நீ?” சிமெண்ட் பட்டுப் பட்டு உரிந்து போயிருந்த சோகை பிடித்த உள்ளங்கையைப் பார்த்தவாறே வேதனையோடு சொன்னாள் பங்கஜம்.

“ஓணர் அப்படித்தான் தாத்தாகிட்ட சொன்னாரு”

“புது பில்டிங்கோட அஸ்திவார வேல அடுத்த மாசமே ஆரம்பிச்சிடுமாம். இப்போ உள்ளவங்க யாரயுமே அந்த வேலக்குச் சேர்க்கமாட்டாராம் ஓணர்.”

“அப்படியா?” என்றான் கலங்கிய குரலில் பரமசிவம்.

மேலேயிருந்து வந்த ஒருவன், “யாரப்பா மேஸ்திரி? ஐயா கூப்பிடறாரு வா” என்று சத்தமிட்டபடியே கீழே வந்தான். மேஸ்திரியின் முகத்தில் புன்னகை கூடியிருந்தது. “நான் தானுங்க” என்றபடி முன்னே வந்தார் மேஸ்திரி.

“மேலே வாய்யா.” என்று சொல்லியவாறு அவன் போனான்.

“அப்புறமா நம்மக் கூப்பிடுவாங்களா?” சின்ன மணி கேட்டாள்.

“ஆமா கூப்பிட்டு உனக்கு விருந்து வைப்பாங்க, அடச்சீ, கம்முன்னு கெட” பாதங்களில் இருந்த வெடிப்புகளின் எரிச்சலையும் அரிப்பையும் போக்கச் சொரிந்தபடி எரிச்சலோடு முறைத்தாள் சின்னப்பிள்ளை.

“அந்தா நம்ம கலைப்புயல் வர்றாரு” என்றாள் செங்கமலம்

https://telegram.me/aedahamlibrary

வாசலில் பளிச்சென்று வந்துகொண்டிருந்த நாலைந்து பேரைப் பார்த்து.

“தோபாரு, ஆப்பிளு கணக்கா சிவப்பா வாறாரு நம்ம எழுச்சி நடிகர்”

“அக்கா... கலைப்புயல் வாழ்கன்னு கோஷம் போடணும்போல இருக்கு. பாருங்க பாருங்க அவரு நம்மப் பார்த்து வணக்கம் சொல்றாரு.” என்று கத்தியவாறு வாசலை நோக்கி வேகமாக ஓடினான் கணபதி. அவனைத் தொடர்ந்து இளவட்டக் கூட்டமும் ஓடியது.

“கலைப்புயல் வாய்க! வாய்க!”

“அண்ணன் கலைப்புயல் வாய்க, ஏழைகள் தோழன் வாய்க வாய்க.” மாடியிலிருந்து பரபரப்பாக கீழே இறங்கி வந்த ஆர்.ஆர்.எம். கடுகடுத்த குரலில் தனக்கு பக்கத்தில் நின்றவனைப் பார்த்து அதட்டினார். “ஏய்யா, அந்தப் பொறுக்கிப் பசங்கள ஓரமா நிக்கச் சொன்னேன்ல, பாரு என்ன பண்றாங்க.”

தலையைச் சொறிந்துகொண்டே வாயிற்புறமாக ஓடினான் ரங்கசாமி, வாயிலிருந்து கெட்ட வார்த்தைகள் பொரிந்து கொட்டி கண்களில் சிவப்பேறிற்று.

“யாராவது ஒருத்தன உதைக்கணும், அப்போத்தான் இவங்க சரிபட்டு வருவாங்க.”

எல்லோரும் அங்கிருந்து கலைந்துபோன பிறகு சோர்வு நிறைந்த முகத்தோடு காசியும் மேஸ்திரியும் கீழே இறங்கி வந்தனர். அவர்களின் முகக்குறியைப் பார்த்த காவேரியின் மனம் திக்கென்றது.

“ஏதோ விருந்து சாப்பாட்டுக்குக் கூப்பிட்டான்னாங்கன்னாங்க. யாரும் நம்பள வான்னுகூட சொல்றாப்பல இல்லியே” என்றாள் தயங்கிய குரலில் சின்னமணி.

“ஆமா, எனக்கும் பசிக்குது” என்றது சுமதியின் பிஞ்சுக் குரல்.

“கூப்பிடவே மாட்டாங்களா. ஆனா விருந்துக்கு வந்தவங்க, எலயில போட்ட சாப்பாட்டயெல்லாம் பாதிக்குப்பாதி, சாப்பிடாமயே குப்பத் தொட்டியில போடறாங்க. பார்த்தேன். சுவீட்டு, காரம், பொங்கல் எல்லாம் குப்பத் தொட்டிக்குப்

https://telegram.me/aedahamlibrary

போவுது" ராமன் தனக்குத்தானே முனகிக்கொண்டான் காசி, ராகினியின் அருகே வந்தான்.

"நம்பளே யாருமே கண்டுக்கல"

"விருந்து போடாட்டி போவுது. நம்ம பாக்கி.."

"நிக்கச் சொன்னாங்க."

"நான் கணக்கெல்லாம் முடிச்சு வைச்சிருக்கேன்" ராகினியை வெறுமையாகப் பார்த்தாள் காவேரி.

"மேஸ்திரி தாத்தா! ஒங்கள எதுக்கு ஓணர் மேல வரச்சொல்லி கூப்பிட்டாங்க."

"அதாம்மா சும்மா எங்கயில ஐம்பது ரூபா குடுத்தாங்க."

"எதுக்கு?"

"அது ஒரு வழக்கம். மேஸ்திரியாயிருந்தவனுக்கு ஓணர் செய்ற மரியாத"

"எது மரியாத? ஐம்பது ரூபாயத் தர்றதா" என்றாள் காவிரி.

"சாஸ்திரத்துக்கு கணக்குத் தீக்கறாங்களாம்."

"தாத்தா தாகமாயிருக்கு" என்றாள் சின்னமணி. மேஸ்திரி மடியை அவிழ்த்து, ஆர்.ஆர்.எம். தந்த கசங்கியிருந்த ஒற்றை ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்தார்.

"காசி, மாட்டேன்னு சொல்லாம எல்லாருக்கும் சொல்லுப்பா" காசி பணத்தை வாங்கிக்கொண்டாள்.

# 26

**க**ட்டடத் தொழிலாளர் சங்கத்தில் எல்லாருடைய உறுப்பினர் படிவங்களையும் நிரப்பிக் கொடுத்துவிட்டு வெளியே வந்த ராகினியின் முகத்தில் பெருமிதம் தெரிந்தது. அங்கே முகம் மலர வந்தனர் சுசீலாவும் காவேரியும்.

"இன்னொரு நல்ல சேதி" என்றாள் சுசீலா.

"என்ன?" ஆர்வமாகக் கேட்டான் காசி.

"காவேரிக்கும், ராகினிக்கும் மேஸ்திரி டிரெய்னிங்குக்கு

https://telegram.me/aedahamlibrary

இடம் கிடைச்சிருக்குது” கண்கள் மலர அவர்களைப் பார்த்தாள் ராகினி.

"நெஜமாவா?”

“அப்ப நம்பளுக்கு தரவேண்டிய சம்பள பாக்கிய நியாயமா கொடுத்தனுப்புற உத்தேசம் ஆர்.ஆர்.எம்முக்கு இல்ல. அப்படித்தான?” ஆத்திரத்தைக் கக்கினாள் ராகினி.

“என்னம்மா பண்றது? ஏதோ அவரும் கொடுக்காம இல்ல. நாம்பளும் வாங்காம இல்ல. அவர் பேச்சமீறி நாம்ப தொழிலாளரு ஊர்வத்துல கலந்துகிட்டதுல அவருக்குக் கோபம். அதனால கடைசி பாக்கிய, தராம ஆட்டம் காட்டறார். போவட்டும்மா. எதுக்கு வீணா கொறப்பட்டுக்கணும்? அவரும் எத்தினியோ கட்டிட வேலங்கள் எடுத்துச் செய்றவரு அவரைப் பகச்சுக்கறது நல்லதில்ல. நாள மறுநாள் நமக்கு அவருதான் படியளக்கணும். ஏதோ நல்லாயிருக்கட்டும்” என்று ராகினிக்கு சமாதானம் சொன்னார் மேஸ்திரி.

“நீங்க வாழ்த்தறதெல்லாம் சரிதான் தாத்தா. ஆனா, ஒழப்ப ஒருத்தன் சுரண்டறத நாம்ப விடக்கூடாது. சுசீலாக்கா சொல்றாப்பல நம்ப உரிமைங்கள நாம்ப போராடித்தான் அடைஞ்சாவணும். நாளக்கு நமக்கு வேல தரமாட்டாங்கனோன்னு பயந்து பயந்து இன்னிக்குக் கெடக்க வேண்டிய சம்பளத்த வுட்டுடக்கூடாது” என்றாள் காவேரி.

“மேஸ்திரி, கொடுக்க வேண்டிய பணத்தத் தராதவன நம்பி எந்தக் கொல்லு வேலக்காரங்களும் வரமாட்டாங்க. ஏன் கொல்லு வேலக்கார்களோட ஒத்துமயப்பாத்து காண்டிராக்டருங்க பயப்படக்கூடாது? நம்மாலே அப்படி ஒரு நெலமய உருவாக்க முடியலியே.”

“செய்யணும். செய்யத்தான் போறோம்” என்றாள் காவேரி உறுதி தொனிக்கும் குரலில்.

“ஆமா, ஏற்கனவே போட்ட அப்ளிக்கேஷன்”

“ரொம்ப சந்தோஷமாயிருக்கு” என்றாள் ராகினி.

“ஆமா, எதயாவது நம்ம ஜனங்களுக்கு பண்ணணும். அவங்க எத்தன நாளக்கு அவஸ்தப்பட்டுக்கிட்டே

https://telegram.me/aedahamlibrary

இருக்கறது?”

“இன்னொண்ணு”

“என்ன?”

“நமக்குப் பாக்கிப் பணம் தந்து கணக்க முடிச்சதுக்கு அப்புறமாத்தான் ஆர்.ஆர்.எம். தன்னோட அடுத்த வேலயத் தொடங்க முடியும்னு யூனியன் மூலமா கடிதம் அனுப்புவாங்க. அப்படியே விரல் நசுங்கிப்போன கம்சலக்கும் நஷ்ட ஈடு கேட்டிருக்கோம்.”

“அத அவங்க ஒத்துக்கலன்னா?” மேஸ்திரியின் குரலில் அளவற்ற ஆர்வம்.

“தாத்தா, இப்போ நாம்ப தனியாளுங்க இல்ல. நம்பகூட ஒரு பலமான யூனியன் இருக்கு. ஆர்.ஆர்.எம். நம்ம கோரிக்கக்குக் கட்டுப்படலேன்னா நாம்ப எல்லோரும் அவனுக்குப் பாடங் கத்துக் கொடுக்க முடியும்?”

“எப்படி?” சட்டென்று கேட்டாள் காவேரி.

“நாம்ப எல்லாருமே அந்தக் காம்பவுண்டு வாசல்ல போய் உட்கார்ந்துக்கறது. நம்ம யூனியன்காரங்க நம்மகூட வருவாங்க. நம்ம கோரிக்கய நிறைவேத்தாம அந்த ஆள் காம்பவுண்டுக்குள்ளார நுழைய முடியாது” சுசீலா நிதானமாகக் கூறினாள்.

“ஆனா, அந்த ஆள் செல்வாக்கானவரு” இழுத்தான் காசி.

சுசீலா சொன்னாள். “இருக்கட்டும். அவன் யாராயிருந்தா லென்ன? ஒற்றுமைப்பட்ட தொழிலாளி வர்க்கத்த விட உலகத்தில் பலமானது எதுவுமே இல்லன்னு ஜீவா சொல்லியிருக்கிறார்.” காவேரியும் மற்றவர்களும் “இது சாவில்லாத வார்த்த!” என்றார்கள்.

காவேரியும் மற்றவர்களும் அந்த வார்த்தைகளில் பொதிந்திருந்த மந்திரசக்தி மெல்லமெல்லத் தங்கள் ரத்தநாளத்தினுள் நிறைவதுபோல உணர்ந்தனர்.

**அ**தே தருணத்தில் மருத்துவமனையிலிருந்த கன்னியம்மாள் குழந்தையைப் பிரசவித்தாள். ஒரு புதிய தலைமுறை இந்தப் பூமியைத் தொட்டுப் புதிய காற்றை சுவாதித்தது. அது அழுத அழுகை ஒரு விடியலின்

https://telegram.me/aedahamlibrary

கீதமாகவே வடிவங் கொண்டது. துணையிழந்த கன்னியம்மாளுக்குத் துணையாகவும் ஆறுதலாகவும் இவ்வளவு காலமும் இருந்த சங்கரன் பிஞ்சுக் குழந்தையை ஆவலுடன் அள்ளி அணைத்துச் சீராட்டத்துவங்கினான். அதைக்கண்டு, அருகில் நின்ற ஆதிலட்சுமியும், காவேரியும், காசியும், ராகினியும், சுசீலாவும் நிறைந்து போனார்கள்.

https://telegram.me/aedahamlibrary